
# கருவூர் ஆனிலையப்பர் திருக்கோயில்

# குடநீராட்டு விழா மலர்




பிரமாதீச ஆண்டு தைத்திங்கள் 22-ம் நாள்

3-2-1974

# குடநீராட்டு விழா மலர்

பிரமாதி — தை — உக.

3 – 2 – 1974

கரூர் ஆனிலையப்பர் திருக்கோயில்

# உள் அடக்கம்


1. கருவூரில் அன்று ஒரு நாள் — 1
அ. ச. ஞானசம்பந்தன்

2. கருவூர்த் தலபுராண உரைநடை — 7
புலவர் திரு. அ. கணபதி ஐயா

3. வரலாற்றில் கருவூர் — 54
இரா. நாகசாமி, எம். ஏ.

4. கல்வெட்டுகளில் கருவூர் — 69
நடன. காசிநாதன், எம். ஏ.

5. கல்வெட்டுகளில் கருவூர் — 72
ச. ஹரிஹரன், எம். ஏ.

6. கருவூர்ச் சுற்றுக் கோயில்கள் — 76

7. புகழிமலை — 82

8. Chera Inscriptions of Sangam Age — 84
by Iravatham Mahadevan

9. வெண்ணெய்மலைத் தல வரலாற்றுச் சுருக்கம் — 87
புலவர் கணபதி ஐயா

10. அருள்மிகு கல்யாண விக்ருதீஸ்வர சுவாமி திருக்கோயில் — 89

அருள்மிகு கல்யாண வேங்கடரமணசாமி திருக்கோயில்—தான் தோன்றி மலை — 91

11. The Cave Temple at Tandoni, near Karur — 93
by H. Sarkarr

12. புகழ்ச் சோழர் — 97
அ. ச. ஞானசம்பந்தம்

13. கருவூர் தேவர் திருவிசைப்பா — 101

# அறிமுகம்

சங்க காலத்தில் எவ்வாறு உறையூரும் மதுரையும் சோழர்கட்கும், பாண்டியர் கட்கும் தலைநகராக அமைந்திருந்தனவோ அதேபோல் சேர மன்னர்கட்குக் கருவூர் உள்நாட்டுத் தலைநகரமாக அமைந்திருந்தது என்று கருத இடமுண்டு. இதனை வலியுறுத்தும் வகையில் இம்மலரினுள் பல கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. அரசியல் முறையில் சேரர் தலைநகராக அமைந்திருந்ததுடன் ஆன்மீகத்துறையிலும் கருவூர் நீண்ட காலமாகச் சிறப்புப்பெற்று வந்துள்ளது. ஆனிலையப்பர் திருக்கோவில் மிகப் பழமையானதும், சிறப்பு வாய்ந்ததும் ஆகும் என்பதை இவ்வூர்த் தலபுராண வாயிலாக அறிகிறோம். இன்றைய நிலையில் பெரு வாணிகத் தலமாகவும் இது விளங்கக் காண்கிறோம்.

எல்லாவிதச் சிறப்புக்களும் பொருந்திய இக்கருவூரில் குடிகொண்டிருக்கும் ஆனிலையப்பரின் திருக்கோயில் சிறந்த முறையில் பரிபாலிக்கப்பெற்று வருகிறது. பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்னர் ஒரு முறைக் குடநீராட்டு நடைபெற்றது எனினும் மறுபடியும் இப்பொழுது பழுது பார்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஊர் சிறக்க வேண்டுமானால் கோவில் சிறப்பாக இருக்க வேண்டும் என்று கூறும் திருமந்திரத்தை நன்கு அறிந்த இவ்வூர்ப் பெருமக்கள் மறுபடியும் கோவிலைப் பழுதுபார்த்துக் குடநீராட்டுச் செய்ய வேண்டிய தேவையை உணர்ந்து அம்முயற்சியில் ஈடுபட்டனர்.

திருக்கோவிற் பணிபுரியும் அறங்காவலர் குழுவுடன் இத்திருப்பணியை நிறை வேற்றற் பொருட்டுத் திருப்பணிக் குழு ஒன்றும் நிறுவப் பெற்றது. இக் குழுவினர் தத்தம் பல்வேறு அலுவல்கட் கிடையே முழு மனத்துடன் ஒத்துழைத்துப் பணி புரிந்தமையின் இப்பணி சிறந்த முறையில் நிறைவேறுகிறது.

கோவிலின் பிறபகுதிகளைப் பழுதுபார்த்துச் சீர்திருத்தம் செய்வது ஒன்று. கருவறை யினுள் இருக்கும் மூர்த்திகட்கு மருந்து சாத்திச் செம்மையான முறையில் அம்மூர்த்தி களை நிறுத்துவது என்பது மற்றொன்று. இத்துறையில் நீண்ட அனுபவம் உடைய காரைக்குடி கம்பன் அடிப்பொடி, திரு. சா. கணேசன் அவர்கள் தம் ஒத்துழைப்பை நல்கினார்கள். அவர்கட்குத் திருப்பணிக் குழுத் தன் நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறது.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த கருவூரின் ஆன்மீகப் பெருமையைப் பிறர் அறியும்படி செய்ய வேண்டும் என்ற கருத்தில் இவ்வூர்த் தல புராணத்தைத் திரு. கணபதி ஐயா அவர்கள் உரை நடையில் ஆக்கித்தந்தார்கள். மேலும் இவ்வூர்த் தேவாரத்திற்கும், திருப்புகழுக்கும் திரு. கணபதி ஐயா அவர்கள் உரை எழுதி இதனுடன் அளித்துள் ளார்கள். சுற்றுப்புறங்களில் உள்ள பல தலங்களையும் பற்றிய குறிப்புக்களை அவ்வத் தலங்களுக்குரிய பொறுப்பாளர்கள் தந்தார்கள்.

கருவூரின் பழைய பெருமையை அறிய வரலாறு, இலக்கியம், கல்வெட்டு ஆகிய துறைகளும் உதவுகின்றன. இலக்கியத் துறையில் பெரிய புராணத்திற்காணப் பெறும் எறிபத்தர், புகழ்ச்சோழர் வரலாறுகளைப் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் உரை நடையில் தந்துள்ளார். தமிழ்நாட்டு அரசுத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் தலைவர் திரு. இரா. நாகசாமி அவர்களும், அவ்வலுவலகத்தில் ஆய்வாளர்களாகப் பணிபுரியும் திரு. நடன காசிநாதன், திரு. ச. ஹரிஹரன் ஆகியவர்களும், "வரலாற்றில் கருவூர்", "கல்வெட்டுக்களில் கருவூர்" என மூன்று கட்டுரைகள் உதவினர். இந்திய அரசுத் தொல்பொருள் ஆய்வுத் துறை ஆளுனர் திரு. எச். சர்க்கார் அவர்கள் 'தான் தோன்றி மலை' பற்றிய ஓர் ஆங்கிலக் கட்டுரை உதவியுள்ளார். இவையாவும் இம் மலர் மணம்பெறப் பெரிதும் உதவுகின்றன. இவர்கள் அனைவருக்கும் திருப்பணிக் குழுத் தன் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

முன்னுரை, ஆசிவுரை வழங்கிய உயர்திரு வாரியார் சுவாமிகள், சுவாமி சதாசிவானந்தா, திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் ஆகியோருக்கும் எங்கள் நன்றி உரியதாகும்.

இம்மலர்ப் பதிப்பையும் அச்சிட வேண்டிய பொறுப்பையும், படி திருத்தல் முதலிய அதனுடன் தொடர்புடைய செயல்களையும் சென்னை, பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். குறைந்த காலத்தில் அழகுற இதனை அச்சிட்டு உதவியவர்கள் சென்னை சண்முகம் பிரஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவத்தினர் இவர்களுக்கும் திருப்பணிக்குழுத் தன் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

இவர்கள் அனைவருக்கும் ஆனிலையப்பரின் திருவருள் நிறைவதாக.

இங்ஙனம்,
திருப்பணிக்குழுத் தலைவரும்
உறுப்பினர்களும்.

# அருள்மிகு கல்யாண பசுபதி ஈசுவரர் சுவாமி திருக்கோயில்

கரூர்—திருச்சி மாவட்டம்

## திருப்பணிக் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

1. கே. எம். மாணிக்கவாசகம்,
அறங்காவலர் & தலைவர், திருப்பணி குட நீராட்டுக் குழு.
2. எம். சேதுராமலிங்கம், பி. ஏ.,
செயல் அலுவலர், செயலாளர் & பொருளாளர்,
3. என். ஆர். ராமசாமி, அறங்காவலர் குழுத்தலைவர்.
4. (ஜெமினி) கே. வையாபுரிப் பிள்ளை, அறங்காவலர்.
5. ஏ. அம்மையப்பன், பி. ஏ., பி. எல்., அறங்காவலர்.
6. எம். வைரப்பெருமாள், அலுவலர்.
7. கே. கனகராஜ், பி.ஏ., பி.எல். அறங்காவலர் குழுத்தலைவர்.
(தான்தோன்றி ஸ்ரீ கல்யாண வேங்கடரமண சுவாமி ஆலயம்)
8. சி. ஆர். நடேசக் கவுண்டர், தலைவர், சிவநெறிக் கழகம்.
9. வி. பி. சுப்பிரமணிய முதலியார்,
பொது சமய சன்மார்க்க சங்கத் தலைவர்.
10. ஸ்ரீனிவாச செட்டியார், வாசவி கார்ப்பரேசன்.
11. குப்பண்ணஞ் செட்டியார், சக்தி மெடிக்கல்ஸ்.
12. வி. சி. குட்டியப்ப செட்டியார், மண்டி, கரூர்.
13. எம். பாலசுப்பிரமணியம், எஸ். எம். ஜி. டெக்ஸ்டைல்ஸ்.
14. என். ஆர். கோவிந்தக் கோனார், மண்டி, கரூர்.
15. ஆர். கருப்பண்ணன், நகர் மன்றத் தலைவர்.
16. டாக்டர் பரமேஸ்வரன், நரசிம்மபுரம், கரூர்.
17. எஸ். சண்முகசுந்தரம், பி. காம்., ஜனோபகார நிதி, கரூர்.
18. எஸ். சுப்ரமணிய பிள்ளை, கோரை & பாய் வியாபாரம், கரூர்.
19. கே. வி. நடராஜ அய்யர், வீவிங் பேக்டரி,
நேஷனல் இந்தியா டெக்ஸ்டைல்ஸ்.
20. எஸ். நல்லசாமி, எம். எல். ஏ., கரூர்.
21. ஏ. வி. ராமச்சந்திரஞ் செட்டியார், மண்டி, கரூர்.
22. முத்துசாமிக் கவுண்டர், வறுகடலை வியாபாரம், கரூர்.
23. கலியபெருமாள் நாயுடு, மண்டி, கரூர்.
24. கே. நாட்ராயன், மண்டி, கரூர்.
25. ஏ. பூஞ்சோலைச் செட்டியார்,
ஓய்வு பெற்ற உதவிப் பொறியாளர், நரசிம்மபுரம், கரூர்,
26. T. S. PL. ST. சொக்கலிங்கஞ் செட்டியார்
வெண்ணெய்மலை ஹவுஸ், கரூர்.

# முன்னுரை

மிகச் சிறப்பு வாய்ந்த ஆனிலையப்பரின் திருக்கோயில் பழமையானது என்பதைப் பின்னர் வரும் கட்டுரைகளைப் படிப்பவர் நன்கு உணர முடியும். இக்கோவிலின் இராஜ கோபுரம், நூற்றுக்கால் மண்டபம் என்பவை பழைய திருப் பணிகள். இவ்விரண்டும் நீங்கலாக ஏனைய திருப்பணிகள் தன வணிகப் பெருஞ்செல்வரும், சிவ புண்ணிய சீலருமாகிய இராசா. சர். அண்ணாமலைச் செட்டியாரின் குடும்ப முன்னோர் களால் செய்யப்பெற்றவை. இது ஏறத்தாழ ஐம்பது ஆண்டு கட்கு முன்னர் நிகழ்ந்தது. எனினும், பன்னிரண்டு ஆண்டு கட்கு முன்னர்க் கருவூர் நகரப் பெருமக்களால் மறுபடியும் திருப்பணி செய்து குடநீராட்டுச் செய்யப்பெற்றது.

மறுபடியும் இவ்வாண்டு (1974) கோவிலில் ஏற்பட் டுள்ள பழுதுகளைப் பார்த்துச் செப்பஞ்செய்து, மூர்த்திகட்கு மருந்து சாத்திக் குடநீராட்டு உற்சவம் நடைபெறுகிறது.

இறைவன் பணியாகிய இதில் முழுமூச்சோடு ஈடுபட்டு அரிய முறையில் இது நிறைவேறுமாறு உழைத்தவர்களுள் முக்கியமானவர் அறங்காவலரும், திருப்பணிக் குழுத்தலைவரு மாகிய திரு. கே. எம். மாணிக்கவாசகம் அவர்களாவார். அவர்களையும், ஏனையத் திருப்பணிக் குழுவினரையும் மன முவந்து பாராட்டுவதுடன் ஆனிலையப்பர் திருவருள் அவர் கட்கு நிறைக எனவும் வாழ்த்துகிறோம்.

இங்ஙனம்,

என். ஆர். இராமசாமி,
அறங்காவலர் தலைவர்
கே. எம். மாணிக்கவாசகம்,
அறங்காவலர் குழு உறுப்பினர்
ஜெமினி வையாபுரிப் பிள்ளை,
அறங்காவலர் குழு உறுப்பினர்
ஏ. அம்மையப்பன், பி.ஏ., பி.எல்.,
அறங்காவலர் குழு உறுப்பினர்
எம். சேதுராமலிங்கம்,
நிர்வாக அதிகாரி

சுவாமி சதா சிவானந்தா அவர்கள்

# அருளாசி

---

**சிவம் பரம கல்யாணம்**

நிம்ப நிழற் களிரம்பொன் மலர்த்தாள்
நம்புது முத்தி நலின்பம் வரற்கே.

எழுவகைப் பிறப்பினுள் சாலச்சிறந்தது மக்கட் பிறப்பே. இதனினும் தமிழகத்தில் பிறந்து இந்து தர்மத்தை அனுஷ்டித்து உயிர் நலன் பெருக்கும் பாக்கியம் கிடைக்கப் பெறுவது மக்கட் பிறப்பின் தலைசிறந்த பேராகும். மக்களாகிய நாம் உடலைப் பாதுகாக்க முயல்வது போன்று உயிர் நலனைப் பெருக்க முயல்வதற்கு ஆலயங்கள் இன்றியமையாதனவாக இருக்கின்றன. 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது முதுமொழி. கடவுள் அருவனுயினும் அன்பர்க்குருவனுய் வருவனென்பது மறை மொழி

அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றுய்
பிரமமாய் நின்ற சோதிப்பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய

என்பது கந்தப்புராணச் செய்யுள்.

இவ்விதம் சிவபெருமான் அன்பர்களுக்காக அருளுருக் கொண்டு வேண்டுவார் வேண்டுவதை ஈயும் விருப்புடன் சிவாலயங்களில் எழுந்தருளியுள்ளார்.

உருவும் அருவும் உருவோடருவும் மருவு
பரசிவன் மன்பல்லுயிர்க்கும் குருவும்என
நிற்கும் கொள்கைய னுகும்
தருவென நல்கும் சதாசிவன் தானே.

—திருமூலர்.

ஆலய வழிபாடு நம் உள்ளத்தில் உள்ள தீய எண்ணங்களைத் தேய்த்துத் தூய எண்ணங்கள் பெருக்கச் செய்கிறது. சாபானுக்கிரக சக்தி பெற்ற சைவ சமயாச்சாரியர்களால் புகழப் பெற்ற ஆலயங்கள் பலவற்றுள்ளும்

ஆம்பரா நதிக்கரையில் அமைந்துள்ள ஆதிபுரி என்னும் கருவூர் பசுபதீஸ்வரர் ஆலயம் பழமையும் பெருமையும் நிறைந்தது. இவ்வாலயத்தில் உள்ள பசுபதீஸ்வரரை வழிபட்டுப் பலர் பயன் அடைந்துள்ளனர்.

(1) அசுர குருவாகிய சுக்கிராச்சாரியார் இறந்தவர்களை உயிர்பெற்றெழச்செய்யும் அமுத சஞ்சீவினி மந்திரத்தை உபதேசிக்கப் பெற்றுள்ளார்.

(2) முசுகுந்தச் சக்கரவர்த்தி வழிபட்டு வீடு பேறு பெற்றார்.

(3) புகழ்ச் சோழன், (4) எறிபத்த நாயனார் போன்ற மஹா பக்தர்கள் ஆலயத்தில் திருப்பணிகள் பல செய்தும் வழிபாட்டிற்கு இடையூறு வராமல் ஆலய வழிபாட்டைப் பாதுகாத்தும் இறையருள் பெற்றுப் பேரின்ப வீடெய்தினர். கருவூர்த் தேவர், கருவூரார், நெரூர் சதாசிவப் பிரம்மம் போன்ற மஹரிஷிகள் வழிபாடு செய்து பல சித்திகளும் காண்பித்து நிவர்த்திமார்கத்தைப் பெறும் வழிகளை மக்கட்குப் போதித்து முடிவில் முக்தி பெற்றனர். பர்வதம், ஆரண்யம், நதி, தீர்த்தம், நகரம் திருக்கோயில் என்னும் ஆறு மங்கலங்கள் நிறையப்பெற்ற கருவூரின் கண் உள்ள பசுபதீஸ்வரர் ஆலய அறங்காவலர் குழுத்தலைவர் K.M. மாணிக்கவாசகம் அவர்களும் மேற்படி குழுவினரும் பெருமுயற்சி எடுத்துக் கோயிலைப் பழுது பார்த்து 3—2—'74 அன்று குட நீராட்டுச் செய்யும் பாக்கியம் பெற்றுள்ளனர்.

திருப்பணிக்குழுத் தலைவர் K. M. மாணிக்கவாசகம் அவர்களும் குழுவினரும், திருப்பணிக்கு அன்போடு பொருளீந்த புண்ணிய சீலர்களும் தினமும் தவறாது வழிபாடு செய்யும் பக்த மஹாஜனங்களும் பசுபதீஸவரர் அனுக்கிரகத்தால் எல்லா மங்கள நலன்களும் நிறையப்பெற்று இன்புறுவார்களாக.

இப்படிக்கு,
சுவாமி சதாசிவாநந்தா
ஸ்ரீ சதாசிவப் பிரம்மேந்திராள் அதிஸ்பினம்
நெரூர் கரூர்.

உ
முருகா

அருள்மொழி அரசு

## கிருபானந்தவாரியார் சுவாமிகள்

# வாழ்த்து

எல்லாம் வல்ல இறைவன் எங்கும் நிறைந்தவன். ஆலயங்களில் விளங்கித்தோன்றுகின்றான். "ஆலயந் தானும் அரன் எனத்தொழுமே" என்பது சிவஞான போதம். ஆலயங்கள் நன்றாக இருந்தால் உலகம் நல மாக இருக்கும்.

கொங்குச் சிவத்தலம் ஏழு. இந்த ஏழு தலங்களில் தலையாயது கருவூர் பசுபதிகோயில். இத்தனிப் பெருமை யுடைய கருவூர்த் தலபுராணத்தைக் கும்பாபிஷேக வெளியீடாக வெளியிடுகின்றார்கள். இது சிறந்த புண்ணியச் செயலாகும்.

கருவூர் கண்ணுதற் கடவுளைக் காதலாகிக் கசிந்து வணங்கினோர்கள் கருவுறும் துன்பம் அடையார்கள். மகா புண்ணியத்தலம்.

இத்தல புராணத்தை எல்லோரும் படித்துப்பயன் பெறுவார்களாக.

இத்தகு ஞான வேள்வியைச் செய்யும் அன்பர் கட்கு உலகம் கடப்பாடுடையது.

அன்பன்,
**கிருபானந்தவாரி**

ஓம்

# வாழ்த்துரை

திருவாசகமணி
கே. எம். பாலசுப்பிரமணியம், பி. ஏ., பி. எல்.,

கொங்கு நாட்டின் பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்றாகிய திருக்கருவூர் ஆனிலைக் கோவிலுக்கு 1974ஆம் ஆண்டு பிப்ரவரி மூன்றாம்நாள் நடைபெறும் திருக்குட நீராட்டு விழாவின் நினைவு மலராக வெளியிடப்பெறும் இந்நூல் மிகவும் முக்கியமான தொன்றாகும். அத்துடன் அவசியமானதும் ஆகும். திருவூறும் செம்மை செறிந்த சிவாலயம் திகழும் சீரிய நகரான கருவூர் முன்னைப் பழவூர்கட்கு முந்தியது; பின்னைப் புத்தூர்கட்கும் பேர்த்தும் அப்பெற்றியது. சங்கநூலின் சந்தணக் கந்தமும் பெரிய புராணத்தின் நீற்றெழில் மணமும் செறிந்த வரலாற்றுத் தென்றலின் வளத்தினை நுகர்ந்து வையத்துள் ஓங்கிப் பொலிந்து வளரும். இக்கருவைப் பதியின் வனப்பு, வளம், வாழ்வு, வழிப்பெருமை, வரலாறு முதலிய பற்பல அற்புத விவரங்களை அள்ளி வழங்கும் வெள்ளித்தட்டேடு ஆகிய இந்நூல் எல்லோராலும் ஏந்தி ஏற்று மாந்திச் சுகிக்க வேண்டிய மகிமையுடையதாகும்.

இந்த நூலினை வெளியிட அயராமுயற்சியோடும் ஆர்வத்தோடும் இடையறாது பாடுபட்டுழைத்த ஆலய நிர்வாகிகட்குப் பொதுவாகவும் என் கெழுதகை நண்பர் திரு. கே. எம். மாணிக்கவாசகம் அவர்கட்குச் சிறப்பாகவும் யான் எனது மனமார்ந்த பாராட்டுகளுடன் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கருவை வள்ளல் திரு. பெரியசாமி அவர்களின் மருகராகிய திரு. மாணிக்கவாசகம் அவர்கள் இவ்வாலயத்தின் அறங்காவலராக ஒரு முறை இருந்து வந்து அந்தப்பணிக்குச் சிகரம் வைத்தாற்போல் ஆனிலைக்கோயில் திருப்பணியைப் பிறர் உதவியுடன் பூர்த்தி செய்து வைத்துள்ள அரும்செயல் அவரது பொருட்செல்வமாகிய பொன்மலரை அருட்செல்வமாகிய மணமுடையதாகச் செய்துள்ளது. பணப்பொலிவும், குணத்துயர்வும், கல்விச்செறிவும், கவின்தரு உருவும், குலப்பெருமையும் ஏனைய நலத்தருமையும் இயல்பாக வாய்க்கப்பெற்ற இவ் ஏந்தல் பணிப்பொலிவையும் தம் அணிப்பொலிவாகப் பெற்றுள்ளார் இன்று. என்றென்றும் இவரும் ஏனைய அறங்காவலர் குழுவினரும் இனிது வாழுமாறு என் கருவைப் பசு பதீச்சரரை இறைஞ்சி வாழ்த்துகிறேன்.


சென்னை
20—12—'73

திருவாசகமணி.

'மேவரு தத்துவ சித்தி அடைந்து தத்தம் மெய்
உணர்ந்து விமல ஞான
மூவகை ஆருயிர் விளங்கி முதிரும் அன்பால் வழங்கும்
ஒருமுத்தி வாழ்வை
பாவனை கடந்து நின்ற பரஞ்சுடரைப் பசுபதி
நாயகனை முன்னைத்
தேவர்கள் தேவைக் கருவூர்ச் சிவக்கொழுந்தை
இதயமலர் திகழவைப்பாம்'.

'நதிகாட்டும் புனல்கழனி வளம்காட்ட வறங்காட்டு
நலம் சேர் வஞ்சிப்
பதிகாட்டும் பசுபதி ஓர்இடம் காட்ட வலம்காட்டும்
பறையை மேலாம்
கதிகாட்டும் கரும்குயிலை அருள்காட்டும்
கயல் இரண்டு காட்டும் தூய
மதிகாட்டும் மடமயிலை வடிவுடை நாயகியை
வணங்கி வாழ்வாம்'.

—கருவூர்ப் புராணம்



வெளிப்பிரகாரம் - புகழ்ச் சோழர் மண்டபம்

— டீலக்ஸ் போட்டோ சர்வீஸ்

# ' கருவூரில் அன்று ஒரு நாள் '

புகழ்ச் சோழர் என்ற புகழ்மிக்க சோழர் ஆட்சிநடைபெறும் காலம் அது. உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த அம் மன்னர் பிரான் தம் ஆட்சிக்குட்பட்டிருந்த கருவூரில் வந்து அப்பக்கச் சிற்றரசர்களிடமிருந்து திறைப் பணம் வசூலிக்கும் சூழ்நிலை. மன்னர் வந்து தங்கினதால் அவருடைய பரிவாரங்களும் கருவூரில் வந்து தங்கின; அவற்றுள் மன்னனுடைய பட்டத்து யானையும் ஒன்று. ஒரு நாள் காலை நேரத்தில் பட்டத்து யானை அமராவதிக்கு நீராட அழைத்துச் செல்லப் பெற்றது. யானைப் பாகர் இருவர், உடன் செல்வோர் மூவர் என ஐவர் யானைக் காவலராகச் சென்றனர்.

கருவூரில் வாழும் சிவகாமியாண்டார் என்ற வயது முதிர்ந்த சிவபக்தர் தினந்தோறும் விடியற் காலத்தில் நீராடி நந்தவனம் சென்று தூய மலர்களைப் பறித்துக் குடலையில் வைத்துக் கொண்டு ஆநிலையப்பர் திருக் கோவிலுக்குச் சென்று மலர் மாலைகள் கட்டி இறைவனுக்குச் சாற்றத் தருவதை வழக்கமாகக் கொண்டவர். என்றும்போல் அன்றும் குடலை நிறைய மலர்களை நிறைத்துக் கொண்டு மெதுவாக வீதி வழியாக நடந்து சென்றார். அடியவராகிய சிவகாமியாண்டார் பின்னே வந்த அரச யானை பூக் குடலையைப் பார்த்ததும் அதனைத் துதிக் கையாற் பற்றிக் கீழே எறிந்து மிதித்து விட்டுச் சென்றது.

கருவூரில் எறிபத்தர் என்ற சிவனடியார் ஒருவரும் அந்நாளில் வாழ்ந்தார். அவருடைய சிவத் தொண்டு ஒரு வகையானது. இறைவனுக்கு நேரே தொண்டு செய்வதைக் காட்டிலும் அடியார்கட்குத் தொண்டு செய்வதைத்தான் பெரிதாகக் கருதியவர் எறிபத்தர். அவருடைய வரலாற்றைக் கூறவந்த சேக்கிழார் பெருமான் எறிபத்தர் தொண்டு எத்தகையது என்று இதோ கூறுகிறார் !

'இருட்கடு உண்ட கண்டத்து இறைய
வர்க்கு உரிமை பூண்டார்க்கு
அருட் பெரும் தொண்டு செய்வார்
அவர் எறிபத்தராவார்' (எறி-6)

எறிபத்தர் செய்த தொண்டை அருளோடு கூடிய பெரிய தொண்டு என்கிறார் ஆசிரியர். அருளோடு கூடிய தொண்டை அடுத்த பாடலில் இன்னும் விளக்கமாக இதோ கூறுகிறார்.

''அழல் அவிர் சடையான் அன்பர்க்கு
அடாதன அடுத்த போது
முழைஎரி என்னத் தோன்றி முரண்கெட
எறிந்து தீர்க்கும்
பழமறை பரசும் தூய பரசு முன்எடுக்கப்
பெற்றார்'' (எறி-7)

அ. ச. ஞானசம்பந்தன்

என்று கூறுவதால் இறைவனடியார் கட்கு யாரேனும் ஊறு செய்தால் அவ் வாறு செய்தவர்களை அல்லது செய்த வைகளை அழிப்பதற்காக பரசு (ஒருவகைக் கோடரி) என்ற கருவி ஒன்றை எப்பொழுதும் கையில் தாங்கித் திரிவாராம்.

தம் பூக்குடலையை யானை பறித்து எறிந்ததைக் கண்ட முதியவராகிய சிவகாமி ஆண்டார் யானையை எதிர்க் கும் ஆற்றலின்மையால் கோ எனக் கதறி அழத் தொடங்கி விட்டார். சிவனடி யாரின் அழுகுரல் காதிற்பட்டதும் எறிபத்தர் விரைந்தோடி வந்தார்; ஆண்டாரை விசாரித்தார்; நடந்த வற்றை அறிந்தார் ; எல்லையில்லாச் சினங்கொண்டார். யானை சென்ற வழியே ஓடினர்; அதன் பிடரியில் ஏறினர்; தம்முடைய கருவியால் அதன் துதிக் கையைத் துணித்தார். கடல் எனக் கதறி யானை வீழ்ந்து இறந்தது; எறிபத்தர் யானையின் உடன் வந்த ஐவரையும் கொன்று தனியே நிற்கின்றார் கருவூரின் அரச வீதியில்.

பட்டத்து யானை இறந்த செய்தியை ஒரு சிலர் ஓடிச் சென்று அரசனின் வாயிற் காவலரிடம் அறிவித்தனர். வாயிற் காவலர் அரசனிடம் கூறுகையில் தம் கற்பனையையும் கலந்து 'பற்றலர் இலாதாய்! நின்பட்டமால் யானை வீழச் செற்றனர் சிலராம்' (எறி-27) என்று கூறி னார்கள். சிலர் செற்றனர் என்றவுடன் பகைவர் தன் ஊரினுட் புகுந்து தன் யானையைக் கொன்று விட்டதாகவே அரசன் கருதி விட்டான். எல்லையில்லாத சினத்துடன் யார் அவர்கள் ? என்று கூடக் கேளாமல் குதிரை மீது ஏறிப் புறப்பட்டான்; அவன் குறிப்பறிந்த அமைச்சர், படைத் தலைவர் முதலியோ ரும் படைகளுடன் புறப்பட்டனர்.

வெகு வேகமாக வந்த அரசன் யானை இறந்து கிடப்பதைக் கண்டான்; ஆனல் பகைவர் யாரையும் காண வில்லை; அதற்குப் பதிலாகச் சிவனடியார் ஒருவர் மட்டும் அவ்விடத்தில் நிற்பதைக் கண்டான். அவனுக்கு எல்லையில்லாத குழப்பம் வந்து விட்டது. யானையின் சாவிற்கும் சிவனடியாருக்கும் உள்ள தொடர்பை அவன் காண முடியவில்லை. எனவே "வென்றவர் யாவர்"(3 ) என்று கூவினன். கொல்லப்படாமல் எஞ்சி நின்றவர்கள் அரசன் எதிர் சென்று பகைவர் யாருமில்லை அரசே! 'தீங்கு செய்தார் பரசு முன் கொண்டு நின்ற இவர்' (36) என அடியாரைக் காட்டி னார்கள்.

அவர்கள் அடியாரைக் காட்டின உடனே மன்னன் செய்த முதற் காரியம் படைகளை மீண்டும் போக செய்ததே யாகும். அடுத்தபடியாக 'இவ்வடியார் யானையின் எதிரே சென்ற போது அவருக்கு ஒன்றும் தீங்கு நேராதிருந் ததே யான் செய்த புண்ணியமாகும்' என்றும், சிவனடியார் தவறு நேர்ந்தா லொழிய யானையைக் கொல்லார் என்றும் நினைத்துக் கொண்டு அவர் எதிரே சென்று வணங்கினன். 'மறிந்த இக்களிற்றின் குற்றம் பாகரோடு இதனை மாள எறிந்ததே போதுமோதான் ?' (39) என்று வேண்டினன்.

மன்னன் என்பதனல் ஒரு சிறிதும் அஞ்சாமல் நின்ற எறிபத்தருக்கு, மன்னன் தன்னை வணங்கி நின்று இவ் வாறு பேசியது எதிர்பாராத அதிர்ச்சி யைத் தந்தது. அரசன் இவ்வாறு செய் வான் என்று அவர் ஒரு சிறிதும் எதிர் பார்க்கவில்லை. அரசன் கேட்டவுடன் எறிபத்தர் நடந்ததைக் கூறினர். யானை செய்த தவறுக்காக யானையும், தவறு செய்யும் யானையை அடக்கி ஆளாமைக் காகப் பாகர்களும் கொல்லப் பட்டனர் என்று கூறினர். இதில் வேடிக்கை என்னவெனில் யானையின் உரிமைக்கார னகிய மன்னன் என்ன தவறுக்காக யானை கொல்லப்பட்டது என்று கேட் கவே இல்லை. 'அடியார் பிழைபடின்

அன்றிக் கொல்லார்' (37) என்ற முடிவுடன் உள்ளவன் மன்னன். அவன் கேளாமையாலேயே எறிபத்தர் விளக்கந்தர வேண்டிய வராகிறார். எறிபத்தருடைய விளக்கத்தைக் கேட்ட மன்னன் மறுபடியும் அவருடைய பாதங்களில் வீழ்ந்து இதோ பேசுகிறான் :

''அங்கணர் அடியார் தம்மைச் செய்த
  இவ் அபராதத்துக்கு
இங்கிது தன்னால் போதாது; என்னையும்
  கொல்ல வேண்டும்;
மங்கல மழுவால் கொல்கை வழக்கும்
  அன்று. இதுவாம் என்று
செங்கையால் உடைவாள் வாங்கிக்
  கொடுத்தனர் தீர்வு நேர்வார்'' (42)

(இறைவனடியாருக்கு இழைக்கப்பட்ட இக் குற்றத்திற்குக் கிடைத்த தண்டனை போதாது; என்னையும் கொல்ல வேண்டும். அதுவும் தங்கள் கையிலுள்ள மங்கலமான மழுவினால் கொல்லவுங் கூடாது. என்னுடைய உடைவாளால் கொல்லுங்கள் என்று கூறி மன்னன் தன் வாளை எறிபத்தரிடம் நீட்டினான்)

பகுத்தறிவற்றதாகிய யானை செய்த குற்றத்தைத் தடுக்காமையால் பாகரும், பரிக்காரரும் தண்டனை பெற்றனர். இத்தகைய பணியாளரை வைத்திருந்தமையின் தானும் குற்றவாளியே எனக் கருதுகிறான் மனுநீதியின் வழிவந்த சோழ மன்னன். அறநெறியை அறிந்து கடைப்பிடிப்பதில் இத்துணை ஊற்றங் கொண்டிருந்தனர் இத் தமிழர் ஒரு காலத்தில் என்பதை நினைக்கும் பொழுதே ஒரு கர்வம் ஓங்கி வளர்கின்றது.

சோழமன்னன் இந்த அளவுக்குச் சென்று விடுவான் என்பதைக் கனவிலுங் கருதாத எறிபத்தர் பதறிவிட்டார். அவருடைய நிலை தர்ம சங்கடமாகிவிட்டது. மன்னன் நீட்டிய வாளை வாங்காவிட்டால் அவன் தானே தன் கழுத்தை அரிந்து கொள்வான் என்பது அவருக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது. வாங்கினால் தன்னையும் கொல்ல அடியார் சம்மதித்துவிட்டார் என்று பொருளாகிவிடும். இருதலைக் கொள்ளி எறும்பு போல் மனம் துடித்த எறிபத்தர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார். அவர் மேற்கொண்ட முடிவு என்ன என்பதை அவரையும் ஆனிலையப்பரையும் வேறு யாரும் அறிய முடியாது.

''வெந்தழல் சுடர்வாள் நீட்டும்
  வேந்தனை நோக்கிக் 'கெட்டேன்
அந்தமில் புகழான் அன்புக்கு
  அளவின்மைக் கண்டேன்' என்று
தந்தவாள் வாங்கமாட்டார் தன்னைத்தான்
  துறக்கும் என்று
சிந்தையால் உணர்வுற்று அஞ்சி
  வாங்கினார் தீங்கு தீர்ப்பார்''

''வன்பெறும் களிறு பாகர் மடியவும்
  உடைவாளைத் தந்து
என்பெரும் பிழையினாலே என்னையும்
  கொல்லும் என்னும்
அன்பனார் தமக்குத் தீங்கு நினைத்தனன்
  என்று கொண்டு
முன்பு எனது உயிர்செகுத்து முடிப்பதே
  முடிவு என்று எண்ணி''

''புரிந்தவர் கொடுத்த வாளை அன்பர்தம்
  கழுத்தில் பூட்டி
அரிந்திடல் உற்ற போதில் அரசனும்
  'பெரியோர் செய்கை
இருந்தவாறு இது என் கெட்டேன்!'
  என்று எதிர் கூடிதில் சென்று
பெருந்தடம் தோளால் கூடிப் பிடித்
  தனன் வாளும் கையும்'' (எறி-43,5,6)

மன்னன் தந்த வாளை வாங்கிய அன்பர் இத்துணைப் பெரிய அன்பனுடைய மன நிலையை அறியாது இருந்துவிட்டேன் என்று வாளைத் தம் கழுத்தில் மாட்டி அரியத் தொடங்கினார். எறிபத்தர் இந்த முடிவிலேதான் வாளை வாங்கினார் என்பதைச் சிந்தித்துப் பாராத மன்னன் 'ஐயோ! பெரியோர் செய்கையை அறி

யாமல் இருந்து விட்டேனே' என்று துடித்து எறிபத்தர் கையைப் பற்றித் தடுத்தான். இந்தப் போட்டியைத் தொண்டர் சீர்பரவவல்ல சேக்கிழார் 'அளவிலா பரிவில் வந்த இடுக்கண்' (47) என்று கூறுகிறார்.

இந்த இரண்டு பெருமக்களும் அடியவர்கள். வாழ்க்கையில் ஒரு குறிக் கோளுடன் வாழ்பவர்கள். தாங்கள் சரி என்று கருதியதைச் செய்யத் தொடங் கினல் அவர்களைத் தடுப்பது இயலாத காரியம். எனவே இவர்கள் மேற் கொண்ட செயலிலிருந்து இவர்களைத் தடுக்க வேண்டுமாயின் இத்தனைக்கும் காரணமான சிவகாமியாண்டார் பூக் குடலை நிரம்ப வேண்டும்; கொலையுண்ட யானை எழ வேண்டும். எனவே இறை வன் இவை இரண்டும் நிகழுமாறு அருள் புரிந்தான். அன்பர்கள் இருவரும் தாம் மேற் கொண்ட செயலை விட்டனர்.

இந்த வரலாற்றின் பிற் பகுதியை ஊன்றிக் கவனித்தல் வேண்டும். முதன் முறை பேசிக் கொண்டது போக ஏனைய நேரம் முழுவதும் சோழனே எறி பத்தரோ வாய் திறந்து ஒரு வார்த்தை கூடப்பேசவில்லை. பேசாதது மட்டும் அன்று. எதிர் நிற்பவர் எத்துணைத் தூரம் செல்வார் என்று ஒருவரை ஒருவர் எடைபோட முடியவில்லை. ஒவ்வொரு நிகழ்ச்சியும் மற்றவர் எதிர்பாராத வகையில் நடைபெறுகின்றது.

எறிபத்தர் வரலாறு கொலையில் ஆரம்பித்து அமைதியில் முடிகின்றது. சிவனடியார்கள் என்று கூறியவுடன் அமைதியே வடிவாக இருப்பவர்கள் என்ற எண்ணம் நம் மனதில் தோன்றுவது இயல்பே. அந்த இயல் புக்கு மாருக உள்ளார் எறிபத்தர். அப்படியானுல் அடியார்கள் இலக்கணத் திலிருந்து மாறுபட்டுள்ள இவரை என்ன என்று கூறுவது? அவரைப் பார்த்த வுடன் சோழ மன்னன் 'குழையணிகாதி னுனுக்கு அன்பர் பிழைபடின் அன்றிக் கொல்லார்' என்று நினைக்கிருன். இத் தகைய செயல் செய்தவரை அடியவர் என்று கருதுவதோடு அல்லாமல் அவர் தவறு இழைக்கமாட்டார் என்றுங் கருது கிருன். இவ்வாறு நினைக்கும் அரசனும் புகழ்ச் சோழ நாயனுர் என்றுபாராட்டப் பெறுகின்ற ஓர் அடியார் என்பதை மறத்தலாகாது. எனவே புகழ்ச் சோழர் என்ற ஓர் அடியார் எறிபத்தர் என்ற மற்ருேர் அடியாரைப்பற்றி ஒரு கருத்துக் கூறுவாரேயானுல் அதில் பிழை இராது. பாம்பின் கால் பாம்பறியும் என்பது போல ஓர் அடியாரைப் பற்றி அறுதி யிட்டுக் கூற மற்ருேர் அடியாரால் தானே முடியும்!

அடியவராக இருப்பினும் யாராக இருப்பினும் கொலை கொலைதானே; அதனைச் செய்வது தவறல்லவா என்ற வினுத் தோன்றும். உண்மை என்ன வெனில் ஒன்றைக் கொலை என்பதும் அறுவை மருத்துவம் என்பதும் செய்வா னுடைய மன நிலையைப் பொருத்ததே யாகும். கொலை செய்யும் நோக்கத்துடன் ஒருவனை வாளால் மற்றவன் எறிய, எறியப்பட்டவன் பிழைத்துக் கொள்ளு தலும் உண்டு. என்ருலும் அது கொலை தான். அறுவை மருத்துவத்தின் இறுதி யில் நோயாளி உயிர் மாய்வதும்உண்டு. ஆனுலும் அதனை யாரும் கொலை என்று கூறுவதில்லை. இச் செயல்கள் ஓர் உண் மையை அறிவுறுத்தும். செய்யப்பட்ட செயலை மட்டுங் கொண்டு ஒரு முடிவுக்கு வருதல் தவறு. அவ்வாறு செய்தால் வாளால் எறிவதும் அறுவை மருத்துவம் செய்தலும் ஒன்ருகவே கருதப் பெறும்.

செயலின் முடிவை மட்டும் கொண்டு ஒரு முடிவுக்கு வருதலும் தவறு. அவ் வாறுசெய்தால் வாளால் எறியப்பெற்றுப் பிழைத்துக் கொண்டதைத் தவறில்லை என்றும் மருத்துவரால் இறந்தவரைக் கொலை செய்யப் பெற்ருர் என்றும் கூற நேரிடும் இவை இரண்டையும் விட்டு விட்டு இவை இரண்டு செயலையும் செய் தவர் மன நிலையைக் காண்டல் வேண்

டும். வாளை எறிந்தவர் கொல்லும் நோக்கத்துடன் எறிந்தார். எனவே எறியப்பட்டவர் பிழைத்துக் கொண்டாலும் எறிந்தவர் குற்றஞ் செய்தவரேயாகிருர். மருத்துவர் பிழைக்க வைக்கும் நோக்கத்துடன் அறுவை செய்தார். நோயாளி இறந்துபடினும் மருத்துவரை யாரும் குறை கூறுவதில்லை, அது போல எறிபத்தர் பரசால் எறிந்தாலும் அவருடைய நோக்கம் யாது ?

சிவகாமியாண்டார் முதியவர், உடல் வலிமை இல்லாதவர், யானைக்கு எவ்விதத் தீங்கும் இழைக்காதவர், சிவ பூசைக்குரிய மலர்களைக் கொண்டு செல்கிருர். இத்தகைய ஒருவருக்கு தீங்கிழைத்தமையின் யானை பெருங் குற்றம் செய்ததாகிறது. மேலும் இறைவனுக்குரிய பூவைச் சிந்தினமையின் சிவ அபராதம் செய்தது. தன் துதிக்கையால் இதனைச் செய்தமையின் அதன் துதிக்கை வெட்டப்படுகிறது. பாகரும், பரிக்காரரும் உடன் இருந்தும் யானை இத்தவற்றைச் செய்யவும் அதனைத் தடை செய்யாமல் இருந்ததே அவர்கள் செய்த குற்றமாகும். எனவே, அவர்களும் தண்டனை அடையத் தகுதி உடையவர்களேயாம்.

யானை அறியாமையினுல் செய்த குற்றத்திற்கு அதனைக் கொல்வது நியாயமா என்றுகூட வினவப்படலாம். விலங்கேயாயினும் மதங்கொண்டு மனிதர்கட்கு இடையூறு செய்தால் இன்றுங் கூட இத்தகைய முறையில் யானை கொல்லப்படுவதை நாம் அறிவோம். எனவே, இது நியாயமா என்ற வினு விற்கு இடமே இல்லை.

அடுத்து வரும் வினு ஒரு சிவனடியார் இவ்வாறு கொலைத் தொழிலில் ஈடுபடலாமா என்பதாகும். தொழிலளவில் இது கொலையே தவிர சமுதாயத்திற்கு மேலும் யானையால் தீங்கு நேராமல் செய்த உதவியேயாகும் என்றுதான் கூறல் வேண்டும்.

மேலும் எறிபத்தர் என்ற அடியாருடைய வாழ்க்கையில் ஒரு சில மணி நேரங்களில் நேர்ந்த மாற்றத்தைக் கூறிய இவ் வரலாறு உதவுகிறது. பட்டத்து யானையைக்கொல்கின்ற இந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன்னரும் அவர்இத்தகைய தொண்டையேசெய்து வந்தார் என்று அறிகிருேம். அடியார்கட்கு யாரேனும் ஊறு இழைத்தால் ஊறு செய்தவர்களைத் தண்டிப்பதை அவர் தம் கடமையாகக் கொண்டிருந்தார் என்று வரலாறு கூறுகிறது. எனவே தாம் செய்கின்ற செயல் நியாயமானது என்றும், இறைவனுடைய கட்டளையை நிறைவேற்றும் ஒரு கருவியாகவே தாம் செயற்படுவதாகவும் தாம் எத்தகைய தவறும் செய்யவில்லை என்றும் எறிபத்தர் நினைத்து வந்தார்.

ஆனுல் யானையைக் கொன்று பாகர், பரிக்காரர் என்பவர்களையும் கொன்று விட்ட பிறகு அவருடைய மனதில் ஒரு வித ஐயம் தோன்றியதோ என்று நினைக்க வேண்டியுளது. இத்தண்டனை நியாயமானதுதானு அல்லது மிகுதியானதா என்ற ஐயம் அடியவர் மனத்தில் தோன்றி இருத்தல் வேண்டும். அதனுலேயே போலும் கொலை நடந்த இடத்திலேயே அவர் நின்று கொண்டிருத்தல் வேண்டும். மன்னன் வந்து 'வென்றவர் யாவர் ?' என்று வினவும் பொழுதும் அவர் அவ்விடத்தில் தான் நின்றிருக்கிருர்.

பின்னர் மன்னனிடம் நடைபெற்றதை விரிவாக அவரே கூறவேண்டிய காரணம் யாது ? தாம் செய்தது நியாயம் என்பதை மன்னனிடம் அடியவர் கூறத் தொடங்கும் வரையில் இத்தகைய யானையையும் கடமை தவறிய பாகரையும் பரிக்காரரையும் வைத்திருப்பது அவனுடைய குற்றம் என்பதை மறைமுகமாகச் சுட்டிக் காட்டுவதற்கேயாகும். ஆனுல் அவ்வாறு கூறுகையில் மன்னன் இதுபற்றிச் சமாதானம் கூறுவான் என்று தான் அவர் நினைத்திருக்க வேண்டும்,

இதன் எதிராக 'யானையும், பாகரும் மாய்ந்தமை மட்டும் போதாது. என்னையும் கொல்ல வேண்டும்; அதுவும் மங்கல மழுவால் கொல்லத் தகாது. இதோ என் உடை வாள் இருக்கிறது; இதனால் கொன்று என் பாவத்தைப் போக்கியருள வேண்டும்' என்று மன்னன் கூறினான்.

சிறிதும் எதிர்பாராத இந்தப்பேச்சால் கலங்காத சிவனடியார் கலங்கிவிட்டார். இத்தகைய ஓர் அரசனை அவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை. சிவனடியாருக்கே உரியவை அன்பும், கருணையும் என்று நினைத்தார் போலும்! சிவனடியாருக்குரிய வேடம் தாங்காமல் அரசனுக்குரிய வேடத்துடன் காணப் பெறும் புகழ்ச் சோழ மன்னன் சிவனடியார்கட்குரிய மனநிலையுடன் இருப்பது எறிபத்தருக்கு வெகு வியப்பைத் தந்தது. "கெட்டேன்! அந்தமில் புகழான் அன்புக்கு அளவின்மைக் கண்டேன்" என்று கூறும் வகையில் தன் வியப்பை வெளியிடுகிறார் எறிபத்தர். சிவனடியார் வேடத்துடன் இல்லாமல் அரசராக உள்ளவர்களும் சிவனடியாருக்குரிய பண்பாட்டுடன் வாழ முடியும் என்பதைப் புகழ்ச் சோழ மன்னவன்பால் கண்டார் எறிபத்தர்.

இனி மன்னன் தன் வாளை நீட்டியவுடன் அவனைப்பற்றிய எண்ணம் பன்மடங்காக உயர்ந்துவிட்டது எறிபத்தருக்கு. இத்தகைய ஒரு மன்னனைப் பற்றித் தவறாக முடிவு செய்துவிட்டோமே என வருந்துகிறார் எறிபத்தர். இத்தகைய ஓர் அடியாருக்கு, அவர் அரச வேடத்தில் இருப்பினும், தீங்கு நினைத்த தன்னைத் தண்டித்துக் கொள்வதே தகும் என்ற முடிவுக்கு வந்துவிட்டார் எறிபத்தர். 'அன்பனார் தமக்குத் தீங்கு நினைத்தனன் என்று கொண்டு முன்பு எனது உயிர் செகுத்து முடிப்பதே முடிவு என்று எண்ணி'னாராம். (45)

பிறரும் அடியவர்களாக இருத்தல் கூடும் என்ற எண்ணம் எறிபத்தருக்கு தோன்றவில்லை. சிவகாமியாண்டார் போன்று அடியவர் வேடத்தில் இருப்பவர்களை மட்டுமே இனங்கண்டு கொள்ளக்கூடிய நிலையில் இருந்த அவர் அரசனைக் கண்டு, அவன் செயலையுங் கண்டபிறகு முழு மாற்றத்தை அடைந்து விடுகிறார். அடியவர்கள் எந்த வேடத்திலும் இருப்பர்; அரசனாகவும் இருப்பர்; ஆண்டியாகவும் இருப்பர்; திருநீறு முதலிய சாதனங்களுடன் கந்தையணிந்தும் இருப்பர்; பணிகள் பூண்டு அரசராகவும் இருப்பர் என்பதை அறிந்தார். எக்கோலம் கொண்டாலும் அடியவர்கள் மனம் இறையன்பில் திளைக்கும் என்பதைக் கண்டவுடன் அடியவர்களைத் தவறாகப் புரிந்து கொண்ட தமக்குத் தண்டனையைத் தாமே வழங்கிக் கொள்ள முடிவு செய்கிறார்.

யானையும் பாகரும் தவறு செய்தமையின் அவர்களைத் தண்டித்த அடியார், தாம் தவறு செய்ததாக அறிந்த பொழுது தமக்குத் தண்டனை தரவும் முனைகிறார். இதுவே அடியார்கள் செய்கையாகும். இத்தகைய அற்புதம் நிகழ்ந்த ஊரே இன்று குடமுழுக்கு நடைபெறும் கருவூராகும்.



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# கருவூர்த் தலபுராண உரை நடை*

புலவர் திரு. அ. கணபதி ஐயா

## காப்பு

### விநாயக வணக்கம்

வஞ்சி வனத்தின் வளம் கூறுவாம் அதில் வாழ்
குஞ்சரத்தின் பாதம் உளம் கொண்டு.

### புராண வரலாறு

உலகம், உயிர், இறைவன் என்ற மூன்று பொருள்களும் நித்தியமானவை. உலகம் உணர்த்தினும் உணராது. உயிர்கள் தாமே உணரா; ஆயினும் இறைவன் உணர்த்த உணரும். இறைவனே எனின்? அறிவு மயமான பொருள் ஆகலின் தானே உணர்பவன். உயிர்கள் அறியாமை நீங்கி அறிவு பெற்றுப் பிறவித் துன்பம் நீங்கிப் பேரானந்தம் எய்தும் பொருட்டுக் கருணையங்கடலாகிய இறைவன் வேதம் ஆகமம் முதலியவற்றை நினைவு மாத்திரையால் செய்து அவற்றை உமாதேவியாருக்கும் முனிவர் முதலியோருக்கும் உணர்த்தி அருளுவன். அம்முறையில் பதினெண் புராணங்களை அருளிச் செய்து முதலில் சனற்குமார முனிவருக்குக் கூறி அருளினர். அவர் வேத வியாசருக்கு உரைத்தார். வேத வியாசர் சூதபுராணிகருக்கு உரைத்தார். அந்தப் பதினெண் புராணங்களுள் பிரம கை வருத்தம் என்பதும் ஒன்று. அது பல காண்டங்களை (பிரிவுகளை)க் கொண்டது. அவற்றுள் சிவக்ஷேத்திர காண்டத்தில் நூற்று ஒன்பதாவது அத்தியாயத்தில் இக்கருவூர்த் தல மான்மியம் கூறப்பட்டுள்ளது.

### இரண்டாவது

### வராக கிரிச் சருக்கம்

முனி புங்கவராகிய சூத புராணிகர் ஒருநாள் நைமிசாரணியத்தை அடைந்த பொழுது சவுனகாதி முனிவர்கள் அவரை வரவேற்று வணங்கி வழிபாடு செய்து, "ஐயனே! வஞ்சி வனமாகிய கருவூர்த்தல மான்மியத்தை முன்பு ஒரு முறை தாங்கள் சொல்லக் கேட்டும் அமைதி பெற்றிலோம், ஆதலின் அதனை மீட்டும் ஒரு முறை திருவாய் மலர்ந்தருள வேண்டும்" என்று விண்ணப்பம் செய்யச் சூத புராணிகர் சொல்வாராயினர். "வெண்கொற்றக் குடையை உடைய சேரமன்னரால் அரசு செய்யப்பட்ட கொங்கு நாட்டில் கருவூர், பேரூர், அவிநாசி, பவானிகூடல், திருச்செங்கோடு, திருப்பாண்டிக் கொடுமுடி, திருமுருகன் பூண்டி, வெஞ்சமாக்கூடல் முதலிய பல தலங்களும், தென்புறத்திலே வராககிரி என்னும் மலையும் இருக்கின்றன. அவற்றின் வளமை சொல்லுதற்கு அரியது. அம்மலையிடத்துப் பற்பல சித்தர்களும் முனிவர்களும் வசித்தலினாலும், சிவபெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருத்தலினாலும் அது மிக்க மேன்மை பொருந்தியது.

---

* இஃது செய்யுளிலிருந்து உரை நடையாக எழுதப்பட்டது.

அதன் வரலாறு சொல்லுதும், கேட்பீராக', என்று தொடங்கினர்.

வராக கிரிச் சருக்கம்

"காசிப கோத்திரத்தில் துறவறத்தில் சிறந்த வராக முனிவர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சரியா பாதம் கிரியா பாதங்களில் வல்லவராகிச் சிவயோகம் செய்தற்கு நல்ல தலம் நாடி இந்தக் கிரியை அடுத்து வன்னிமரத்தருகில் சிவலிங்கம் ஒன்று தாபித்துப் பூசித்து வந்தார். சிவபெருமான் அவருக்குக் காட்சி தந்து, 'உன் விருப்பம் யாது' என வினவப் "பெருங்கருணைத் தடங் கலே! உமது திருவருளால் சரியை, கிரியை என்னும் இரண்டு பாதங்களும் உணர்ந்தேன். சிவயோகத்தை அடியேனுக்கு அநுக்கிரகம் செய்ய வேண்டும்", என்று விண்ணப்பம் செய்யச் சிவபெருமான் கிருபை கூர்ந்து "வராக முனிவனே! யோகமானது இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என எட்டு அங்கங்களை உடையது", என்று அதன் விரிவையும் திருவாய் மலர்ந்தருளி, 'இம்மலை யோக கிரியாக ஆதியில் படைக்கப் பட்டது ஆதலின், இதனிடத்து நீ யோக சித்தி பெற்று முத்தி அடையக் கடவை. உனக்கு யோகீசன் என்னும் பெயரும் இம்மலைக்கு நீ பூசித்த காரணத்தால் வராக கிரி என்னும் பெயரும் உண்டாவதாக," என்று அநுக்கிரகம் செய்து மறைந்தருளினர். அவ்வாறே யோகீசர் யோகம் புரிந்து முத்தி பெற்றூர். இம்மலையும் வராககிரி என வழங்கப்பட்டு வருகிறது.

மூன்ருவது

ஆம்பிராவதி நதிச் சருக்கம்

ஒரு காலத்தில் மழை வளம் குன்றி மன்னுயிர்கள் வருந்தும் பொழுது சிவபெருமான் உமாதேவியை நோக்கி, 'நீ வராக கிரியைச் சூழ்ந்த நாடனைத்தும் உய்யும் பொருட்டு உனது கலையை அம்மலையினின்றும் நதி உருவாக வரும்படி செய்யக் கடவாய்" என ஆணையிட, உலக மாதாவாகிய உமாதேவியார் அவ்வண்ணமே வராக கிரியினின்றும் தமது அருளையே நதி உருவமாக ஒழுகும்படி செய்தனர். அந்நதியின் இருமருங்கிலும் பல்லாயிரம் முனிவர்கள் மாமரங்களாக இருந்து தவம் செய்தனர். அந்நதி அம்பையின் திருவருளே உருவாகி வருதலின் 'அம்பா நதி' என்றும் 'ஆம்பிரம்' என்கிற பெயரையுடைய மாமரங்களின் நிழலில் வருதலின் 'ஆம்பிரமா நதி' என்றும் பெயர் பெறும். காமதேனுவானது கருவூரை அடைந்து பூசிப்பதற்கு முன்னர் இந்நதியை அடைந்து இரு மருங்கிலும் உள்ள பல சிவத்தலங்களைப் பூசித்தபடியால் இந்நதிக்குப் பொருனை என்னும் பெயரும் உளது. இந்நதி வராககிரியினின்றும் போந்து இரு கரையிலும் உள்ள பல சிவத்தலங்களையும் வணங்கித் திருமுக்கூடல் என்னும் இடத்தில் காவிரி நதியுடன் கலத்தலைச் செய்யும். அந்நதிக் கரையில் வராக முனிவரால் பூசிக்கப்பட்ட யோகேச்சுரம் என்னும் தலம் முதலாகத் திருமுக்கூடல் ஈருகத் தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள், வாலகில்லியர் என்னும் இயக்கர்கள், விநாயக சுப்பிரமணியர்கள், பிரம விட்டுணுக்கள் முதலாயினேர் பூசித்த அளவிறந்த தலங்கள் உள்ளன. அவற்றுள் சந்திரன் குரு பத்தினி சாபம் தொலையப் பூசித்த சோமேச லிங்கமும், அநந்த கணேசன் என்னும் ஒரு லிங்கமும், காஞ்சேசன் என்னும் லிங்கமும், அடுத்த பிரம்பு வனத்தில் தெய்வீக ஆரிட லிங்கங்களும் கொங்கணேசம் என்னும் தலத்தில் கொங்கணேச்சுரன் என்னும் லிங்கமும் காளீசன் என்னும் லிங்கமும், தாரகா கணங்களால் பூசிக்கப்பட்ட தாரகேச்சுரன் என்னும் லிங்கமும், வீரபத்திரர் பூசித்த வீரேசன் என்னும் லிங்கமும், விசால லங்கம், காட்டு லிங்கம், திலகுலேச்சுர லிங்கம் முதலிய லிங்கங்களும் சிறந்தன. அவைகளுள்ளும் ஆதிமாபுரம் ஆகிய கருவூரில் உள்ள பஞ்ச லிங்கங்களும் மிகச் சிறந்தன. அவை வருமாறு:—

புற்றிடங் கொண்டு எழுந்தருளிய ஆதிநாயகர் என்னும் பசுபதிலிங்கம், அதன்கீழ்பால் கோடீச்சுர லிங்கம், அதன்கீழ்பால் கயிலாயநாத லிங்கம், அதன் தெற்கே கரியமாபீச லிங்கம், அதற்கு அக்கினித் திக்கில் ஆம்பிரவதி நதிக்கரையில் வஞ்சுளேச்சுர லிங்கம் என்பவைகளாம். அன்றியும் வஞ்சுளேச் சுரத்துக்குக் கிழக்கே அரச வனத்தில் திருமால் பள்ளி கொண்டருளிய தலமும் ஒன்றுளது. இந்நதி காவிரியுடன் கலக்குமிடத்தில் மணியீசன் என்னும் சிறந்த லிங்கம் ஒன்று இருக்கின்றது. இந்த ஆம்பிர நதி, மணிமுத்தா நதி, காவிரி நதி ஆகிய மூன்று நதிகளும் ஒருங்கு கூடுதலால் அவ்விடம் திருமுக் கூடல் என்று பெயர் பெற்றது. இந்நதி யில் முறைப்படி மூழ்குவோர் அடையும் பயன் எம்மாற் கூற அரிதாகும்.*

## நான்காவது

## சராசரச் சுருக்கம்

சின்மய ரூபமான பரமசிவம் ஆன்மாக் கள் உய்யும் பொருட்டுத் திருமேனி கொள்ளச் சங்கற்பித்துச் சுதந்தரத்தி னுல் சிற்சத்தியையே திருமேனியாகக் கொண்டு சிவம் எனவும் சத்தி எனவும் ஆவர். மாயையைத் திருமேனியாகக் கொண்டு நாதம், விந்து, சதாசிவம், மகேசுரன், உருத்திரன், திருமால், பிரமன் எனவும் நிற்பர். உயிர்களுக்கு மாயையிலிருந்து தனு, கரண, புவன போகங்களை உண்டாக்கி அவ்வுயிர் களைப் படைத்துக் காத்து, அழித்து, மறைத்து இறுதியில் அருளும் தருவர். அவ்வாறு இந்தக் கற்பத்தில் முதலில் படைப்புத் தொடங்கிய இடமும் அது நிகழ்ந்த விதமும் பற்றிச் சூதமுனிவர் கூறுவன வருமாறு :—

உலகத்தின் கண்ணுள்ள நால்வகை யோனி, எழுவகைத் தோற்றமாகிய சராசரங்கள் அனைத்தும் பிரம தேவர் துயில் கொள்ளும் இரவில் அழிந்து போயின. இதற்கு அந்தரப் பிரளயம் என்பது பெயர். பிரமதேவன் துயி லொழிந்து சராசரங்களாகிய உயிர்கள் முற்றும் அழிந்து ஒழிந்தமை கண்டு மனம் வருந்தினுன். பிறகு தன் படைப்பு இல்லையாயின் காத்தல் முதலிய தொழில் செய்பவருக்கும் இங்கு வேலையில்லை; ஆதலின் நாமே ஆதிகர்த்தா என்று தனக்குள் எண்ணி இறுமாப்பு உற்றுன். உயிர்களின் கன்ம, மல பரிபாகத்தின் பொருட்டுச் சங்கரிப்பவராகிய இறை

---

* இவ்வாறு ஆம்பிர நதி பழைமையாக இருப்பினும் பின்னர் வேறு நதியும் அதனுடன் கலந்து வருவதாக நிலநூலும் சங்க இலக்கியங்களும் கூறுகின்றன. சங்க இலக்கியம் பதிற்றுப் பத்துள், "காவிரி அன்றியும் பூவிரி புனல் ஒரு மூன்று உடன் கூடிய கூடல்" என்றும் கூறப்பட்டுள்ளது. அதன் உரை 'காவிரியல்லாமல் வேறு மூன்று ஆறுகள் ஒன்று கூடிய கூடல்' எனவும் அவை நங்காஞ்சி, குடவன், ஆன் பொருந்தம் என்பன என்றும் கூறுகிறது. ஆன் பொருந்தம் என்பது ஆம்பிரா நதியின் பரியாயப் பெயர். இனி நிலநூல் கூறுவது வருமாறு :—

இந்த ஆன் பொருந்தம் என்னும் நதி ஆனைமலையினும் திருவிதாங்கோட்டு மலை களிலும் உற்பத்தியாகும் சிற்றுறுகள் ஒன்று கூடிக் கோவை மாவட்டம் திருச்சி மாவட்டங்களுக்கிடையே நூற்று நாற்பது கல் தொலைவு பாசன வளம் புரிந்து திருமுக் கூடல் என்னுமிடத்தில் காவிரியொடு கலக்கிறது. பன்றிமலை, கருமலை என்னும் மலைகளில் உற்பத்தியாகும் சிற்றுறுகளும் இதனுடன் கலக்கின்றன, எனக் கூறப்படு தலைக் காண்கிறேம். கால மாறுபாட்டால் பேரியாறு சிற்றுறு ஆதலும் சிற்றுறு பேரி யாருதலும் புதிய ஆறுகள் தோன்றுவதும் பழைய ஆறுகள் மறைவதும் கண்டும் கேட்டும் வருகின்றேம். ஆதலின் மிகப் பழைய கால வரலாற்று முறைப்படி ஆம்பிர வதி நதியின் ஆதி உற்பத்தி வராகமலை என்றே கொள்ளத்தக்கதாகும்,

வன் பிரமனது அறியாமையை நீக்கத் திருவுளங் கொண்டார். இந்தக் குறிப்பை அறியாத பிரமன் பழைமை போல் படைப்புத் தொழிலைத் தொடங்கினுன். அது கைகூடவில்லை. தன் ஆற்றல் முழுதும் கொண்டு படைத்துப் பார்த்தான். அது முடியாமல் போகவே மனம் சலித்து மமதையும் அடங்கியது. உடனே கைலையை நோக்கிச் சென்று அங்கு ஓரிடத்தில் தங்கிச் சிவபெருமானை நோக்கி அருந்தவம் புரிந்து கொண்டிருந்தான். சிவபெருமான் பிரமனை அன்றி வேருெருவரைக் கொண்டு படைப்புத் தொழில் நடத்தத் திருவுளம் கொண்டார். அது சமயம் தேவலோகத்திலிருந்த காமதேனு கைலையை அடைந்து இறைவனை வணங்கியது. இறைவன் காமதேனுவை நோக்கித் ''தேனுவே! நீ நிலவுலகம் சென்று பிரமனைப் போலப் படைப்புத் தொழில் செய்வாயாக'' என ஆணையிட்டு விடை கொடுத்து அனுப்பினுர். அதன் பின்னர் தவம் செய்து கொண்டிருந்த பிரமதேவனுக்கு இறைவன் காட்சி தந்தருளி, 'யாது உனது விருப்பம்' என வினவினுர். நான்முகன் சிருபெருமான் திருவடிகளில் விழுந்து வணங்கி, 'ஐயனே! அடியேன் நித்திரை செய்ததனுல் உயிர்களெல்லாம் அழிந்து போயின. அதனுல் அடியேனுக்குப் பாவமும் மறதியும் மிகுந்தன. சிருட்டித் தொழிலும் கைகூடவில்லை. அப்பாவம் தீரும் பொருட்டும் படைப்புத் தொழில் கைகூடும் பொருட்டும் தேவரீரை அருச்சிக்க விரும்புகிறேன்'' என்று விண்ணப்பம் செய்தான். இறைவன் அருள் கூர்ந்து அவனை நோக்கிப் ''பிரமனே! தவத்துக்கு ஏற்ற இடம் நிலவுலகமே யாகும். நிலவுலகத்திலும் சிறந்த இடம் ஆம்பிர நதிக் கரையிலுள்ள வஞ்சி வனமாகிய கருவூராகும். அதை அடைந்து அங்கு நம்மைப் பூசிப்பாயாக,'' என்று அருளிச் செய்தார். அவ்வாறு ஆணை பெற்றுச் சென்ற பிரமன் கருவூரை அடைந்து பூசித்துப் படைப்புத் தொழில் பெற்ற வரலாறு பின்னர் வரும் பிரம சருக்கத்தில் கூறப்படும். அது நிற்க.

முன்பு இறைவன்பால் விடை பெற்று வந்த காமதேனுவானது நில உலகில் தென்றிசையை அடைந்து தவம் செய்ய நல்ல தலம் யாதென்று நாடுங்காலையில் நாரத முனிவர் அங்கு எதிர்ப்பட்டார். காமதேனு அவரை வணங்கித் 'தவம் புரிதற்குச் சிறந்த தலம் ஒன்றைக் கூறுக', என்று வேண்டியது. நாரதர் அதனை நோக்கிக் ''காமதேனுவே! ஆம்பிர நதிக் கரையில் வஞ்சி வனம் என்ற ஓரிடம் உண்டு. அங்கு சென்று தவம் புரிவாயாயின் நீ விரும்பிய சித்திகளைப் பெறலாம்'', எனக் கூறியருளினுர். காமதேனுவானது வராககிரியை அடுத்து அங்கிருந்து ஆம்பிர நதிக் கரையிலுள்ள பல சிவத் தலங்களையும் வணங்கிக் கொண்டே வந்து வஞ்சிமா வனத்தைக் கண்ணுற்று நாரதர் மொழிப்படி அவ்வனத்தில் ஓரிடத்தில் இருந்து தவம் செய்து கொண்டிருந்தது. ஒரு நாள், ''காமதேனுவே! இந்த வஞ்சி வனத்திலே ஒரு புற்றினிடத்தில் பாதாளத்தில் நின்றும் தோன்றிய ஆதிலிங்கம் என்னும் ஒரு மகாலிங்கம் இருக்கின்றது. அது சுயம்பு மூர்த்தியாகும். அதனைப் பூசித்து வருவாயாக,'' என ஆகாயத்தினின்றும் ஒரு வாக்கு எழுந்தது. காமதேனுவும் அந்த அசிரீரி வாக்கின்படியே சென்று தேடிப் புற்றினிடத்தெழுந்தருளி இருக்கும் சிவலிங்கப் பெருமானைக் கண்டு பேரானந்தத்தால் பரவசமுற்று அந்த மகாலிங்கத்துக்குப் பால் முதலிய உபகரணங்களால் அபிடேக நைவேத்தியம் முதலியன செய்து வழிபாடு இயற்றிக் கொண்டு வசித்து வந்தது.

இவ்வாறு வழிபாடு செய்து வரும் நாள்களில் ஒரு நாள் சிவபெருமான் திருமுடியின் இடப்பாகத்தில் காமதேனுவின் கால் குளம்பு பட்டு உதிரம் சொரிந்தது. அது கண்ட காமதேனு நடுநடுங்கி உளம் வருந்தி, ''ஆ கெட்டேன்; இறைவன் திருமேனியில் இரத்தம் வடியும்படி செய்து விட்டேனே!; இந்தப்

பிழைக்கு என்ன செய்வேன்?'', என்று கதறும் போது சிவபெருமான் தோன்றிக் ''காமதேனுவே! நீ வருந்தாதே; இது உன் பிழையன்று; நமது திருவிளை யாடலால் நிகழ்ந்தது'', எனக் கூறி, வடிகின்ற உதிரத்தையும் நிற்கும்படி செய்தருளிப் பின் பசுவைப் பார்த்துத் ''தேனுவே! நீ நம்மை முதல் முதல் பூசித்ததனுல் இன்று முதல் நம்மைப் பசுபதி நாதர் என்ற பெயரால் முப் புவனங்களும் போற்றக் கடவன. நாம் இருக்கும் இவ்விடத்திற்குத் தென் கிழக்குத் திசையில் சராசரங்களின் அடிச் சுவடுகள் அடையாளங்களாக வைக்கப்பட்டிருக்கின்றன. பிரளயங்கள் தோறும் பிரம தேவர் முதலாயினேர் படைத்தற்ருெழிலை நமது அனுக்கிரகத் தினுல் அவ்வடையாளங்களை நோக்கியே செய்யா நிற்பர். நீயும் அங்குச் சென்று நம்மைச் சிந்தித்தால் படைக்கும் ஆற்றல் பெறுவாய்'', என்று அருளிச் செய்து மறைந்தனர். காமதேனுவும் அவ்வாறே தென் கீழ்த் திசையை அடைந்து சராசரங்களின் அடிச் சுவடுகள் இருத்தலை நோக்கிச் சிவத்தி யானம் செய்து படைக்கத் தொடங் கிற்று. சராசரங்கள் அனைத்தும் பழமை போலவே படைக்கப்பட்டன. அவை களின் புசிப்பு நிமித்தம் வடதிசையிலே வெண்ணெய் மலை என்று ஒரு மலையை உண்டாக்கியது. அதன் கிழக்குத் திசையில் தேனு தீர்த்தம் என்று ஒரு தீர்த்தம் உண்டாக்கிச் சில காலம் சிவார்ச்சனை செய்து கொண்டிருந்தது. இவ்வாறு எல்லாம் வல்லவனுகிய முதல்வன் படைக்கும் தொழில் பிரமா வைக் கொண்டே இயற்ற வேண்டும் என்பதின்றித் தாம் சங்கற்பித்தால் ஒரு பசு மாடும் அந்தத் தொழிலைச் செய்ய வல்லதாகும் என்பதைப் பிரமன் முதலிய பிறரெல்லாம் உணரும் பொருட்டு இத் திருவிளையாடலை நிகழ்த்திக் காட்டிப் பிறகு பழமை போல் நடத்தத் திருவுளங் கொண்டவரானுர். ஆகையால் காம தேனுவை நோக்கிப் 'பசுவே! உன்னு டைய திறமைக்கும் அன்புக்கும் உவந் தோம். நீ வேண்டிய வரங்களைப் பெற்று முன் போலவே சுவர்க்கம் சென்று வாழ் வாயாக', என விடை கொடுத்தனுப் பினுர். காமதேனுவும் இறைவனை வணங்கி வரம் பெற்று விடை கொண்டு பொன்னுலம் சென்றது. வெண்ணெய் மலையானது தன்னைத் தரிசிப்போருக்கு அவர் விரும்பும் வரங்கள் எல்லாம் தந்து முருகப் பெருமான் கோவில்கொண்டருள இடமாகி விளங்குகின்றது. அந்த மலை யானது வெப்பம் மிகுந்த காலத்திலும் தண் என்று குளிர்ச்சி பொருந்தியே இருந்து வெண்ணெய் மலை என்னும் பெயரை விளக்கிக் கொண்டிருக்கிறது.

## ஐந்தாவது
## அலங்காரவதிச் சருக்கம்

கைலாய மலையானது எங்கும் ஒரே வெண்ணிறமான பனிவரைகள் விரிந்து தோன்றும் காட்சியால் திருப்பாற்கடல் வந்து சூழ்ந்தது போலவும் முழு நீறு பூசிய முனிவர்களும் சித்தர்களும் பத்தர் களும் அணிஅணியாக இறைவனைத் தரி சிக்கச் செல்லும் காட்சி அத்திருப்பாற் கடலில் எழும் அலைகளே போலவும், அவர்கள் செய்யும் அரகர முழக்கம் அந்த அலைகளின் ஒலியே போலவும் விளங்கிப் பூவுலகத்தவர் நண்ண முடி யாத தெய்வீக ஒளியோடும் விளங்கும். அந்த மலையின்கண் குடிலை என்னும் ஆசனத்தில் பிரணவமே திருவாசியாக வும் ஐம்பத்தொரு அக்கரங்கள் அதன் சுடர்களாகவும் விளங்க அதில் உமா தேவியார், மூத்த பிள்ளையார், இளைய பிள்ளையாரோடும் சிவபெருமான் வீற் றிருப்பர்; நந்தியம் பெருமான் பொற் பிரம்பு கொண்டு சந்நிதி விலக்கத் தேவ ரும் முனிவரும் தரிசித்துப் பேரானந்தப் பெருவாழ்வில் திளைத்து நிற்பர். இவ் வாறு ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு இறைவன் ஆணும் பெண்ணுமாக வீற் றிருப்பது உலகம் உய்யும் பொருட்டே என்பதை மெய்ஞ்ஞானிகள் அறிந்து பெருவிருப்புற்று போற்றிப்புகழ்வர். அஞ்

ஞானிகள் அறியாமையால் அருவருப் புற்றுத் தூற்றி இகழ்வர். அவ்வாறு போற்றுவோருக்கு அருள் செய்யும் அம்மையப்பன் தூற்றுகின்றவர் பாலும் இரக்கமே கொள்வன். அத்தகைய அப்பனிடம் பிரியாத அம்மை எல்லாம் அறிந்த சிற் சக்தியாயினும் உயிர்களுக்கு உணர்த்தும் பொருட்டுச் சிவபெருமானை வணங்கி, "ஐயனே! தவங்களில் சிறந்த தவமும் அடியார்க்கு உணர்த்தி அருளவேண்டும்," என்று பிராத்தித் தார். உமாதேவியின் குறிப்பு அறிந்த சிவபிரான் அம்மையை நோக்கி, "உமையே! தேவர்களுக்காயினும் மனிதர்கட்காயினும் தவமே உறுதி பயக் கும் செயலாகும். தவத்தினல் அடை யாத பேறில்லை. அது ஒரு பயனை விரும்பிச் செய்வதும் ஒன்றையும் விரும் பாமல் இறைவன் பால் செய்வதும் என இரு வகைப்படும். அத்தகைய தவங் கள் பல உண்டு. அவை எல்லாவற்றி னும் மேலான தவம் சிவார்ச்சனை புரிவது ஆகும். அதுவே நமக்கு உவப்புத் தருவது. அதனின் மேம்பட்ட தவம் வேறு இல்லை. இனித் தலங்களுள் மேலான தலம் நிலவுலகில் தென்தேயத் தில் வஞ்சி வனத்தின் நடுவேயுள்ள கருவூரேயாகும். இது சிவ பூசைக்கு ஏற்ற தலமாகும்," எனவும் திருவாய் மலர்ந்தருளினர். அது கேட்ட உமா தேவியார் சிவபெருமானை வணங்கி, 'ஐயனே! வஞ்சி மாநகர்க் கருவூரை அடைந்து சிவ பூசை செய்யப் பெரிதும் விரும்புகிறேன். அருள் புரிவீராக" என வேண்ட இறைவன் மகிழ்ந்து, 'அவ்வாறே செய்க' என விடை கொடுத்தருளினர். உமாதேவியாரும் இறைவனை வணங்கி விடைபெற்றுக் கொண்டு இலக்குமி, சரசுவதி ஆகிய சேடியரோடும் நிலவுலகம் நோக்கி வந்து வஞ்சி வனத்தை அடைந்து நாடோறும் ஆரம்பிரவதி நதியில் நீராடித் திருநீறு தரித்து அக்கமணி பூண்டு நியமம் முடித்துச் சிவ பூசையை ஆகம முறைப்படி செய்து வந்தார், இலக்குமி, சரசுவதி ஆகிய இருவரும் அவ்வாறே முறைப்படி சிவ பூசை புரிந்து வந்தனர். அவர்கள் பூசைக்கு உவந்த கைலாயபதி ஆகிய சிவபெரு மான் காட்சி தந்து உமாதேவியாருக்குப் பிரியா வரம் தந்து உடன் இருந்தனர். அலைமகள், கலைமகள் ஆகியவருக்கும் வேண்டும் வரங்கள் தந்தருளினர்.

### ஆருவது

### பிரம சருக்கம்

பிரம தேவன் முன்கூறியபடி சிவபெரு மானுடைய கட்டளைப்படி கைலையில் இருந்து நிலவுலகம் நோக்கி அன்னப் பறவை மீது புறப்பட்டார். தேவர்களும் முனிவர்களும் சூழ்ந்து போற்ற வந்து வஞ்சிமா வனத்தின் எல்லையைக் கண்டு அன்ன வாகனத்தை விட்டு இறங்கிக் கை குவித்து 'அரகர' எனத் துதித்தான். உடன் வந்தவர்கள் அனைவரும் அவ் வாறே 'அரகர' முழக்கம் செய்தனர். அது கடல் ஒலிபோல் எழுந்து வானைப் பிளந்தது. பிறகு நான்முகன் ஆம்பிர நதியில் மூழ்கி வேதத்தை உச்சரித்துக் கொண்டே திருநீறு, உத்திராக்கங்கள் தரித்து நியமம் முடித்து ஆநிலைப் பெரு மான் கோவிலையடைந்து, சந்நிதியில் தாழ்ந்து எழுந்து பலவாறு தோத்திரம் செய்தான். பின்பு காமதேனு படைத்த சராசரங்களின் அடிச்சுவடுகளைக்கண்டு; "பசுபதிப் பெருமானுல் முடிக்கப்படாத செயலும் உண்டோ? அவருக்கு எதுவும் அரிதில்லை", என்று வியந்து போற்றி, 'இக் கருவூரைக் கண்டு கைத்தொழ என்ன மாதவம் செய்தோமோ', என்று நினைத்தவனுய்ச் சிவபூசை செய்யத் தொடங்கினுன். தேவர்களெல்லாம் அங்கிருந்து ஏவல் செய்யப் பூசைக் குரிய திரவியங்களான தூயநீர், மலர் கள், சந்தனம், பால், பழங்கள் ஆகிய எல்லாவற்றையும் சேகரித்துக் கொண்டு முன்பு உறக்கத்தினல் உயிர்கள் அழிந்து போனமையால் ஏற்பட்ட பாவமும் சிவபெருமான் அருள் இன்றி நாமே

படைத்து விடலாம் என்று நினைத்ததனுல் வந்த சிவ அபராதமும் படைக்கும் விதத்தை உறக்கத்தால் மறந்து போகும் குறைபாடும் விரைவில் தீரவேண்டும் என்ற எண்ணத்துடன் வேத விதிப்படி இறைவன் திருவடிகளை விட்டு நீங்காத சிந்தை உடையவனுய்ச் சிவபூசை செய்து பின்வருமாறு தோத்திரம் செய்தான் :—

உருவே அருவே ஒளியே சரணம் !
உணர்வே! உணர்வார்உணர்வே சரணம்

குருவாய் வெளியே வருவாய் சரணம் !
கொடுமால் விடமார் மிடரு சரணம் !

கருமாகரி வீழ் உரியாய் சரணம் !
கருவேர் அறவே வருவாய் சரணம் !

திருமால் அறியா இறையே சரணம் !
திருஆ நிலையாய் சரணம் ! சரணம் !

இவ்வாறு பல தோத்திரங்கள் செய்து அன்புருகி நின்ற பிரமன் முன் பசுபதிப் பெருமான் சிவலிங்கத்தினின்று தோன்றி "பிரமனே! உன் வழிபாட்டிற்கு மிக மகிழ்ந்தோம். நீ விரும்பிய வரங்களைக் கேட்பாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினுர். நான்முகன் இறைவனை நோக்கி, "மறைமுடிவான பேரின்பக் கடலே! உம்முடைய தாமரை மலர் போன்ற திருவடிகளுக்கு வணக்கம். இச்சிறியேன் தூக்கத்தினுல் உலகம் அழிந்த பாவமும், நானே தலைவன் என்ற அகந்தையும், தூக்கத்தனுல் படைக்கும் வித்தை மறத்தலும் ஆகிய தீமைகள் நீங்கும்படி அருள் செய்வாயாக" என வேண்டப் பசுபதிப் பெருமான், 'அவ்வாறே அளித்தோம். பெற்றுக் கொள்க. மேலும் நீ இத்தலத்தில் பெரு வேள்வி ஒன்று இயற்றி முடித்துக் கலைமகளை மணஞ்செய்து கொண்டு இவ்விடத்திலேயே படைப்புத் தொழிலையும் தொடங்கி நடத்துவாயாக,' என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினுர்.

சிவபெருமான் ஆணைப்படி திருஆநிலைத் தென் திசையில் வஞ்சுளேசுவரத்தின் மேற்குப் பகுதியில் ஆம்பிரவதி நதியின் வடபால் தன் பெயரால் தீர்த்தம் ஒன்று உண்டாக்கிச் சிவபூசை புரிந்து வந்தான். பிறகு வெண்ணெய் மலையின் வடபால் பெரிய வேள்விச் சாலை ஒன்று ஏற்படுத்தி இறைவன் ஆணைப்படி வேள்வி செய்யத் தொடங்கினுன்.

நான்முகன் இயற்றும் பெரு வேள்விக்கு வந்திருந்தவர், அத்திரி, அகத்தியர், பரத்துவாசர், வியாசர், சுகர், காசிபர், கோசிகர், வசிட்டர், பிருகு, துருவாசர், வாமதேவர், ததீசி, கண்ணுவர், சாமதேற்கியர், சாபாலி, சாண்டில்லியர், உரோமபாதர், உபமன்னியர், சங்கணர், பராசரர், கவுதமர், சுதீக்கணர், மிருகண்டு, மார்க்கண்டர், விபாண்டகர், விச்சுவாவசு, மரீசி, வாமத்திரி, கவுண்டின்னியர், வால்கில்லியர், அட்டாக்கிரர், தெக்கணர், புலத்தியர், சனகர், சனுந்தகர், சனந்தரர், சனற்குமாரர், நாரதர், கமலமாதவர், தத்தாத்திரேயர், அங்கிரார் முதலிய முனிவர்களும், விஞ்சையர், இயக்கர், பூசுரர்முதலானவர்களும் வந்து இருந்தனர். வேள்விக்கு வந்த அனைவரையும் நான்முகன் வரவேற்று முகமன் கூறிப் பசுபதி நாதன் கழல் வணங்குவித்து வேள்விச்சாலையில் அவரவர்க்கு ஏற்ற இடங்களில் அமரச் செய்தான். பிறகு நான்முகன் பசுபதியின் திருவடியை மனதில் இருத்தி மறைமுகத்தோடு விதிப்படி வேள்வி இயற்றி அவிப்பாகத்தை அவ்வவர்க்கு முறைப்படி வழங்கி உலகமாதாவாகிய அலங்காரவதியையும் ஆநிலையண்ணலையும் வணங்கிப் பல வகை வாத்தியம் முழங்க, அந்தணர்ஆசி கூற முனிவர்கள் ஏத்தக் கலைமகளை மணமுடித்தான்.

அதன் பிறகு நான்முகன் ஆநிலை அண்ணலுக்கு அழகிய திருக்கோவில் அமைத்தான். அக்கோவிலின் தென் கிழக்குத் திசையில் காளிகோவில் ஒன்றும் ஐயனுர் கோவில் ஒன்றும் கட்டுவித்தான். வஞ்சி வனம் முழுவதும் தேவேந்திர உலகம்போல நகரத்தை உண்டாக்கினுன், மேரு மலைக்கு நிக

ரான திருத்தேர் ஒன்று பசுபதிப் பெருமானுக்குச் செய்வித்து மூவுலகத் தோரும் வருமாறு முரசறைவித்துப் பங்குனி உத்திரத் திருவிழாவினைச் சிறப்புறச் செய்து முடித்துப் பின் படைப்புத் தொடங்கிச் சில காலம் நடத்தி ஆநிலை அண்ணல் அருள்பெற்று விடைகொண்டு தேவர்கள் போற்ற நாமகளுடன் தனது உலகத்தை அடைந்தான். பிரமன் நடத்திய வேள்விக் குண்டத்தில் உண்டான திருநீற்றை முறையோடு பூசுகின்றவர் முத்தி பெறுவர். மந்திர முதலியன இன்றி உடம்பில் பூசிக்கொள்பவர் சிவகணங்களாக வீற்றிருப்பர்.

ஏழாவது

## பதரி வனச் சருக்கம்

பிரம தேவன் இயற்றிய பெரு வேள்விக்கு வந்திருந்த தவ முனிவர்களில் வேத வியாசரைத் தவிர எல்லாரும் பசுபதிநாதனை வணங்கித் தத்தம் இடங்களை அடைந்தார்கள். வேத வியாசர் நிரந்தரமாகக் கருவூரில் இருக்கக் கருதி, ஆநிலை அண்ணலை அன்பொடு கை குவித்து வணங்கித் தோத்திரம் செய்தார். பசுபதிநாதன் வியாசருக்குக் காட்சி தந்து, “உனக்கு வேண்டுவது யாது?” என்று வினவியருளினர். வியாசர் இறைவனை வணங்கி, ‘ஐயனே! அடியேன் தங்களை நாடோறும் பூசித்துப் பிரியாமல் இருக்க வேண்டும் என்னும் பேரவா உடையனுயினேன். ஆணைதந்து அடியேன் தங்கி இருக்கத் தகுதியான இடம் ஒன்றும்தெரிவித்தருளவேண்டும்” என்று விண்ணப்பித்தார். அதுகேட்ட பசுபதிநாதன், “அன்ப! நமது ஆலயத்தின் அக்கினி மூலையில் ஆழம்பிர நதிக்கு வடக்கில் ஓர் இலந்தை வனம் இருக்கிறது. அவ்விடத்தில் ஆசிரமம் ஏற்படுத்தித் தங்கியிருந்து நம்மை அருச்சிப்பாயாக”, எனக்கூறி மறைந்தருளினுர். அவ்வாறே வியாசரும் தமது மாணுக்கர்களோடும் சென்று இலந்தை வனத்தைக் கண்ணுற்றுர். அதில் பல வேறு மரங்கள் வானளாவ வளர்ந்து தழைத்துப் பூத்துக் காய்த்து நறுமணமும் குளிர்ச்சியும் உடையதாய் எக்காலத்திலும் பல வேறு கனிகளை உடையதாய் விளங்கிய காட்சி வியாசர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. மேலும் அதன் கிழக்குப் பகுதியில் அரசமரமும் புனிதமான அரச தீர்த்தமும் மேலும் மகிழ்ச்சியை உண்டாக்கியது. வியாசர் நல்ல ஆசிரமம் அமைத்து அதில் மாணவரோடும் தங்கியிருந்து தவம் இயற்றிப் பசுபதிப் பெருமானையும் வழிபாடு செய்து வந்தார்.

எட்டாவது

## திக்குப் பாலகச் சருக்கம்

ஆதித்தலமாகிய வஞ்சிவனக் கருவூரில் படைப்புத்தொடங்கியகாலத்தில் இந்திரன், அக்கினி, எமன் ஆகிய மூவரும் பசுபதிப் பெருமானைப் முறையோடு பூசித்தனர். அவர்கள் வழிபாட்டுக்கு உவந்த ஆநிலை அண்ணல் இந்திரனைத் தேவர்களுக்கு அரசனுக்கிக் கீழ்த்திசைக் காவல் உரிமையையும் தந்தருளினுர். அக்கினியை மகங்களுக்கு உரிய தென்கிழக்குத் திசைக் காவல் உரிமையுடையவனுக அருள் செய்தார். எமனை நடுநிலை வேந்து என உலகம் போற்றத் தென்திசைக்காவலன் ஆக்கினுர். திருமாலின் பகைவனுய்ப் பலமுறை அவரோடு போர் செய்த முராசுரன் மரபில் வந்த அக்கினி பக்கணன் என்னும் நிருதன் மகன் துற்சயன் என்பவன் தனக்கு ஒருவரும் நிகரில்லாத பேராற்றல் படைத்தவன். அறங்களை அழித்துப் பாவங்களை வளர்ப்பவன் அந்தணர் செய்யும் வேதவேள்விக்கு அந்தகன். ஊனும் புலாலும் ஒழியாது உணவாகக் கொள்பவன். தன் மரபினரைக் காப்பவன். வனங்களில் திரிபவன். ஒருநாள் வஞ்சி வனத்தை அடைந்தான். அங்கு வடிவுடை நாயகி சமேத வஞ்சிவனநாதப் பசுபதியை அன்பர் வழிபாடு செய்யும் பான்மையைக் கண்ணுற்றுன். அவ்வளவில் அவன் இயல்பு

மாறிவிட்டது. அது அத்தலத்தின் மகிமையோ? அல்லது அவன் முற்பிறப்பில் செய்த தவப்பயனே? அறியோம். வில் அம்புகளை விட்டெறிந்தான். ஆம்பிரநதி நீராடி, நீறு பூசிப் பசுபதிப் பெருமானை ஒரு மனத்தோடு அருச்சனை புரிந்தான். இறைவன் மகிழ்ந்து தென் மேற்குத் திசைக்கு அரசனாக முடி சூட்டிக் காவல் உரிமையையும் அவனுக்கு அருளினர். ஆதலின் சிவார்ச்சனையின் பெருமை செப்புதற்கு எளிதோ? நிற்க. வருணன் இறை கோவிலில் நீர் தெளித்து வழிபாடு செய்ததனல் அவனை மேற்குத்திசைக் காவல் அரசாகப் பசுபதி அருள் கொடுத்தார். வாயுவானவன் பசுபதி ஆலயம் திருவலகிட்டு வழிபாடு செய்தமையால் வடமேற்குத் திசைக்குக் காவலனாகப் பசுபதி அருளினர். குபேரன் இறைவனை நவமணிகள் பதித்துச் செய்த அணிகளால் அலங்கரித்து அருச்சனைபுரிந்த சிறப்பால் அவனை வடதிசைக் காவலனாகவும் ஆக்கினர். ஈசானன் பசுபதியைப் பூசித்து வடகிழக்குத் திசைக் காவலும் சிவசாருபமும் பெற்றான்.

## ஒன்பதாவது

## கடவுள் அருச்சனைச் சருக்கம்

திருமாலானவர் வஞ்சி மாநகர்க் கருவூரில் வந்து பசுபதிப் பெருமானை முறைமையோடு அருச்சனை புரிந்து திருமகளை மணஞ் செய்து கொண்டு உலக உயிர்களைக் காக்கும் பதவியைப் பெற்றார். மேலும் இலந்தை வனத்தில் கோவில் கொண்டு சர்ப்ப சயனத்தில் அறி துயிலில் அமர்ந்துள்ளார்.* வேதங்களும் வேதாங்கங்களும் பசுபதிப் பெருமானை அருச்சித்து இன்னின்னர் இன்னின்ன செயல் செய்ய வேண்டும் என்று நியமித்தலும், இன்னின்ன செயல் செய்தார் இன்னின்ன பயனை அடைவார் என்ற நிச்சயத் தன்மை செய்தலும் உண்மையையே உரைக்கும் என உலகம் நம்புதலும் ஆகிய வரங்களைப் பெற்று மூவுலகங்களும் போற்றும் பேறு பெற்றன. பராசனன், வாயுபக்கன பக்கன், பிருங்கன், அத்திரி, தூம்பர முனி, நாதமுனி, சீவகன் ஆகிய முனிவர்கள் வஞ்சி வனத்தின் அக்கினி திக்கில் பெரு வேள்விகள் செய்தும் யோக நிலையிலமர்ந்தும், ஐம்புலம் அவித்துச் சிவகதி வாய்க்கும் அருந்தவம் இயற்றி, நாற்றிசைகளிலும் சிவலிங்கப் பிரதிட்டைகள் செய்து கோடீசுவரலிங்கத்தை வழிபாடு செய்து, வஞ்சுளேசுவரனை வழிபட்டு உலக இன்பத்தை வெறுத்து ஆநிலையப்பரை அருச்சித்து நல்ல பதவிகளைப் பெற்றார்கள். கிரவுஞ்ச மலையைத் தடிந்து சூரபத்மனை அழித்து அமரர்களுக்கு வாழ்வு நல்கிய சுடரிலை நெடுவேல் சுப்ரமணியர் ஆநிலைப் பெருமானை அருசித்து திரு ஆநிலைத் திருக்கோவிலின் கிழக்கு ஆம்பிரவசியின் மேற்குமாக அந்நதிக்கரையில் கோபிதார வனத்தில் தேவாமிர்தத்துக்கு நிகரான ஒரு தீர்த்தம் உண்டாக்க, அதில் அந்தணரும் முனிவர்களும் நீராடிச் சிவ காயத்திரி மந்திரம் ஓதிப் பன் மலர் கொண்டருச்சிக்கப் பசுபதியின் திருவருளைப் பெற்றார்.

சூரியன் சந்திரன் முதலிய நவக்கோள்களும் வசிட்டன் முதலிய முனிவர்களும் தங்கள் தங்கள் பெயரால் சிவப்பிரதிட்டை செய்து வழிபட்டுச் சிறந்த சிவ பக்தி உடையவளும் சிங்கம் போன்ற வலிமை படைத்தவளுமாகிய தாடகை ஆநிலை அண்ணல் கோவிலுள் தன் பெயரால் வற்றுத தீர்த்தம் ஒன்று உண்டாக்கிப் பசுபதியை அருச்சித்துப் சிங்கக்குட்டி போன்ற மாரீசன் என்னும் மகனைப் பெற்றுச் சிறந்த வரங்கள் பல பெற்றுத் தன் இருக்கையை அடைந்தாள். சேர சோழ பாண்டியர் ஆகிய

* இக்கோவிலுக்கு வித்துவக்கோடு என்னும் பெயர் உண்டு எனவும் குலசேகர ஆழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளதாகவும் பெரியோர் கூறுவர்.

மூவேந்தரும் பசுபதிப் பெருமானை வழி பட்டு மூவுலகமும் போற்றும் புகழை நிறுவிப்பசுபதிப் பெருமானுக்குச் சிறந்த ஆலயத்திருப்பணிகள் பல செய்து வழி பாடுகள் சிறப்பாக நடக்கும்படி செய்து சுவர்க்கலோக பதவியை அடைந்து இன்புற்ருர்கள் .

### பத்தாவது
### சுக்கிரன் உபதேசம் பெற்ற சுருக்கம்

அசுர குருவாகிய சுக்கிராச்சாரியார் கருவூரை அடைந்து ஆநிலையப்பனை வணங்கி இலந்தை வனத்தில் வேள்விச் சாலை அமைத்து வேள்வித் தீ நடுவில் ஒரு கால் பெருவிரலை நிலத்தில் ஊன்றி மற்ருெரு காலை மடித்து தொடையில் சேர்த்து இரு கைகளையும் தலையின்மேற் கூப்பி ஐப்பொறிகளும் ஐம்புலன் வழி ஓடாமல் நிறுத்தி மனத்தின் வழி செல்லா மல் ஒருமித்த சிந்தையுடையவராய் நான்முகன் எழுத்தை நஞ்செழுத்தாக் கும் அஞ்செழுத்தை ஓரெழுத்துக்கு ஒரு லட்சம் உருவேற்றினுர். பசுபதிப் பெரு மானுடைய பலவேறு திருக்கோலங் களையும் தனித்தனியே தியானித்தார். காற்றையே உணவர்கக் கொண்டு நூறு ஆண்டுகள் கடுந்தவம் புரிந்தார். இவ்வாறு தவம் புரிந்துவரும் நாளில் ஒரு நாள் சிவராத்திரியன்று மாலயன் காணு வள்ளலாகிய பசுபதிப் பெருமான் வெள் ளேற்றின் மீது வடிவுடை நாயகியோடும் சுக்கிராச்சாரியார்க்குக் காட்சி வழங்கிச் ''சுக்கிரனே! உன்னுடைய அரிய தவத்துக்கு மெச்சினேம். நீ இறந்த உயிரை மீட்டும் எழுப்பித் தருவதாகிய மிருத சஞ்சீவினி மந்திரத்தை நம்மிடம் பெற விரும்பினுய்! இதோ உனக்கு உபதேசிக்கிறேம்,'' என்று அவர் காது களுக்குக் கேட்டும் வண்ணம் மந்தி ரத்தை உரைத்தருளினுர். பிறகு சுக் கிராச்சாரியார் முடியின் மீது திருவடி சூட்டிவிட்டு மறைந்தருளினுர். வேண் டிய பொருளை வேண்டுயவாறே பெற்ற புகரானவர் பேரன்பால் நெஞ்சம் நெக்குருகப் பசுபதிப் பெருமானைப் பல காலம் பூசித்துப் 'பின்னர்த் தமது இடத்தை அடைந்தார்.

சிலகாலம் சென்ற பிறகு தேவருக்கும் அசுரருக்கும் கடும் போர் மூண்டது. தேவர்கள் அமிர்தம் உண்டமையால் அப்போரில் ஒருவரும் இறக்கவில்லை. அசுரர் படைகளெல்லாம் இறந்து ஒழிந் தன. அதுகண்ட அசுர குருவானவர் தமக்குப் பசுபதிநாதர் அருள் செய்த மந்திரம் கொண்டு அசுரர் படைகள் முழுவதையும் உயிர் எழும்படிச் செய்து விட்டார். அதுகண்ட தேவர்கள் மிகவும் அச்சம் கொண்டு தேவ குருவாகிய வியாழனிடம் சென்று அவர் திரு வடிகளில் விழுந்து வணங்கி நிகழ்ந்த செய்தியை விண்ணப்பித்துக் கவலை யோடு நின்ருர்கள். அசுரர் ஆக்க மும் தேவர்களின் ஏக்கமும் அறிந்த வியாழன் சிந்தித்தான். பிறகு தன் அருந்தவப் புதல்வனுகிய கசன் என்ப வனை நோக்கி, "மைந்த! நீ தவ ஒளி மிக்க சுக்கிராச்சாரியாரிடம் சென்று அவருக்கு விருப்பம் உண்டாக அவர் ஏவிய பணி புரிந்து மிருதசஞ்சீவினி மந்திரம் உபதேசிக்கப் பெற்று மீண்டும் இவ்விடம் வருக.'' என்று ஏவினுன். தேவர்கள் கசனை நோக்கி நீ மிருதசஞ் சீவினி மந்திரம் உபதேசிக்கப்பெற்று மீண்டும் இவ்விடம் வருவாயானுல் உன் தந்தைக்கு அளிப்பது போலவே உனக்கும் வேள்வியில் அவிர்ப்பாகம் தருவோம்.'' என்று கூறி அனுப்பினர். கசன் தன்னுடைய நிலைக்கு வருந்திச் சுக்கிராச்சாரியார் இடத்தை அடைந் தான். அடைந்தவன் அசுர குருவின் பாதத்தில் விழுந்து வணங்கிக் ''குருவே! சரணம்! சரணம்!'' என்று தோத்தரித்து இரு கைகளையும் சிரமேற் குவித்துத் துதித்தான். அவ்வாறு துதித்த கசனை அசுரகுரு நோக்கி, 'இவன் மிக்க அன் புள்ளவன் ' என்று தெரிந்து உண்மை அன்போடு அவனை அருகு அழைத்து இருக்கச் செய்து, 'தேவகுரு மகனுகிய நீ இவ்விடம் வந்த காரணம் யாது ?,' என்று வினவினுர். அதற்குக் கசன், ''ஐயனே! அடியேன் தங்களுக்குத் தொண்டு செய்ய விரும்பி வந்தடைந்

தேன்; ஏற்றுக் கொள்வீராக,'' என்று பணிந்தேன். களங்கமற்ற கசன் நிலையை அறிந்த அசுரகுரு அவனைத்தன் பசு நிறைகளை மேய்த்து வருமாறு செய்தார். மேலும் அக்குடும்பத்தினர் ஏவிய பணி களெல்லாம் மகிழ்ச்சியோடு செய்வான். இவ்வாறு தேவ வருடத்தில் ஓராயிரம் ஆண்டு பணிவிடை செய்தான். அசுர குருவுக்குத் தேவயானி என்ற ஒரு மகள் உண்டு. அவள் கசனிடம் மிகவும் அன்பாக இருப்பாள். அவள் கசனை நோக்கி, ''மறையவனே! எனக்குச் சோலையில் சென்று நாடோறும் புதிய மலர்கள் பறித்துத் தரவேண்டும்.'' எனக் கேட்டாள். அவ்வாறே நாடோறும் புதுமலர் பறித்துத் தந்து வந்தான். அவள் பின்னும் கசன் முகம் நோக்கி, ''உன்னுடைய யாழிசையை நான் மிகவும் விரும்புகிறேன். ஆகையால் யாழ் வாசிப்பாயாக;'' எனக் கேட்டாள். அவ்வாறே யாழ் வாசித்து அவளுக்கு மகிழ்ச்சி உண்டாக்குவான்.

ஒரு நாள் சில அசுரர்கள் கூடி 'இந்த வியாழன் மகன் நம் குருவினிடத்தில் மிருதசஞ்சீவினி வித்தை கற்க வந்துள் ளான். அவனைக் கொன்றுவிட வேண்டும்,' என்று முடிவு செய்து அவன் மாடுகளை ஓட்டிக் கொண்டு காட்டுக்கு வந்ததும் அவனை அடித்துக் கொன்று கூறிட்டுப் புலிகளுக்கு இரையாக்கி விட்டார்கள். அன்று இரவு ஆகியும் கசன் வராதது கண்டு தேவயானி தன் தந்தையிடம் தெரிவித்தாள். குருவும் மனம் வருந்திக், 'கசனே! வருக' என் றழைத்தார். கசன் உடனே வந்து குரு வைப் பணிந்தான். குரு அவனை நோக்கி, 'நீ இவ்வளவு நேரம் வரா மைக்குக் காரணம் யாது? என்று வினவ, அவன் நிகழ்ந்த செய்தியை உரைத் தான். பிறகு குரு ஆணைப்படி பசு மேய்க்கச் சென்ற கசனை அசுரர்கள் பிடித்துக் கொன்று கடல் நடுவில் போட்டு விட்டனர். அதனை உணர்ந்த குருவானவர் கசன் பெயர்கூறி அழைக்க வந்து சேர்ந்து அன்று நிகழ்ந்த செய்தி யையும் உரைத்தான். இறுதியாக அசுரர்கள் கசன் மீண்டும் வாரா வகை செய்ய எண்ணிப் பசு மேய்க்க அவன் வந்த சமயம் அவனைப் பிடித்துக் கொன்று நெருப்பிலிட்டு எரித்துச் சாம்ப ராக்கி ஒரு குடத்தில் அந்தச் சாம்பலைப் போட்டுத் தேவலோகத்திலுள்ள மதுவை அதனுள் பெய்து கலக்கித் தங்கள் குருவுக்குக் கொடுத்தார்கள். குருவும் மகிழ்ந்து 'நாடோறும் இவ்வண் ணமே கொண்டு வாருங்கள்,' என்று கூறி அதனைப் பருகி விட்டார். அன்றும் வெகுநேரமாகியும் கசன் வீடு திரும் பாமை கண்டு குருவானவர் கசனைக் கூப்பிட அவன் குரு வயிற்றினுள் ளிருந்து, 'குருவே நான் எவ்வாறு வெளி வருவேன்,' என்று கூறினன். அசுர ருடைய வஞ்சனையை அறிந்த அசுர குருவானவர் யோசித்து, 'நாம் வயிற்றி னுள்ளிருக்கும் கசனுக்கு மிருதசஞ் சீவினியை உபதேசித்து நம் வயிற்றைக் கிழித்துக்கொண்டால் கசன் வெளிவந்து நம்மையும் உயிர்ப்பிப்பான்' என்று முடிவு செய்து அவனுக்கு மந்திரத்தை உபதேசித்துவிட்டு வயிற்றைக் கிழித் துக்கொண்டு மாண்டு விட்டார். வெளியே வந்த கசன் குருவின் செய லுக்கு மனம் உருகி அவர் உபதேசித்த மந்திரத்தால் அவரை உயிர்ப்பித்தான். உயிர்பெற்று எழுந்த குருவானவர் கசன் மீது பேரன்பு உடையவராய், ''நீ குரு வியாழனுடைய புத்திரன் என்னும் பெயரைப் புதுப்பித்தாய். இனி இந்த மதுவை யார் அருந்தினலும் அவர்கள் சண்டாளர்களாகக் கடவர்' எனச் சபித்துவிட்டுக் கசனை நோக்கி, எமக் குப் பசுபதி அருளிய மிருத சஞ்சீவி னியை நீ பெற்று விட்டாய். மகிழ்ச்சி யோடு உன் இருப்பிடம் அடைந்து வாழ் வாயாக.' என விடை கொடுத்து அனுப்பினர். அது கண்ட தேவயானி யானவள் கசனை அழைத்து 'என்னைத் திருமணம் செய்து கொள்க' என உரைத்தாள். அதற்குக் கசன், 'தேவ

யானியே! உன் தந்தை என் குரு ஆவார். குருவின் மகள் சகோதரி யல்லவா? மேலும் நான் உன் தந்தை வயிற்றிலிருந்து பிறந்ததால் சகோ தரனேயாவன். சகோதரியை மணப் பது தருமமாகுமா? நீ அறிவிலா மொழி கூறிப் பெண்களுக்கு உரிய பேதை என்னும் பெயரை நிலைநாட்டி விட்டாய்,'' என்று கூறி மறுத்து விட்டான். அது கேட்ட தேவயானி சினங்கொண்டு, "நீ என் தந்தையால் கற்ற மந்திரம் மறந்து போகக்கடவது" என்று சபித் தாள். அது கேட்ட கசன், 'நீ உன் தந் தைக்கு எதிரிலேயே அவருக்கு மாருகப் பேசுகிருய்; ஆகலின் உனக்குப் பிரா மண மணமகன் கிட்டாமல் அன்னிய குலத்தானையே மணக்கக் கடவாய்" என்று அவளுக்குச் சாபம் தந்துவிட்டுத் தன் இடம் சென்று அந்த மந்திரத்தை மற்ெருரு தகுதி வாய்ந்த அந்தணனுக்கு உபதேசித்து இறந்த உயிரை எழும்படி செய்தான். தேவர்கள் மகிழ்ந்து கச னுக்கு வேள்வியில் அவிர்ப்பாகம் கொடுத்து வந்தனர்; என்று சூத முனி வர் நைமிசாரண்ய வாசிகளுக்கு எடுத் துரைத்தார்.

பதினென்ருவது

முசுகுந்தச் சுருக்கம்

நைமிசாரணிய முனிவர்களை நோக்கி சூத புராணிகர், "தவச்செல்வர்களே! உலகத்தில் பல வேறு சமயங்கள் உண்டு. அந்தச் சமயங்களை ஏற் படுத்திய பெரியவர்களும் அது ஏற்பட்ட காலமும் உண்டு. ஆனுல் சிவசமயம் ஏற்பட்ட காலம் தெரிய முடியாது. அதன் ஆசிரியர் கல்லாலின் கீழமர்ந்து ஆன்மாக்களுக்கு உண்மைநிலை உணர்த் திய காலகண்டன் ஆகிய கடவுளே ஆதலின் இச்சிவசமயம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதேயாம். மற்ற சமயங்கள் பிற சமயங்களை இகழ்ந்து தூற்றும். ஆனுல் சைவ சமயம் எல்லா மதங்களையும் தனக்கு அங்கமாகக் கொண்டு திகழ்வது. ஆன்மாக்கள் செய்யும் நல்வினைகள் பதி புண்ணியம். பசு புண்ணியம் என இருவகைப்படும், தீவினையும் அவ்வாறேயாகும். மனத் தொடு படாது செய்யும் வினைக்கும் பலன் உண்டு என்று கூறுவது சைவ சமயம் ஒன்றேயாகும். அவ்வாறு மனத் தொடு படாது குறும்புத் தனமாக வில்வ இலைகளைப் பறித்துப் போட்ட குரங்கு ஒன்று அடைந்த பேற்றினை இங்குக் கூறுவோம்.

"திருக் கைலாயபதியாகிய சிவபெரு மான் ஒரு நாள் உமாதேவியாருடன் கைலாயமலைச் சாரலில் பல்வேறு மரங் கள் அடர்ந்த சோலையில் ஒரு வில்வ மரத்தடியில் வீற்றிருந்தருளினுர். அந்த மரத்தின் மீது இருந்த ஒரு குரங்கு வில்வ இலைகளைப் பறித்துப் பறித்துக் கீழே போட்டுக் கொண்டு இருந்தது. அவ் விலைகள் மரத்தடியில் இருந்த சிவபெரு மான் மீதும் உமாதேவியார் மீதும் விழுந்து கொண்டே இருந்தன. இதைக் கண்ட உமாதேவியாருக்குக் குரங்கின் மீது கோபம் உண்டாயிற்று. அதுகண்டு உமையை நோக்கி, "நீ இந்தக் குரங்கின் மேல் வெறுப்புக் கொள்ளாதே. அது வில்வத்தால் நம்மை அருச்சனை புரி கின்றது,'' என்று கூறி அக்குரங்குக்கு நல்லுணர்வு உண்டாகுமாறு அருள் புரிந்தார். உடனே அந்தக் குரங்கு மரத்தைவிட்டு இறங்கி வந்து உமா மகேசுரனை வணங்கி, "ஐயனே! அம்மையப்பராகிய தங்களை நினை யாது இப்பிழை செய்து விட்டேன், மன்னித்தருள்வீராக,'' என வேண் டிற்று. அதுகேட்ட சிவபெருமான், முசுவே! உன்னுடைய செயல் நமக்கு மகிழ்ச்சி அளித்தது. அதனை வழி பாடாக ஏற்றுக் கொண்டோம். நீ நம்மைப் பூசித்ததன் பயனுகச் சோழர் குலத்தில் தோன்றி உலகை ஒரு குடைக் கீழ் ஆளும் சிறப்பினைப் பெற்று வாழ் வாயாக,'' என வரம் தந்தருளினுர். வரம் பெற்ற முசுவானது ஆண்டவனைத் துதித்து, "ஐயனே! இருவினைக்கு

ஈடாக நான் அடையும் பிறப்பில் உமது திருவடிகளை மறவாது பூசனை புரியும் நினைவினை அருள் செய்து அந்தப் பிறவியிலும் இக்குரங்கு முகமே உளதாக அருள் புரிய வேண்டும்,'' என வேண்டிக் கொண்டது. இறைவன் குரங்கினைப் பார்த்து, "முசுவே! நான்முகன் பல வேள்விகள் செய்து நாமகளை மணந்து நம்மால் படைப்புத் தொழில் அதிகாரம் பெற்ற கருவூர் என்னும் சிறந்த தலம் ஒன்று உண்டு. அவ்வூரில் சூரிய குலத்தில் நீ விரும்பிய வண்ணமே தோன்றுவாயாக,'' என வரம் தந்தருளினர்.

அவ்வாறே குரங்கானது வேதாகம நெறி தழைக்கவும் நல்லோர் வாழவும் மாந்தாதா என்னும் சோழனுக்கு மகனாகக் கருவூரில் பிறந்தது. அந்த மகன் முசுகுந்தன் எனப் பெயர் பெற்று வளர்ந்து கலை பயின்று முடி புனைந்து செங்கோலோச்சினன். ஆநிலை அண்ணல் திருவடிகளை மறவாமல் அருச்சனை புரிந்து வந்தான். உலகத்திலுள்ள சிவத் தலங்களை எல்லாம் தரிசித்தான். நான் மறைப் பொருளாய் ஒளியுருவாக விளங்கி உமையவள் காண நடம்புரியும் தில்லையம்பலத்தில் சென்று திருக்கூத்தைத் தரிசித்தான். திருமகள் தவம் புரிந்த திருவாரூரை அடைந்து திரிபுரமெரித்த விரிசடை அண்ணலை வணங்கி அருள் பெற்றுத் திருமறைக்காடு முதலிய பல தலங்களை வணங்கி மீண்டும் திருவாரூர் வந்து புற்றிடங் கொண்டாரை வணங்கிச் சிலகாலம் அங்கு தங்கி இருந்தான். அவ்வாறு திருவாரூரில் இருக்கும் நாளில் தேவேந்திரன் அசுரர்களோடு போர் செய்து தோற்றுப் பொன்னகரை இழந்து துன்பம் உறும் செய்தி முசுகுந்தனுக்குத் தெரிந்தது. உடனே நால் வகைப் படையுடன் தேவலோகம் சென்று போரில் அசுரரைத் தொலைத்துத் தேவேந்திரனைப் பட்டத்தில் நிறுவி அவனொடு தோழமை கொண்டு திருமாலிடத்தில் வேதாகம நெறிமுறைப்படி சிவபூசை புரியத் தீக்கை பெற்று மீண்டும் திருவாரூரை அடைந்து சில காலம் சிவார்ச்சனை புரிந்து இருந்து கருவூரை அடைந்தான். பிறகு பிரமன் துயிலும்படியான அந்தப் பிரளயம் வந்தது. எல்லா உலகமும் அழிந்தன. மீண்டும் பிரமன் விழித்தெழும் பகற் பொழுது வந்தது. இறைவனருளால் மீண்டும் படைப்புத் தொழில் தொடங்கியது. முசுகுந்தனும் பிரமனைப் போல் படைத்தும் திருமாலைப்போல் காத்தும் பசுபதிப் பெருமானை முறையோடு அருச்சித்தும் வருங்காலத்தில் முருகப்பெருமான் சூரபத்மனை அழித்துத் திருப்பரங்குன்றத்தில் தங்கி இருந்து தெய்வயானையை மணம் புரியுஞ் செய்தியை இந்திரனுல் கேள்வியுற்றுத் திருப்பரங்குன்றமடைந்து முருகப் பெருமானையும் வணங்கித் திருமணக்கோலம் தரிசித்து மீண்டும் கருவூரை அடைந்து தவத்தினரைப் பணிந்து நெடுங்காலம் வாழ்ந்திருந்து பசுபதிப் பெருமானை மறவாது அருச்சித்து முடிவிலாத முத்தி இன்பத்தினை அடைந்தான். பகுத்தறிவற்ற குரங்கு பறித்தெறிந்த வில்வம் தம் திருமேனியில் வீழ்ந்ததற்காக இவ்வளவு பெருஞ்சிறப்பருளிய இறைவன் பசுபதியை அன்போடு ஆகம முறைப்படி அருச்சிப்பார் பெறும் பேற்றை யாவரே எடுத்துரைக்க வல்லார்? ஆகலின் கருவூருக்கு நிகரான ஒரு தலமும் திரு ஆநிலைநாதனுக்கு நிகரான ஒரு தெய்வமும், வில்வத்துக்கு நிகரான அர்ச்சனைப் பொருளும் இவ்வுலகில் இல்லையென்று பெரியோர் கூறுவர்.''

### பன்னிரண்டாவது

## தீர்த்தச் சுருக்கம்

கவுதம நதி தீரத்திலே காசிபகோத்திரத்தில் காலவ முனிவர் என்பவர் ஒருவர் இருந்தார். அவரிடத்துத் தேவத்துதியன் என்னும் முனிவர் வந்தார். அவருக்கு அர்க்கிய பாத்திய ஆசமனம் கொடுத்துத் "தேவரீர் எங்கு நின்றும் எழுந்தருளுகின்றீர்?'' என்று காலவமுனிவர் கேட்கத் தேவத்துதிய முனிவர், "அடியேன் தீர்த்த யாத்திரை

செய்து வருகிறேன்'' என்றார். அது கேட்ட காலவ முனிவர், ''தேவரீர் சென்று ஆடிய தீர்த்தங்களையும் அவைகள் இருக்கும் இடங்களையும் அதன் மகத்துவங்களையும் அடியேற்கு அருள் செய்ய வேண்டும்'' என்று வினவத் தேவத்துதி முனிவர் சொல்லத் தொடங்கினர்.

"கேதாரத்தில் புட்கர தீர்த்தம், காசி கங்கையில் மணி கண்ணிகை தீர்த்தம், பிரயாகையில் திருவேணி தீர்த்தம், கயையில் பிதிர் தீர்த்தம், அலம்புதியில் வன்னி தீர்த்தம், மணிகூடத்தில் திரி புட்கர தீர்த்தம், யமுனை தீர்த்தங்கள், ஸ்ரீபர்வதத்தில் அம்பா தீர்த்தம், மாளவத்தில் பானுதீர்த்தம், சத்தாரணியத்தில் பிரமதீர்த்தம், சீகாளத்தியில் பொன்முகலி தீர்த்தம், பிற்பாசகத்தில் வருண தீர்த்தம், திருவாலங்காட்டில் குக தீர்த்தம், காஞ்சிபுரத்தில் வேகவதி முதலிய தீர்த்தங்கள், அருணசலத்தில் பிரமதீர்த்தம், துர்க்கை தீர்த்தம், விருத்தாசலத்தில் மணிமுத்தா நதி தீர்த்தம், சிதம்பரத்தில் சிவகங்கை முதலிய தீர்த்தங்கள், திருவாரூரில் தேவதீர்த்தம், வேதாரண்யத்தில் மத்தியான மணிகண்ணிகை, வேத தீர்த்தம், கோடி தீர்த்தம், முதலியன, திருப்புகலூரில் அக்கினி தீர்த்தம், திருவெண்காட்டில் காயத்திரி தீர்த்தம், திருச்சாய்க்காட்டில் சாயா தீர்த்தம், திருக்கடவூரில் யம தீர்த்தம், சீகாழியில் பிரம தீர்த்தம், புள்ளிருக்கு வேளூரில் சண்முக தீர்த்தம், திருஆவடு துறையில் காமதேனு தீர்த்தம், திருவீழிமிழலையில் சக்கர தீர்த்தம், திருவாஞ்சியத்தில் சூரிய தீர்த்தம், திருவிடைமருதூரில் காருண்ணிய தீர்த்தம், காவிரியில் பூசத்தீர்த்தம் முதலியன, திருநாகேசுவரத்தில் முருக தீர்த்தம், கும்பகோணத்தில் மாமக தீர்த்தம், திருச்சத்திமுற்றத்தில் வேலாயுத தீர்த்தம், திருவலஞ்சுழியில் வலஞ்சுழி தீர்த்தம் திருவையாற்றில் பஞ்சநதி தீர்த்தம், திருவானைக்காவில் சம்புநதி, சந்திரபுட்கரணி முதலியன, மதுரையிலே பொற்றாமரை, வையை முதலியன, கந்தமாதனத்தில் சேது, தனுக்கோடி முதலின, திருக்குற்றாலத்தில் சித்திராநதி தீர்த்தம், திருநெல்வேலியிலே தாம்பிரவர்ணியிலே சிந்துபூந்துறை, ஏமபுட்கரணி, சர்வதீர்த்தம் முதலியன, கன்னியாகுமரியில் கன்னிகை தீர்த்தம், திருவனந்தபுரத்தில் தருமதீர்த்தம், கேரளத்தில் பாண்டு மகாதீர்த்தம், கோகன்னத்தில் கோடி தீர்த்தம், கொங்கு நாட்டில் காஞ்சி நதி, குடக நதி, ஆம்பிர நதி முதலியன. கொங்கு நாட்டில் மேற் சொல்லப்பட்ட ஆம்பிரநதிக்கரையில் திருஆநிலை நாதன் வீற்றிருக்கும் கருவூர் என்னும் தலத்தில் அநேக தீர்த்தங்கள் உள்ளன,'' என்று தேவத்துதி முனிவர் காலவ முனிவருக்கு எடுத்துரைத்தார்.

பதின்மூன்றுவது

## தலதீர்த்தச் சுருக்கம்

தேவத்துதி முனிவர் தான் மூழ்கிவந்த தீர்த்தங்கள் எல்லாவற்றையும் கூறி இறுதியில் வஞ்சிமாவனக் கருவூரிலுள்ள் தீர்த்தங்களைச் சுருக்கமாகக்கூறி நிறுத்திவிடக் காலவ முனிவர், ''ஐயனே! கருவூர்த்தலத்திலுள்ள தீர்த்த மகிமைகளையும் உரைத்தருளுக'', என்று வேண்டத் தேவத்துதி முனிவர் கூறுகின்றார்: 'காவல முனிவரே! உலகில் தோன்றிய தலங்களெல்லாம் மறைந்தாலும் தான் அழியாதிருக்கும் காரணத்தால் கருவூருக்கு ஆதிபுரம் என்னும் பெயர் வந்தது. எனவே வேதமும்கூறும். பிரமாவானவன் கற்பந்தோறும் இத்தலத்தில் பசுபதியைப் பூசித்துப் படைப்புத் தொழில் தொடங்குதலால் இவ்வூருக்குக்கர்ப்பபுரி எனவும் பெயருண்டு. சுயம்பு மூர்த்தியாய் என்றும் நிலைத்திருக்கும் பசுபதி லிங்கத்தினின்றும் கற்பந்தோறும் இறைவன் வெளிப்பட்டு இச்சா ஞானக்கிரியா சத்திகளைத் தொழிற்படுத்துதலாலும் மீண்டும் எல்லாவற்றையும் தோற்றுவித்து தன்னுள் மறைத்துக் கொள்ளுதலாலும் கரபுரம் எனவும் பெயர் பெறும்'', என்று கருவூர்த் தலப் பெருமை கூறக்

கேட்ட காலவ முனிவர், "ஐயனே! கருவூரிலுள்ள தீர்த்தப் பெருமையும் அதில் மூழ்கிய பேறு பெற்றவரையும் கூறியருளுக" என்று வேண்டத் தேவத்துதி முனிவர் கூறுகின்றார் :—

"காலவ முனிவரே! கருவூர்த்தலத்தில் அநேக தீர்த்தங்கள் உள்ளன. அவற்றுள் ஆறு தீர்த்தங்கள் மிகச் சிறந்தவை. ஆம்பிராநதி தோற்றம் முதலே சிறப்புடையதாயினும் வஞ்சிமாவனத்தருகில் மிகச் சிறப்புடையதாகும். அந்நதியில் மூழ்கி இறைவனை வழிபாடு செய்தவர் பிறவி நோய் நீங்கி வீடு பெறுவர். வெண்ணெய் மலையின் கிழக்குத் திசையில் தேனு தீர்த்தம் உண்டு. அதில் வைகாசி மாதம் பௌர்ணமியில் மூழ்கித் தளர்ந்தோர்க்கு ஒரு பிடி அன்னம் கொடுப்பவர் புவியாளும் அரசராவார். நான்முகன் உலகத்தையே படைக்கும் காலத்தில் ஆநிலைக் கோயிலின் தென்கீழ்த் திசையில் ஒரு காளி கோவிலும் ஒரு முருகன் கோவிலும் அமைத்து வழிபட்டான். அந்த இரண்டு மூர்த்திகளையும் பூசித்துப் பசுபதி கோவிலை மவுனமாக எட்டு முறை வலம் வருவாராயின் எல்லா அறங்களையும் செய்த பயனை அடைவார். வேறு நினைத்த பயன்களும் கிட்டும். பசுபதி ஆலயத்தின் கிழக்கும் ஆம்பிரா நதியின் மேற்குமாக உள்ள கோபிதார வனத்துள் முருகப் பெருமான் ஏற்படுத்திய முருக தீர்த்தம் உண்டு. அதில் மூழ்கினோர் செய்த பாவங்களை எல்லாம் முருகன் போக்குவான். அந்தத் தீர்த்தத்தில் சித்திரை மாதம் முழுமதி நாள் ஞாயிறு வாரம் சுவாதியில் மூழ்கிச் சித்திர குப்த மந்திரம் நினைத்து முனிவருக்கு ஆடை, குடை, மிதியடி ஆகியவற்றைத் தானம்செய்வோர் தாங்களும் பிதிர்களும் எமதண்டனை நீங்கப் பெறுவர். திருமால் அறிதுயில் கொள்ளும் ஆலயத்தின் கிழக்கில் அரச தீர்த்தம் என்ற தீர்த்தம் உள்ளது. வேத வியாசர் அத்தீர்த்தத்தில் மூழ்கிப் பசுபதி அருள் பெற்று அங்கு தங்கியிருந்தார்.

காயத்திரி மந்திரம் ஓதி அரசதீர்த்தத்தில் மூழ்குவோர் வைகுண்டலோக இன்பங்களை அடைவர். தாடகை என்பவள் பசுபதி ஆலயத்துள் ஒரு தீர்த்தம் உண்டாக்கி உள்ளாள். பெண்கள் அதில் மூழ்கி அத்தீர்த்தத்தை உட்கொள்வாராயின் மகப்பேறு பெறுவார். கணவனும் மனைவியும் அதில் நீராடிப் பசுபதிக்கு ஏதேனும் உபயம் செய்வாராயின் மகப்பேறு உற்று முடிவில் சுவர்க்க இன்பம் அனுபவிப்பர். நான்முகன் படைபுத் தொழில் கைவரும் பொருட்டுத் தவம் செய்தபோது வஞ்சுளேசுவரன் கோவிலுக்கு மேல்பால் ஏற்படுத்திய தீர்த்தம் ஒன்று உண்டு. அதன் பெயர் பிரம தீர்த்தம். இதில் ஒருமனதோடு மூழ்கிப் பசுபதியை வழிபாடு செய்யவருடைய பெற்றோரும் மனை மக்களும் பிறவா நெறியை அடைவர். சந்திர கிரகண காலத்திலாவது, ஞாயிற்றுக்கிழமையில் வரும்பௌர்ணமியிலாவது அர்த்தோதய மகோதயத்திலாவது எப்பொழுதும்வரும் பவுர்ணமியிலாவது, விதிபாதம், பெற்றோர் மறைவுநாள், தாம் பிறந்த நாள் ஆகியவற்றிலாவது பிரம தீர்த்தத்தில் மூழ்கிப் பசுபதியை வழிபட்டோர் பொன்னுலகப் பதவிகளை அடைந்து முடிவில் முத்தியையும் அடைவார்கள். கார்த்திகை மாதம் கார்த்திகை நாளில் பிரம தீர்த்தத்தில் நீராடி ஆநிலை அண்ணல் கோவிலில் திருவிளக் கேற்றி வழிபடுவோர் சிவலோகப் பதவியை அடைவார்கள். கார்த்திகை மாதம் வரும் நான்கு செவ்வாய்க் கிழமைகளிலும் பிரம தீர்த்தத்தில் சூரிய உதயத்தில் உளுந்து, அரிசி, அறுகு தலையில் வைத்து நீராடி செவ்வாய்க் கிரக மந்திரத்தை மனதில் தியானிப்போர்க்கு வந்த எல்லா நோய்களும் நீங்கும். ஓராண்டு மாதர் போகம் தவிர்த்துப் பவுர்ணமி தோறும் பிரம தீர்த்தத்தில் நீராடித் திருக் கோயிலை வலம் வந்து பசுபதி பாதம் போற்றுவோர் தாமும் மனைவிமக்களும் நூறாண்டு சுக வாழ்வு வாழ்ந்து பிரமன், மால் அறியாத கைலாயநாதன் பதத்து எஞ்ஞான்

றும் இன்புற்று வாழ்வர். நூறு பிறவியிலும் வறுமையால் வாடினவரும் இத்தீர்த்தத்தில் கார்த்திகை மாதம் முப்பது நாளும் மூழ்கி வழிபாடு செய்வாராயின் வறுமையும் நோயும் நீங்கிச் சுகவாழ்வு வாழ்வது திண்ணமாகும். வைகாசி மாதம் உச்சிப்போதில் இதில் அரிசி, தெர்ப்பை வைத்து மூழ்குவோர் தேவர்களோடு அமுதுண்டு வாழ்வர். ஆவணி மாதம் சனிக்கிழமை உச்சிப்போதில் இதில் மூழ்கி வழிபடுவோர் நோய்கள் எல்லாம் நீங்கப்பெற்று வாழ்வர். கருத்த கம்பளம், எள், இரும்பு ஆகியவற்றை பிரமதீர்த்தக் கரையில் தானம் செய்தால் அவருடைய மக்களிடத்தும் சனி பீடைகள் அணுகா. சனி ஈஸ்வரருடைய நாமங்களைச் சொல்லிப் பிரமதீர்த்தத்தில் மூழ்கித் திருநீறு பூசி ஐந்தெழுத்தை ஓதி இறைவன் திருக்கோயிலின் முன் தியானிப்போர் துன்பம் தொலையும். புண்ணிய லோகப் பயனை அடைவர். பிரமதீர்த்தத்திலுள்ள பழுதுகளைப் போக்கிப் பாதுகாப்போர் நிலவுலக அரசராய்ப் பின் இறைவன் திருவருளை அடைவார். அந்தத் தீர்த்தத்தின் அருகில் நந்தவனம், சோலை ஆகியவற்றை அமைப்பவர் உலகம் வியக்குமாறு அரசாண்டு சிவலோகப் பதவியை அடைவர். செங்கல், கருங்கல் முதலியவற்றால் பிரமதீர்த்தக் கரை கட்டினோர், கட்டுவித்தவர் முத்தியை அடைவர்; இது உண்மையாம். பிரம்மதீர்த்தத்தில் நீராடி, அதன் கரையில் சிவபூசை, குருபூசை செய்தவர் நிச்சயமாகச் சிவபதவியை அடைவார். பிரமதீர்த்தத்தில் மூழ்கலாம் என்று நினைத்தவரும் அவர் செய்த எல்லாப் பாவங்களும் நீங்கப் பெறுவர். முன்பு ஓர் அரசன் பிரமதீர்த்தத்தில் நீராடி முனிவர் சாபத்தால் ஏற்பட்ட கொடிய நோய் நீங்கப் பெற்றான்'' என்று தேவத்துதி முனிவர் சொல்லக் காலவ முனிவர், ''ஐயனே! அவ்வாறு சாபமேற்று இத்தீர்த்தத்தில் மூழ்கிச் சாபமும் அதன் பயனும் தீர்ந்து சிவகதி அடைந்த அரசன் வரலாற்றினை அடியேனுக்கு உணர்த்தியருளுக.'' என்று வேண்டத் தேவத்துதி முனிவர் கூறத் தொடங்கினர்.

தேவத்துதி முனிவர் காலவ முனிவரை நோக்கி, ''அன்புடையீர்! நீர் பசுபதிப் பெருமான் திருவடிப் பேரன்பினர். ஆகலின் அந்த அரசன் வரலாற்றினை உமக்கு மகிழ்ந்து கூறுகின்றோம். உச்சயினி என்னும் பெயரையுடைய விசாலை நகரம் பல நலன்களும் அமைந்தது. அந்நகரைத் தலைநகராகக் கொண்டு கோபிதாரத்துவசன் என்னும் திராவிட மன்னன் ஆட்சி புரிந்து வந்தான். கோபிதாம் என்பது கடம்ப மரம்; துவம்சம் என்பது கொடி. இம் மன்னன் முருகனுக்கு மிகவும் விருப்பமான கடம்ப மரத்தைத் தன் கொடியில் அமைத்துக் கொண்டதனால் அப்பெயர் பெற்றான். இவன் எல்லா நற்குணங்களும் அமைந்தவன். கொடையில் மேகம் போன்றவன். குணத்தில் அமிழ்தம் போன்றவன். மங்கையர்க்கு மன்மதன் போன்றவன். நடுநிலையில் தருமன் போன்றவன். பகைவர்க்கு இடியேறு போன்றவன். கல்வியில் அகத்தியர் போன்றவன். சிவனடியாரைக் காணின் சிவமெனவே போற்றுபவன். முனிவர்கள், மறையவர் வரின் எதிர்கொண்டு பணிந்து வரவேற்று உபசரிப்பவன். அவர் விரும்பியதை உடனே செய்பவன். வறுமை தவிர்த்து வறியவர்க்கு வாழ்வளிப்பவன். பல அரசர்கள் திறையளிக்க முறை செலுத்தி நாட்டை ஆண்டு வந்தான்.

இவனுடைய குண நலம், கல்வி, கடவுட்பற்று ஆகியவற்றைக் கேள்வியுற்ற அகத்திய முனிவர், மாணவ முனிவர் பலர் புடைசூழ்ந்து வர விசாலை நகரில் கோபிதாரத்துவசனைக் கண்டு வாழ்த்தும் பொருட்டு வந்தார். வந்தவர் அரசன் அத்தாணியில் இருக்கக் கண்டு பேரன்போடு அருகணைந்தார். நற்குணம் வாய்ந்த கோபிதாரன் ''ஊழிற்பெருவலி

யாவுள மற்றென்று சூழினும் தான் முந்துறும்'' என்ற வாய்மொழிக்கேற்பத் தீமை நுகரவேண்டிய கிரமத்தினுல் ஊழ்வினை அறிவை மறைக்கக் காமக் களியாட்டம் நுகரும் அறிவிலார்போல் மமதை கொண்டு முனிவரை மதியாமல் இருந்தான். அது கண்ட அகத்தியர் தம் மாணவரோடும் வெகுளியுடன் வெளியேறினுர். வெளியேறியவர் பெருந் தவமுடைய பிரமிட்ட முனிவரைப் பார்த்துத் "தவப்பெரியீர்! இன்று எமக்கு ஓர் விரதம் உண்டு. அதனுல் இந்தக் கோபிதாரனை நாம் சபிக்க வில்லை. நீவிர் சென்று அவன் செய லுக்குத் தக்க சாபம் தந்து வாரும்'' என்று அனுப்பினுர். பிரமிட்ட முனிவர் அத்தாணி மண்டபத்தை அடைந்து "அரசனே! நீ சிவபெருமான் திருவரு ளும் செய்தற்கரிய பெருந்தவமும் உடைய அகத்திய முனிவரை அவமதித் தமையால் கொடிய குட்டநோயினுல் வருந்தக் கடவை,'' எனச் சபித்துவிட்டு வந்து அகத்தியரிடம் வந்து கூறினுர். அகத்தியரும் முனிவர் குழாங்களுடன் சென்று தமிழ்ப்பொதியையை அடைந்து முனிவர்களுக்கெல்லாம் விடை கொடுத் தனுப்பிவிட்டுத் தவத்தில் புகுந்தார். பிரமிட்ட முனிவரும் தம்மிடம் போய்ச் சேர்ந்தார்.

முனிவரால் சாபம் பெற்ற மன்னன், 'குணமென்னும் குன்றேறி நின்றுர் வெகுளி கணமேயும் காத்தல் அரிது' ஆகலின், யாவரும் வெறுத்து இகழும் படி பெருங்குட்ட நோயால் பீடிக்கப் பட்டு மிகவும் துன்புற்றுன். சாந்தியாக மறையவர்களைக் கொண்டு பலவேள் விகளை நடத்தினுன். வறியவருக்கு ஏராளமான பொருள்களை வழங்கினுன். பல பல மருத்துவரிடம் மருந்துகளையும் உண்டான். நாளுக்கு நாள் நோய் அதிகரித்ததே அன்றிக் குறையவில்லை. அதனுல் மனைவி மக்களை வெறுத்துக் காடு மலைகளில் அலைந்தான். ஒளியிழந் தான். புகழையும் அரசியலையும் வெறுத்தான். முனிவரை மதியாக் குறையை நினைந்து நினைந்து மனம் புழுங்கினுன். நோயின் துன்பம் பொறுக்கலாற்றுதவனுய்ப் பலவாறு சிந்தித்து முடிவில் பிரமிட்ட முனிவ ரையே தஞ்சம் புகுவது எனத் தீர்மா னித்தான். பிரமிட்ட முனிவர் ஆசிர மத்துக்கு வழிவினவித் தெரிந்து கொண்டு கால்நடையாகவே வருந்திச் சென்று முனிவர் ஆசிரமத்தை அடைந் தான். கண்களில் நீர் சொரியக் கதறிக் கை தலைமேற்குவித்துப் பின் பாதங் களில் விழுந்து வணங்கினுன். வணங்கி, 'ஐயனே! அடியேன் அறியாமையாற் செய்த குற்றத்தைப் பொறுத்தருளி மன் னித்துக் காப்பாற்றியருளுக,'' என்று இரந்தான். அரசனுடைய துன்பநிலை கண்ட பிரமிட்ட முனிவர், "அரசே! உன்னுடைய துன்பத்தைத் தீர்க்க என்னுலும் இயலாது; வேறு எவராலும் இயலாது. அகத்தியரையே சரண டைந்தால் அன்றி இந்நோய் தீர வழி யில்லை. கருணைக் கடலாகிய குறுமுனி வரைச் சரணடைந்தால் அவர் உன் பால் இரக்கங்கொண்டு இந்நோயைத் தீர்த்தருளுவார். அவரிடம் செல்வா யாக'' என ஏவினுர்.

மனம் வருந்திய மன்னன் "அகத்தியர் அருள் புரிவாரோ? அல்லது மேலும் வெகுண்டு துரத்திவிடுவாரோ'' என்று மயங்கினுன் பிறகு அகத்தியர் 'நம்மை என்ன செய்தாலும் சரி' என்று துணிந்து பொதிய மலையை அடைந்து அகத்தியர் ஆசிரமத்தைக் கண்ணுற்று அவர் முன்பு கண்ணீர் பெருக வீழ்ந்து, "முனிவர்கள் வேந்தே! சிவபெருமான் திருவருள் பெற்ற பெரியோரை அவமதித்துக் கொடிய நரகம் புகத்துணிந்தேன். முனி வரை மதியாத நெஞ்சைப் பிளந்தே னில்லை. அவர்களைக் கண்டும் காணுதது போலிருந்த கண்களைப் பிடுங்கினேன் இல்லை. அவர் முன் கூப்பாத கைகளை வெட்டினேன் இல்லை. அவர்களைப் புகழாத நாவை அறுத்தேனில்லை.


தொண்டர் புகழ்க் கேளாத காதுகளில் நெருப்பில் காய்ச்சிய வேலை நுழைத் தேனில்லை. இந்தக் கொடியவன் அறி யாமையாற் செய்த குறை போக்கி ஆட் கொண்டருள வேண்டு'' மென வேண்டி னுன்.

கோபிதாரன் படும் வருத்தத்தையும் அவன் கூறும் இரக்க மொழிகளையும் அகத்திய முனிவர் கண்டும் கேட்டும் பெரிதும் இரக்கமுற்று, "மன்னனே! இனி நீ வருந்தாதே; நீ சிறந்த அறிவும் ஆண் மையும் உடையவனுகி நீதி வழுவாது ஆட்சி புரிதலையும், கடவுள் பக்தி அடி யார் அன்பு மிக்குடைமையும் கேள்வி யுற்று உன்னைக் காணும் அவாவினல் வந்தோம். அது நிற்க; நம்மோடு வந்த இந்த முனிவர்கள் சிவ பத்தி, குரு பத்தியில் சிறந்து மும்மலம் கெடுத்து ஞானம் பெற்ற சிறப்புடையவர்கள். திருமாலும் பிரமனும் காணவொண்ணுத சிவமே இவர்கள் என்று தனித்தனி உலகம் போற்றும் உத்தமர்கள். இவர் கள் ஒன்றை நாட்டுவார்களாயின் சிவ பெருமானும் அதைக் குலைக்க நினையான் அத்தகையவரைப் போற்ருது உன் ஊழ் வினையால் கெட்டாய். அதனுல்கொடுஞ் சாபம் தரச் செய்தாய், நீ அறிவுடைய வனுகி நம்மிடம் அடைக்கலம் புகுந்தாய் உன் தீவினை நீங்கும் வழியை உரைக் கின்ருேம்; கேட்பாயாக.

"சேரர்க்கு உரிய கொங்கு நாட்டின் நடுவில் ஆம்பிர நதிக்கரையில் முனிவர் கள் நிலைபெற்று வதியும் ஆதிபுரம் என் னும் கருவூரில் இலந்தை வனம் ஒன்று உண்டு. அதில் வேத வியாசர் தவம் புரிந்து வருகின்ருர். அவர் கூறிய மொழிப்படி ஒழுகிப் பிரமன் ஏற்படுத்திய பிரம தீர்த்தத்தில் மூழ்கிப் பசுபதி நாதனை வழிபட்டு வருவாயாயின் உன்னைச் சேர்ந்த தீவினை நீங்கி இன்பம் அடைவாய்; ஆகலின் அவ்வாறு செய்க'' என்று அகத்தியர் ஆணையிட் டார். கோபிதரனும் தமிழ் முனிவரை யும் பிற முனிவர்களையும் வணங்கிவிடை பெற்றுப் பொதியமலையை நீங்கிப் பாண் டிய நாடு கடந்து சேர நாட்டை அடைந்து புலவர்கள் போற்றும் ஆதிமா புரம் என்னும் கருவூரை அடைந்தான். அடைந்து பசுபதிப் பெருமானை வணங்கி நோய் நீங்கப் பெற்றவன் போல் மகிழ்ந் தான். பின்பு அகத்தியர் ஆணைப்படி கோவிலின் தென்கிழக்குத் திசையில் உள்ள இலந்தை வனத்தை அடைந்து முனிவர்கள் பலர் மாதவம் புரிய ஆசிர மத்தில் தவம் புரியும் வியாச முனிவரைக் கண்டான்.

கண்ட அரசன் கண்களில் நீர் சொரிய உளம் கரைந்து உருக வியாசர் பாதங் களில் வீழ்ந்து வணங்கினுன். வணங்கிய அரசனை வியாசர் பார்த்துக் கோபி தாரத்துவசனே! நீ நிலவுலகம் நெறி யாற் புரப்பவனன்ருே? உனக்கு இத் தகைய கொடு நோய் வரக் காரணம் என்ன?'' என்று வினவினர். கோபி தாரன், "ஐயனே! பெருந்தவ முனிவ ராகிய அகத்தியர் ஒருநாள் தம் மாணவ ரோடும் அடியேனிடம் வந்தார். வந்த மாமுனியையும் அவர் தம் மாணவரை யும் பணிந்து வரவேற்று உபசரியாமல் ஊமைபோல் இருந்தேன். சினங் கொண்ட அகத்தியர் ஏவலால் பிரமிட்ட முனி சபமேற்று இக்கதிக்கு ஆளாயி னேன். பெரிதும் வருந்தி அகத்திய முனி வரையே சரணடைந்தேன். அவர் ஏவலின்படி தங்கள் அருளை நாடி வந் துள்ளேன். காப்பாற்றுவீராக;'' என்று துதித்து வணங்கினுன்.

கோபிதாரன் மொழிகளைக் கேட்ட வயாசர் "சிவ, சிவ'' என்று இரண்டு கைகளாலும் இரண்டு காதுகளைப் பொத்திக் கொண்டு, 'சிவனடியாரைக் கண்டால் சிவனெனவே போற்றி வழி பாடு செய்வது அரசனுக்கு முறையா யிருக்க இவன் சிவனடியரை மதியா திருந்தான். சிவனடியாரை இகழ்ந்தவர் கொடு நரகம் அடைவார்கள். அத்



உட்பிரகாரம்

— டிலக்ஸ் போட்டோ சர்வீஸ்

த்கையநிலை இவனைவந்து அடைந்ததே. சிவனடியாரை நிந்தித்துச் சாபப் பயன் அடைந்தவர் முகத்தையும் பார்க் கொணுது. அவரிடம் பேசவும் கூடாது. ஆயினும் இவ்வரசன் கல்வி கேள்வி களில் சிறந்தவன் குடிகளை நேர்மை யோடு காப்பவன், சிவபக்தி, அடியார் பத்திகளில் சிறந்தவன். மேலும் அகத் தியரைச் சரணடைந்து அவர் சினம் மாறி அருளதும் பெற்றவன். தலங்களில் உயர்ந்த வஞ்சிமாவனத்தை அடைந்த புண்ணியப் பேறு உடையவன். ஊழ் வினையாலும் நன்மை பெறும் நியதி உடையவன். ஆகையால் இவன் துன்பம் துடைத்து நற்பேறு வழங்குதல் முறைமையேயாகும்' என்று உளத்துள் நினைந்த வியாசர் கோபிதாரத்துவசன் முகம் நோக்கிப் "பேதாய்! உன்னில் உயர்ந்த அரசர் இந்த உலகில் வேறு உண்டோ? ஊழ்வினைப் பயனுல் இவ் வாறு துன்பம் உற்ருய்; தாய்போலத் தரணிகாத்து வந்த உனக்கு முன்னை ஊழ்வினைப் பயனுல் இவ்வாறு நேர்ந்த தோ? அந்தணரைக் கொலை செய்தல், அரசனையும் பசுவையும் குதிரையையும் கோபித்தல், பெற்ருேர் மொழியை மீறு தல், குழந்தைகளையும் முதியோர்களை யும் கொல்லுதல், பெரியோர் மொழி யைப் பொய் என நினைத்தல், தோப்புத் துரவு, கிணறு, குளங்களை அழித்தல், மனத்தில் ஒன்று வைத்து வாக்கில் வேருென்று பேசல், குருவை எதிர்த்தல், சிவாலயத்தை அழித்தல், சிவ பூசைக்கு இடையூறு செய்தல், சிவ சொத்தைக் களவு செய்தல், சிவ தீர்த்தங்கள் நந்த வனங்களை அழித்தல், பஞ்சாட்சரம், திருநீறு, உருத்திராக்கங்களைப் பழித்தல், சிவபெருமானைத் திருமால் முதலியவரு டன் சமமாக நினைத்தல் முதலிய குற்றங் களைச் செய்தலும் செய்வதற்குச் துணை செய்தலும் ஆகிய செயல்கள் மீளா நரகத்து உய்க்கும்.

குருவின் மொழியைக் காப்பாற்றிச் சிவப் பற்றே பற்ருக அவன் அருளில் தோய்ந்த பெரியோர் பெருமை யாரே அளவிட்டு உரைக்க வல்லார்? சிவத் துரோகம் குருத் துரோகம், சங்கமத் துரோகம் ஆகிய மூவகைத் துரோகம் செய்தவர் அந்தப் பாவங்களை எத் தகைய பிராயச்சித்தம் செய்தும் நீக்கிக் கொள்ள இயலாது. குருவையும் சிவத் தையும் சிவனடியார்களையும் கும்பிடாது இகழ்தவர்களைக் கொன்ருலும் அது கொலையன்று. அவ்வாறு செய்ய இய லாத பெரியோர் அத்தகைய தீமை செய் தவரை நரகம் புகும்படி சபித்துவிட்டு அவ்விடம் விட்டு நீங்கி வேறு இடம் அடைவது முறையாகும். நீ சிவனடி யாரைக் கண்டும் காணுதவன் போல் இருந்த குற்றத்தினுல் அகத்தியர் சினந்து பிரமிட்ட முனிவரைக் கொண்டு சபிக்கச் செய்தார். நிற்க. இத்தலம் அடைவதற்குத் திருமால் பிரமன் முதலி யோர் அருந்தவம் செய்துள்ளனர். நீ பொதிய மாதவனருளால் எளிதில் அடைந்து விட்டாய். இத்தலத்தின் பெருமையைக் கூறுவேன் கேள்" என வியாசர் கூறுவார். "கோபிதரனே! வேதம் நான்கும் இத்தலத்தினை ஆதி புரம் எனக் கூறும். தாமரைப் பூவில் வீற்றிருக்கும் நான்முகன் உயிர்களைப் படைப்பதற்காக மாதவம் புரிந்து ஆநிலை அண்ணலை அருச்சித்து நாமகளைத் திரு மணம் புரிந்து கொள்ளும் காலத்தில் மகிழ்ச்சியுடன் ஏற்படுத்திய தீர்த்தம் ஒன்று உண்டு; அத்தீர்த்தம் திருமால், இந்திரன், தேவர்கள், முனிவர்கள், மாதவர், விஞ்சையர், சிவயோகர், அந்தணர் ஆகியோர் பலகாலும் போற்றி நீராடுதற்குரிய பெருமை வாய்ந்தது. சிவபெருமான் திருவுருவ மாக விளங்கும் இத்தீர்த்தத்தில் மூழ்கு வோருடைய பிறப்பு இறப்புக்களைப் போக்கும். உடம்பிலுள்ள பிணிகளை நீக்கும். அன்போடு மூழ்குவோர் இன்ப வீடடைவர். அரசே! நீ இந்தத் தீர்த் தத்தில் சூரியன் உதிக்குங்கால் நியமம் புரிந்து மூழ்கிப் பின் வெண்ணெய் மலை யின் வடக்கில் நான்முகன் செய்த

வேள்விக் குண்டத்தை வலம் வந்து ஆநிலைப் பெருமானை வழிபாடு செய்க. இச்செயல் மூன்றையும் சூரியன் அஸ்த மிக்கும் வரையில் நிகழ்த்த வேண்டும். இவ்வாறு இடையூறின்றி வழிபடுவாயா யின், மலய மாதவன் கொடுஞ்சாபத் தால் ஏற்பட்ட இக்கொடு நோய் நீங்கி நல்ல எழில் உருவமும் பெறுவாய்; மீண்டும் அரசர்க்கரசராக வாழ்வாய். பசுபதி அருளும் பெறுவாய்; இது முக் காலும் உண்மையாம்'', என வியாச முனிவர் கூறினர்.

வியாச முனிவர் உபதேச மொழியைத் தலைமேற் கொண்ட கோபிதாரன் அவரை வணங்கிச் சென்று சூரிய உதய முதல் அஸ்தமனம் வரையில் முனிவர் கூறியவாறே நீராடி ஓம குண்டத்தை யும் ஆநிலை ஆலயத்தையும் வலம் செய்து துதித்து வரலாயினன். எட்டா வது நாளில் பசுபதிநாதன் அலங்கார வல்லி சமேதராய்க் கோடி சூரியப் பிர காசமாய் இடப வாகனத்தின் மீதிருந்து கோபிதாரனுக்குக் காட்சி தந்தருளினர். இறைவன் திருக்கோலம் தரிசித்த மன்னன் கண்களிலிருந்து ஆனந்த அருவி சொரியக் கைகள் உச்சிமேல் குவிய, உரோமம் சிலிர்ப்ப, வாய்குழற, அம்மையப்பர் திரு முன்பு ஆடினன். அடி மலர் சூடினன். பின்வருமாறு துதி செய்வானுயினன் :

"நீடிய கரிய மாலும் நீண்ட
எண் கணனும் முன்னம்
தேடிய சிவனே போற்றி! செழு
மறை மிருதி எல்லாம்
பாடிய பரனே போற்றி! பரிபுரம்
ஒலிப்ப மன்றுள்
ஆடிய அமுதே போற்றி!
ஆநிலை நாதா போற்றி!

என்று இவ்வாறு துதித்தபின், "கருணைக் கடலே! அடியேன் செய்ததெல்லாம் கொடும்பாவம்; நினைத்ததெல்லாம் வஞ் சகம். புண்ணியம் ஏது செய்தேனே அறியேன். அப்படி இருக்க உலக மாதாவோடும் அருட்காட்சி தந்தருளி னீர்,'' என்று தழுதழுத்த மொழியால் அழுதரற்றும் அரசனைப் பார்த்து ஆநிலை அண்ணல், "அரசே! நீ பிரம தீர்த்தத் தில் நீராடியதாலும் நம்மைப் பூசித்த தாலும் முனி சாபமகன்று நனி நலம் உற்றனை; இனி வேண்டும் வரம் கேள்,'' என்று இறைவன் கூறக் கோபிதரன் மீண்டும் அடிகளில் விழுந்து வணங்கி, 'ஐயனே! அடியேன் உன்னுடைய அடியார்க்கு அடியார்களின் திரு வடிக்கண் மாருத அன்பு செய்யும் வரம் தந்தருளுக,'' என வேண் டினன். இறைவன் அவ்வாறே வரம் அருளி இலிங்கத்தில் மறைந் தருளினர். கோபிதாரன் வரம் பெற்று மீண்டும் சில நாள் கருவூரிலிருந்து பசு பதியை வழிபாடு செய்தான். தன் ஊரி லிருந்து நால்வகைப் படைகளும் அமைச்சரும் பிறரும் வந்து தன்னை வணங்கி அழைக்க, உடனே ஆநிலை அண்ணலை வணங்கி, வியாசமுனி பாதம் பணிந்து விடைபெற்று அகத் தியர் திருவடிகளை அகத்திருத்தித் தனது விசாலை நகரை அடைந்தான். அடைந்து சிறந்த முறையில் அரசு செலுத்தி, அந் தணர், முனிவர், அடியவர்களையும் குடி களையும் நன்கு புரந்து வந்தான். இந்தி ரன் போன்ற செல்வம் அவனுக்கு இன்பம் அளிக்கவில்லை. இறைவன் வழி பாட்டில் மனம் மிகவும் ஈடுபட்டது. அரச வாழ்க்கை வெறுத்தது. அதனுல் தான் பசுபதிநாதனைப் பூசித்த தவத் தால் பெற்ற மகனுக்கு முடி சூட்டி, அரசை அளித்து, அறிவிற் சிறந்த அமைச்சரிடம் ஒப்புவித்துப் பிறகு வஞ்சிமாவனக் கருவூரை அடைந்து அருந்தவம் பொருந்துமாறு செய்து ஈசனைப் பூசனை ஆற்றிப் பசுபதிநாதன் திருவடி அடைந்தான். கோபிதாரத்து வசன் சாபம் நீங்க ஆடிய தீர்த்தத்தை யும் அருச்சித்த ஆநிலை அண்ணலையும் யானும் தெரிசித்து நீராடி அருச்சித்து நீங்க மனம் வாராமையால் மூன்று ஆண்டுகள் ஆக்கருவூரில் தங்கி இருந்

தேன். அந்தத் தீர்த்தம், மூர்த்திகளைத் தரிசித்து அங்கு இருக்க விரும்பாதவரும் உண்டோ? இந்த வரலாற்றை எழுதியவர் படித்தவர், கேட்டவர்கள், முன் துதித்த பாட்டைக் குற்றமறக் கற்றவர்கள் ஆநிலையண்ணல் அருள் வாழ்வு வாழ்வார்,'' என்று தேவத்துதி முனிவர் காலவ முனிவருக்கு உரைத்தருளினர்.

### பதினைந்தாவது

### விடண்டகச் சருக்கம்

விபகண்டன் என்னும் பெயரையுடைய வேடன் ஒருவன் காடுகளில் வசித்திருந்தான். அவன் மிகவும் கொடியவன். முள்ளைக் கண்டு அஞ்சி விலகுவது போல இவனைக் கண்ட யாரும் விலகி ஓடுவர். இரக்கம் என்பது சிறிதும் இல்லாதவன். வஞ்ச நெஞ்சன். வில்லும் அம்பும் கை விடாதவன். தன்னிடம் தஞ்சம் புகுந்தவரையும் கொன்று விடுவான். தீயவருக்குள்ளே மிகச் சிறந்த தீயவன். அவனிருந்த இடம் சென்றவர் உயிரையும் பொருளையும் இழப்பாரேயன்றி மீண்டும் வரமாட்டார். கொள்ளை, கொலை, களவு செய்து வயிறு வளர்ப்பவன். கொடிய வனமும்கூட அவனைக் கண்டு அஞ்சும். கொல்லும் தொழிலில் புலி போன்றவன். பசுக்களையும் பெண்களையும் இறக்கமின்றிக் கொல்வான். கூரை வீடுகளில் தீக்கொளுத்துவான். பல தீய வித்தைகள் கற்றவன். இரவில் நெடுந்தூரம் சென்று திருடிக் கொண்டு விடியுமுன்பு காட்டுக்கு வந்து விடுவான். காற்றைப்போல வேகமாக நடப்பவன். கோயில் சொத்துக்களையும் திருடுவான். யாரேனும் அன்பனுல் அறிவுரை கூறின் அவர்களை வெட்டி எறிந்து விடுவான். இவன் கொடுமை கண்டு பலர் சூழ்ந்து பிடித்தாலும் கண் முன்னரே மறைந்து விடுவான். இவன் கொடுமையைக் கண்டு இவன் பெற்றோரும் அஞ்சுவர். எமன் ஒருவனே அன்றி வேறு எவரும் இவனை அடக்க இயலாது. எந்தக் குலத்தவராயினும் அக்குலத்தவர்போல் நடித்து அவரோடு பழகி, ஏமாறிய சமயம் அவர் பொருள்களெல்லாம் கவர்ந்து வந்து விடுவான் முனிவர் ஆசிரமத்தை அடைந்து பக்தன்போல் நடித்துத் தன் உடல், பொருள், ஆவி எல்லாம் பெற்றுக் கொண்டு உபதேசம் செய்ய வேண்டும் என்று புலம்பி அவர்களை நம்பச் செய்து ஏமாறும் வேளை பார்த்து அவர் பொருள்களைக் கவர்ந்து கொலை புரிந்து மீளுவான். சிவன் கோயில் பொருள்கள், அடியார் பொருள்களை ஏராளமாகக் கவர்ந்தவன்.

இவ்வாறு கொடுந்தொழிலை நெடுங்காலம் புரிந்து வந்த இவன் கருவூர் எல்லைக்கு வந்து சேர்ந்தான். அன்று மார்கழித் திருவிழா நடைபெற்றுக் கொண்டு இருந்தது மக்கள் திருவிழாத் தரிசனம் செய்யக் கூட்டம் கூட்டமாகச் சென்றனர் விபாண்டகன் அவர்களை நோக்கி, 'நீங்கள் எங்குச் செல்லுகின்றீர்கள்?' என்று கேட்டான். அவர்கள் "ஆநிலையப்பர் ஆலயத்தில் திருவாதிரைத் திருவிழா நடக்கிறது. அங்குத் தரிசனத்துக்குச் செல்லுகிறோம்,'' என்றனர். உடனே அங்குச் சென்று தன் தொழிலை நடத்த நினைந்து வேடம் பூண்டான். உச்சிக் குடுமியும் பூணூலும் பஞ்சகச்ச உடையும் திருநீறும் உருத்திராக்கமும் உடையவனாய்ப் புத்தகம் கைக்கொண்டு உண்மை வேடமெனப் பலரும் நம்பும்படி பக்தர் கூட்டத்துள் கலந்து கொண்டு கூத்தப் பெருமான்மீது அணிந்திருந்த நவமணி மாலையைக் கவரச் சமயம் பார்த்துக் கோவிலினுள் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தான். இறைவன் திருமஞ்சனமாடிச் சர்வாலங்காரத்துடன் பொது மண்டபத்தில் வீற்றிருந்து அன்பர்களுக்குக் காட்சியளித்துக் கொண்டிருந்தார். மனிதர் செய்யும் வழிபாடே அன்றி வானவர்கள் போற்றிய முறைமை வருமாறு :-

வாணசுரன் ஆயிரம் கைகொடு முழவு வாசித்தான், பலவகைத் தேவ

துந்துபிகள் முழங்கின. விஞ்சையர் யாழ்வாசித்துப் பாடினர். முனிவர்கள் சிர மேற் கரங்குவித்து ஆனந்தக் கண்ணீர் அருவியாக ஒழுகத் தொழுது வணங் கினர். இருடியரும் அட்டவசுக்களும், கிம்புருடர், மருத்துவர், சாரணர், உரகர், கோசுரர், சித்தர், இயக்கர், குற்றமற்ற மற்ற மறையோதும் அந்தணர், துவாதச ஆதித்தர், சந்திரன், தழற்கடவுள் முதலியவரும் எருமைக்கடா மீதில் வரும் எமன், நிருதி, வருணன், குபேரன் முதலியோரும், முப்பத்து முக்கோடி தேவர்களும் வணங்கச் செந்தாமரைக் கண்ணன் தலைமேற் கைகுவித்து நிற்க, நான்முகன் நால்வேதம் நவிற்ற, இந்தி ரன் கற்பகப் பூ மழை பொழிய, நந்தி யெம் பெருமான் பொற் பிரம்பு ஏந்திச் சன்னிதி விலக்க, நான்முகன், திருமால் பதங்களைத் துச்சமாக எண்ணும் சிவ கணங்கள் பாடியாடிப் பணிய, வீரபத் திரக் கடவுள் பக்கத்தில் விளங்க, ஐய னுரும் பைரவக் கடவுளும் அருகு நிற்ப, உருத்திரர் குழாங்கள் சூழ, அயிரா வதம் அருகு நிற்ப, விநாயகப் பெரு மானும் வள்ளி தெய்வானை மணாள ளுகிய முருகப்பெருமானும் வலமும் வீற்றிருக்க, உலகமாதாவாகிய உமை யம்மை இடப்பால் அமர்ந்திருக்கத் தேவமகளிர் இருபுடையும் நின்று கவரி வீச, சந்திரனுடைய கலைகள் மூன்று உளதென நெற்றியில் திரிபுண்டரம் விளங்க, திருநேத்திரங்களும் திகழ்ந் தொளி வீச, வேதாகமம் மலர்ந்த வாய் புன்னகை புரியக் குழையும் தோடும் காதுகளில் விளங்கக் காளகண்டம் நவின, கொன்றைமாலை மார்பில் அழகு செய்ய, வீசும் எண்தோளோடு அபய வரத கரங்கள் தனித்தனி விளங்க, புலியதள் ஆடையும் மாசுணக் கச்சும் பொலிவுறத் தூக்கிய திருவடியும் முயல கன் மேல் ஊன்றிய திருவடியும் திகழ ஐந்தொழில் புரிந்தும் அவை ஒன்றினும் கலவாத பேரொளி புரியும் பெருமான், கண்டவர் பிறவி காணுவகை பொது நடம் புரியும் புண்ணியன் பொது மண்டபத்தில் வீற்றிருக்க அவர் திரு மேனியில் விளங்கும் ஆபரணங் கவரும் பொருட்டு நெருங்கிப் பக்தர் கூட்டத்தில் சிக்கி நெருக்குண்டு வெளிவர முடியா மல் கண் பிதுங்க நிலத்தில் தடுமாறி வீழ்ந்து பலரால் மிதிப்புண்டு மூர்ச்சை யடைந்து கிடந்தான்.

அவ்வாறு கிடந்தவனைப் பத்தர்கள் கண்டு ஆண்டவனைத் 'தரிசிக்க வந்து அருமறையவன் நெருக்கப்பட்டுச் சோர்ந் தான்' என்று எடுத்துக் கோபுரவாயி லில் கொண்டு வரும்போதே உயிரிழந் தான். அவ்வளவில் இறைவன் ஏவலால் அவன் உயிர் கொண்டு செல்லும் பொருட்டுத் தேவகணங்கள் திரண்டு வந்தனர். எமனின் ஏவல்படி காலதூது வர் வந்து சிவகணங்கள் சூழ்ந்து நிற்கக் கண்டு அஞ்சி மீண்டு போய எமனிடம் உரைத்தனர். எமனும் மனம் கலங்கி இப்பாதகன் சிவலோகம் அடையும்படி, என்ன புண்ணியம் செய்தான்?'' என்று ஐயுற்றுச் சித்திர புத்திரனை அணுக அவனும் மயங்கி விபண்டகன் கணக்கை நோக்கத்தான் எழுதிய கணக்குச் செல் லரித்துச் சிதைந்து கிடந்தது கண்டான். எமனுடைய ஆயுதங்கள் பழுதுபட்டன. சிவகணங்கள் அவனை ஒளிவிமானத்தில் ஏற்றிப் பலவகை வாத்தியம் முழங்க தேவமாதர் நடம் புரியக் கைலை நாயகன் எதிரில் கொண்டுபோய் சேர்த்தனர். வேதநாயகனுகிய கைலாயபதி விபண்ட கன் மீது கடைக்கண் சாத்தி நம் கணங் களுக்குத் தலைவனுக விளங்குவாய்'', எனத் திருவாய் மலர்ந்தருளினர். சிவ பெருமான் திருமேனியில் விளங்கும் ஆபரணத்தைத் திருட வந்து உயிர் துறத்தவன் அடைந்த நிலை இவ்வாரு னல் இத்தலத்தின்மகிமை எடுத்துரைக்க வல்லவர் யாவர்? 'மேலும் உள்ளவாறு அன்போடு வழிபடுவோர் அடையும் பேற்றுனைக் கூறவல்லவர் யாவர்? இக் கதையை சொன்னவரும் கேட்டவரும் கைலாய பதவியை அடைவர். 'காலவ முனிவரே! நீரும் கருவூர் என்னும்

தலத்தை அடைந்து தரிசிப்பீராக'என்று கூறிவிட்டுத் தேவத்ததுதி முனிவர் தீர்த்தயாத்திரை மீளவும் தொடங்கினர். காலவ முனிவரும் கருவூர்த் தலத்தை அடைந்து பசுபதியைத் தரிசித்து அங்குள்ள தீர்த்தங்களில் மூழ்கி வழிபாடு செய்து கொண்டு அத் தலத்திலேயே நிலைபெற்று நெடுங்காலம் வாழ்ந்திருந்தார் எனச் சனகாதி முனிவருக்குச் சூத முனிவர் விளக்கமாக எடுத்துரைத்தார்.

## பதினுருவது

### நியமச் சுருக்கம்

சூத முனிவர் சவுனகாதியரைநோக்கி, "முனிவர்களே! பசுபதீஸ்வரப் பெருமானை வழிபடும் நியமத்தை எடுத்துக் கூறுவோம் கேட்பீராக என்று கூறத் தொடங்குகின்றார்:— "சூரியன் உதயமாகுமுன்னர் ஐந்து நாழிகைக்கு நித்திரை விட்டெழுந்து காலைக் கடன் முடித்துப் பற்றுலக்கிப் பிரம தீர்த்தம் அல்லது ஆம்பிர நதியில் மூழ்குவீர். இடையில் ஆடையுடுத்தி அதன்மேல் ஆடை சுற்றித் தண்ணீர் கலங்காமல் மூழ்கிக் கரையை அடைந்து வேறுடை உடுத்திச் சூரியன் உதிக்கு முன்னர்ச் செய்கடன் ஆற்றிக் கோமயம் சுட்ட விபூதியையாவது நித்தியம் எரிகின்ற அடுப்பினுட் சாம்பரையாவது சிவன் கோவில் மடைபள்ளிச் சாம்பரையாவது வேள்விச் சாலை சாம்பர் அல்லது ஞான தேசிகர் மடத்துச் சாம்பராவது சைவ சித்தாந்திகள் வீட்டுச் சாம்பராவது கொண்டு மெய்பூசி ஆகம முறைப்படி குழைத்துப்பூசி அனுட்டானம் முடித்து உருத்திராக்கம் அணிந்து இறைவனைச் சிந்தை செய்து கொண்டே உதய சூரிய ஒளி உடம்பில் பொருந்தச் செல்ல வேண்டும். செல்லுங்கால் இடறினும் சிவ நாமத்தை உச்சரிக்க வேண்டும். அவ்வாறு சென்று முதலில் தூலலிங்கமாகிய கோபுரத்தை வணங்கி வாயிற்படியை மிதியாமல் உள் சென்று பலி பீடத்தருகில் அட்டாங்கம் அல்லது பஞ்சாங்கம் ஒருமுறை இருமுறையின்றி மும்முறைசெய்து நிர்மாலியம், மூர்த்திகளின் நிழல், இடபம், குரு, அந்தணர், முனிவர்களின் நிழலை மிதியாமலும், தாம்பூலம் முதலியன கொள்ளாமலும் எச்சில் உமிழாமலும், புல்பூண்டு எடுத்தெறிந்தும் வலம் வந்து மும்முறைமுடித்து அச்சத்தோடும் அன்போடும் பசுபதியை வணங்க வேண்டும். வழிபாட்டுக்குச் செல்வோர் பூக்கள் அல்லது கனி வகைகள் ஏதேனும் கொண்டு செல்லவேண்டும். இயலாதவர் அகங்குழைந்து மெய் புளகிப்பக் கண்கள் நீர் துளிப்பப் பரவசராகி, ஆடிப்பாடிப் போற்ற வேண்டும். தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாக்களைப் மனம் உருகி ஓதல்வேண்டும். அர்ச்சகர் தரும் திருநீற்றை வாங்கி ஒரு புறம் ஒதுங்கிக் கீழ் விழாதபடி சிரத்தையோடு பூசல் வேண்டும். அம்பிகை முதலிய எல்லாத் தெய்வங்களையும் முறையோடு வணங்கி இறுதியில் சண்டேசுரப் பெருமானை வணங்கி வழிபாட்டின் பலன் பெற்று மீண்டும் பலிபீடத் தருகில் மும்முறை வணங்கி அமர்ந்து முகமும் முகமும் எதிர்நோக்க முறையோடு கோர்த்த உருத்திராக்க மாலை கொண்டு தேசிகன் பாற் பெற்ற பஞ்சாக்கரத்தை நூற்றெட்டுக்குக் குறையாமல் செபித்து பிரதெக்கணஞ் செய்து வழிபாட்டை முடிக்க வேண்டும். இவ்வாறு வாழ்நாள் வீணுகாமல் வழிபடுவோர் சிவபெருமான் திருவடிப் பேறுபெறுவர்.

பூக்கொய்ய விரும்புவோர், வில்வம், துளசி இவைகளை நாள் அறிந்து எடுக்க வேண்டும். காலையில் எழுந்து கடன் முடித்துப் பல்துலக்கி நீராடி நீறு பூசிப் பூக்குடலை கொண்டு நந்தவனம் சென்று துளசிச் செடியின் அடியில் நீர் வார்த்து வணங்கி அதில் இருக்கும் தேவர்களை நினைத்து அடியேன் இதில் இலைகிள்ளுமளவும் இதனை விட்டு விலகி நிற்கும்படி வேண்டிப் பிறகு தனித்தனியே தழைகளைக் கொய்ய வேண்டும். வில்வத்தையும் அவ்வாறு வேண்டிப் பின் பழுதுபடாததாய் மூன்று கிளைகள் உள்ள

தாகப் பார்த்து எடுக்க வேண்டும். கிளைகளை ஒடித்துவிடலாகாது. பிறகு தாம் எடுத்த வில்வங்களை நன்கு ஆய்ந்து அர்ச்சகரிடம் சேர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு செய்தவர்கள் சாருபப் பதம் பெறுவார்கள். புரட்டாசி மாதம் புரட்டாசிப் பௌர்ணமியில் ஆம்பிர நதியில் வைகறையில் கோமயம் பெய்து நீராடி நியமம் முடித்துப் பசுபதியை வழிபடுவோர் முத்தி பெறுவர். பெரியோர், பசு, பெண் முதலியவருக்குச் செய்த பாவமும் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்கள் யாவும் "பசுபதிப் பெருமானே! அடியேன் செய்த பாவங்களைப் பொறுத்து மன்னித்தருள வேண்டும்", என்று அவனடியில் மலர்தூவி வழுத்துவோர் எல்லாப் பாவங்களினின்றும் விடுபடுவர் என்று வியாச முனிவர் நமக்குச் சொல்லியபடி உங்களுக்குச் சொன்னோம். குற்றம் தீர்ந்த முனிவர்களே! நீங்களும் பசுபதிப் பெருமானை வணங்கி வழிபாடு செய்யுங்கள்" எனச் சூதமுனிவர் திருவாய் மலர்ந்தருளினார்.

"ஒரு பருவம் அல்லது ஒரு மாதம் அல்லது பதினைந்து நாள் அல்லது ஐந்து நாள் அல்லது ஒரு நாளாகிலும் பசுபதிப் பெருமானைப் பத்திரபுட்பங்களால் அர்ச்சித்துக் கனி கிழங்குகளை நைவேத்தியமாகத் தந்து பச்சரிசியோடு அருக்கியம் வழங்கியவர் மகப்பேறும் பெருஞ்செல்வமும் பெறுவர். நாடிழந்த மன்னர் அதனைப் பெறுவர். பிணியாளர் பிணி தீர்வார். வஞ்சுளேசர்க்கு நெய் அல்லது எண்ணெயால் விளக்கு வைத்து வழிபடுவோர் முத்தி அடைவர். பசுபதிக்குக் கபிலை நெய் விளக்கிட்டோர் கைலாயப் பதவி பெற்று முடிவில் முத்தியும் பெறுவார். ஐப்பசி மாதம், சித்திரை முதல் நாள், சங்கராந்தி, மகம், விதிபாதம் முதலிய நாட்களில் பஞ்சாமிர்தம் பஞ்சகவ்வியம், மாதுளை, எலுமிச்சங்கனி, தூயநீர் ஆகியவற்றால் பசுபதிக்கு அபிடேகம் செய்தோர் சிறைவீடு பெறுவர். இந்திரப் பதவியை அடைவர். சித்திரை மாதம் பௌர்ணமியன்று தைலமிட்டு மாக்காப் பணிந்து தயிர், இளநீர், பால், பழம், பஞ்சகவ்வியம், தூயநீர் அபிடேகித்துக் கலவை மலர்மாலைகள் அணிவித்து வழிபாடு செய்தோர் சிவபதம் பெறுவர். பசுபதிப் பெருமானுக்கு அகில், சந்தனம், குங்கிலியம், பசுநெய் ஆகியவற்றால் தூபப்பணி செய்தவர் சிவபதத்தில் நூறுயிரங் கோடி கற்பகாலம் வாழ்வர். பலபல கூறுவது ஏன்? முனிவர்களே! காராம் பசுவின் நெய்யினால் பசுபதிக்கு மூன்று விளக்கு இட்டவர் பெரும்பயனை நாரணனும் நான்முகனும் கூட நவில முடியாது; சிவபெருமானே அதன் பயனைக்கூற வேண்டும்.

## பதினேழாவது

## தல மகிமைச் சருக்கம்

நைமி சாரணிய முனிவர்கள் சூதமுனிவரை நோக்கி, "ஐயனே! கருவூர்த்தல மகிமையைக் கேட்க விரும்புகிறோம்; அருள் செய்வீராக", என வேண்டினர். சூதர் அவர்களை நோக்கிச் "சைவ மாதவர்களே! கைலை, மந்திரம், காசி, காஞ்சி பிரயாகை, நைமி சாரண்யம், சேது, வஞ்சுளாராணியம் என்ற ஒன்பது சிவத்தலங்கள் சிறந்தன. இவைகளைத் தரிசித்தோர் முத்தி பெறுவர். இவ்வொன்பதில் வஞ்சிப் பதியை அடைந்து பசுபதியை அன்போடு ஒன்பது நாள் வழிபடுவோர் ஏனைய எட்டுத் தலங்களைப் பும் வழிபாடு செய்த பலனை அடைவார். இத்தலத்தில் பசுபதிநாதர் வீற்றிருத்தலானும் திருமால் அரிதுயிலில் வீற்றிருத்தலானும் மறைபுகலுமிக் கருவூரைப் பாற்கரபுரம் என்பர். மலை, வனம், நதி, தீர்த்தம், நகரம், நான்முகன் அமைத்த ஆலயம் ஆகிய ஆறும் இங்கு இருப்பதனால் இதனைச் சண்மங்கலச் சேத்திரம் என்பர். இத்தலத்தைச் சுற்றி ஐந்து கூப்பிடு தூரம் உள்ள மணல் எல்லாம் லிங்கங்களாம். பசுவின் குளம்படி நீரும் தேவ கங்கையாம். மக்கள் எல்லாம் தவமுனிவர்கள். மரங்களெல்

லாம் கற்பகத் தருக்கள். மக்கள் விளையாடுவது வேள்வி செய்தல் போலாம். உணவெல்லாம் அமிழ்தம். உறக்கமெல்லாம் சமாதி நிலை. வாய்மொழி வேதாகமங்கள் ஓதல். பசுபதி உறையும் இத்தலத்தை வணங்கினோர் தீவினை தீர்வர். இங்குப் பிறந்தோர் சாரூபம் பெறுவர். இறந்தோர் தாயின் கருவில் மறுபடி புகார். முன்னை மாதவம் உடையோரே இவ்வூரில் வசிப்போர். இத்தலத்தில் சிவாகமம் ஓதிப் பசுபதியைப் பூசிப்போருக்கு உதவிசெய்வோர் பெறும் பேறு என்னுல் கூற இயலாது. தீயவினை மிகப் புரிந்தவரும் இத்தலத்தில் ஒரு மாதம் அல்லது ஒரு திதி அல்லது ஒரு நாள் சும்மா தங்கி இருந்து இறப்பின் சிவலோகம் அடைவர். வேறு தொழில் காரணமாக வந்து கருவூரில் தங்கினோர் பிறப்பறுவார். எள் அரிசி பிதிர்களுக்கு ஈந்து ஓர் அந்தணனை உண்பித்தோர் பிற தலங்களில் கோடி அந்தணர்க்கு அன்னமிட்ட பலனைப் பெறுவார். மழை வேண்டுங் காலத்தில் பசுபதிக்குச் சிறந்த அபிடேகம் செய்து அந்தணருக்குத் தானம் செய்யின் மழை பெய்யும். கருவூர்ப் பெருமை அறிந்து வழிபாடு செய்யும் அரசர் பகைவென்று வாழ்ந்து இந்திரப் பதவி அடைவார். ஒழுக்கம் உடையவராய்ப் பொய் பேசாமல் இல்லாளுடன் வாழ்வோர்க்காகத் தென்றல் வீசும். தானியம் கொடுத்தோர் சிவலோகம் அடைவோர். நில தானம் கொடுத்தவர் அரசராய்ப் பிறப்பார். கன்றேடு கூடிய பசுவைத் தானம் செய்தவர் சிவலோகம் அடைவார். உலோக தானம் செய்தவர் பிரமபதவி அடைவார். திருப்பணி செய்தோர், பொன் தானம் அளித்தவர் முத்தி பெறுவர்.

சிவனடியார்களுக்கு மடம் கட்டித் தந்தவர் சிவலோகம் அடைவர். தவசிகளுக்கு உணவளித்தோர் தண்ணீர்ப் பந்தல் அமைத்தோர், பசித்தோருக்கு ஒரு வேளை அன்னமிட்டோர், யோக பட்டம், உருத்திராக்கம் கொடுத்தோர், கமண்டலம் கொடுத்தோர், யோகிகளுக்குக் குளிர் நிழல் ஒடுக்கம் செய்து தந்தோர் சிவனருள் பெறுவர். தட்சிணமூர்த்தி முன்பு இருந்து ஐந்தெழுத்தைச் செபித்தவர் காசியில் கோடிதரம் ஐந்தெழுத்தினை ஓதிய பலனை அடைவார். உருத்திராக்கம் கொண்டு ஐந்தெழுத்தைச் செபிப்பவர் பொன், வெள்ளிகளால் சிவலிங்கம் செய்து பூசிப்பவர் சிவகதி அடைவர். இத்தலத்தில் சிராத்தம் செய்தால் மற்ற தலங்களிற் செய்ததைக் காட்டிலும் கோடி மடங்கு பலன் கிடைக்கும். நிலவுலகை ஆளும் அரசர் கொடுங்கோல் செய்யின் அவருக்கு அழிவு வரும் காலத்துப் பசுபதிநாதன் திருமுடிமேல் கறையான் ஊர்ந்து திரியும். பெரும் பாவம் செய்தவரும் ஆநிலை அண்ணல் வீற்றிருக்கும் கருவூரைக் காண எண்ணி வழி நடக்கும்போதே அப்பாவப் பயன் தீரும். காலைப் பொழுதில் பசுபதிக்குச் சந்தனம் பச்சைக் கர்ப்பூரம், கஸ்தூரி கோரோசனை, பனிநீர் முதலியவற்றுல் அபிடேகம் செய்தவரும், இறைவனைப் பவனி வருங்கால் தரிசித்தவரும், பங்குனி உத்திரத்தில் திருத்தேர் பவனி தரிசித்தவரும் செய்த பாவங்களெல்லாம் நீங்கி அரசராய் உலகை ஆள்வர். தலப்பெருமை எனக்குரைத்த வியாசர் கருவூருக்குப் பாவமில்லை என்றருளினர். இப்புராணத்தைக்கேட்ட அவையிலுள்ளோர் பாவம் எல்லாம் நீங்கிப் புண்ணியராவார். இப்புராணத்தைப் பொய் என்போர் அருநரகமடைவர். இந்த நூலை ஆநிலைக் கோவில் அல்லது ஆம்பிர நதிக்கரை அல்லது வெண்ணெய் மலை ஆகிய இடங்கள் ஒன்றில் இருந்து படிக்கக் கேட்போர் சிவபதம் பெறுவர். முனிவீர்! நீங்களும் சென்று கருவூர்த் தலத்தை அடைந்து தீர்த்தங்களில் மூழ்கித் தலங்களைத் தரிசித்து நன்மையடையுங்கள்; நானும் தீர்த்த யாத்திரை செய்யச் செல்கின்றேன்" எனச் சூத முனிவர் கூற நைமிசாரணிய முனிவர்கள் வணங்கி அவரை வழியனுப்பிவிட்டு அவர் மொழிப்படி கருவூர்த் தலத்தை

அடைந்து தீர்த்தங்களில் மூழ்கிப் பசுபதி முதலாகப் பஞ்சலிங்கங்களையும் வெண்ணெய் மலையையும் தரிசித்துத் தவம் செய்திருந்து மீண்டும் நைமிச வனத்தை அடைந்து வாழ்ந்திருந்தனர்.

### பதினெட்டாவது

### கருவூர் நகரச் சிறப்புச் சருக்கம்

கருவூர் நகரம் மிகத் தொன்மையானது. மூவேந்தருள் முதலில் வைத்து எண்ணப்பட்ட சேரர் தலைநகராக உள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் முச்சிறப்புமுடையது. பிரமாவினுல் கற்பதோறும் பூசிக்கப்பட்ட பெருமை உடையது. ஆதிபுரம், பாற்கரபுரம், வீரசோழபுரம், வஞ்சுளாரணியம், வஞ்சித்தாய் ஊர்,சண்மங்கல சேத்திரம், கருவூர், கருப்பபுரி முதலிய பெயர் பெற்று விளங்கும் தொன்மையுடையது. பிரமனும் திருமாலும் போற்றும் பசுபதி வீற்றிருக்கும் திருப்பதி. திருஞான சம்பந்தர் போற்றிய தலம். பல வித மரங்கள் பூத்துக் காய்த்துக் கனி தரும் சோலை வளமுடையது. பல தீர்த்தங்கள், சோலைகள், வயல்கள், பெரிய மதில்கள் சூழ்ந்து ஆம்பிர நதியால் வளம் பெற்று விளங்குவது. மாதவ முனிவர்கள்,தேவர்கள் வழிபாடு செய்து பேறு பெற்று விளங்குவது. கரும்பும், மஞ்சளும், இஞ்சியும் செந்நெலும், தெங்கும், கமுகும், வாழையும் பலாவும் வன்னியும் கொன்றையும் எங்கும் நெருங்கி எழில் செயும் தன்மையுடையது. தவத்தினுல் உடம்பு வாடுவதன்றி வேறு எத்திறத்தாலும் உடம்பை வாட்டும் தன்மையில்லாதது. எல்லாவிதச் செல்வங்களையும் பெற்று மக்கள் மனத்தளர்ச்சியின்றி வாழும் பெருமை பெற்றது. பூமகள் மைந்தராய்ப் புண்ணிய உருவம் பெற்று மறையவர்க்கு மனமுவந்தளித்து ஆநிரை ஓம்பி உழவுத் தொழிலால் சிறப்புற்றுயர்ந்த வேளாண்மக்களையுடையது. தேவர்களும் முனிவர்களும் நான்முகனுந் திருமாலும் நண்ணிய பேறு பெற்றது இத்தகைய நகரத்தின் சிறப்பை யாவரே சொல்ல வல்லார்?

### பத்தொன்பதாவது

### புகழ்ச் சோழச் சருக்கம்

புகழ்ச் சோழர் கொங்கரோடு குடபுலத்து அடல் மன்னர்பால் திறை கொள்ளும் பொருட்டு உறையூரினின்றும் போந்து கருவூரை அடைந்து வானவர் போற்றும் ஆநிலையண்ணல் திருவடி முடியுறப் பணிந்து வலங்கொண்டு கருவூர் அரண்மனை புகுந்தார். தேவர்களும் கண்டு வியப்பெய்தும் வண்ணம் அழகுபெற அத்தாணி மண்டபத்தில் அமைச்சர், படைத்தலைவர், புரோகிதர், சாரணர் முதலியோர் அவரவர் இருக்கையில் அமர அரியாசனத்தில் வெண் கொற்றக் குடை நிழலில் அரம்பை அன்னுர் ஆடலும் பாடலும் புரிய, வெண் கவரி வீச அமர்ந்திருந்தார். வேற்றரசர் முறை முறையாகத் தத்தம் திறைப் பொருளைச் செலுத்தி மன்னர் மன்னனைப் பணிந்து அருள் பெற்றுச் சென்ற வண்ணமாக இருந்தனர். ஒருவாறு அரசரெல்லாம் திறை செலுத்தி முடிந்ததும் புகழ்ச்சோழர் தலைமை அமைச்சரை நோக்கி, "எல்லா அரசர்களும் திறை செலுத்தி விட்டார்ளோ? அல்லது திறை செலுத்தாத மன்னரும் உண்டோ?" என்று வினவ, அமைச்சர் எழுந்து, "அரசே! குறும்பொறையூர் அதியனைத் தவிர எல்லா மன்னரும் திறை செலுத்தி விட்டனர். குறும்பொறையூர் அரண் பகைவரால் கைப்பற்றுதற்கு அரிய வலிமையுடையது. அதனுல் இறுமாப்புக் கொண்ட அதியன் நம்மை மதியாமலும் திறை செலுத்தாமலும் இருக்கின்றுன்," என்று கூறினன்.

அமைச்சன் மொழிகேட்ட புகழ்ச் சோழர் படைத்தலைவனை நோக்கி, "உங்களால் வெல்லுதற்கு அரிய அரணும் இவ்வுலகில் உண்டோ?"

என்று கூறி அதியன் மீது படை எடுத்து வெல்லுமாறு ஆணையிட்டார். படைத்தலைவன் நால்வகைப் படையோடும் குறும்பொறையூர் நோக்கிப் புறப்பட்டான். இச்செய்தியை ஒற்றர் மூலம் உணர்ந்த அதியனும் போருக்கு ஆயத்தமானான். சோழர் படை காற்றினைப்போல வேகமும் கூற்றினைப் போலக் கோபமும் உடையதாய்ச் சென்று மலையின்மேல் அமைந்த அதியன் கோட்டையை முற்றுகை இட்டது. உள்ளிருந்த அதியன் படை வீரரும் மதில்மீதிருந்து சோழர் படையைக் கடுமையாகத் தாக்கினர். சோழர் படைவீரரும் பெருவீரத்தோடு மதில் மீது ஏறி அதியன் படைவீரரை வெட்டி வீழ்த்தினர். நெடுநேரம் கடுஞ்சமர் நடந்தது. அதியன் படைத்தலைவர்கள் பலரும் வீரர் பலரும் தலையிழந்து கவந்தமாடினர். முடிவில் சோழர்படை கை ஓங்கவே அதியன் படை வீழ்ச்சியுற்றது. மதில் கதவுகள் உடைத்தெறியப்பட்டன. சோழருடைய படைகள் கோட்டைக்குள் வீராவேசத்தோடு சென்றன. தம்படை வீழ்ச்சியுற்றதை அறிந்த அதியன் சுரங்க வழியாக வெளியே ஓடிக் காட்டில் மறைந்து கொண்டான். அதியனைச் சிறைபிடிக்கச் சென்ற சோழர் படைத்தலைவர் அதியன் தப்பி ஓடிவிட்டதை அறிந்தனர். பிறகு அரண்மனையிலுள்ள உயர்ந்த பொருள்களையெல்லாம் வாரி வரும்படி தம் வீரர்களுக்குக் கட்டளையிட்டனர். அதியன் படைத்தலைவர்களின் தலைகளைப் பெரிய கூடையில் அடுக்கி முதலில் கருவூருக்கு அனுப்பி விட்டு அதியன் அரண்மனையில் கவர்ந்த பொருள்களோடு நால்வகைப் படைகளும் கருவூர் வந்து சேர்ந்தன. முன்பு அதியன் படைத்தலைவர்கள் தலைகளைக் கொண்டு வந்தவர்கள் சோழ அரசர் முன்பு அத்தலைகளை வைத்து வணங்கி, "அரசே! அதிய மன்னன் தம்படை தோற்றது கண்டு அஞ்சிச் சுரங்க வழியே தப்பி ஓடி விட்டான். காடுகளில் தேடியும் அகப்படவில்லை. இத்தலைகள் படைத்தலைவர்களுடையவை" என்று கூறினர். புகழ்ச் சோழர் அத் தலைகளை ஒவ்வொன்றாகப் பார்த்து வந்தார். அவைகளுள் ஒரு தலை சடைமுடியோடு இருக்கக் கண்டார். திடுக்கிட்டார். கண்கலங்கினார்; துடிதுடித்தார்; மயங்கித் திகைத்தார். பிறகு பின் வருமாறு கூறுகின்றார்.

"பசுபதிப் பெருமானே! நான் நாடாளும் குறிப்பெல்லாம் சிவசமயம் வாழவும் திருநீற்று நெறி ஓங்கவும், சிவனடியார்கள் இன்புற்று வாழவும் அல்லவா? சிவவேடம் போற்றும் என் வாழ்வில் சிவவேடத்தவரைக் கொலை புரிய நேர்ந்ததே! சோழமன்னர் புகழே பூண்டு உலகம் புரந்தனர். அக்குடியில் வந்த நான் சிவனடியாரைக் கொன்று பழி பூண்டேன். சிவ அபராதத்துக்கு ஆளாகி விட்டேன். இனி உயிர் வாழேன். இந்தப் பழி தீரவேண்டுமானால் பசுபதி ஆலயத்தின் முன்பு தீக்குளித்தலே தகும்," என்று கூறிவிட்டு மனைவியாரை நோக்கி, "என் மகனுக்கு முடிசூட்டி உலகத்தையும் சிவ சமயத்தையும் போற்றிவரச் செய்யுங்கள். கவலையுற வேண்டா," என்று கூறிவிட்டு அருகில் நின்று கண்ணீர் சிந்தும் அமைச்சரை நோக்கிக், "கவலையைவிட்டு ஆலயத்தின் முன்பு அக்கினிக் குண்டம் ஏற்படுத்துங்கள்," என்று கூறினார். அமைச்சர்கள் பெருந்துயர் கொண்டவர்களாக மன்னரைப் பார்த்து, "அரசே! இதன் பொருட்டு உயிர் துறத்தல் அறமன்று. நீதிநூல்களில் கூறப்பட்டபடி பிராயச் சித்தம் செய்வதே தகுதியாகும்." என்றனர். அதுகேட்ட புகழ்ச்சோழர் அமைச்சரை நோக்கி, "உங்கள் அறியாமைக்கு வருந்துகிறேன். சிவன் அடியாரைக் கொன்ற என்னுயிரை நெருப்பில் விழுந்து விடுவதொன்றே கழுவாயாகும். விரைவில் தீக்குழி ஏற்படுத்துங்கள்" என்று கட்டளையிட, அமைச்சர்கள்

அவ்வாறே ஆலயத்தின் முன்பு தீக்குழி ஏற்படுத்தினர். புகழ்ச்சோழர் மெய் முழுதும் வெண்ணீறு பூசிச் சடைத்தலை யைத் தலைமேல் தாங்கிக் கொண்டு பசுபதியைத் தொழுது தில்லை மன்று ளாடும் மாமணியின் திருவடிகளை மனத் துட்கொண்டு அக்கினிக் குண்டத்தை வலம்வந்து தீயினுள் புகுந்து அம்பல வன் அடிக்கமலத்தை அடைந்தார். தேவதுந்துபி முழங்கியது. தேவர்கள் கற்பகப் பூமாரி பொழிந்தனர்.

பத்தொன்பதாவது

கருவூர்த் தேவர் சருக்கம்

கருவூரில் அந்தணர் குலத்தில் கருவூர்த் தேவர் தோன்றினுர். பருவ காலத்தில் கல்விபயின்று வல்லவரானுர். வேதாகமங்களை நன்கு ஓதி உணர்ந்தார். வேதம் பொது என்பதையும் ஆகமம் சிறப்பு என்பதையும் அறிந்து சைவ சம யத்தை மேற்கொண்டு ஆநிலை இறை வன் கோவிலில் வழிபாடு செய்யும் அவ்வூர் மறையவர் அறுபது குடிகளி னும் மேம்பட்டு விளங்கினுர். காமிக முதலிய ஆகமங்களிற் சொல்லப்படும் சைவமும் வேதநெறியும் உலகில் விளங் கவும், ஓதுவோருடைய பாவத்தைப் போக்கும் திருவிசைப்பாவை உலகம் போற்றவும் செய்து தேவர்களும் தொழத் தக்கவராய்க் கருவூராரென்னும் பெய ருடன் விளங்கினுர். இயமம், நியமம் முத லான அங்கங்களையுடைய யோக நெறியும் சமய நூல் தெளிவும் உடைய ஞானுசிரியர், எங்கு, எப்பொழுது கிடைப்பார் என்ற ஞானத்தாகம் உற்றவராய் மும்மல வலி தொலைந்து சிவத்தை உள்ளுணரும் யோகநிலை பெறும் பொருட்டுத் தவம் புரிந்து வந்தார். சித்தர்களின் அருளால் மெய்ந் நெறி வாய்க்கப் பெற்று முத்தர்களிடம் பழகுவதும் புண்ணிய நதிகளில் மூழ்கு வதும், மலைக்குகைகளிலும் வனங் களிலும் தவம் புரிவதும் செய்து யோகம் முற்றிக் கண்டோர் ''இவர் பித்தரோ?'' என்று கருதத் தக்க நிலையை அடைந்தார். சில சமயங்களில் மாதர் களோடு கூடியிருந்தாலும் மாயோக நிலை விடாதவர். ஆகலின் தாமரையிலை தண்ணீரில் கிடந்தாலும் எவ்வாறு அதில் நீர் ஒட்டாமலிருக்குமோ அது போல உலகத்தோடு ஒட்டினவர் போலக் காணப்பட்டாலும் பற்றற்ற நிலையில் பரமனையே கண்டிருப்பவர்.

கருவூர்த் தேவரின் நிலைமையினைத் தெளியும் அறிவுவன்மை இல்லாத மறை யவர்கள் தத்தம் மனம் போனவாறு இகழத் தொடங்கினர். அதாவது, ''கருவூர்த் தேவன் வேதநெறியைவிட்டு வாம மார்க்கத்தைத் தழுவி ஒழுக்கம் கெட்டு விட்டான்.'' என வெறுத்து ஒதுக்கினர். திருமால் பிரமர்களாலும் அறியமுடியாத சித்தர் நிலையை அறிந்து கொள்ள வல்லவர் யாவர்? உண்மை ஞானம் பெற்றவர் யோகி யாகவும் அரசராகவும் ஐயமேற்று உண் பவராகவும், பாலரைப் போலவும் பித்தர் போலவும் இருப்பர். தவப்பற்ருகிய சிவப்பற்றிலே நிற்பரன்றி அவப்பற்றில் நில்லார். வைதாலும் வாழ்த்தினுலும் வாட்டமும் மகிழ்ச்சியுமின்றிச்சிவானந்த போதத்தில் தெளிந்திருப்பர். இந்த நிலைமையை வேதம் கற்ற வல்லவராகிய வேதியர் உணராமல் அவர்மீது கோபித் தனர். ஒரு காலத்தில் மழையே பெய் யாமல் வறட்சி மிகுந்து மக்கள் நீரின்றித் தவித்தனர். சில மறையவர் கருவூர்த் தேவரை அணுகி, ''நீ பெரிய சித்தனுக இருந்தால் இன்றைக்கே மழை பெய்யச் செய்யும். அப்பொழுது உம்மை மதிப் போம்,'' என்றனர். கூறிய சிறிது நேரத் தில் பெருமழை பெய்து ஆற்றின் இரு கரையும் வழியும்படி வெள்ளம் வந்து விட்டது. பொது மக்கள் கருவூர்த் தேவரை வாயார வாழ்த்தினர். மறை யவர் அப்பொழுதும் மதித்தாரில்லை. சூரியன் வெம்மை தணியும்படி செய் தார். சிவபெருமான் கோவில் கதவு திறக்கமுடியாமல் வருந்தியபோது கவி பாடித் திறப்பித்தார். ஒரு முறை பூத கணங்கள் குடை பிடித்து வரச் செய்

தார். தேவலோகத்துக்குச் சென்று நிலவுலகத்துக்கு மீள்வார். இன்னும் விடத்தற்குரிய பல சித்திகள் விளைத்தார். அவர் பெருமையை அளர்தறிபவர் யாவர்? சிலர் கருவூர்த் தேவருக்குத் துன்பம் விளைப்பர். சிலர் உள்ளன்போடு உபசாரம் செய்வர். இவைகளில் வெறுப்பும் விருப்புமின்றி யாவரிடத்தும் கருணையுள்ளத்தோடு ஒழுகுவார்.

இவ்வாறு இருக்கும் நாளில் கருவூர்த் தேவர் சிவத்தல யாத்திரை செய்ய விரும்பி வராக கிரியிலுள்ள சிவன் கோவிலும் கொங்கு நாட்டுத் தலங்களும் குடநாட்டுத் தலங்களும் வழிபாடு செய்தார். பின்னர்க் கன்னடம், துளுவம், மாகதம், விசாலை, கோசிகம், கோசலம், சைந்தி சாளக்கிராமம், மாளுவம், கன்னோசி, ஆரியம், மராடம், குருச்சேத்திரம், மிலாடம், அயோத்தி, ஏமாங்கதம், கவுடம், பல்லவம், மத்தியப்பிரதேசம் முதலிய இடங்களுக்குச் சென்ருர். பின்னர் காஞ்சி, அண்ணுமலை, தில்லை முதலாகச் சோணுட்டுத் தலங்கள் பலவற்றையும் அடைந்து, வழிபாடு செய்தும், பிறகு பாண்டிய நாடடைந்து மதுரை, இராமேச்சுரம் முதலிய தலங்களை வழிபாடு செய்தும் தாம்பிரபரணி நதிக்கரையிலுள்ள திருகுருகூரை அடைந்தார்.

திருக்குருகூர்ப் பெருமான் பாகவதர்களுக்குக் கனவில் தோன்றி, "நம் கருவூர்ச் சித்தர் இங்கு வருகின்ருர். அவரைப் போற்றி அவரருள் பெறுவிராக", என்று கூறி அருளினுர். கருவூர்ச் சித்தர் தாம்பிரவர்ணி நதிக்கரையில் தங்கி யோகம் புரிவதை உணர்ந்த திருக்குறுகூர்ப் பாகவதர்கள் திரண்டு வந்து கருவூர்த் தேவரை வணங்கித் துதிக்கக் கருவூர்த் தேவர் மகிழ்ந்து, "திருக்குருகூர்த் தெருவில் திரியும் நாய்களும் சுவர்க்கம் பெறக் கடவன என்று அருள் கூர்ந்தார். பின்னர்க் கருவூர்த் தேவர் திருச்செந்தூரை அடைந்து முருகப் பெருமானை வழிபாடு செய்து கன்னியாகுமரியை அடைந்து தீர்த்தமாடிப் பின் சுசீந்திரம் என்னும் தலத்தை வழிபாடு செய்து, பிற தலங்கள் தோறும் சென்று வணங்கிக் கடல் போல் அலை வீசும் தாம்பிரபர்ணிக்குப் பத்துக் கல் தொலைவில் தோன்றும் தலத்தின் கோபுரத்தை வணங்கித் திருநெல்வேலி ஒரு கூப்பிடு தூரத்தில் வலமாகச் சுற்றி வந்து அத்தலத்தின் வடக்குப் பக்கத்தை அடைந்து கண்கள் அருவிபோல் நீர் சொரிய இறைவன் நெல்லையப்பர் திருவடிகளில் நிலைக்க வைத்த மனத்தினராய், "எந்தையே! இங்கு வருவாயாக", என்று கூப்பிட்டார். நெல்லையப்பர் கருவூர்த்தேவரின் பெருமையை உலகுக்கு உணர்த்தல் வேண்டி வராதிருந்தார். அருச்சகர்கூட்டமும் வரவில்லை. இதனை உணர்ந்த கருவூர்த் தேவர் மூங்கிலின் முளைத்த முக்கண் மூர்த்தியை நோக்கி, "இத் தலம் வளம் குறைந்து எருக்கு முளைத்துப் பாழாகக் கடவது", என்று சபித்தனர். நெல்லையப்பர் அங்குள்ள அடியார்கள் கனவில் தோன்றிக், "கருவூர்த்தேவன் நம்மை அழைத்தான். நாம் போகவில்லை. அதனுல் கோபங் கொண்டு அந்த அருந்தவத்தோன் இவ்வூரைச் சபித்தான். அவன் மகிழும்படி நீங்களெல்லாம் அவனடியில் விழுந்து வணங்குங்கள்," என்று கூறிவிட்டு உமாதேவியாரோடும் இடபத்தின் மேற்கொண்டு சென்று கருவூர்த் தேவர்க்குக் காட்சி தந்தார். அடியவர்கள் சென்றனர். நெல்லை நாயகன் காந்திமதியோடு மழவிடைமேல் வீற்றிருந்து வழங்கும் காட்சியைக் கண்ணுரக் கண்டு கைகுவித்துக் கரையில் இன்ப மெய்தி நிலத்தில் விழுந்து வணங்கிப் "பொருனை நதிக்கரை வீற்றிருக்கும் கண்ணுதலே! காந்திமதி சமேதநெல்லை நாதனே! போற்றி! போற்றி! என்று துதித்தார். அடியவர்கள் எல்லாரும் இறைவன் நமக்குக் கனவில் உணர்த்திய மாதவர் இவரே!" என்று அதிசயத்து நிற்க, அந்தர துந்துபி முழங்கும் ஒலி

கேட்டு இறைவன் கருவூர்த் தேவருக்குக் காட்சி வழங்கி மறைந்தமை தெரிந்து ஆனந்த பரவசராகிக் கருவூர்த் தேவரைத் துதித்தனர்; வணங்கினர், வழிபட்டனர்.

கருவூர்த் தேவர் அடியவர்களைப் பார்த்துச் "சிவபெருமான் ஆலயத்துக்கு எழுந்தருளுகின்றார். நீங்களும் உடன் செல்வீர்களாக" என்றனர். அடியவர்கள் கருவூராரை நோக்கி, "ஐயனே! தாங்கள் இட்ட சாபத்தை மாற்றியருளுக" என்று வேண்டினர். கருவூராரும் மகிழ்ந்து, "அன்பர்களே! தூயவர்களாகிய நீங்கள் வசிக்கும் ஊருக்குக் குறையும் வருமோ? இறைவன் காட்சி தந்தபோதே சாபமும் தீர்ந்தது. நீங்கள் இன்பமாக வாழ்வீர்களாக," என்று அவர்களுக்கு விடை கொடுத்தனுப்பிவிட்டு, இரண்டு கூப்பிடு தூரம் மேற்கே சென்றார். அங்கு ஒரு சிவலிங்கம் இருக்கக்கண்டு தழுவிக் கொண்டார். அந்த லிங்கம் குழைந்தது. தேவர்கள் பூமாரி பொழிந்தனர். வேதங்கள் துதித்தன. முனிவர்கள் ஆரவாரித்தனர். பிறகு கருவூரார் தாம்பிரபரணிக் கரையிலுள்ள திருப்புடை மருதூர் ஆலயத்தை அடைந்து இறைவனைக் கூப்பிட்டார். மாலயன் காணா மருதூர் நாயன் முடி சாய்த்து, "ஓலம்! ஓலம்!" என முழக்கம் தந்தார். அடியவர் அன்பும் ஆண்டவன் அருளும் அவர்களே அறிவார்கள். இவ்வாறு இறைவன் செய்தருளிய முழக்கம் கேட்டுச் சித்தர் உருகினார்; ஆடினார்; அழுதார். அமுதம் போலும் திருவிசைப்பாப் பாடினார். பரவசமானார். இறைவன் உமாதேவியோடும் இடபாரூடராய்க் காட்சி வழங்கித் திருவடி முடிமேல் சூட்டிக் 'கருவூருக்கு வருக' எனக்கூறி மறைந்தருளினார்.

இது இவ்வாறிருக்கச் சோழ நாட்டுத் தஞ்சாவூரில் இராசராச சோழன் பெரிய சிவாலயம் ஒன்று எடுப்பித்தான். அதில் சிவலிங்கப் பிரதிட்டை செய்ய ஆவுடையாரில் லிங்கத்தை நிறுவி மருந்து சாத்தினர். அந்த மருந்து இளகியபடியே இருந்தது. இறுகவில்லை. ஆதிசைவர்கள் பலரையும் அழைத்து மருந்து சாத்தச் செய்தான். அதுவும் கைகூடாமல் கவலைப்பட்டான், கருவூர்த் தேவர் வந்தாலன்றி இச்செயல் வெற்றி அடையாது என அசரீரி வாக்கு ஒன்று அனைவரும் கேட்கும்படி எழுந்தது. அது கேட்ட அரசன் வியப்பும் திகைப்பும் கொண்டு, "கருவூர்த் தேவர் எங்குளார்? அவரைத் தேடிக் கண்டு பிடிப்பது எவ்வாறு?" என மனம் வருந்தும் போது அங்கு உருவம் மாறி நின்று கொண்டிருந்த போகநாதர், "நான் கருவூராரை இங்கு வரும்படி செய்வேன்," என்று கூறிக் காக்கை ஒன்றைப் பிடித்து அதன் காலில் தாம் எழுதிய ஓலையைக் கட்டி விடுத்தனர். சற்று நேரத்தில் கருவூரார் தஞ்சைக் கோவிலை வந்தடைந்தார். போகரும் தம் உண்மை வடிவோடு விளங்கினார். இவைகளைக் கேள்வியுற்ற அரசன் விரைந்து வந்து போகநாதரையும் கருவூர்த்தேவரையும் வணங்கினான். போகநாதர் கருவூராரை அழைத்த காரணத்தை அவரிடம் கூறக் கருவூரார் கேட்டு, "எல்லா வல்லமையும் பெற்ற தாங்களே இதைச் செய்திருக்கலாமே! அடியேனை அழைத்தது எதற்காக?" என்று கேட்க போகநாதர், "நீர் சிவயோகிகளில் தலைவர் என்பதை உலகுக்கு அறிவிக்க இவ்வாறு செய்தோம்" என்றார். பிறகு அரசன் வேண்டுகோளின்படி கருவூரார் மருந்து சாத்தச் சென்றார். அரசனும் பிறரும் வியப்போடு பார்த்து நிற்கக் கருவூரார் தாம்பூலம் தரித்து அந்த உமிழ்நீரை மருந்தில் பெய்து கைகளால் அழுத்திப் பிடிக்க நன்றாக மருந்து இறுகிப் பிடித்துக் கொண்டது. எல்லோரும் பெரு மகிழ்ச்சி அடைந்தார்கள். கற்பகப் பூ மாரி பெய்தது, எல்லோரும் கருவூர்த் தேவர் அடிகளில் விழுந்து வணங்கினார்கள். அரசன் பேரன்போடு கருவூராரை வணங்கித் துதித்தான். பிறகு

கருவூரார் அரசனுக்கு ஆசி வழங்கி விடை பெற்றுத் திருவானைக்கா முதலிய தலங்களை வணங்கிக் கருவூரை அடைந் தார்.

கருவூரை அடைந்த தேவர் சிவபெருமானை வழிபாடு செய்து சமாதியில் நிலை பெற்றிருந்தார். அவ்வூர் மறையவர்கள் கருவூரார் வீட்டை அடைந்தனர். தேவருடைய மாணவர்கள் அவர்களைப் பார்த்துக் "குருநாதர் சிவயோக சமாதியில் வீற்றிருக்கின்றார். தாங்கள் வந்த காரியம் என்ன?" என்று வினவினர். மறையவர்கள் கருவூர்த் தேவரைப் பல வாறு இகழ்ந்து பேசிவிட்டு அரசனிடம் சென்று, "வேந்தே! கருவூர்த் தேவன் மறையவர் குலத்தில் உதித்தும் குலத்துக்கேலாத மது, மாமிசம் வைத்து வாம பூசை புரிகின்றான். அவனை ஊரை விட்டு ஓட்ட வேண்டும்," என்றனர். அதற்கு அரசன், 'மாதவர் செயலை நாம் தடுப்பது கூடாது" என்றனன். அதற்கு மறையவர்கள் அரசனை நோக்கித் "தவசிகள் குற்றம் புரிந்தால் மன்னன் தண்டிக்க வேண்டும் என்று மனுநீதி கூறுகின்றது. தாங்கள் நேரில் வந்து சோதனை செய்தபிறகு செய்வன செய்க" என்றனர். "மாதவர் சினங்கொண்டு சாபம் தருவரேல் யார் பொறுப்பார்?" என்றனன். ஒரு மறையவர் "சாபம் தந்தால் அதனை நான்ஏற்றுக்கொள்கிறேன். என்றார். மன்னன் மறையவர் மொழியை ஏற்றுக் கொண்டு கருவூரார் இல்லத்தை அடைந்து, உள்ளே புகுந்து, அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்தான். தவம் புரிவோரும் சிவபூசை புரிவோரும் வேதாகமம் கற்போரும் எங்கும் தூய்மையே உருவாக இருக்கக் கண்டான். யோக நிலை விட்டெழுந்த கருவூரார் மன்னனை வரவேற்று அங்குள்ள நிலைமைகளைக் காண்பித்து, "மன்னர் இவ்வேளையில் இங்கு வந்த காரணத்தை அடியேன் அறியலாமா? என்றனர். மன்னன் கை குவித்து வணங்கித் "தங்கள் பூசையைக்காணமறையவரோடும் வந்தோம்" என்றனன். சோதனை புரிய வந்துளார் என்பதை அறிந்த கருவூரார் அரசனைப் பார்த்து "அரசே! இங்குள்ள மறையவர்கள் இல்லங்களையும் பார்வையிடல் வேண்டும்" என்றார். அவ்வாறே மன்னன் மறையவர் வீடுகளைப் பார்வையிட்டனன். ஒவ்வொரு வீட்டிலும் பல வகைப் புலால்களும் மது வகைகளும் இருக்கக் கண்டு மறையவர்களை வைது ஊரைவிட்டுக் காட்டில் குடியேறி வசிக்கும்படி உத்திரவிட்டான். மறையவர் மனம் நொந்து குடியேறினர். உடனே கருவூரார் மன்னனை நோக்கிக் "குடிகள் குற்றம் புரிந்தாலும் அதனைத் திருத்தி நல்வழியில் வாழச் செய்வது மன்னர் கடமையாகும். கோபித்தல் கடனன்று" என்றனர். சோழன் கருவூர்த்தேவரை வணங்கிச் சென்றான். மறையவர்கள் ஒன்று கூடி "இக்கருவூரான் தான் கெட்டதுமின்றி மன்னன் மனத்தை பேதித்து நம்மையும் ஊரை விட்டு ஓடும்படி செய்து விட்டான். இவனை நையப் புடைத்துவிட்டு நாமெல்லோரும் இந்த ஊரைவிட்டுப் போய் விட வேண்டும்" என்று திட்டமிட்டுக் கருவூரார் ஆம்பிர நதியை அடைந்த போது அவரைச் சூழ்ந்து வளைந்துப் பிடிக்க முயன்றனர். நடுவில் அகப்பட்டுக் கொண்ட கருவூரார் அவர்களுக்குத் தெரியாமல் வெளியேறி ஆநிலை அண்ணல் கோவிலை நோக்கி வந்தனர். அதுகண்ட மறையவர், 'கருவூரானை விடாதே, பிடி" என்று ஓடி வந்தனர். கருவூராரும் வேகமாகச் சென்று ஆநிலையப்பர் கோவிலுட் புகுந்து சிவலிங்கத்தைத் தழுவிக் கொள்ள ஒரு சோதி தோன்றியது. கருவூரார் அச்சோதியில் கலந்தார். அவரைப் பிடிக்க வந்த மறையவர் உண்மை நிலை உணர்ந்து மனம் கலங்கினர். கண்ணீர் வடித்து அழுதனர். மாதவரை மதியாமல் தீங்கிழைத்தோம். "ஞான வள்ளலே! எங்கள் பிழையைப் பொருத்தருள வேண்டும்" என வேண்டினர். அப்பொழுது "மறையோர்களே! கருவூர்த் தேவர் குலத்தில் உதித்த காரணத்தால் நீங்கள் செய்த குற்றங்கள்

மன்னிக்கப்பட்டன'' என்று அசிரீரி எழுந்தது. அதுகேட்ட மறையவர்கள் ஒருவாறு மனம் தேறித் தத்தம் இல்லம் அடைந்து வேதகாம விதிப்படி வேள்வி புரிந்து வாழ்ந்திருந்தனர். *

உ

## திருஞான சம்பந்தர் தேவாரம்

திருஞான சம்பந்தர் சைவசமய ஆச்சாரியார் நால்வருள் ஒருவர். தமிழ்நாட்டில் சமண சமயம் மேலோங்கிச் சைவ சமயம் ஒளிகுன்றி இருந்த காலத்தில் அது புத்தொளி பெறச் சிவபெருமான் ஆணையால் சீர்காழியில் சிவபாத இருதயரும் பகவதி அம்மையாரும் செய்த தவப்பயனாக அவதரித்து மூன்றாவது ஆண்டில் உமாதேவியாரால் ஞானப்பால் ஊட்டப் பெற்றுத் தமிழ் மறையின் முதலாகிய "தோடுடைய செவியன்" என்று தொடங்கிச் சைவம் தழைக்கத் தமிழகமும் பிறவுலகும் வாழப் பதிகம் பாடிஅருளிய பெருந்தகைஆவார். சிவத்தலங்கள் தோறும் சென்று திருப்பதிகம் பாடி இறை வழிபாடு செய்து வந்த இவர் கொங்கு நாடு புகுந்தார். கொங்கு நாட்டுப் பாடல் பெற்ற தலங்கள் ஏழில் ஒன்றாகிய கொடிமாடச் செங்குன்றூர் என்னும் திருச்செங்கோட்டுத் தலத்தை அடைந்து இறைவனை வணங்கிப் பதிகம் பாடினார். அவ்வூரில் சுர நோய் மக்களைத் துன்புறுத்துவது கண்டு அந்நோய் நீங்கும்படி பதிகம் பாடினார். சிலநாள் அங்குத் தங்கியிருந்து பின்திருப் பாண்டிகொடுமுடு, வெஞ்சமாக் கடல் ஆகிய தலங்களை வணங்கிச் செல்வக் கருவூர்த் திருஆநிலைக் கோயிலை அடைந்து பசுபதியை வணங்கி அருள் பெற்றுத் திருப்பதிகம் பாடியருளினார். அப்பதிகம் வருமாறு :—

உ

திருச்சிற்றம்பலம்

பண் : இந்தளம்

தொண்டு எலாம் மலர் தூவி ஏத்தநஞ்சு
உண்ட ஆருயிர் ஆய தன்மையர்
கண்ட னார்கரு வூருள் ஆநிலை
அண்ட னார்அருள் ஈயும் அன்பரே

பொருள் : கருவூர்த் திரு ஆநிலைக் கோயிலில் எழுந்தருளிய தேவ தேவராகிய பசுபதிப் பெருமான் பாற்கடலில் தோன்றிய நஞ்சினை உலகம் உய்யும் பொருட்டு உண்டு கறுத்த கண்டத்தை உடையவரும், அரிய உயிர்களோடு கலந்து நின்றருளிய தன்மை உடையவரும், தொண்டர்கள் எல்லாம் தமது திருவடிக்கண் மலர் சொரிந்து துதிக்க அவர்கட்குத் திருவருள் பாலிக்கும் அன்புடையவரும் ஆவார். என்றவாறு.

விளக்கம் : அண்டர் - தேவர் ; பசுபதிப் பெருமான் மகாதேவர் ஆகலின் தேவதேவர் என உரை எழுதப்பட்டது. சிவபெருமான் உயிர்களோடு ஒன்றாகவும் வேறாகவும் உடனாகவும் இருப்பவர். ஆதலின் 'உயிர் ஆய தன்மையர்'

---

கருவூர்ச் சித்தர்*

கருவூர்த் தேவரேயன்றி இவ்வூரில் கருவூர்ச் சித்தர் எனப் பொற்கொல்லர் குலத்தில் உதித்த ஒருவர் இருந்ததாகப் பெரியோர் கூறுவர். அவர் இல்வாழ்க்கையிலேயே வாழ்ந்திருந்து தவமியற்றினர் எனவும் கருவூரார் பூசா விதி என்ற நூல் அவரால் செய்யப்பட்டது எனவும் ஆநிலையப்பர் ஆலயத்துள் இருப்பது அவருடைய சமாதி எனவும் கூறுவர். இது ஆராய்தற்கு உரியதாகும்.

என எழுதப்பட்டது. ஞான சம்பந்தப் பெருமானுக்கு அதுவே கருத்து என் பதனை

"ஈருய் முதல் ஒன்ருய் இரு
பெண் ஆண் குணம் மூன்ருய்
மாரு மறை நான்காய் வரு
பூதம் அவை ஐந்தாய்
ஆறு ஆர் சுவை ஏழு ஓசை
யொடு எட்டுத்திசை தான் ஆய்
வேறுஆய் உடன் ஆனுன்
இடம் வீழி மிழலையே"

—என்ற அவருடைய தேவாரத்தால் அறியலாம்.

நீதி யார்நினைந்து ஆய நான் மறை
ஓதி யாரொடும் கூட லார் குழைக்
காதி னுர்கரு வூருள் ஆநிலை
ஆதி யார்அடி யார்தம் அன்பரே. (2)

பொருள்: நீதியை உடையவரும் தோடுடைய திருச் செவியரும் யாவர்க்கும் ஆதியானவரும் ஆகிய பசுபதிப் பெருமான் தமது சங்கற் பத்தால் தோன்றிய நான்கு வேதங்களையும் முறையோடு ஓதுகின்றவர் பாலும் சேராது அன்பால் தமை நினைக்கும் அடியாருடனே அன்பு செய்து கூடி இருப்பார். (எ-று.)

விளக்கம்: தாம் திருவாய் மலர்ந்த வேதத்தை ஓதுபவரைக் காட்டிலும் தம் பால் அன்பு செய்யும் அடியவர் பாலே அன்புமிக்குடையவராக இருப்பர்.

விண்உ லாம்மதி சூடி வேதமே
பண்உ ளார்பரம் ஆடிய பண்பினர்
கண்உ ளார்கரு வூருள் ஆநிலை
அண்ண லார்அடி யார்க்கு நல்லரே. (3)

பொ: கருவூருள் திருஆநிலை என்னும் தலத்தில் வீற்றிருக்கின்ற பெருமை பொருந்திய பசுபதிப் பெருமான் வானத்தில் சஞ்சரிக்கின்ற சந்திரனைச் சடையில் தரித்தவரும் சாமகானமாகிய இசையை உடையவரும் மேலான குணங்களை உடையவரும் கண்களில் ஒளியாய் இருப்பவரும் அடியார்க்கு நன்மை புரிப வரும் ஆவர்.

விளக்கம்: தக்கன் சாபத்தால் சந்திரன் தன் கலைகளை இழந்து ஒரு கலையோடு சிவபெருமானைச் சரணடைந்தான். சிவபெருமான் கருணைகூர்ந்து சந்திரனைத் தலையில் தரித்துக் கொண்டு சாபத்தால் தேய்ந்த கலைகளை வளரும் படியும் அருள் புரிந்தார். இதுவே சந்திரனைத் தரித்த வரலாறு ஆகும். இனி மேலான குணங்களாவது: தன் வயத்தனுதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களில் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை என்பவைகளாம்.

முடியர் மும்மத யானை ஈருரி
பொடியர் பூங்கணை வேளைச் செற்றவர்
கடியுள் ஆர்கரு வூருள் ஆநிலை
அடிகள் யாவையும் ஆய ஈசரே. (4)

பொருள்: சோலையின் நடுவுள் அமைந்த கருவூர்த் திருஆநிலை கோவிலில் வீற்றிருக்கும் சுவாமிகளாகிப் பசுபதிப் பெருமான் சடைமுடியை உடையவரும் தாருகா வனத்து இருடியர் ஆபிசார வேள்வியில் தோற்றுவித்துத் தன் மேல் ஏவிய மும்மதம் பொருந்திய யானையின் தோலை உரித்துப் பச்சையாகப் போர்த்தவரும், வெண்ணீற்றை உடையவரும், மலர் அம்புகளை உடைய மன்மதனை அழித்தவரும் எல்லாப் பொருளுமாக இருப்பவரும் ஆவர்.

விளக்கம்: தாருகாவனத்து இருடியர் வேள்வியே முத்தி அளிக்க வல்லது எனக்கூறி இறைவனை மதியாது இருந்தனர். சிவபெருமான் பிட்சாடன உருவெடுத்துத் திருமால் மோகினியாக உடன் வரத் தாருகா வனம் சென்று

முனிவர்கள் நிலைமையும் அவர் தம் மனைவியர் மனோநிலையும் கெடுமாறு செய்தார். அதனால் சினங்கொண்ட இருடிகள் ஆபிசார யாகம் புரிந்து யானையை உண்டாக்கி இறைவனைக் கொல்ல ஏவினர். இறைவன் அதன் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டார். இதுவே யானை உரி போர்த்த வரலாருகும். இனி மன்மதனை அழித்த வரலாறு வருமாறு :—

சிவபெருமானை மதியாத தக்கன் பெரு வேள்வி ஒன்று செய்தான். தேவர்கள் தக்கன் அழைப்பிற்கு இணங்கி அவ் வேள்விக்குச் சென்றிருந்தனர். திருமால் அவிர்ப்பாகம் கொள்ள உடன்பட்டார். தக்கன் பிரமாவின் மகன். அந்தத் தக்கன் மகள் தாட்சாயினியைச் சிவபெருமான் மணம் புரிந்து கொண்டார். தன் மருமகனை வணங்க அவன் இசையாமையால் தன் பாட்டனுராகிய திருமாலுக்கு அவிர்ப்பாகம் கொடுக்க முடிவு செய்தான். சிவபெருமான் கோபித்து வீரபத்திரை ஏவ அவர் தக்கன் வேள்வியை அழித்தார். தேவர்கள் ஓடி ஒளிந்தனர். அந்தப் பாவத்தினுல் சூரபத்மனுல் திருமால் முதலிய எல்லாத் தேவர்களும் துன்பப்பட்டுக் கைலாய பதியின் இடத்தில் முறையிட்டனர். சிவபெருமான் இரக்கம் கொண்டு "குமரக் கடவுள் அவதரிப்பார். அவரால் உங்கள் துயர் தீரும்" என்று உரைத்தருளினர்.


சிவபெருமான் அப்பொழுது சனகாதியருக்குக் கல்லாலின் கீழ்க்குருவாக இருந்து அறம் உரைத்துக் கொண்டிருந்தார். தாட்சாயனி மலையரையனுக்கு மகளாய் அவதரித்து வளர்ந்து கொண்டிருந்தாள். இறைவனுக்குக் காம இச்சை உண்டாக்கினுல் விரைவில் திருமணம் செய்து குமரக் கடவுளைத் தருவார் என அவசரப்பட்டு மன்மதனை அழைத்து, "இறைவனுக்குக் காம இச்சையை உண்டாக்கி வருக" என ஏவினர் தேவர்கள். மன்மதன் மறுத்தான். முடிவில் தேவர்கள் விருப்பப்படி சென்று இறைவன் மீது மலர் அம்புகளை எய்தான். யோக நிலையில் இருந்த இறைவன் கண்திறந்து மன்மதனை நெற்றிக் கண்ணுல் நோக்க அவன் வெந்து சாம்பரானுன். பிறகு இரதி தேவியின் வேண்டுகோளால் அவளுக்கு மட்டும் உருவம் தெரியும்படியாக எழுப்பித் தந்தார் என்பதாம்.

காணப்படும் பொருள்கள் எல்லாம் அழியும் தன்மையுடையன; ஆனுல் இறைவன் அழியாத் தன்மையன். எனினும் எல்லாப் பொருள்களுடும் கலந்தும் தனித்துமிருப்பவன்; ஆகலின்

பங்க யம்மலர்ப் பாதர் பாதியோர்
மங்கை யர்மணி நீல கண்டர்வான்
கங்கை யர்கரு வூருள் ஆநிலை
அங்கை ஆடுஅர வத்துஎம் அண்ணலே. (5)


பொ : கருவூர்த் திருவாநிலைத் திருப்பதியில் வீற்றிருப்பவரும், படம் எடுத்து ஆடும் பாம்பைத் திருக்கரத்தில் கொண்டிருப்பவரும் ஆகிய எம்முடைய பெருமை வாய்ந்த பசுபதிப் பெருமான் செந்தாமரை மலர் போன்ற திருவடிகளை உடையவரும் பாதி உடம்பில் உமாதேவியரைக் கொண்டுருப்பவரும், நீலமணி போலும் கழுத்தினை உடையவரும் ஆகாய கங்கையைத் தலையில் தரித்து இருப்பவருமாவார்.

விளக்கம் : எல்லா உயிர்களுக்கும் மேலான பேரின்ப நிலையமாகிய திருவடிகளுக்கு யாவரும் விரும்புவதும், பூக்களுள் மேலானதும் ஆகிய தாமரைப் பூவினை உவமை கூறினர். அத்திருவடிப் பேறு ஒன்றலா ஒன்ருகிய அத்துவிதம் ஆகலின் அதனைக் குறிக்க ஒருவரல்லா ஒருவராகிய அம்மையப்பரைக் குறித்தார். தம்மை நினைத்துருகும் ஆன்மாக்கள் செய்யும் இருவினைப் பயன்களைத் தாமே ஏற்றுக் கொள்வார் என்பதும்



நடராசப் பெருமானும் சிவகாம சுந்தரி அம்மனும்

— டிலக்ஸ் போட்டோ சர்வீஸ்



போகசக்தி அம்மன்

— டிலக்ஸ் போட்டோ சர்வீஸ்

அவ்வினைப் பயன் இறைவனிடம் வலி யிழந்து கிடக்கும் என்பதும் உணர்த்த நஞ்சுண்டு கறுத்த கண்டத்தினைக் குறித் தார். ஆகாய கங்கையானது பகீரதன் விருப்பத்துக்கு இணங்க ஆயிரமுகத்தி னோடும் உமையவளை அச்சுறுத்த வீறு கொண்டு தம் சடையிற் பாய அதன் வலியடங்கச் செய்த தன்மை, தம்மை அடைந்த ஆன்மாக்களின் ஆணவ வலி தொலைக்கும் செயலைக் குறிப்பதாம். பாம்பைப் பிடித்து ஆட்டும் செயல் மாயையைக் கொண்டு ஆன்மாக்களைப் பிறப்பு இறப்புக்களில் ஆட்டுவித்து இறுதியில் மாயையின் வலி ஒடுக்கி ஆன்மாக்களின் பரிபாகத்தில் வீடருளும் செயல் குறித்தது ஆகும்.

தேவர் திங்களும் பாம்பும் சென்னியில்
மேவர் மும்மதில் எய்த வில்லியர்
காவலர்கரு வூருள் ஆநிலை
மூவர் ஆகிய மொய்ம்பர் அல்லரே. (6)

பொருள்: கருவூர்த் திருவானிலைக் கோயிலில் வீற்றிருக்கும் பசுபதிப் பெரு மான் தேவராகவும் சந்திரனையும் பாம் பையும் தலையில் பொருந்த வைத்தவ ராகவும் திரிபுரம் எரித்த மேரு வில்லை உடையவராகவும் உயிர்களைக்காத்தலில் வல்லவராகவும், படைத்தல், காத்தல், அழித்தல்களைச் செய்யும் மூவராகவும் இருக்கின்ற எல்லாம் வல்லவர் ஆவர்.

விளக்கம்: இறைவன் கோணிய பிறை யைச் சூடிய கருத்தாவது மலத்தால் முடங்கிக் கிடக்கும் ஆன்மாக்களின் கறை போக்கி நேர்மை அடைவிப்பது ஆகும். முப்புரம் எரித்தலாவது ஆணவம், மாயை, கன்மங்களாகிய மும்மலம் போக்கும் குறிப்புடையது. மும்மலம் நீங்கிய பிறகு ஆன்மாக்கள் வீடுபெற வேண்டும். ஆகலின் மும்மலம் போக்கும் செயலை இறைவன் செய் கின்றான். இனி மூவராகிய தன்மை யாவது நவந்தரு பேதங்களுள் இறுதியில் நின்ற உருத்திரன், திருமால், பிரமன் ஆகிய மூவராய் நிற்கும் நிலை குறித்த தன்றித் தவம் புரிந்து அந்தந்தப் பதங் களைப் பெற்றுப் படைத்தல் முதலியன செய்யும் மூவரை அன்று. அவர்கள் பக்குவம் அடைந்த ஆன்மாக்கள் ஆவார். மேலும் அவர் பலராவர். இதனைத் திருநாவுக்கரசு நாயனார் "நூறுகோடி பிரமர்கள் நுங்கினார் ஆறு கோடி நாரணர் அங்ஙனே" எனத் தேவாரத்துள் குறித்துள்ளார். அவர் களுள் உருத்திரபதம் பெற்றவர் பிறவா நெறி பெற்றவர்.

பண்ணி னார்படி ஏற்றர் நீற்றர்மெய்ப்
பெண்ணி னார்பிறை தாங்கும் நெற்றியர்
கண்ணி னார்கரு வூருள் ஆநிலை
நண்ணி னார்நமை ஆளும் நாதரே. (7)

பொ-ள்: இசை வடிவு ஆனவரும் தம் கீழ்ப்படிகின்ற இடபவாகனத்தை உடையவரும் உண்மையை விளக்கு கின்ற திருநீறு பூசியவரும் உடம்பில் ஒரு கூறு பெண்ணாக உடையவரும் பிறைச் சந்திரனைத் தாங்கியவரும் நெற்றியில் கண் உடையவரும் கருவூர்த் திருஆநிலைக் கோவிலில் வீற்றிருப்பவரும் ஆகிய பசுபதிப் பெருமான் ஆன்மகோடி களாகிய நம்மை ஆட்கொள்ளும் தலைவ ராவார்.

வி-ம்: இறைவன் ஏழிசையாய் இசைப்பயனாய் உள்ளவர் ஆகலின் பண்ணினார் என்பதற்கு இசை வடிவு ஆனவர் எனவும் ஆணவ மலம் பக்கு வம் அடைந்த ஆன்மாக்கள் இறைவன் திருவருளிலே தோய்வராகலின் அப் பக்குவம் பெற்ற நந்தியைப் படி ஏற்றர் எனவும், "பொய் மாற்றும் திருநீறு" என்பது சேக்கிழார் வாக்கு ஆகலின் மெய்ந்நீற்றர் என்பதற்கு உண்மையை விளக்குகின்ற நீறு எனவும், பசுகளுக்கு பதி ஆகலின் நம்மை ஆட்கொள்ளும் நாதர் எனவும் பொருள் கூறப்பட்டது.

கடுத்த வாள்அரக் கன்க யிலையை
எடுத்த வன்தலை தோளும் தாளினால்

அடர்த்த வன்கரு வூருள் ஆநிலை
கொடுத்த வன்அருள் கூத்தன்
நல்லனே. (8)

பொ-ள் : சினம்மிக்க வாள்படையை உயையவனுய்க் கயிலாய மலையைப் பேர்த்து எடுக்கத் தொடங்கிய அரக்கர் தலைவனுன இராவணனது பத்துத் தலைகளையும் இருபது தோள்களையும் தம் திருவடிகளால் நெறித்தவனும் பின் அவன் சாமகானம் பாட மகிழ்ந்து அவனுக்கு அருள் கொடுத்தவனும் கருவூர்த் திருஆநிலைத் தலத்து எழுந்தருளி இருக்கும் ஆநந்தக் கூத்தனும் ஆகிய பசுபதிப் பெருமான் எல்லா உயிர்களுக்கும் நன்மையே செய்பவனுவான்.

வி-ம் : புட்பக விமானத்தில் ஆகாய வழியே சென்ற இராவணனைக் கயிலாயமலை தடை செய்தது ஆகலின் அது சிவபெருமான் வீற்றிருக்கும் இடம் என்பதனையும் மதியாது தன் தோள் வலியால் கயிலாயமலையைப் புரட்டிவிட எண்ணி மலையை இருபது கைகளாலும் பிடித்து அசைத்தான். உமாதேவி அஞ்சினுள். சிவபெருமான் கால் பெருவிரலால் இராவணனை அழுத்த, அது தாங்கமாட்டாதவனுய்ப் பன்னெடுங்காலம் அழுதான். அது கண்ட வாகீச முனிவர் இரக்கம் கொண்டு இராவணனைச் சாமகானம் பாடும்படி செய்தார். இராவணன் சாமகானம் பாடக் கேட்ட இறைவன் மகிழ்ந்து மந்திர வாளும் நீண்ட வாழ்நாளும் அருள் செய்தார் என்பது புராண வரலாறு.

உழுது மாநிலத்து ஏனம் ஆகிமால்
தொழுது மாமல ரோனும் காண்கிலார்
கழுதி னுன்கரு வூருள் ஆநிலை
முழுதும் ஆகிய மூர்த்தி பாதமே. (9)

பொருள் : பேய்க் கணங்களை உடையவனும் கருவூர்த் திருஆநிலைக் கோவிலில் வீற்றிருப்பவனும் அனைத்தும் ஆனவனும் ஆகிய பசுபதிப் பெருமானுடைய அடிமுடிகளைக் காணமுயன்று திருமால் பன்றி உரு எடுத்துப் பெரிய நிலத்தைச் தோண்டிச் சென்றும் தொழுதும் காண்கிலான். தாமரை மலரில் இருக்கும் நான்முகன் அன்னப் பறவை உரு எடுத்து மேல் பறந்து சென்றும் காண்கிலான்.

விளக்கம் : திருமாலும் பிரமனும் சிவபெருமானுடைய அடிமுடி தேடி அறிய மாட்டாமையைத் திருவாசகம் "பிரமன் அரியென்ற இருவரும் தம் பேதமையால் பரமம் யாம் பரமம் என்ற அவர்கள் பதைப்பு ஒடுங்க அரனுர் அழலுறுவாய் ஆங்கே அளவிறந்து பரமாகி நின்றவா தோணேக்கம் ஆடாமோ", என்று குறிப்பிடுகின்றது. அன்னப் பறவையாகி மேல் பறந்து சென்றமை எச்சத்தால் பெறப்பட்டன. இச்செய்தி நிகழ்ந்த இடம் திருவண்ணுமலையிலாகும்.

புத்தர் புன்சமண் ஆதர் பொய்யுரைப்
பித்தர் பேசிய பேச்சை விட்டுமெய்ப்
பத்தர் சேர்கரு வூருள் ஆநிலை
அத்தர் பாதம் அடைந்து வாழ்மினே.
(10)

பொருள் : புத்தரும் சிறுமையுடைய சமணரும் ஆகிய அறிவில்லாதவராய்ப் பொய்மொழியே புகலும் பைத்தியக்காரர்கள் பேசுகின்ற பொருளற்ற பேச்சைக் கேளாமல் உண்மையான அன்பர்கள் அடைந்து வழிபடும் கருவூர்த் திருஆநிலைப் பசுபதிப் பெருமான் திருவடிகளை அடைந்து நல்வாழ்வு பெறுவீர்களாக.

விளக்கம் : புத்தர்கள் ஆன்மா என ஒன்று இல்லை எனவும், உலகம் கணப்பொழுதில் தோன்றி நின்று அழியும் எனவும், நான்கு பூதச் சேர்கையால் உடம்புக்கு உணர்வு உண்டாகும் எனவும் கூறுவர். சமணர் படைத்தல், காத்தல், அழித்தல், வீடு அடைதல் ஆகிய நான்கு செயல்களையும் நான்கு பூத அணுக்களே செய்யும். இவற்றிற்கு

ஒரு கர்த்தா இல்லை எனவும் உணவு, உறக்கம், நீராடல், உடல் ஆகியவற்றைத் துறந்து தலைமயிரைத் தாமே பறித்துக் கொண்டு உடம்பை வருத்துவதைத் தவம் ஆகும் எனவும் கூறுவர். இவர் இருவரும் கடவுளை ஒப்புக்கொள்ளாமல் ஆன்ம வர்க்கத்தைச் சேர்ந்த புத்தரையும் அருகரையும் வழிபடுவர் ஆகலின் அவருரை பொய்யுரையாம் எனவும் அதனை விடுத்து முழுமுதற் பொருளாகிய சிவநெறியை அடைந்து உய்வீர்களாக எனவும் கூறுவர் ஆசிரியர்.

கந்தம் ஆர்பொழில் காழி ஞானசம்
பந்தன் சேர்கரு வூருள் ஆநிலை
எந்தை யைச்சொன்ன பத்தும் வல்லவர்
சிந்தை யில்துயர் ஆய தீர்வரே. (11)

பொ-ள்: நறுமணம் கமழும் சோலை சூழ்ந்த சீர்காழிப்பதியில் தோன்றிய ஞானசம்பந்தனாகிய யான் கருவூர் ஆநிலைப்பதியை அடைந்து எம் தந்தையாகிய பசுபதிப் பெருமான் மீது பாடிய பத்துப் பாடல்களையும் அன்போடு ஓதவல்லவர்களாகிய அடியவர்கள் தம் மனத்திலுள்ள துயரங்கள் எல்லாம் நீங்கப்பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வு பெறுவார்கள்.

வி-ம்: ஞானசம்பந்தப் பெருமான் தம்மைப் படர்க்கையில் வைத்துப் பாடுவதே மரபு. ஒவ்வொரு பதிக இறுதியாகிய திருக்கடைக் காப்பிலும் அப்பதிகம் ஓதுவார் அடைகின்ற பயனை ஒரு தலையாகக் கூறியே செல்வார். இவ்வாறு தன்மையால் கூற வேண்டிய ஒன்றைப் படர்க்கையால் கூறுவது இலக்கண மரபேயாகும். இது தொல்காப்பியம் எச்சவியலில், "தன்னைப் பிறன்போற் கூறுங் குறிப்பின்" என்பதனுல் பெறப்படும். கருவூர்த் திரு ஆநிலைத் தேவாரப் பதிகக் கடைக் காப்போடு பதினொரு பாடல்களுள் ஒன்று முதல் ஏழும் பத்தாம் பாடலும் இறைவனைத் தன்மையர், கண்டனுர் அண்டனுர் அன்பர் என்பன போலப் பன்மை விகுதி கொடுத்துக் கூறியும், எட்டு, ஒன்பது, பதினொன்று ஆகிய பாடல்களில் ஒருமை விகுதியால் கூறியும் செல்வதற்கு ஒரு காரணம் வேண்டும். திருவாசகம் "ஏகன் அநேகன் இறைவன்" என்ற தத்துவம் இப்பதிகத்துள் வைத்து விளக்கப்படுகின்றதை ஓர்வார் உணர்வார்.

இனித் திருக்கடைக் காப்பில் இறைவனை எந்தை எனக் கூறியது அத்துவித நிலையைக் குறித்ததாகும். அது 'எம்' எனவும் 'தந்தை' எனவும் உள்ள இரண்டு சொற்கள் பிரிவில் ஒட்டாகப் புணர்ந்தவையாகும். அவைகளுள் 'எம்' என்னும் பன்மைச் சொல் ஆன்ம வர்க்கம் பலவாம் என்பதனையும் தந்தை என்னும் ஒருமை முறைப் பெயர் இறைவன் ஒருவனே என்பதனையும் உணர்த்தி நின்றன. அவ்விரண்டு சொல்லும் மரூஉ மொழியாய்ப் புணர்ந்தவேனும் சம்பந்தப் பொருள் வேற்றுமைத் தொகையாகவே நின்றன. ஆகவே இப்பதிகம் இறைவன் ஏகனாய் வேருகவும் அநேகனாய் ஒன்ருகவும் ஒன்றலா ஒன்ருய் உடனாகவும் நின்ற நிலையினை நன்கு உணர்த்துவதற்காகவே எட்டுப் பாடல்கள் பன்மையாகவும் இரண்டு பாடல்கள் ஒருமையாகவும், பதினொராம் பாடல் ஒன்றும் வேறும் அல்லாத உடனாய்க் கலந்து நிற்கும் அத்துவிதத்தன்மையை உடம்போடு புணர்த்துக் கூறியவாருகும். இனிப் பன்மை விகுதி கொடுத்துக்கூறியது "ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும் ஒருமைக்கல்லது எண்ணுமுறை நில்லாது" என்னும் எச்சவியல் சூத்திர விதிப்படி உயர்த்தற்கண் வந்த பன்மை விகுதி எனவும் கொள்ளலாம். இனி ஞானசம்பந்தப் பெருமான் நிலை எம்மனோர்க்கு எட்டாதது ஒன்று ஆகலின் மேலும் சொல்லாது நிறுத்துதல் நன்மையேயாம்.

## கருவூர்த் திருப்புகழ் : அருணகிரிநாதர்

திருப்புகழ் ஆசிரியர் "வாக்குக்கு அருணகிரி" என எண்டிசை போற்றும் தண்டமிழ்க் கவிஞர். இவர் விண்ணவர் போற்றும் வண்ணக் களஞ்சியம்; முருகப் பெருமான் திருவருளாகரம் என்பதைத் தமிழ் கற்றோர் நன்கு அறிவர். உண்ணாமுலை அருள் அண்ணாமலைப் பதிப் பண்ணிசை வேள்குடி நண்ணித் தோன்றி நம்மை ஆட்கொள்ளும் செம்மலாவார். நம் கருவூர் ஆறுமுகப் பெருமான்மீது சீரேர் திருப்புகழ் ஓரேழ் அருட்புகழ் நீடிசை வண்ணம் பாடிய வண்ணம் அன்பர்கள் அறிவர்; அவை வருமாறு :—

மதியால்வித் தகனாகி
  மனதாலுத் தமனாகிப்
பதிவாகிச் சிவஞான
  பரயோகத் தருள்வாயே
நிதியேநித் தியமேஎன்
  நினைவேநற் பொருளாவோய்
கதியே செற்பரவேளே
  கருவூரிற் பெருமாளே! (1)

பொழிப்புரை : செல்வமே நிலையான பொருளே! என் மனத்திலிருப்பவனே! பேரின்பப் பொருளானவனே! நான் அடையும் வீடுபேறே! புகழ் பொருந்திய மேலான உபகாரியே! கருவூர் என்னும் தலத்து ஆநிலைக்கோவிலில் வீற்றிருக்கும் பெருமையுடைய ஆறுமுகப்பெருமானே. அறிவினால் ஆற்றலுடையவனாகவும் சித்தத்தால் சத்துவ குணம் உடையனாகவும் சத்தி பதியப்பெற்றுச் சிவஞானமாகிய மேலான யோக நிலையில் நிற்க அருள்புரிவாயாக என்றவாறு.

விளக்கவுரை : அறிவின் மிகுதியே அன்பு மிகுதற்குக் காரணம். ஆகலின் அறிவால் சதுரப்பாடு முதலில் வேண்டுகிறார். மனம் ஒரு பொருளைச் சிந்தித்திருப்பது சித்தம். ஆகலின் அந்தச் சித்தமும் சத்துவ குணத்தோடு கூடிய வழியே உத்தமப் பண்புடையதாக இருக்கும். ஆதலின் சித்தத்தால் சத்துவ குணமுடையவனாக என உரை கூறப்பட்டது. அறிவின் முடிந்த பயனே அன்புடைமை என்பது. "அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின் நோய் தம் நோய் போல் போற்றாக்கடை", என்பதனாலும் சத்துவ குணச் சித்தமே இறை அருள் பெறும் வழி என்பது "அளப்பரும் கரணங்கள் நான்கும் சிந்தையேயாக" என்னும் சேக்கிழார் வாக்கானும் உணரப்பட்டனவாம். நற்பொருள் என்பதில் "நன்று பெரிதாகும்" என்னும் தொல்காப்பிய விதிப்படி பெரிய இன்பப் பொருள் என உரை எழுதப்பட்டது.

சஞ்சர சரிதபர நாட்டார்கள் மந்திரி குமரர் படையாட்சிகள்
  சங்கட மகிபர் தொழ ஆக்கினை —முடிசூடித்
தண்டிகை களிறு பரிமேற்றனி வெண்குடை நிழலில் உலவாக் கன
  சம்பரம விபவ சவுபாக்கியம் —உடையோராய்க்

குஞ்சமும் விசிற இறுமாப்பொடு பஞ்சணை மிசையிலிசையாத்திரள்
  கொம்புகள் குழல்கள் வெகு வாத்தியம் —இயல்கீதம்
கொங்கணி மகளிர் பெரு நாட்டியம் நன்றென மனதுமகிழ் பார்த்திபர்
  கொண்டு அயன் எழுதும் யம கோட்டியை —உணராரே

பஞ்சவர் கொடிய வினை நூற்றுவர் வென்றிட சகுனி கவறுற் பொருள்
  பங்குடை அவனிபதி தோற்றிட —அயலே போய்
பண்டையில் விதியை நினையார் பனிரண்டுடைவருட முறையாப் பல
  பண்புடன் மறைவின் முயையாற்றிரு —அருளாலே

வஞ்சனை நழுவி நிரை மீட்சியில் முந்துதம் உடைய மனைவாழ்க்கையின்
வந்துபின் உரிமையது கேட்டிட —இசையா [?] நாள்
மண்கொள விசையன் விடுதேர்ப்பரி உந்தினன் மருக வயலூர்க்கு
வஞ்சியில் அமரர் சிறைமீட்டருள் —பெருமாளே.

பொ-ள் : பாண்டவர் ஐவரைக் கொடுஞ்செயலையுடைய நூற்றுவர் துரியோதனாதியார் பக்கமாகச் சகுனி நின்று சூதாடு கருவியால் வெற்றி கொள்ள நாடு முதலிய பாகப்பொருள்களை நாட்டுத் தலைவனாகிய தருமன் தோற்று வேற்றிடமாகிய வனம் அடைந்து முன்னுள்ள விதிப்பயனை நினைந்து பன்னிரண்டு ஆண்டு முறைப்படி காட்டிலும் ஓராண்டு நாட்டினுள் மறைந்து இருந்தும் துரியோதனன் பசுக்களைக் கவர்ந்து சென்றபோது திருவருளால் அருச்சுனனிடம் தோல்வியடைந்து அவன் வஞ்சகச் செயல் விலகிட. உண்மை விளங்க, முந்திய பேச்சின் முறைப்படி வந்து தம் மனை வாழ்க்கை உரிமையைக் கேட்க, அதனைத் துரியோதனன் மறுத்த காலத்தில், தம் நாட்டை அடைய ஏற்பட்ட பாரதப் போரில் அருச்சுனனுக்குத் தேர் செலுத்திய திருமாலின் மருமகனே! வயலூரில் வீற்றிருக்கும் குகனே! தேவர்களைச் சிறை விடுத்த பெருமை உடையவனே! வஞ்சி வனம் என்னும் கருவூர்த் திருஆநிலைத் திருக்கோவிலில் அறுமுகப் பெருமானே! கொல்லும் செயலும் குணமும் உடையவராயும் நாடு ஆள்கின்ற அமைச்சரையும் இளவரசரையும் படைத்தலைவரையும் கொண்டவராயும் அவதிப்படும் சிற்றரசர் பலரும் வந்து தன்னை வணங்க முடி சூடி ஆணை செலுத்திப் பல்லக்கு, யானை, குதிரைகளின் மீது ஒப்பற்ற வெண் கொற்றக் குடை நிழலில் கெடாத மிகப் பெரிய இடம்ப வாழ்வுச் செல்வம் உடையவரையும் வெண் சாமரம் வீசக் கர்வத்தோடு பஞ்சணையில் இருந்து கொண்டு கூட்டமான ஊது கொம்புகள் புல்லாங் குழல்கள், மிக்க வாத்தியங்கள் சங்கீதங்களையும் வாசனைச் சாந்து அணிகின்ற மகளிர் நடனங்களையும் கண்டும்கேட்டும் சுவைத்து நன்று என மனம் மகிழ்கின்றவராயும் உள்ள அரசர்கள் தங்களைப் படைக்கும் காலத்தில் தம்மைக்கொண்டு இவர் தலையில் பிரமன் எழுதியபடி இவரைக் கொண்டு செல்ல எமதூதர் வருவாரே என்பதை உணராதவராக இருக்கின்றார்களே!

முகிலள கஞ்சரி யாக்குழை யிகல்வன கண் சிவ வாச்சிவ
முறுவல்மு கங்குறு வேர்ப்பொடி —அநுபோக
முலைபுள கஞ்செய வார்த்தையும் நிலையழியும்படி கூப்பிட
முகுவித பங்கய மாக்கர —நுதல்சேரத்

துயரொடு குஞ்சல பாத்திரம் மெலிய மிகுந்துத ராக்கினி
துவளமு யங்கி விடாய்த்தரி —வையர்தோளின்
துயவலி நின்றன வியாத்தமும் வயலியல் வஞ்சியின் மேற்பயில்
சொருபமு நெஞ்சினிராப் பகல் —மறவேனே !

சகலமயம் பரமேச்சுரன் மகபதி உய்ந்திட வாய்த்தருள்
சரவண சம்பவ தீர்க்க சண் —முகமாகிச்
சருவுக்ரவுஞ்சசி லோச்சய ’முருவறிந்தகை வேற்கொடு
சமரமு கந்தனில் நாட்டிய —மயிலேறி

அகிலமு மஞ்சிய வாக்ரம விகடப யங்கர ராக்கத
அசுரர கங்கெட ஆர்த்திரு —கொடிகூவ
அமரரடங்கலு மாட்கொள அமர்ந்த லங்குடி ஏற்றிட
அமரரை யுஞ்சிறை மீட்டருள் —பெருமாளே.

பொ-ள்: எல்லாப் பொருளுமாய் நின்ற பரமேசுவரன், இந்திரன் முதலிய தேவர்கட்கு அசுரரால் உண்டான துன்பம் நீங்கி உய்யுமாறு வாய்க்கப் பெற்ற தமது கருணையால் சரவணப் பொய்கையில் முடிந்த பொருளான அறுமுகப் பெருமானுகத் தோன்றி எதிர்ப்பட்ட கிரவுஞ்ச அசுரனுகிய மலை பிளக்கும்படி எறிந்த சத்தி என்னும் கைவேலைக் கொண்டு போர்க்களத்தில் நடனமிடும் மயில்மீது ஆரோகணித்துச் சென்று எல்லா உலகமும் அஞ்சும்படி வலிதிற் சுரர் உலகைக் கைக்கொண்டு தொந்தரவால் அச்சம் உண்டாக்கும் இரக்கமற்ற அரக்கர்களின் ஆணவம் அழிந்து ஓடும்படி ஆரவாரித்துக் கோழிக்கொடி கூவப் பகைவராகிய அசுரர் அனைவரும் ஒடுங்கப் பொன்னுலகில் குடியேறும்படி தேவர்களைச் சிறை வீடு செய்த பெருமையுடைய அறுமுகப் பெருமானே! மேகம் போலும் கூந்தல் அவிழவும் குண்டலங்களில் சென்று பாயும் கண்கள் சிவக்கவும் மகிழ்ச்சி தரும் புன்முறுவலோடு முகத்தில் வியர்வை உண்டாகவும் இன்ப நிலையில் கொங்கைகள் சிலிர்க்கவும் சொல் குழறவும் அழைத்து மலரும் பக்குவமுடைய தாமரைப்போது போன்ற கைகள் நெற்றியைத் தடவவும் அசுத்தம் வடியும் சிறுநீர்த் தாரை மெலியவும் உதராக்கினி மிகுந்து மெலிவை உண்டாக்கவும் மாதர் தோள்களைத் தழுவிக் களைத்து அறிவு மயங்குவனவாகிய செயலில் இருந்து வேறு பிரிந்து மருதவனம் வாய்ந்த வஞ்சி வனக் கருவூர் ஆநிலையில் வீற்றிருக்கும் உமது ஞான வடிவினை மறவாது கைக்கொள்வேன். எ-று,

இளநீர்க் குவட்டுமுலை அமுதத் தடத்தை கனி
இரதக் குடத்தை எனும் —மரபோடே
இருகைக் கடத்து இடைதுவளக் குழல்சரிய
இதழ்சர்க் கரைப் பழமொ —டுறழ் ஊறல்

முளரிப்பு வொத்த முகம் முகம்வைத் தருத்தி நல
முதிரத்து வற்ப அல்குல் —மிசை மூழ்கி
மொழிதத்தை ஒப்பகடை விழிகட்சி வப்பமளி
முழுகிச்சு கிக்கும்வினை அற ஆளாய்

நளினப்ப தக்கழலும் ஒளிர் செச்சை பொற்புய மென்
நயனத்தில் உற்றுநடம் —இடும் வேலா
நரனுக் கமைத்தகொடி இரதச் சுதக் களவன்
நரைபுட்ப நற்றுளவன் —மருகோனே

களபத்த னத்திசுக சரசக்கு றத்திமுக
கமலப்பு யத்துவளி —மணவாளா
கடலைக்கு வட்டவுனை இரணப்படுத்தி உயர்
கருவைப்ப திக்குளுயர் —பெருமாளே. (4)

பொருள்: செந்தாமரை மலர் போன்ற திருவடிகளும் விளங்குகின்ற வெட்சி மலர் போன்ற அழகிய தோள்களும் என் கண்களுக்குள்ளே தங்கி நடனம் ஆடுகின்ற வேலாயுதப் பெருமாளே! அருச்சுனனுக்கு அமைந்த அனுமக் கொடி கட்டிய தேர் செலுத்தும் பாகனும் வெண்ணெய்க் கள்வனும் தேன் ஒழுகும் துளவம் அணிந்தவனும் ஆகிய திருமாலின் மருகனே! சந்தனக் கலவை பூசிய கொங்கைகளை உடையவளும் இன்ப விளையாடல் செய்பவளும் குறக்குலத்தில் வந்தவளும் தனது செந்தாமரை மலர் போன்ற முகத்தை நின் தோளில் வைத்தவளும் ஆகிய வள்ளியை மணந்த மணவாளனே!

கடலின் நடுவே உள்ள மலையை இட மாகக் கொண்ட அசுரரைக் கொன்று வீழ்த்தி உயர்வுடைய கருவூர் என்னும் தலத்தில் மேன்மை பெற்று விளங்கும் பெருமையையுடைய ஆறுமுகப் பெரு மானே! இளநீரையும் மலைச் சிகரத்தை யும் அமுதத் தடாகத்தையும் கனிச் சுவை பொருந்திய குடத்தையும் உவ மையாக எண்ணத் தக்கதாயும் இரு பக்கமும் விளங்குகின்ற கொங்கைகளின் சுமை தாங்கல் ஆற்ருது இடை துவள வும் கூந்தல் அவிழ்ந்து தொங்கவும் அதரங்களில் ஒழுகும் இரசம் சர்க்கரை எனவும் கனிச்சுவை எனவும் சொல்லத் தக்கதாய்த் தாமரை மலரொத்த முகத் தை முகத்தோடு பொருத்தி அதர நீரைப் பருகச் செய்து பெரிதும் முற்றிய இழிதக வுடைய அல்குலிலே மூழ்கச் செய்து சொல்லப்படும் கிளிபோல் மொழிந்து கடைக் கண்கள் சிவப்புப் படுக்கையில் ஒன்றுபட்டு இன்பமுறும் செயல் நீங்கும் படி அடியேனை ஆட்கொண்டருள் வாயாக.

விளக்கம்: சூதன் என்னற் பாலது சுதன் எனக் குறுக்கல் விகாரம் பெற் றது, வள்ளி என்னற்பாலது வளி என இடைக் குறைந்தது.

தசையா கியகற் றையினல் முடியத்
தலைகால் அளவாய் —பணையாயே
தடுமாறுதல் சற் றெருநா ளுலகில்
தவிரா உடலத் —திணை நாயேன்

பசுபா சமும்விட் டடுவா லறியப்
படுபூ ரணரிட் —களமான
பதிபா வணையுற் றநுபூதியிலப்
படியே அடைவித் —தருள்வாயே.

அசலே சுரர்புத் திரனே குணதிக்
கருணே தயமுத் —தமிழோனே
அகிலா கமவித் தகனே துகளற்
றவர்வாழ் வயலித் —திருநாடா

கசிவார் இதயத் தமிர்தே மதுபக்
கமலா லயன் மைத் —துணவேளே
கருணா கரசற் குருவே குடகிற்
கருவூ ரழகப் —பெருமாளே. (5)

பொ-ள்: கைலைமலைக்கு உரியவரான சிவபெருமான் திருக்குமாரனே! கிழக்குத் திசையில் எழும் உதய சூரியன் போன்ற வனே! முத்தமிழ்க்குக் காவலனே! எல்லா ஆகமங்களையும் ஓதாதுணர்ந்த சதுரப்பாடு உடையவனே! குற்றமற்றவர் வாழ்கின்ற வயலூரைத் தன் பாற் கொண்ட அழகிய நாட்டை உடைய வனே! அன்பால் நினைந்து உருகும் அடியார் உள்ளத்து ஊறுகின்ற அமிழ் தமே! தேன் ஒழுகும் தாமரைப்பூவை இடமாகக் கொண்ட நான்முகனுக்கு மைத்துனன் ஆகிய உபகாரியே! கருணைக்கு இருப்பிடமான மேலான குரு நாதனே! குடபுலம் ஆகிய கருவூர்த் தலத்து எழுந்தருளியுள்ள பெருமையை யுடைய அழகிய ஆறுமுகப் பெருமாளே!

ஊன் தொகுதியினல் மூடப்பட்டதும் தலைமுதல் கால்வரையிலும் அலங்கரித் துக் கொள்ளப்படுவதும் உலகமே மெய் எனத் தடுமாறும் நிலை ஒரு சிறிதும் நீங்காமைக்குக் காரணமாகியதுமான இந்த உடம்பைப்பெற்ற நாயினும் கடை யனாகிய நான் பசு போத பாச போதங் களைவிட்டு மெய்ஞ்ஞானத்தால் அறியப்

படுவதும் எங்கும் நிறைந்ததும் களங்கம் அற்றதுமான பதிபோதம் உற்று அநுபவ நிலையில் உள்ளதை உள்ளபடியே அடையும் அருள் செய்வாயாக.

விளக்கம்: பசு போதம்—சந்தேக விபரீதத்தோடு கூடிய ஆன்ம அறிவு. பாச போதம்—உலகப் பொருள்களைப் பற்றிய அறிவு. பதிபோதம்—இறைவனருளால் பெற்ற மெய்யறிவு.

நித்தப் பிணிகொடு மேவிய காயமி தப்புப் பிருதிவி வாயுவு
தேயுவு நிற்பொற் ககனமொ டாமி பூதக —லவைமேவி
நிற்கப் படும் உல காளவு மாகரி டத்தைக் கொளவுமெ நாடிடு மோடிடு
நெட்டுப் பணிகலை பூணிடு நானெனு —மடவாண்மை

எத்தித் திரியுமி தேதுபொ யாதென உற்றுத் தெளிவுணராது மெய்ஞ் ஞானமொ
டிச்சைப் படஅறி யாதுபொய் மாயையில் —உழல்வேனை
எத்திக் கொடுவினை தாரடி யாரொடு முய்த்திட் டுனதரு ளாலுயர் ஞானமு
திட்டுத் திருவடி யாமுயர் வாழ்வுற —இனிதாள்வாய்

தத்தத் தனதன தானன தானன தித்தித் திமிதிமி தீதக தோதக
டத்தக் குடகுகு தாகுட தீகுட —எனபேரி
சத்தத் தொலிதிசை தாவிட வானவர் திக்குக் கெடவரு சூரர்கள்
தூள்பட சர்ப்பச் சதமுடி நானிட வேலதை —எறிவோனே

வெற்றிப் பொடியணி மேனியர் கோகுல சத்திக்கிட மருள் தாதகி வேணியர்
வெற்புப் புரமது நீறெழ காணியர் —அருள்பாலா
வெற்புத் தடமுலை யாள்வளி நாயகி சித்தத் தமர்கும ராஎன
ஆள் கொள வெற்றிப் புகழ்கரு வூர்தனில் மேவிய —பெருமாளே. (6)

பொருள்: பலவிதமான ஒலிகளோடு பேரிகை வாத்தியம் முழங்கவும் அம் முழக்கம் எட்டு திசைகளிலும் சென்று எட்டவும் தேவர்கள் தப்பியோடும் திசையறியாது மயங்கி வருந்தும்படி தேவலோகதிதின் மேல் படை எடுத்து வந்த அசுரர்கள் தூளாகும்படி நூற்றுக் கணக்கான தலைகளைக்கொண்ட பாம்புக் கூட்டங்கள் தலைகவிழக் காரணமான பேரொளி வீசும் வேற்படையை விடு கின்றவனே! வெற்றியைக் காட்டும் திரு நீறணிந்த திருமேனி உடையவரும் அரசர் குலமகளாக வந்த பராசத்திக்கு இடப்பாகம் அருளியவரும் ஆத்திப் பூ மாலையை அணிந்த சடையை உடைய வரும் மலைபோன்ற வலிமையுடைய திரிபுரத்தைச் சாம்பராகும்படி செய்த வரும் ஆகிய சிவபெருமான் அருளிய திருக்குமாரனே! மலை போன்ற பெருங் கொங்கைகளை உடைய வள்ளி நாயகி யின் மனத்தில் அமர்ந்த குமரக் கடவுளே! எங்களை ஆட்கொள்ளும் பொருட்டு வெற்றிப்புகழ் வாய்ந்த கரு ஊர்த் திருஆநிலைக் கோவிலில் வீற்றிருக் கின்ற பெருமையுடைய ஆறுமுக அண்ணலே!

பசி முதலிய நீங்காத நோய்களுக்கு இருப்பிடமான இந்த உடம்பு, நிலம், நீர், நெருப்பு, காற்று, எல்லாப் பொரு ளுக்கும் இடம் கொடுத்திருக்கின்ற ஆகாயம் ஆகிய பஞ்ச பூதக் கலப்பால் பொருந்தியது. பஞ்சபூத பவுதிகமான இந்த உலகை ஆள்வதோடு நில்லாமல் தேவலோகத்தையும் ஆளவிரும்பி ஓடு கின்ற மனத்துக்கு இருப்பிடமானதும் பெரிய விலை பெற்ற ஆபரணங்களையும் ஆடைகளையும் அணிவதும் அறியாமை யால் நானென நினைந்து உலகை ஏமாற்றுகின்றதும் ஆகிய இந்த உடம்பு நானென்பது பொய்: இது எவ்வாறு வந்தது என்று தெளிவாக உணராமலும் மெய்ஞ்ஞானத்தை விரும்ப அறியாம



பிட்சாடனர்

— டீலக்ஸ் போட்டோ சர்வீஸ்



எறிபத்த நாயனூர்

— டீலக்ஸ் போட்டோ சர்விஸ்

லும் நிலையில்லாத மாயாகாரிய உலகில் கிடந்து வருந்துகின்ற என்னை ஏமாற்றி யாவது கொண்டு சென்று நினது அருள் நிறைந்த அடியார்க்கடியார் கூட்டத்தில் செலுத்தி உனது கருணையினால் ஞான அமுதம் உண்பித்துத் திருவடிப் பெருகிய மேலான வாழ்வை அடைய இனிமையாக வந்து ஆட்கொள்வாயாக.

முட்ட மருட்டி இருகுழை தொட்ட கடைக்க ணியலென
மொட்பை விளைத்து முறையளித் —திடுமாதர்
முத்தமி ரத்னமரகதம் வைத்தவி சித்ர முகபட
மொச்சிய பச்சை அகில் மணத் —தனபாரம்

கட்டியணைத்து நகநுதி பட்ட கழுத்தி லிறுகிய
கைத்தல மெய்த்து வசனமற் —றுயிர் சோரும்
கட்ட முயக்கி னநுபவம் விட்ட விடற்கு நியமித
கற்பனை பட்ச முடனளித் —தருளாதோ

வெட்டிய கட்க முனைகொடு வட்ட குணத்து ரணமுக
விக்ரம வுக்ர வெகுவிதப் —படைவீரா
வெற்றியை உற்ற குறவர்கள் பெற்ற கொடிக்கு மிகமகிழ்
வித்தக சித்த வயலியில் —குமரேசா

கிட்டிய பற்கொ டசுரர்கள் மட்டற வுட்க அடலொடு
கித்தி நடக்கு மலகை சுற் —றிய வேலா
கெட்டவ ருற்ற துணையென நட்டருள் சிட்ட பசுபதி
கெர்ப்ப புரத்தில றுமுகப் —பெருமாளே ! (7)

பொருள் : போர்க்களத்தில் வாள்முனை கொண்டு வெட்டிக் கொல்லும் தன்மையும் பகைப்புலத்துப் பராக்கிரமும் கோபமும் கொண்டு விளங்குவதுமான அனேக விதப் படைகளை உடைய வீரனே! வெற்றியைத் துணைக்கொண்ட குறவர்கள்பெற்ற கொடிபோலும் வள்ளியம்மையிடம் மிக்க மகிழ்ச்சி கொள்கின்ற ஆற்றல் படைத்த ஞான சொருபனே! வயலூரில் வீற்றிருக்கும் குமரேசனே! நெறித்த பற்களையுடைய அசுரர்கள் எல்லையில்லாத அச்சம் கொள்ளும்படி வலிமையுடன் கூடிய நடைபோடும் பேய்கள் சுற்றித் திரிகின்ற வேற்படையை உடையவனே! துறந்தவர் தமக்கு உற்ற துணையாக நட்புக் கொண்டு அருள் செய்யும் மேலான பசுபதிப் பெருமான் வீற்றிருக்கும் கர்ப்பபுரம் என்னும் கருவூர் ஆநிலைக் கோவிலில் வீற்றிருக்கும் ஆறுமுகப் பெருமானே!

பொருந்தி மயக்குவதும் இரண்டு காதணிகளில் சென்று பாயும் இலக்கணம் உடையதுமான கடைக்கண்களால் மேகத்தை உண்டாக்கி முறையோடு தம் நலம் தந்திடுபவரும் முத்து அரதனம், மரகதம் ஆகிய மணிகள் தைத்த முந்தானையை உடைய கொங்கைகளைக் கட்டி அணைத்து நகநுனி பதிந்த கழுத்தொடு இறுகப் பிணைத்த கைகள் சோர்ந்து பேச்சற்று உயிர் சோரும்படிவிட நினைந்து எனை நிறுத்தி அறிவுஉண்டாகக் கருணையுடன் அருள் செய்வாயாக.

# சௌந்தர நாயகி வரலாறு

ஸ்ரீ கல்யாண பசுபதீசுவார் ஆலயத்தின் வடபால், தெற்கு நோக்கிய திருக்கோவிலுள் வீற்றிருக்கும் அம்பிகைக்கு வடிவுடை நாயகி என்பது பெயராகும். சௌந்தர நாயகி அம்மன் மூலத்தான மாகிய அலங்காரவல்லி அம்மனுக்குப் பிறகு உண்டானது என்பதை ஆலய நிர்மாணவிதி உணர்ந்தவர் நன்கு அறிவர். அதாவது சிவாலயம் ஏற்படும் போது கூடவே உண்டான அம்மன் கோவிலில் கிழக்குமுகமாக அமைந்திருக்கும். இடைக் காலத்தில் ஏற்பட்ட அம்மன் கோவில் தெற்கு முகமாக அமைக்கப்பட்டிருக்கும். அவ்விதிப்படி நோக்குங்கால் சௌந்தரநாயகி கோவில் இடைக்காலத்தில் ஏற்பட்டது என்பது பெறப்படுகின்றது. இனி அந்த வரலாற்றைக் காண்போம்.

கருவூர் நகரின் மேற்கில் நான்கு கல் தொலைவில் ஆன்பொருநை நதியின் தென் கரையில் அப்பிபாளையம் என்னும் பெயருடைய பழமையான பெரிய ஊர் ஒன்று உண்டு. அதில் வேட்டுவர் குலத்தினராகிய செல்வர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அந்த ஊர் வேட்டுவர்களுள் தலைமையுடைய அவர், அரசர் அனுமதி பெற்ற கிராம அதிகாரியாகவும் விளங்கினர். நல்ல சிவபக்தியும் நேர்மையும் உடையவர். அவருக்கு வடிவுடையாள் என்ற பெண் மகவு ஒன்று உண்டு. அம்மகவு வளர்ந்து மொழி பயின்று வருங்காலத்திலேயே மற்றப் பெண் குழந்தைகளைப் போல இல்லாமல் நற்குணமுடையதாக விளங்கி வந்தது. எல்லாக் குழந்தைகளிடமும் அன்போடு பழகும். பெரியவர்களிடம் மரியாதையோடு பேசும். வயதில் சிறுமியாக இருந்தும் செய்கையில் அறிவறிந்த பெரியோர் குணமுடையதாக இருக்கும். வயது ஏற ஏறப் பேச்சுக்குறைய ஆரம்பித்தது. மௌனம் வளர ஆரம்பித்தது. தந்தையாரிடம், "நான் பசுபதி ஈசுவரரைக் கும்பிட வேண்டும். பூசை செய்ய வேண்டும்'' என்று பிடிவாதம் செய்தது.

தந்தையாரும் மகளின் விருப்பப்படி கருவூருக்கு அழைத்து வந்து பசுபதிப் பெருமானை வழிபடச் செய்து அழைத்துச் சென்றார். சந்தனக் கட்டையால் சிவலிங்கமும் செய்து தரும்படி செய்தார். நாள்தோறும் காலையில் எழுந்து நித்தியக்கடன் முடித்துக் குளித்து மலர் எடுத்து வந்து தனக்குத் தெரிந்த வகையில் பூசை செய்து வணங்கிய பிறகு தான் உணவு கொள்ளும் பழக்கம் உடையதாக ஒழுகி வந்தது. புலால் உணவு கொள்ளும் குலத்தில் பிறந்தும் அப்பெண் புலாலுணவை மறுத்துச் சைவ உணவே உண்டு வந்தது. நாளடைவில் பெற்றோரையும் புலாலுணவு கொள்ளாதிருக்குமாறு வற்புறுத்தியது. நாள் ஆக ஆகப் பூசை நேரமும் அதிகரித்தது. ஒருவேளை உணவே உண்டு வந்தது. பூசை செய்யும்போது தானாகவே சிரிப்பதும் அழுவதும் செய்யும். பெற்றோர் இதனைப் பிறர் அறியா வண்ணம் செய்து திருமணத்துக்கு ஏற்பாடு செய்தனர். அதனை உணர்ந்த அப்பெண் "நான் பசுபதி ஈஸ்வரரையே கலியாணம் செய்து கொள்வேன்'' என்று அடிக்கடி சொல்லி வந்தது. இந்தச் செய்தி கொஞ்சங் கொஞ்சமாக ஊருக்குள் பரவியது. ஊரார் "வடிவுடையாளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது'' என்று பேச ஆரம்பித்தனர். பெற்றோருக்கு மிகவும் கவலையாக இருந்தது. "இனி பூசை செய்வதை நிறுத்திவிடு'' என்று கூறி அந்தப் பெண் செய்யும் பூசையைத் தடுத்துத் தனி அறையில் பூட்டி வைத்தனர். தனி அறையில் வைக்கப்பட்ட அந்தப் பெண் சிறிதும் வாட்டமின்றிச் சதாகாலம் தியானத்திலேயே இருந்து வந்தது. உணவும் பல நாட்கள் உண்ண மறுத்துவிட்டது.

அவ்வாறு உணவின்றி இருந்தும் வாட்டமும் சோர்வும் சிறிதும் இன்றி இருந்

தது. மருத்துவரையம் மாந்திரீகரையும் அழைத்து வந்து காட்டினர். அவர்களி டம் அப்பெண் தெளிவாகவும் சாந்த மாகவும் "எனக்கு ஒரு நோயும் இல்லை. என்னைத் துன்புறுத்தாமல் சும்மா விட்டு விடுங்கள்", என்று நய மாகப் பேசி அவர்களை நம்புமாறு செய்து அனுப்பி விட்டது. இச்செய்தி யும் பெற்றோர் மனக்குழப்பத்தை அதி கரிக்கச் செய்தது. தந்தை தாயர் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தும் உணவு கொள்ள மறுத்து விட்டது. மேலும் பெற்றோரை நோக்கி, நீங்கள் என் பொருட்டு வருந்த வேண்டாம். பசுபதியைக் கும்பிடுங்கள். அவர் அருள் புரிவார், என்ற வார்த்தைகளையே மீண்டும் மீண்டும் சொல்லி வந்தது. அவர்களும் அவ்வாறே பசுபதியை வேண்டி வந்தனர். பசுபதிப் பெரு மான் பிரசாதத்தை பக்தியோடு ஏற்றுக் கொள்ளும். இவ்வாறு சில நாட்கள் கழிந்தன. பெற்றோர்கள் வேறு சில பெரியவர்களோடு மகளை அணுகி, "நம் குலமுறைப்படி உனக்கு நல்ல மணமகன் தேடித் திருமணம் முடிக்க வேண்டும். நீ அதனை மறுக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும்," என்று கனிவோடு கேட்டனர். அதுகேட்ட அப்பெண் மிகவும் பொறுமையோடு பெற்றோரை நோக்கிப் பின் வருமாறு தன் நிலைமையை எடுத்துரைத்தது.

"என்னுடைய அன்பான தாய் தந்தையர்களே! நீங்கள் என்பொருட்டுக் கவலைப்படுவதைப் பார்த்து மிகவும் கவலைப்படுகின்றேன். உங்கள் மீது கோபமோ உங்களிடம் பிடி வாதமோ நான் செய்பவளல்ல. என் பசி தாகம், நித்திரை ஆகியவை எங்கு போயிற்று என்றே தெரிய வில்லை. தியானம்செய்யும்போது நான் என்னையே மறந்து விடுகிறேன். ஒரு ஒளி தோன்றுகிறது. அதில் மூழ்கி விடு கிறேன். அப்பொழுது உண்டாகும் இன்பநிலையைச் சொல்ல முடியாது. அடிக்கடி பசுபதி ஈசுவரரைக் காண் கிறேன். அவர் முகம் புன்சிரிப்புடனே இருக்கிறது. உங்களுக்கு அவர் கனவில் தோன்றுவார். மேல் நடக்கப் போகும் செய்தியையும் சொல்லுவார். அதன்படி செய்யுங்கள். உங்கள் மனக்கவலை தீர்ந்துவிடும். என்னைத் தியானம் இழுக்கிறது. பசுபதியைக் கும்பிடுங் கள்," என்று கூறிவிட்டு மௌன நிலையில் அமர்ந்து விட்டது.

அன்று இறைவன் பசுபதிநாதன் பெற்றோருடைய கனவில் தோன்றி, "உங்கள் மகள் வடிவுடையாளை நாம் பங்குனி உத்திரத் திருவிழா எழாவது நாளில் திருமணம் செய்து ஏற்றுக் கொள்வோம். அப்பிபாளையம் முழுதும் பூமழை சொரிந்திருக்கும். அன்று அதுவே உங்களுக்குக் காட்டும் அடை யாளமாகும்," என்று கூறி மறைந்தருளி னார். விழித்தெழுந்த பெற்றோர்கள் சில பெரியவர்களிடம் தங்கள் கனவை உரைத்தனர். எல்லோரும் வியப்பும் திகைப்பும் உடையவராய்ப் பங்குனி உத்திரத் திருவிழாவை எதிர்நோக்கி இருந்தனர். ஆறுந்திருவிழா முடிந்தது. ஏழாம் நாள் சூரிய உதயத்தில் தெய்வ மணம் வீசும் பெரிய மலர் மாலை வடி வுடையாள் கழுத்தில் இருந்தது. தெருக்களெல்லாம் நிலம் தெரியாமல் பூக்கள் கிடந்தன. ஊரார் எல்லாம் வடிவுடையாள் வீட்டில் வந்து கூடினர். வடிவுடையாள் பூட்டப்பட்ட அறைக் குள் பூமாலையோடு தியானத்திலிருப் பதைக் கண்டு நிலத்தில் விழுந்து வணங்கினர். தெருவில் கிடக்கும் பூக் களை எடுத்துக் கண்களில் ஒற்றித் தலை யில் சூடிக்கொண்டனர். வடிவுடை யாளைப் பசுபதிநாதர் கோவிலுக்கு ஒரு பல்லக்கில் வைத்துச் சுமந்து சென்ற னர். மேளதாளங்கள் முழங்கின. கோவிலுக்கு முன்பு பல்லக்கை இறக் கினர். மணமாலையோடு உள்சென்ற னள். மூலத்தானத்தில் ஒளிமயமாகச் சென்று மறைந்தருளிச் சௌந்தர

நாயகியாக விளங்குகின்றாள். ஆண்டு தோறும் பங்குனி உத்திரம் ஏழாவது நாளில் பசுபதி நாதர் அப்பிராஜூயம் சென்று திருமணம் முடித்துக் கொண்டு வருவதை அன்பர்கள் அறிந்து தரிசித்து வடிவுடை நாயகி என்னும் சௌந்தர நாயகி சமேத பசுபதியருளைப் பெற்று உய்வார்களாக.

## கருவூர்ப் புராணம்

கருவூர்ப் புராணம் என்ற பெயருடன் கிடைத்துள்ள இத்தலப் புராணத்தை இயற்றினர் யார் என்பதை அறியமுடிய வில்லை. இதனைப் பதிப்பித்த (விரோதி ஆண்டு ஆடி மாதம்) கோயமுத்தூர் வித்துவான் கந்தசாமி முதலியார் என்ப வர் இந்நூலின் பிற்பகுதியில் கருவூர்ப் புராண வசனம் என்ற தலைப்பில் அக் காலத்திலேயே உரைநடைப் பகுதியும் எழுதிப் பதிப்பித்துள்ளார். இந்நூல் 21 சருக்கங்களையும் 1129 பாடல்களையும் கொண்டு விளங்குகிறது. நூலின் இறுதி யில் சிவஞான யோகிகள் திருவடி வாழ்க என்றுகூறப்படுதலின் மாதவச்சிவஞான யோகிகள் பால் அன்பு கொண்டவர் ஆசிரியர் என எண்ண இடம் உண்டு. இவ்வழகிய புராணத்தை இப்பொழுது திரு. கணபதி ஐயா அவர்கள் உரை நடையில் தந்துள்ளார்கள். இந்த நூலின் பாடல் அழகையும் அறிவதற்கு வசதி யாகச் சில பாடல்கள் கீழே தரப் பெற் றுள்ளன.

1. கண்ணுறக் காண்போர் உள்நிகழ் பாவம் கலந்து இறவரந்தர லானும்
புண்ணியச் சாந்தம் கண்டிகை புணையும் புனிதமா முனிவர ரானும்
எண்ணரும் கோடி சித்தர்க ளானும் யாவையும் தருந்திற லானும்
தெண்ணிலா முடியோன் உறைதலினுலும் திப்பிய மலைஎனத் திகழும்
(வராககிரிச் சுருக்கம் [31])

2. செறிகான் அடைந்து சிரம்மார்பு உடைந்து தெளிநீர் குடைந்து சகமேல்
வறிதே திரிந்து தவமே புரிந்து மதிநூல் புரிந்து திரிவீர்
உறுவோர் இறைஞ்சி மலர்தூவ வஞ்சி உறுவார் விரிஞ்சன் நெடுமால்
அறியாத முன்பர் அணிமாலை என்பர் அருள் ஈயும் அன்பர் எனுமே
(திக்குப் பாலகர்—1)

3. முடிசூட்டு செய்ய சடைவீட்டில் வெள்ள முகம் நீட்ட மெள்ள நகுவார்
வடிவு ஏற்ற தையல் ஒரு கூற்றின் நல்ல மகிழ்வாழ்க்கை செய்ய மகிழ்வார்
கொடியேற்று வெள்ளை விடை ஏற்றர் சைவர் குடியேற்றம் உள்ள கருவூர்
அடியார்க்கு நல்லர் அடியேத்த வல்லர் அருள் வாய்ந்த செல்வர் அவரே
(கடவுளருச்சனை 1)

4. வரிஇதழி மௌலி வஞ்சி நாதர் தாயன்
வாள்கொடுதன் மிடறுபோழ்ந்திட விலக்கார்,
கரியவன் செங்கண் இடந்து சாத்தக் கண்டார்,
கண்ணப்பன் விழிசூலப் பழியென்று எண்ணார்
தெரிவையர் நாசியும் குழலும் அரியப் பார்த்தார்,
சிறுத்தொண்டன் சிறுமதலைக் குதலைச் செவ்வாய்
அறியமகவினை அரிய விருந்தாள் ஆனர்,
ஆனாலும் அடியார்க்கு நல்லார் தாமே.
(நியம—1)

5. வீணை விஞ்சையர்
யாணர் யாழிசைப்
பாணர் பைந்தமிழ்
வாணர் மாடெலாம்.

6. மந்த மாருதம்
முந்து மூன்றில்வாய்ப்
பந்து பாவைமார்
அந்தில் ஆடுவார்.

7. தண்ண மாமதிச் சாளரத்(து)
உள் நுழந்தநண் மாமதி
பெண்ணினுர் முகப் பெற்றிகண்டு
எண்ணி உள் உடைந்து ஏகுமால்.

8. மதிதவழ் வேணியன் பதத்தில் வந்தனை
விதிமுறை ஆற்றுநர் வேத ஓதையும்
கதிர்மணி அசைந்திடும் கலிப்பும் கார்முகில்
அதிர்தரு கடலுடன் ஆர்த்தல் போலுமால்.

(நகரச் சிறப்பு 37-43)

9. ஆளி எனப்போர் ஏறிஅடர் த்தார்அடு வில்வில்
வாளி தொடுத்தார் சூள்அறை குற்ருர்வரை எல்லாம்
தூளி படுத்தார் சோரிகுளித் தார்சுழல் பேழ்வாய்க்
கூளி குனித்தே ஆடமறப் போர்கொடு மிக்கார்.

10. குந்தம் எடுத்தார் குத்தினர் மெத்தக் கொலேவேழம்
சிந்த அடர்த்தார் சித்திர காயம் எனச்சீறிக்
கந்துகம் வீழக் கதமெரி வாளால் துணி கண்டார்
முந்து கழற்கால் பிந்த அடற்போர் முயலாதார்.

(புகழ்ச்சோழ 30-31)



# வரலாற்றில் கருவூர்

இரா. நாகசாமி, எம். ஏ.

தமிழக வரலாற்றில் கருவூர் இன்றியமையாத இடத்தை வகித்து வந்துள்ளது. அது ஆன்பொருநை ஆற்றங்கரையில் அமைந்து விளங்கியது எனப் பண்டைய நூல்கள் குறிக்கின்றன. ஆதலின் அது ஆற்றங்கரை நாகரிகம் தோன்றிய காலத்தில்தான் நகராக ஆகியிருத்தல் வேண்டும். இந்திய நாட்டில் நகர்ப்புற நாகரிகங்கள் சிறப்புற்ற காலத்திலேயே இதுவும் சிறப்படைந்தது எனக் கொள்ளலாம். இது எக்காலத்தே எனத் திட்டவட்டமாக கூறமுடியாது. இக் கருவூரே சங்ககாலச் சேர மன்னர்களின் தலைநகர். இதுவே வஞ்சி எனவும் பெயர்பெற்றிருந்தது. சங்க காலத் தொடக்கத்திலிருந்தே கருவூர்-வஞ்சி, ஒரு பெருநகராகத் திகழ்ந்தது என்பதில் ஐயமில்லை. இதைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட முதல் மன்னன் யார் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

## சங்கச் சேரர் தலைநகர் கருவூர்

சேர மன்னர்களின் முதல் மன்னனாகக் கருதப்படுபவன் உதியஞ்சேரல் என்பவன். அவன் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் என்றும் குறிக்கப்படுகிறான். இவன் மகன் யவனரை வெற்றி கண்டான் என அறிகிறோம்.

"நயனில் வன்சொல் யவனர் பிணித்து
நெய்தலைப் பெய்து கைபிற் கொளீஇ
பெருவிறன் மூதூர் தந்து பிறர்க்குதவி"
பதிற்று-பதிகம்-2.

எனப் பதிகம் கூறுகிறது. இதிலிருந்து ஒன்று தெளிவாகிறது. இவன் யவனர்கள் தமிழகத்திற்கு வந்த காலத்தில் தான் ஆண்டிருக்க வேண்டும். இங்கு யவனர்கள் எனக் குறிக்கப்படுபவர்கள் ரோமானியர்களே. ரோமானியர்கள் தமிழகத்துடன் தொடர்பு கொண்டது கி.மு. முதல் நூற்றுண்டில்தான். ஆதலின் உதியஞ்சேரல் கி.மு. முதல் நூற்றுண்டிற்கும் முன்னர் ஆண்டிருக்கச் சான்றுகள் இல்லை. நெடுஞ்சேரலாதன் செங்குட்டுவன் முதலியோரது காலத்தைக் கவனிக்கும்போது உதியஞ்சேரல் கி.மு. முதல் நூற்றுண்டைச் சேர்ந்தவன் எனக் கொள்வதில் தவறில்லை. ஆதலின் கருவூர்-வஞ்சி, கி.மு. முதல் நூற்றுண்டிலிருந்து தமிழகத்தில் ஒரு சிறந்த தலைநகராகத் திகழ்ந்தது என்பது தெளிவு. உதியஞ் சேரலுக்குப் பின்னர் வந்த அனைத்துச் சேரர்களும் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டிருக்கிறார்கள். இங்குச் சில கருத்துக்களை அறிதல் இன்றியமையாததாகும்.

## புகளூர்க் கல்வெட்டு

கருவூரின் வரலாற்றை அறிந்து கொள்ள மிகவும் இன்றியமையாதவை புகளூர்க் கல்வெட்டுகள் ஆகும். இவை புகளூருக்கு அருகில் ஆறுநாட்டார் மலை என்னும் குன்றில் உள்ளன. இக்குன்றின் அடிவாரத்தை வேலாயுதம் பாளையம் என்று கூறுகின்றனர். இக்குன்றின் மேல் ஏறிப்பார்த்தால் மிகவும் வனப்புடன் காவிரியாறு அண்மையில் ஓடுவதைக் காணலாம். மனத்துக்கு சாந்தியை அளிக்கும் இக்குன்று மிகவும் தொன்மையான காலத்திலிருந்தே சமண முனிவர்களின் இருப்பிடமாகத் திகழ்ந்து வந்துள்ளது. மலை கிழக்கு மேற்காக நீண்டுள்ளது அதன் தென்புறமும் வடபுறமும் இயற்கையாக அமைந்த குகைத் தளங்கள் உள்ளன.

இவற்றில் வடபுறம் உள்ள குகைத் தளத்தில் பல படுக்கைகள் உள்ளன,

அவற்றில் ஒன்றில் மிகவும் தொன்மை யான கல்வெட்டு ஒன்று உள்ளது. அதன் அமைதி கொண்டு அதனை கி. மு. 2-ம் நூற்ருண்டைச் சார்ந்ததாகக் கொள்ளலாம். அதன் வாசகம்

"ஞகன் மகன் ளங்கீரன்"

என்று வாசிக்கப்பட்டுள்ளது. அண்மை யில் அதை

"ஞகன் மகன் பெருங்கீரன்"

என வாசிக்கலாம் எனத் திரு. ந. காசி நாதன் கருதுகிருர். அது ஏற்புடை யதாகத் தோன்றுகிறது. ஞகன் என்ப வனின் மகன் பெருங்கீரன் என்பவன் அக் கல்படுக்கையைச் செய்தளித்தான். எனக் கொள்ளலாம். கி. மு. இரண்டாம் நூற்ருண்டில் இம்மலை சமணர்களின் இருக்கையாக இருந்திருக்கிறது என்ப தற்கு இது ஒரு சான்று.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பிற கல் வெட்டுகள் தென்புறத்துக் குகைத் தளத்தில் உள்ளன. இங்குப் பல படுக் கைககள் உள்ளன. சில படுக்கை களின் தலையணையில் கல்வெட்டுகள் உள்ளன. இரண்டு கல்வெட்டுகள் பாறையின் மேல்முகட்டில் உள்ளன. இவையே வரலாற்றிற்கு இன்றியமை யாத கல்வெட்டுகளாகும். இங்குள்ள கல்வெட்டுகளின் வாசகங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. ஞகன் மகன் பெருங்கீரன்.
2. மூதா அமண்ணன் யாற்றூர் செங் காயபற்....கோ ஆ...
   ல்லிரும்பொறை மகன் பெருங் கடுங் கோன் மகன்
   கடுங்கோன் ளங்கடு ங்கோ ளங்கோ ஆகி அறுபித கல்.
3. (மூ)தா அமண்ணன் யாற்றூர் செங் காயபன் உறைய் கோ
   ஆதன் செல்லிரும்பொறை மகன் பெருங்கடுங்கோன் மகன்
   (இ)ளங்கடுங்கோ (இ)ளங்கோ ஆகி ஆறுத்த கல்.
4. யாற்றூர் செங்காயபன்..........
5. கொற்றந்தைள எய் மூன்று.
6. கருவூர் பொன் வாணிகன் நத்தி அதிட்டானம்.
7. நல்லிபி ஊர் பிடந்தை மகள் கீரன் கொற்ற.........
8. நல்பி ஊர் பிடன் குறும் மகள் செயிபித பளி.

இன்னும் சில கல்வெட்டுகள் சிதைந் துள்ளன. இக்கல்வெட்டுகளின் எழுத் தமைதி கொண்டு இவை கி.பி. முதல் நூற்ருண்டைச் சார்ந்தவை எனக் கொள்ளலாம்.

இக்கல்வெட்டுகளிலிருந்து பல அரிய செய்திகளை நாம் அறிகிருேம்.

முதலாவதாகக் கருவூர் பொன்வாணி கன் னத்தி அதிட்டானம் என்பதைக் காண்போம். இதில் ஒரு பொன்வாணி கன் கருவூரைச் சேர்ந்தவனுகக் குறிக் கப்பெறுகிருன். கருவூர் இங்கிருந்து பத்துக்கல் தொலைவிற்குள்ளாகவே உள்ளது என்பது சிறப்பாகும். கருவூர் ஆன்பொருநைக் கரையில் இருந்தது என்றும் அது சேரர்களின் தலைநகரா யிருந்தது என்றும் சங்க இலக்கியத் திலிருந்து அறிகிருேம். இதைக் குறிக் கும் அகநானூற்றுச் செய்யுள் கீழே தரப் பட்டுள்ளது.

"கடும்பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை
திருமாவியல் நகர் கருவூர் முன்துறை"

ஆன்பொருநையாறே இன்று அமரா வதி என அழைக்கப்படுகிறது என்பது அனைவரும் அறிந்த ஒன்ருகும். ஆதலின் இங்குக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள கருவூர், சங்கச் சேரரின் தலைநகரும் அருகில் உள்ளதுமான கருவூரே என்ப தில் ஐயமில்லை.

இதன் பின்னணியில் மற்றையக் கல் வெட்டுக்களைக் காண்போம். "கோ

ஆதன் செல் இரும்பொறை', என்பது சேரனையே குறிக்கும் என்பதிலும் ஐயமில்லை. மூன்று சேர மன்னர்கள் இங்குக் குறிக்கப்படுகின்றனர். 1. கோ ஆதன் செல்லிரும்பொறை, 2 அவன் மகன் பெருங்கடுங்கோ, 3. அவன் மகன் இளங்கடுங்கோ என்ற மூன்று மன்னர் கள் இங்குக் குறிக்கப்பட்டுள்ளனர். இக்கல்வெட்டுப் பெருங்கடுங்கோ காலத் தது. அவனது மகன் இளங்கோப்பட்டம் எய்திய போது யாற்றூரைச் சேர்ந்த செங்காயபன் என்ற சமணப் பெரி யாருக்குப் பள்ளி அமைத்துக் கொடுத் ததை இது குறிக்கிறது.

இக் கல்வெட்டுகளை நன்கு படித்து இவை சேர மன்னர்களின் கல்வெட்டுகள் எனப் புலப்படுத்திய பெருமை திரு. ஐரா வதம் மகாதேவனையே சாரும். (இக்கல் வெட்டுக்கள் குறித்து திரு. ஐ. மகாதே வன் அவர்களின் கருத்து பின் வருமாறு):

"இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள கோ ஆதன் சேரல்லிரும்பொறை செல்வக் கடுங்கோ வாழி ஆதன் ஆகும். பெருங்கடுங்கோ என்பவனே (பாலை பாடிய பெருகங்டுங்கோ இவனே) கோபெருஞ்சேரல்லிரும்பொறை. இளங் கடுங்கோ என்பவனே மருதம் பாடிய இளங்கடுங்கோ; இவனே இளஞ்சேரல் லிரும்பொறை. புகளூர்க் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள மூன்று அரசர்களும் பதிற்றுப் பத்து 7, 8, 9-ம் பத்தின் பாட் டுடைத் தலைவர்களாகும்."

இவர்களது கல்வெட்டுகள் கருவூருக்கு அருகில் காணப்படுவதாலும், சங்கப் பாடல் கருவூர், சேரரின் தலைநகர் என்ப தாலும், இவர்கள் கருவூரைத் தலைநக ராகக் கொண்டு ஆண்டவர்கள் என்ப தில் ஐயமிருக்க முடியாது. சங்கப் பாடல் களில் பாலை பாடிய பெருங்கடுங்கோ வும், மருதம் பாடிய இளங்கடுங்கோ வும் குறிக்கப் பெறுகின்றனர். ஆதலின் இவர்கள் பாலை பாடிய பெருங்கடுங்கோ, மருதம் பாடிய இளங்கடுங்கோவாக இருக்கலாம் என்பதில் தவறில்லை.

புறப்பாட்டில் (11) பேய்மகள் இள வெயினி பாடலைப் பாடிய பெருங்கடுங் வைப் பாடியுள்ளான். அதில் பெருங் கடுங்கோ ஆன்பொருநை யாற்றங்கரை யில் இருந்த வஞ்சி நகரைத் தலைநக ராகக் கொண்டவன் எனப் பாடுகிருள்.

"தண் பொருநைப் புனல் பாயும்
விண் பொரு புகழ் விறல் வஞ்சி."

பாலை பாடிய பெருங்கடுங்கோ கருவூரில் இருந்து ஆண்டவன் எனக் கண்டோம். அக்கருவூர் திருச்சிக் கருவூரே என்பது புகளூர்க் கல்வெட்டால் வெளிப்படை. இப்புறப் பாடலிலிருந்து அக்கருவூரே வஞ்சி என்பதும் தெளிவாகிறது ஆத லின் சங்க காலச் சேரர்களின் தலைநக ராகக் கருவூர்த் திகழ்ந்தது என்பதில் ஐயமில்லை. அதுவே வஞ்சி என்பதிலும் ஐயமில்லை.

### இரு கிளை வழி மறுப்பு

சிலர் குட்டுவன் வழி என்றும், இரும் பொறை வழி என்றும் சேரர் குடியில் இருவழியிருந்தது என்பர். குட்டுவர் மேலைக் கடற்கரை வஞ்சியைத் தலைநக ராகக் கொண்டு ஆண்டனர் என்றும், இரும்பொறையினர் கருவூரைத் தலைநக ராகக் கொண்டு ஆண்டனர் என்றும் கூறுவர். சேஷ அய்யர் அவர்கள் சங்க காலச் சேர அரசர் என்னும் தமது நூலில் மேலைக் கடற்கரையில் தொண்டி யைத் தலைநகராகக் கொண்டு இரும் பொறை வழி தொடங்கும் என்றும், அவர்கள் கருவூரில் இருந்து ஆண்டவர் என்றும் முரண்படக் கூறியுள்ளார். இதைப் பின்பற்றிப் பின்னேரும் இரு கிளைக் குடியினர் இரு இடங்களில் இருந்து ஆண்டனர் எனக் கூறியுள்ள னர். இக் கூற்றுகளுக்குப் போதிய சான்றுகள் இல்லை.

இரும்பொறை எனக் கீழ்வருவோரைக் காண்கிறோம். 1. அந்துவன் சேரலிரும்பொறை, 2. கோப்பெருஞ் சேரலிரும்பொறை, 3. மாந்தரஞ் சேரலிரும்பொறை, 4. இளஞ்சேர லிரும்பொறை. இவர்களில் குடக்கோ பெருஞ்சேரல் லிரும்பொறை என்றும், ஒள்வாட் கோப் பெருஞ்சேரலிரும்பொறை என்ற பெயர்களும் காண்கிறோம். இவர்களை இரும்பொறை வழியினர் என்று கொள்வோம். இவர்கள் உள்நாட்டுப் பகுதியை மட்டும் கருவூரைத் தலைநகராய்க் கொண்டு ஆண்டனர் என்றால், இவர்களுக்கு குடக்கோ என்னும் பெயர் எவ்வாறு பொருந்தும்? பெருஞ்சேரலிரும்பொறையும், இளஞ்சேரலிரும்பொறையும் குடக்கோ என அழைக்கப்படுகின்றனர். இளஞ்சேரலிரும்பொறையின் தந்தை குட்டுவன் இரும்பொறை என்று பெயர் பெற்றவன். குட்டுவன் மகன் இரும்பொறை என்பது பொருள். ஆகலின் இரும்பொறைக்கும் குட்டுவன் என்ற பெயர் உள்ளதாய் காண்கிறோம்.

பாலை பாடிய பெருங்கடுங்கோவின் தலைநகர் வஞ்சி எனப் புறப்பாட்டு 11 கூறுகிறது. பெருங்கடுங்கோ இரும்பொறையின் மகன். "இரும்பொறை என ஒரு கிளைவழி உண்டு. அவர்கள் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டார்கள்" என்பதை ஏற்றுக் கொண்டால் மேலைக் கடற்கரையில் இருப்பதாகக் கூறப்படும் வஞ்சி எங்ஙனம் அவன் தலைநகராகும்? செல்வக் கடுங்கோ வாழியாதன் அந்துவன் சேரனின் மகன். ஆதலின் அவனும் இரும்பொறை வழியினன். ஆதலின் அவனும் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டிருக்க வேண்டும். ஆனால் அவன் வஞ்சியின் தலைவன் என புறப்பாட்டு 387 கூறுகிறது. வஞ்சி மேலைக் கடற்கரையில் உள்ளதாயின், செல்வக் கடுங்கோவும், மேலைக்கடற் கரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டிருக்க வேண்டும்.



மேற்கூறியவற்றால் "சேரர் குடியில்இரு கிளைகள் இருந்தன; ஒன்று குட்டுவன் வழி. அவர்கள் தலைநகராகக் கொண்டு ஆண்ட வஞ்சி மேலைக் கடற்கரையில் இருந்தது. இரும்பொறை வழி என்பது இளைய கிளை, இது கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டது" என்று கூறும் கருத்துகள் ஏற்புடையவை அல்ல என அறிகிறோம். அக்கருத்துக்களுக்குச் சான்றுகள் இல்லை. மாற்றுச் சான்றுகளே உள்ளன. இரும்பொறை என்று பெயர் பெற்றவர்களுக்கு குட்டுவன், ஆதன் என்ற பெயர்களும்உண்டு. பாலை பாடிய பெருங்கடுங்கோ இரும்பொறை வழியினன் என்பதில் ஐயமில்லை எனில் அவன் தலைநகர் கருவூராயிருத்தல் வேண்டும். ஆனால் புறம் (11) அவன் தலைநகர் வஞ்சி எனக் கூறுகிறது. இளஞ்சேரலிரும்பொறை வஞ்சியில் இருந்து ஆண்டான் (பதிகம்) இரும்பொறையினர் வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டிருக்கின்றனர் என இதனால் தெளிவாகிறது. ஆதலின் அனைத்துச் சேரர்களுக்கும் தலைநகராக விளங்கியது வஞ்சியாகிய கருவூரே என்பதும் தெளிவு.

## சங்க கால கருவூர்

ஒள்வாட் கோப்பெருஞ்சேரலிரும்பொறைஎன்னும் அரசன் 'கருவூர் ஏறிய' என அழைக்கப்படுகிறான். 'கருவூர் ஏறிய' என்றால் கருவூரைக் கைப்பற்றியவன் எனச் சிலர் பொருள் கொள்வர். எறிதல் எனில் அழித்தல் எனப் பொருள்படும். 'ஏறிய' எனில் அரியணை ஏறிய எனப் பொருள்படும். கருவூரில் முடிசூடிய எனவும் பொருள் கொள்ளலாம். கருவூரை முதன்முதலில் கைப்பற்றியவன் இவன்தான் என்று சேஷ அய்யர் பொருள் கொண்டு அதிலிருந்து மேலும் மேலும் கருத்துக்களைக் கூறிக் கொண்டே செல்கிறார். ஏறிய என்றால் எறிந்த என்னும் பொருள் கொண்டு அதன் அடிப்படையில் உள்ள கருத்துக்

கள் ஐயப்பாட்டுக்கு இடமளிப்பவை ஆகும்.

சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறை என்ற அரசன் கருவூரில் இருந்து ஆண்டான். அவன் ஏணிச் சேரி முடமோசியார் என்ற புலவருடன் வேண்மாடத்தில் அமர்ந்திருந்தான். அப்பொழுது முடித்தலைக் கோப்பெரு நற்கிள்ளி என்ற சோழ மன்னன் தன் யானை மீதமர்ந்து கருவூரிடம் வருவதைக் கண்டான். சோழன் யானை மதம் பிடித்து வழி தவறிக் கருவூர் வந்தது; அதைத் தவருகக் கருதிச் சோழனைக் கொன்று விடப் போகிருன் என்று கருதி உடன் இருந்த புலவரான முடமோசியார் உண்மையை எடுத்துரைத்ததாகப் புறப்பாட்டு ஒன்று கூறுகிறது. இதிலிருந்து மற்ரோர் உண்மையும் பெறுகிரோம். கருவூர் சோழ நாட்டின் எல்லைக்கு வெகு அண்மையில் இருந்தது எனத் தெரிகிரோம்.

சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையும் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான் என்று அறிகிரோம். தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் தனது மாற்றரசர்களை அவர்களது தலைநகரில் தோற்கடித்தான் எனப் புறம் 78 கூறுகிறது. பழைய உரையாசிரியர் அதற்கு ''தந்தை தம்மூர் என்றது தாம் தோன்றிச் செய்த நகரேயன்றி உறையூரும் கருவூர் முதலாகிய ஊர்களை'' எனக் குறிக்கிருர். யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை, பாண்டியன் நெடுஞ்செழியனல் சிறைப்படுத்தப் பட்டான். பின்னர்ச் சிறையிலிருந்து நீங்கி மீண்டும் தன் அரியணை ஏறினுன் (புறம்-17). இவன் பாண்டியனல் பிணிக்கப்படும் முன்னர் மிகவும் வலியுள்ளவனய் இருந்தான். இவன் சிறையிலிருந்தபோதும்கூட இவனது பகைவர் அஞ்சினர் என இப்பாடல் கூறுகிறது. வலிமைமிக்க மாந்தரஞ்சேரல்விரும்பொறைக்கும், பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனுக்கும் போர் நடந்தது. நெடுஞ்செழியன் சேரனைக் கருவூரிலேயே தோற்கடித்துக் கைது செய்திருக்க வேண்டும். இருப்பினும் சேரன் மீண்டும் தன் தலைநகருக்குத் திரும்பித் தன் ஆட்சியை நிலைநிறுத்தியிருக்கிருன். கருவூர், பாண்டியன் ஆட்சியிலிருந்து விரைவில் மீண்டது.

சோழன் நலங்கிள்ளியும் கருவூரைக் கைப்பற்றினுன் எனக்கொள்ள இடமிருக்கிறது. அவனைப் பாடும் கோவூர் கிழார் அவன் பூவா வஞ்சியையும் தருகுவன் எனக் கூறுவதிலிருந்து வஞ்சி அவன் ஆட்சியை ஏற்றிருந்தது எனக் கொள்ள ஏதுவுண்டு. இதை உரையாசிரியர் ''பூவா வஞ்சியென்பது கருவூருக்கு வெளிப்படை.'' எனக்கூறுகிருர்.

கருவூர், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனல் முற்றுகையிடப்பட்டது. ஆலத்தூர் கிழார் இதைச் சிறக்கப் பாடியுள்ளார். இம்முற்றுகையின் போது சேரன் தன் அரண்மனையை விட்டு வெளியே வரவில்லை. சோழர் படை கருவூர்க் காவற்காடுகளை அழித்தது. அவ்வாறு வெட்டி வீழ்த்தப்பட்ட மரங்கள் ஆன்பொருநையாற்றின் மணலைச் சிதைத்தன. சோழன், வஞ்சி மாநகரை வாட்டுவதை நேராகக் கண்ட ஆலத்தூர்க் கிழார் புறம் 36-ல்

''..... சிலம்பில் குறுந்தொடி மகளிர்
பொலஞ் செய் கழங்கில் தெற்றியாடும்
தண்ணுன் பொருநை வெண் மணல்
சிதைய''

எனப் பாடுகிருர்.

கிள்ளிவளவன் கருவூர் முற்றியிருந்த போதுஅதை நேராகக் கண்ட மற்ருெரு புலவர் மாருேக்கத்து நப்பசலையாரும், சோழன் ஆற்றலைப் பாடியுள்ளார். (புறம் 37-39). அப்பாடலில் கருவூரைச் சுற்றி ஆழ்ந்த அகழிகள் இருந்தன. அவற்றில் நீர் மிகுந்திருந்தது. அவற்றில்

முதலைகள் சுற்றித் திரிந்தன. அவ்வூரை நீ அழிக்கிறாய்'' எனவும், ''உயர்ந்த எல்லை அறியப்படாத பொன்படுகின்ற நெடிய சிகரங்களை உடைய இமயமலை யின் கண் சூட்டப்பட்ட காவலாகிய வில்பொறியையும், மாட்சிமைப்பட்ட தொழில் பொருந்திய தேரையுமுடைய சேரன் அழிய, அவனது அழிவில்லாத கருவூரை அழிக்கும் நினது பெருமை'' எனவும் பாடியுள்ளார்.

" இமயஞ் சூட்டிய ஏம விற்பொறி
மாண்வினை நெடுந்தேர் வானவன்
தொலைய ; வாடா வஞ்சி
வாட்டு நின் பீடு''

எனப் பாடுகிறார். இக்கருவூர்ப் போரில் சேரன் தோற்றான்.

குராப்பள்ளியில் துஞ்சிய கிள்ளி வளவனும் கருவூரை கைப்பற்றியிருக் கிறான். புறப்பாட்டு 373, குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன் கருவூர் எறிந் தானைக் கோவூர் கிழார் பாடியது. இப் பாட்டில்

''வஞ்சி முற்றம் வயக்களனாக
அஞ்சா மறவர் ஆட்போர்
பழித்துக் கொண்டனை பெரும''

எனக் குறித்துள்ளார். இதிலிருந்து கருவூர் எறியப்பட்டது என அறிகிறோம். கருவூரும் வஞ்சியும் ஒன்றே என்பதும் இதனால் பெறப்படுகிறது.

பெருஞ்சேரல்லிரும்பொறை தகடூர் மீது படையெடுத்தான். அப்படைஎடுப்பு கருவூரிலிருந்து தொடங்கியிருக்க வேண்டும்.

சேரன் செங்குட்டுவனின் தலைநகர் வஞ்சியே என்பதில் ஐயமில்லை. செங் குட்டுவனைப் பாடும் பரணர் காவிரியாற் றோடு ஆன்பொருநையும், குடவனாறும் கலக்கும் கூடல் போன்றவன் என்று பதிற்றுப் பத்தில் பாடுகிறார். கூடல் என்பது இப்பொழுது கருவூரில் இருந்து ஆறுகல் தொலைவில் உள்ளது. ஆதலின் அதன் புகழ் பாடப்பட்டுள்ளது. இதி லிருந்து ஆன்பொருநையாறு காவிரியாற் றில் கலக்கிறது என்பது தெளிவு. இதுவே இப்பொழுது ஆம்பராவதி என்று அழைக்கப்படுகிறது. செங்குட்டு வன் ஆண்ட வஞ்சி ஆன்பொருநைக் கரையில் இருந்தது எனச் சிலம்பு கூறு கிறது.

" வாழியரோ வாழி வருபுனல்
நீர் ஆன்பொருநை
சூழ் தரும் வஞ்சியார் கோமான்
தன் தொல் குலமே.''

—சிலம்பு—வாழ்த்து-4.

ஆதலின் சேரன் செங்குட்டுவன் ஆண் டதும் கருவூரே என்பதில் ஐயமில்லை.

சங்க காலச் சேர மன்னர் அனைவரும் ஆண்டது கருவூரேயாகும்.

### சோழர் ஆட்சியில் கருவூர்

சங்க காலச் சேரர்களுக்குப் பின்னர் கருவூர் சிலகாலம் சோழராட்சிக்குட் பட்டு இருந்தது. புகழ்ச் சோழர் இதை ஆண்டிருக்கிறார் என்று பெரியபுராணத் தில் இருந்து அறிகிறோம். புகழ்ச் சோழர் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவர் என்று சேக்கிழார் கூறுகிறார்.

''பாரேறும் புகழ் உறந்தைப் பதி......
அந்நகரில் பாரளிக்கும் கடலரசரா
கின்றார்''

என்கிறது பெரியபுராணம். அவ்வாறு ஆட்சி புரியும் நாளில் தங்கள் தனிநக ராம் கருவூருக்குத் தனது தேவியருட னும் உரிமைச் சுற்றங்களுடனும் வந்தார். இதைக் குறிக்குமிடத்தில்

''கொங்கரோடு குடபுலத்துக் கோ
மன்னர் திறை கொணரத்
தங்கள் குல மரபின் தனிநகராம் கருவூரில்
மங்கல நாள் அரசுரிமைச் சுற்றமுடன்
வந்தணைந்தார்'',

இங்குக் கருவூர் சோழர்களின் குல மரபின் முதல் தனிநகர் எனக் கூறப்படுகிறது. சோழரின் தனிநகர் உறையூர். கருவூர் அவ்வாறு குறிக்கப்பட காரணம் என்ன? சேக்கிழார் ஆங்காங்கே சோழர்களது பெருமையைக் குறிப்பதில் சிறந்தவர். சோழர்களில் சிறந்தோனை கரிகாலனைச் சிறுவயதில் பகைவர்களிடமிருந்து காப்பதற்காக அவனது தாய் மாமன் அவனைக் கருவூரில் வைத்துக் காத்தான் என்றும், அங்கிருந்து அவன் முடிசூடினன் என்றும் செவிவழிக் கதை ஒன்று உண்டு. இக்கதையிலிருந்து சில உண்மைகள் அறியலாம். சோழ நாட்டில் கரிகாலனுக்கு ஆபத்து நேர்ந்த போது சேர மன்னர்கள் தஞ்சம் அளித்துள்ளனர். தங்களது தலைநகரில் அவனை வைத்துக் காக்க உதவியுள்ளனர். கருவூரிலிருந்து கரிகாலன் சோழ அரியணை ஏறியதாலேயே சேக்கிழார் கருவூரைச் சோழர்குல மரபின் தனிநகர் எனக்குறிக்கிறார் எனில் தவறில்லை.

கருவூர் சோழராட்சிக்கு உட்பட்டிருந்தது என்பதை எறிபத்தர் வரலாற்றிலும் சேக்கிழார்,

"மன்னிய அநபாயன் சீர் மரபின்
மா நகரமாகும்
தொன்னெடுங் கருவூர் —3

என்று கூறுகிறார்.

அன்றிருந்த கருவூரின் சிறப்பை,

"மாமதில் மஞ்சு சூழும்
மாளிகை நிறைவின் சூழும்
தூமணி வாயில் சூழும்
சோலையில் வாசம் சூழும்
தேமலர் அளகம் சூழும்
சில மதி தெருவிற் சூழும்
தாமழ்கிந் தமரர்சூழும்
சதமகன் நகரம் தாழ.
கடகரி துறையி லாடும்
களிமயில் புறவி லாடும்
அடர்மணி அரங்கி லாடும்
அரிவையர் குழல்வண் டாடும்
படரொளி மறுகி லாடும்
பயில்கொடி கதிர்மீ தாடும்
தடைநெடும் புவிகொண் டாடும்
தனிநகர் வலிமை ஈதால் (3, 4)

என்று பாடுகிறார்.

இவ்வளவு சிறந்த நகரம் வானவர்களது தலைநகராம் அமராவதியையும் தோற்கடிக்கும் வண்ணம் திகழ்ந்தது. அங்கு ஓர் அரசமாளிகை இருந்தது. அதில் அரியணையில் அமர்ந்து மாற்றார் கொணர்ந்த திறைகளை எல்லாம் புகழ்ச் சோழர் கண்டார்.

அவர் அமைச்சர்கள் அதியமான் திறை கொண்டு வரவில்லை எனக் கூறினர். அவனது அரணை தூளாக்குவீர் என அரசர் ஆணையிட்டார். சோழரது படை கருவூரிலிருந்து அமைச்சர்கள் தலைமையில் புறப்பட்டு அதிகன் படையோடு பொருதது. குறும்பொறையூர் என்னுமிடத்திலும், நொச்சி என்னுமிடத்திலும் அதிகன் படை தோற்கடிக்கப்பட்டது என அறிகிறோம்.

"கொடிமாமதில் நீடு குறும்பொறையூர்
முடி நேரியனார் படை முற்றியதே"

"முற்றும் பொரு சேனை முனைத் தலையில்
கற்றிண் புரிசைப் பதி கட்டழியப்
பற்றும் துறை நொச்சி பரிந்துடையச்
சுற்றும் படை வீரர் துணித்தனரே."
(பு. சோ. 27—28)

என்று பெரிய புராணம் கூறுகிறது.

இதிலிருந்து மற்றும் இரண்டு செய்திகளை அறிகிறோம். குறும்பொறையூர் என்றும் நொச்சி என்றும் இரு ஊர்கள் அதிகனின் ஆட்சிக்குட்பட்டிருந்தன. அவற்றைக் கருவூரிலிருந்து கிளம்பிய சோழர் படை வென்றது என்பதாகும். அகம் 159-ல் குறும்பொறை எனும் மலை குறிக்கப்பட்டுள்ளது. அதற்குக் கிழக்கே ஆமூர் இருந்தது. அதைச் சேரனின் தானைத் தலைவன் 'கொடுமுடி' என்ப

வன் காத்து நின்ருன் என அறிகிருேம். அக்குறும்பொறை மலையின் அடிவாரத்து ஊர் குறும்பொறையூர் போலும்.

நொச்சி என்பதும் அதிகமானுடைய ஒரு சிறந்த ஊர் என்று அறிகிருேம். தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும் பொறை நொச்சியையும் கொண்டான் என்று பதிகம் கூறுகிறது.

"தகடூர் எறிந்து நொச்சி தந்தெய்திய
அருந்திறல் ஒள்ளிசை பெருஞ்சேர
லிரும்பொறை"

என இவன் கூறப்படுகிருன்.

கருவூர், புகழ்ச் சோழர் ஆட்சியில்மட்டும் சோழரின் கீழ் இருந்தது எனலாம், புகழ்ச் சோழரின் காலம் எது எனத் திட்டவட்டமாகத் தெரியவில்லை. சங்க காலத்துக்குப் பின்னர், கி. பி. 6-ம் நூற்ருண்டுக்கு முன்னர் இது நிகழ்ந்திருக்கக் கூடும்.

சேரர்கள் மீண்டும் கருவூரைக் கைப்பற்றியிருக்க வேண்டும். 7-ம் நூற்ருண்டில் இது மீண்டும் சேரர் கீழ் வருவதைக் காண்கிருேம்.

பாண்டியராட்சியில் கருவூர் :

கி. பி. 7-ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியில் அரிகேசரி பராங்குச மாறவர்மன் என்னும் பாண்டிய மன்னன் ஆண்டான். அவன் 650-லிருந்து 700 வரை ஆண்டிருக்கிருன். அவனே கூன் பாண்டியன் என்றும் நெல்வேலி வென்ற நெடுமாறன் என்றும் புகழ் பெற்றவன். அவன்மீது பாண்டிக்கோவை என்னும் நூல் இயற்றப்பட்டுள்ளது. பல நூறு பாடல்களைக் கொண்ட இந்நூலில் பாண்டிய மன்னன் பல முறை சேரனை வெற்றி கண்டான் எனக் கூறப்பட்டுள்ளது. இதே செய்தியை வேள்விக்குடிச் செப்பேடுகளும் சின்னமனூர்ச் செப்பேடுகளும் குறிக்கின்றன. இவற்றில் பாண்டியன் வெற்றி கண்டதாகக் குறிப்பு உள்ளது. ஆனல் பாண்டிக்கோவையையும் செப்பேடுகளையும் காணும்போது சேரன் மிகவும் வலி மிகுந்தவனுகத் திகழ்ந்திருக்கிருன் என்பது தெளிவு. போர் மிகவும் கடுமையாகவும் பல இடங்களிலும் நிகழ்ந்திருக்கிறது. வெற்றிகள் மாறி மாறி வந்திருக்கின்றன. பாண்டியன் வஞ்சியைக் கைப்பற்றினுன் எனப் பல பாடல்களில் குறிக்கப்படுகிருன். இதிலிருந்து கருவூர் சேரன் ஆட்சிக்குட்பட்டிருந்தது என்றும் அதைப் பாண்டியன் கைப்பற்றினுன் என்றும் அறிகிருேம்.

இங்கு மற்ருென்றும் அறிதல் அவசியம் இதுகாறும் சேரர்கள் கருவூரைத் தலைநகராகக் கொண்டு பாலக்காட்டு கணவாய் வழியாக மேலைக் கடற்கரை வரை ஆண்டனர் என்று அறிகிருேம். இவர்களது ஆட்சி சங்க காலத்தில், இப்பொழுது தென் திருவாங்கூர் என்னும் பகுதி வரைப் பரவியிருந்தது என்பதற்குச் சான்றுகள் இல்லை. மேலைக் கடற்கரையில் வட புறத்தே மட்டும் இவர்களது ஆட்சி இருந்தது. தென் பகுதி ஆய் மன்னர்களிடமிருந்தது. ஆனல் கி. பி. 7-ஆம் நூற்ருண்டில் சேரர்கள் மேலைக் கடற்கரையில் திருவாங்கூர்ப் பகுதியையும் கைப்பற்றிக் கன்னியாகுமரி, கோட்டாறு (நாகர் கோவில்) திருநெல்வேலி ஆகிய பகுதிகள் வரை பரவியுள்ளனர். தெளிவாகப் பார்க்கப் போனல் 7 ஆம் நூற்ருண்டில் சேரர்களது ஆட்சி முன்னர் எப்பொழுதும் இல்லாத அளவுக்கு மிகவும் பெரும் பேரரசாகத் திகழ்ந்துள்ளது. சேர அரசை இவ்வளவு பெரும் பேரரசாக மாற்றிய மன்னன் 'வில்வேலி' எனப் பெயர் பெற்றவன் என்று அறிகிருேம்.

இம்மன்னனேடு பாண்டிய மன்னன் நெல்வேலி, கடையல், கோட்டாறு, பாழி, செந்நிலம் முதலிய பல இடங்களில் போரிட்டிருக்கிருன். வஞ்சியையும் கைப்பற்றியிருக்கிருன். 'வரோ

தயன் மண்ணளந்த திருமாலவன் வஞ்சி' (பாண்டிக்கோவை-64) 'ஓங்கு செம்பொன் மலைமிசை வைத்த பெருமான் வரோதயன் வஞ்சி' (114) இவ் வெற்றிகள் நிரந்தரமான வெற்றிகளா என்பது தெரியவில்லை. எது எப்படி இருப்பினும் கருவூரைப் பாண்டியன் வெற்றி கொண்டான் என்பது தெளிவு.

சற்றேறக்குறைய இதே காலத்தில் பல்லவப் பேரரசு காவிரியாற்றங்கரை வரையில் தனது ஆட்சியை விரிவாக்கியது. பல்லவப் பேரரசர்களில் சிம்ம விஷ்ணு, நரசிம்மனுகிய மாமல்லன் ஆகிய இருவரும் சேரர்களைத் தோற்கடித்ததாகக் கூறுகின்றனர். இப்போர்கள் கருவூருக்கு அண்மையில் நடைபெற்றவையா எனத் தெரியவில்லை.

ஆயினும் பல்லவர்களும் சேரர்களும் நட்புப் பூண்டனர் எனக் கொள்ளவும் இடமிருக்கிறது. வலுத்துவரும் பாண்டியப்பேரரசை எதிர்த்து இவர்கள் இணைந்திருக்க வேண்டும்.

கி. பி. 730-லிருந்து 765 வரைப் பாண்டிய அரியணையில் இருந்த தேர் மாறன் எனப் புகழ்பெற்ற மாறவர்மன் ராஜசிம்மன் இப்பகுதி மீது போர் தொடுத்திருக்கிறுன். இவன் காவிரியைக் கடந்தான், மழகொங்கம் அடிப்படுத்தான், பாண்டிக் கொடுமுடி சென்ருன், அங்குப் பசுபதியைப் பணிந்தான் என வேள்விக்குடிச் செப்பேடு கூறுகிறது.

இராஜசிம்மனுக்குப் பிறகு அவன் மகன் பராந்தக நெடுஞ்சடையன் மீண்டும் இப்பகுதிமீது படையெடுத்தான். இவன் பல்லவனைக் காவிரியின் தென்கரையில் பெண்ணுகடத்தில் வென்ருன். பின்னர் வடகரையில் ஆயிரவேலிஅயிலூரிலும், புகழியூரிலும், அதியனை வென்ருன் என வேள்விக்குடி செப்பேடு கூறுகிறது ஆதலின் இப்பகுதி அதியன் கீழிருந்தது எனக் கொள்ளலாம். அதியனுக்கு உதவியாகப் பல்லவனும் கேரளனும் வந்தனர் அவர்களை நெடுஞ்சடையன் வென்ருன் என சீவரமங்கலம் செப்பேடு கூறுகிறது.

தளவாய்புரச் செப்பேடு காடவனைக் (பல்லவனை) கருவூரில் நெடுஞ்சடையன் வென்ருன் என்று கூறுகிறது. புகளூர்ச் சண்டைக்குப் பிறகு அதே போரின் தொடர்ச்சியாகக் கருவூரிலும் போர் நடந்திருக்கிறது. கருவூரில் பல்லவனும் கேரளனும் பாண்டியனை எதிர்த்துத் தோற்றிருக்கின்றனர். இதைத் தளவாய் புரம் செப்பேடு,

> "காடவனைக் கருவூரில் கால் கலங்கக்
> களிறுதைத்த கூடலர் கோன்"

என்று கூறுகிறது. ஆனுல் இக்கருவூர் வெற்றி நிரந்தரமான வெற்றியாக இல்லை. இப்போரில் முதலில் தோற்ற பல்லவ மன்னன் நந்தி வர்மன் பல்லவ மல்லன் என்பவன் (733—798) ஆகும். ஆனுல், இவன் மீண்டும் கருவூரைத் தாக்கிப் பாண்டியனிடமிருந்து அதைக் கைப்பற்றியிருக்கிருன். இது சற்றேறக் குறைய 765-க்குப்பின்னர் நடந்ததாகும். இம்மன்னனின் சமகாலத்தவர் திருமங்கை ஆழ்வார். அவர் இம்மன்னன் அடைந்த வெற்றிகளைப் பரமேச்சுர விண்ணகரப் பதிகத்தில் பாடியுள்ளார்.

> "உலகுடை மன்னவன் தென்னவனைக்
> கன்னி மாமதில் சூழ் கருவூர் வெருவப்
> பல படை சாய வென்ருன்......"

என்று அவர் பாடியுள்ளதிலிருந்து இந்நகர் மீண்டும் பல்லவன் கைக்கு மாறியது என்பதில் ஐயமில்லை.

சற்றேறக்குறைய இதே காலத்தைச் சேர்ந்த இரண்டு நடுகற்கள் கருவூரில் கிடைத்துள்ளன. ரவிகோ கலியன் என்ற ஒருவனையும் வஞ்சிவேளடியான் என்ப

வலேயும் இவை குறிக்கின்றன. இவ்விரண்டு நடுகற்களும், பகைவர் ஆனிரை கவர்ந்தபோது, அவற்றை மீட்கும் பூசலில் பட்டதாகக் காணப்படுகின்றன. இவ்வானிரை கவர்தல் போரின் முன் நடந்ததா, அன்றிச்சாதாரணமாக பசுக்களைத் திருடும் போது ஏற்பட்ட பூசலா எனத் தெரியவில்லை.

ஈரோட்டில் உள்ள இதே காலக் கல்வெட்டு ஒன்றில் வஞ்சி வெண்தாழி என்பவன் குறிக்கப்படுகிருன்.

கி பி. 9-ம் நூற்ருண்டின் தொடக்கத்தில் இப்பகுதியை மீண்டும் சேரர் கைப்பற்றினர். ஈரோட்டில் ரவிகோதை என்ற சேர மன்னனின் ஒரு கல்வெட்டுக் கிடைத்துள்ளது. இதிலிருந்து சேரர்கள் மீண்டும் கருவூர்ப் பகுதியைக் கைப்பற்றி ஆண்டிருக்கின்றனர் என்பது தெளிவு.

கி. பி. 9-ம் நூற்ருண்டின் இறுதியில் கருவூர் சோழப் பேரரசின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. ஆதித்த சோழன் கொங்கு நாட்டைக் கைப்பற்றினுன் எனவும் அறிகிருேம்.

முதல் இராஜராஜன் காலத்தில் இப்பகுதி கேரளாந்தக வளநாடு எனப் பெயர் சூட்டப்பட்டது. இராஜராஜன் தனது தூதனைச் சேர மன்னன் சரிவர நடத்தவில்லை என்ற காரணத்தால் ஒரே பகலில் 18 சுரங்களைக் கடந்து மலை நாட்டைக் கைப்பிடித்தான் என்று உலாக்கள் கூறுகின்றன. சேரனை வென்று கேரளாந்தகன் எனவும் பெயர் பூண்டான். சேரன் ஆண்ட பகுதியையே கேரளாந்தக வளநாடு எனப் பெயர் மாற்றியமைத்தான். இது பின்னர் அதிராஜராஜ மண்டலம் எனவும் மாற்றிப் பெயர் பெற்றது.

கருவூரில் இராஜேந்திரன், இரண்டாம் ராஜேந்திரன், வீரராஜேந்திரன், விக்ரம சோழன், மூன்ரும் குலோத்துங்கன் முதலிய சோழ மன்னர்களின் கல்வெட்டுகள் உள்ளன.

மூன்ரும் குலோத்துங்கனது ஆட்சி தொடங்குவதற்குச் சற்று முன்னர்க் கருவூர் சேரர்களால் மீட்கப்பட்டது. ஆதலின் மூன்ரும் குலோத்துங்கன் கருவூரின் மீது படை தொடுத்தான். கருவூர்ப் போர் மிகவும் கடுமையாக நடந்திருக்க வேண்டும். இறுதியில் குலோத்துங்கன் வென்ருன். அவன் மெய்க்கீர்த்தி 'கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்ட' என்று கூறுவதிலிருந்து அவ்வெற்றியைக் குலோத்துங்கன் எவ்வளவு சிறப்பாகக் கருதினுன் என்பது தெளிவு. கொங்குநாடு சோழ கேரள மண்டலம் எனப் பெயர் பெற்றது. சேரன் குலோத்துங்கனை வணங்கினன். அவனது முடி வழங்கப் பட்டது. கருவூர் முடி வழங்கு சோழபுரம் எனப் பெயர் பெற்றது. இதை இவனது மெய்க்கீர்த்தி

"பூழியர் கெடக் கொங்கும் பாழ்படப்
பொருது புக்குக் கருவூரில் சோழ
கேரளன் என்று மன்னர் தொழ
விசைய மாமுடி சூடி"

எனக் குறிக்கிறது.

மூன்ரும் ராஜராஜன் காலத்தில் போசளர்கள் இங்கு வந்துள்ளனர்.

இதன் பின்னர் இப்பகுதி பிற்காலப் பாண்டியர் ஆட்சிக்கு மாறியது என்பதற்குச் சான்ருகச் சுந்தரபாண்டியன், வீரபாண்டியர் இவர்கள் கல்வெட்டுகள் இப்பகுதியில் காணப்படுகின்றன. பின்னர் இது மதுரை நாயக்க மன்னர்களின் கீழ் இருந்தது. சொக்கலிங்க நாயக்கர் கல்வெட்டுகள் இங்குக் காணப்படுகின்றன.

கருவூர் நீண்டதொரு வரலாற்றை உடையது. விரிக்கின் பெருகும். ஆதலின் இக்கட்டுரையில் அதன் நிலையை மட்டும் குறித்துள்ளோம்.

# கருவூர் வஞ்சி

## ஆய்வுப் பொருள் :

சங்ககாலச் சேர மன்னர்களின் தலை நகரான கருவூர் வஞ்சி எங்கு முதலில் இருந்தது என்பது ஆராயத் தகுந்த ஒன்றாகும். வஞ்சியைப்பற்றி இரண்டு கருத்துக்கள் மேலோங்கி நிற்கின்றன. ஒன்று திருச்சி மாவட்டம் கரூரே பண்டைய வஞ்சி என்பது மற்றொரு கருத்து மேலைக் கடற்கரையில் உள்ள மகோதை என்ற கொடுங்கோளூரே வஞ்சி என்பதாகும். இவ்விரண்டு முரண்பட்ட கருத்துக்களையும் சான்றுகள் கூறி ஏற்றும் மறுத்தும் பல ஆராய்ச்சி வல்லுநர்கள் எழுதியுள்ளனர். அண்மையில் சிறக்கப் படிக்கப்பட்டுள்ள புகளூர்க் கல்வெட்டும் தொல்லியல் ஆய்வும் இக்கேள்விக்கு விடை அளிக்க உதவுகின்றன.

## கல்வெட்டுச் சான்று :

புகளூர் ஆறுநாட்டார் மலைக் கல்வெட்டுகளை முதலில் கவனிப்போம். இங்குப் பல கல்வெட்டுகள் உள்ளன. இயற்கையாக அமைந்த குகைத்தளங்களில் சமணப் பெரியார்களுக்குப் பாழி அமைத்துக் கொடுத்ததை இக்கல்வெட்டுகள் கூறுகின்றன. இவற்றில் ஒன்று சேர மன்னர்களைக் குறிக்கிறது. செங்காயபன் என்ற ஒரு சமண முனிவர் இருந்தார். அவர் யாற்றூரைச் சார்ந்தவர். அவருக்கு இளங்கடுங்கோ என்பவன் பாழி செய்து கொடுத்திருக்கிறான். இவன் பெருங்கடுங்கோ என்பவனின் மகன், கோ ஆதன் செல்லிரும்பொறை என்பவனின் மகன் பெருங்கடுங்கோ. இக்கல்வெட்டு இவனைக் கோ என்றும் இரும்பொறை என்றும் கூறுவதிலிருந்து இவன் சேர அரசன் என்பதில் ஐயமில்லை. கோ ஆதன் செல்லிரும்பொறை, அவன் மகன் பெருங்கடுங்கோ, அவன் மகன் இளங்கடுங்கோ எனச் சேரரின் மூன்று தலைமுறைகள் கூறப்பட்டுள்ளன.

இங்குக் குறிப்பிட்டுள்ள மன்னர்கள் சங்ககால மன்னர்கள் என்பதில் ஐயத்துக்கு இடமில்லை. இக் கல்வெட்டு திருச்சி மாவட்டம் கரூருக்கு மிகவும் அருகில் உள்ளது. இதை நாம் மறப்பதற்கில்லை.

மேலும் புகளூர்க் கல்வெட்டில், பிடன், கொற்றன், கீரன், ஓரி என்ற சங்ககாலப் பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளன.

இங்கு மற்றும் ஒரு சிறப்பும் குறித்தல் வேண்டும். புகளூர்க் கல்வெட்டுகளில் ஒன்று கருவூர்ப் பொன்வாணிகன் நத்தி என்பவனைக் குறிக்கிறது. ஆதலின் இது அண்மையில் உள்ள கருவூரைக் குறிக்கிறது என்பதில் தவறில்லை. இது கி. பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்தது ஆதலின் கி. பி. முதல் நூற்றாண்டில், இந்தக் கரூர், கருவூர் என்று பெயர் பெற்றிருந்தது என்பது தெளிவு. சங்ககாலச் சேரமன்னர் இங்கிருந்து ஆண்டிருக்கிறார்கள் என்பதிலும் ஐயமில்லை.

பாலை பாடிய பெருங்கடுங்கோவே புகளூர்க் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள பெருங்கடுங்கோ எனக் கண்டோம். அவனது தலைநகர் புகளூருக்கு அருகில் உள்ள கருவூர் என்பதில் ஐயமிருக்க முடியாது. புறநானூற்றுப் பாடல் ஒன்றி (புறம் 11)ல் பாலை பாடிய பெருங்கடுங்கோவின் தலைநகர் வஞ்சி என்றும், அது ஆன்பொருநையின் கரையில் இருந்தது என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

## கரூர் நடுகற்கள்

இக்கல்வெட்டிற்குப் பிறகு கி. பி. எட்டாம் நூற்றாண்டு வரை இங்குக் கல்வெட்டு ஏதும் கிடைக்கவில்லை. தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறை அண்மையில் இரண்டு நடுகற்களைப் படியெடுத்துள்ளது. இரண்டும் கரூரிலேயே கண்டுபிடிக்கப்பட்ட நடுகற்

களாம். இவை இவ்வாராய்ச்சிக்கு இன்றியமையாதவையாகும். ஒன்று தமிழ் தமிழ் எழுத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் கருவூர் குறிக்கப்பட்டுள்ளது. "கோ கலியன் மகன் கருவூரிடை தன் ஆநிரை கொளல் எறிந்து பட்டான்" என்று அக் கல்வெட்டுக் குறிக்கிறது. மற்றைய நடுகல் சற்றுச்சிதைந்துள்ளது. ஆயினும் முதல் மூன்று வரிகள் தெளிவாக உள்ளன. அது ஸ்ரீவஞசி வேளடியான் எனத் தொடங்குகிறது. எட்டாம் நூற்றூண்டைச் சேர்ந்த இவ்விரண்டு நடுகற்களும் கரூரில் கிடைத்தவை. ஒன்று கருவூர் என்றும் மற்றது வஞ்சி என்றும் குறிப்பது மிகவும் இன்றியமையாத சான்றுகளாகும். இதிலிருந்து எட்டாம் நூற்றுண்டில் திருச்சிக் கரூர், கருவூர் என்றும் வஞ்சி என்றும் பெயர் பெற்றிருந்தது என்பது தெளிவு.

### செப்பேடுகள்

இக்காலத்தில் செப்பேட்டிலிருந்தும் இது கருவூர் என அழைக்கப்பட்டது எனக் காண்கிறேம். 8-ம் நூற்றுண்டில் திருச்சி பல்லவர் தொடர்பு கொண்டிருந்தது. தகடூர் அதியமான் பல்லவருக்குக் கீழ்ப்பட்டு ஆண்டான். பாண்டிய மன்னர் பராந்தக வரகுணன் அதியனை ஆயிரவேலிலூரிலும் புகளூரிலும் வெற்றி கண்டான் என்று சீவரமங்கலம் செப்பேடுகளும் அவனுக்கு உதவியாக வந்த காடவனைக் கருவூரிலும் வென்றுன் என்று தளவாய்புரம் செப்பேடுகளும் கூறுகின்றன. இதிலிருந்து இரண்டும் ஒரே சண்டையைக் குறிக்கின்றன என்பதும் தெளிவு. முதலில் புகழூரிலும் அடுத்துக் கருவூரிலும் தொடர்ந்து பாண்டியன் வெற்றி பெற்றிருக்கிறுன். ஆதலின் திருச்சிக் கரூர் எட்டாம் நூற்றுண்டில் கருவூர் எனப் பெயர் பெற்றிருந்தது என்பது செப்பேடுகளிலிருந்தும் வெளிப்படுகிறது.

கரூரில் கிடைத்துள்ள 12-ம் நூற்றுண்டுக் கல்வெட்டுகள் வஞ்சி மாநகரான முடிகொண்ட சோழபுரம் என்னும் வஞ்சி மாநகரமான கருவூர் என்றும் பசுபதிச்சுரர் கோயில் கல்வெட்டும், வஞ்சி ஸ்ரீவைஷ்ணவரோம் என்று அரங்கநாதர் கோயில் கல்வெட்டும் கருவூரான வஞ்சி மாநகர் என்று நெரூர்க் கல்வெட்டும் கூறுவதிலிருந்து 12-ம் நூற்றுண்டில் கருவூர் எனவும் வஞ்சி எனவும் இது பெயர் பெற்றிருந்தது என்பதில் ஐயமில்லை. ஆதலின் கல்வெட்டுச் சான்றுகளிலிருந்து கி. பி. முதல் நூற்றுண்டுத் தொடங்கி 12-ம் நூற்றுண்டு வரைத் திருச்சிக் கரூர் கருவூர் எனப் பெயர் பெற்றிருந்தது என்பது ஐயத்திற்கே இடமில்லாத செய்தியாகும். இதற்குத் தொடர்ந்து வஞ்சி என்னும் பெயரும் இருந்தது என்பதும் தெளிவு.

### தொல்லியல் சான்று

திருச்சி கரூர் இதுகாறும் தொல்லியல் முறைப்படி அகழ்வாய்வு செய்யப்படவில்லை. அண்மையில் தமிழ்நாடு அரசு இங்கு அகழ்வாய்ந்துள்ளது. இதிலிருந்து இங்குச் சில புதிய சான்றுகள் கிடைத்துள்ளன. சங்ககால எழுத்துக்கள் பொறித்த பானை ஓடுகள் இங்கு கிடைத்துள்ளன. உயர்ந்த மணிகள் சில கிடைத்துள்ளன. பெரிய செங்கல்லால் ஆன கட்டிடம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்திற்கும் மேலாக இங்கு இரண்டே குழிகளில் ரோமானிய மதுக் குடங்களின் பகுதிகள் பல கிடைத்துள்ளன. அகழ்வாய்வு செய்யப்பட்டுள்ள ஒரு சிறு பகுதியில் பல ரோமானியப் பானை ஓடுகள் கிடைப்பது சிறப்பாகும். ரோமானிய நாட்டுடன் திருச்சிக் கரூர் எந்த அளவிற்கு நெருங்கி வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தது என அவை நமக்குத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. இதுபோன்ற ரோமானிய மதுக்குடங்கள் தமிழகத்துக்கு கி. பி. 1, 2, 3-ம் நூற்றுண்டுகளில் கொண்டு வரப்பட்டன என உலகப் புகழ்பெற்ற தொல்லியல் வல்லுநர் சர் மார்டிமர் வீலர் குறித்துள்ளார். ஆதலின்

இவையும் கி.பி. 2-ஆம் நூற்றுண்டில் கரூர் பெற்றிருந்த சிறப்பைக் கூறு கின்றன.

மேலைக் கடற்கரையில் உள்ள கொடுங்கோளூரில் மத்தியத் தொல் பொருள் ஆய்வுத் துறையின் திரு கே. வி. சௌந்திரராஜன் அவர்கள் அகழ்வாய்வு செய்து பார்த்தார். அவரது ஆய்வின் முடிவாக இன்றுள்ள கொடுங் கோளூர்ப் பகுதியில் கி. பி. 9-ஆம் நூற் ருண்டிலிருந்து தான் மக்கள் வாழ்ந் துள்ளனர். அதற்கும் முன்னர் மக்கள் வாழ்ந்த தடயங்களே கிடைக்கவில்லை என்பது தெளிவாயிற்று. இக் கருத் துப்படி உள்நாட்டுக் கருவூரே சங்கச் சேரர்களது தலைநகராக இருந்திருக்க வேண்டும் என்பதாம்.

காசுகள்

பண்டைய மேலைநாட்டு நாகரிகங் களில், ரோமானிய நாகரிகம் சிறந்த காலத்தில்தான் தமிழகத்தில் சங்ககால நாகரிகம் மேலோங்கி நின்றது. ரோமா னிய வரலாறு பல ஆதாரங்கள் கொண்டு நன்கு அறியப்பட்டதாகும். அந்நாகரீக மக்களும் சங்ககாலத் தமிழ் மக்களும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்த காரணத்தால் சங்க காலத்தை வரை யறை செய்து கொள்வது எளிது. ரோமானியரது வாணிகத் தொடர்பை உறுதிசெய்யும் வகையில் ஏராளமான ரோமானியக் காசுகள் கிடைத்துள்ளன. தென்னிந்தியாவில் ரோமானியக் காசு கள் கிடைத்துள்ள இடங்களை குறித் தால் பெரும்பாலான இடங்கள் கரூரைச் சுற்றியுள்ள கோவை மாவட்டப் பகுதி களிலேயே உள்ளதைக் காணலாம். கரூரில் மட்டும் சுமார் 60, 70 ஆண்டு களுக்கு முன்னரே 1000-க்கு மேற்பட்ட ரோமானியக் காசுகள் பூமிக்கடியில் இருந்து இரு முறை கிடைத்துள்ளன. கரூரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதி யிலும் இவ்வளவு ரோமானியக் காசுகள் கிடைப்பதிலிருந்து கரூர் முதல் நூற்றுண் டில் எவ்வளவு சிறந்த நகராக இருந் திருக்க வேண்டும் என ஊகிக்கலாம். (புகளூர்க் கல்வெட்டில் ஒருபொன்வாணி கன் குறிக்கப் பட்டுள்ளதையும் இங்கு நினைவிற் கொள்ளல் தகும்).

மேல்நாட்டார் குறிப்பு :

கி.பி. இரண்டாம் நூற்றுண்டில் தமிழ் நாட்டிற்கும் ரோமானிய நாட்டிற்கும் நடந்த வாணிகத்தைக் குறித்துள்ள தாலமி என்ற மேலைநாட்டார் சேரர் களின் தலைநகர் கரூர் என்றும் அது உள் நாட்டில் இருந்தது என்றும் எழுதியுள் ளார்.

சங்க இலக்கியங்களில் அகப்பாடல் ஒன்றில் கருவூர் குறிக்கப்பட்டுள்ளது. முதல் நூற்ருண்டுப் புகளூர் கல்வெட் டிலும் 8 ம் நூற்ருண்டுக் கல்வெட்டுகளி லும் செப்பேடுகளிலும் சம்பந்தர், சேக் கிழார் முதலியோர் பாடல்களிலும் கருவூர் குறிக்கப்படுவதிலிருந்து இது ஓர் ஊரின் பெயரே என்பதில் ஐயத் துக்கு இடமேயில்லை. கருவூர் ஏறிய பெருஞ்சேரல் இரும்பொறை கருவூர் முற்றியிருந்தான் முதலிய சொற்றொடர் களும், சங்கப் புலவர்கள் பலர் கருவூ ரைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படு வதாலும் கருவூர் பண்டைய ஊர் என்பதில் ஐயமில்லை.

இதிலிருந்து திருச்சி மாவட்டக் கருவூர் சேரர்களின் தலைநகராயிருந் துள்ளது, சங்க காலச் சேரர் அங்கி ருந்து ஆண்டிருக்கின்றனர், அவர்கள் கி.பி. முதல் நூற்ருண்டைச் சேர்ந் தவர்கள் என்பதும் தெளிவு.

கருவூருக்கும் வஞ்சிக்கும் உள்ள தொடர்பு

கருவூருக்கும் வஞ்சிக்கும் என்ன தொடர்பு என்பது மற்றக் கேள்வி. சிலர் மேலைக் கடற்கரையில் உள்ளதே வஞ்சி; அதுவே கருவூர்; திருச்சிக்கு அருகில் உள்ளதும் கருவூர்தான். ஆனல் அது சேரர் தலைநகர் அல்ல

என்பர். ஆதலின் இரண்டிற்கும் உள்ள தொடர்பைக் காண்போம்.

சங்கப் பாட்டில் ஆன்பொருநைக் கரையில் கருவூர் இருக்கிறது என்று கூறப்பட்டுள்ளது. அதே போன்று சேரர் வஞ்சியும் ஆன்பொருநைக் கரையில் உள்ளது என்று சங்க இலக்கியம் தெளிவாகக் கூறுகிறது. கருவூரும் வஞ்சியும் ஒன்றே என்னும் கருத்துச் சங்க காலத்திலேயே இருந்தது என்பது தெளிவு. கல்வெட்டுகள் கருவூரே வஞ்சி எனக் குறிப்பதையும் கண்டோம். ஆதலின் கொங்குக் கருவூரே வஞ்சி என்பதும் அதுவே சங்ககாலச் சேரர் தலைநகர் என்பதிலும் இனி ஐயத்துக்கு இடமில்லை என்பது தெளிவு. பிங்கலந்தையும் திவாகரமும், இன்னும் அடியாருக்கு நல்லாரைத் தவிரப் பிற தொன்மையான உரைகாரர்களான புறநானூற்று உரையாசிரியரும், சிலம்பின் அரும்பத உரையாசிரியரும் பதிற்றுப் பத்து உரைகாரரும் கொங்குக் கருவூரே வஞ்சி எனக் கூறுகின்றனர்.

இங்கு இன்னும் பல ஐயங்களுக்கு பதில் அளிக்க கடமைப்பட்டுள்ளேன். ஆயினும் விரிவு அஞ்சி அவற்றைச் சுருக்கமாகக் கூறிச் செல்கிறேன்.

மேலைக் கடலில் விழும் பேரியாற்றங் கரையில்தான் வஞ்சி இருந்தது என்பது சிலர் வாதம். இதற்கு எவ்வித இலக்கியச் சான்றும் கிடையாது. சேரரது ஆட்சி கொங்குக் கருவூரைத் தலைநகராகக் கொண்டு மேலைக் கடற்கரை வரைப் பரவி இருந்தது. கருவூருக்கு நேர் மேற்கில் அமைந்துள்ள பாலக்காட்டுக் கணவாயே இதற்கு ஏதுவாக இருந்தது. பேரியாறு சேரரது நாட்டுக்குள் ஓடும் ஓர் ஆறு. ஆதலின் அதன் அரவம் புகழப்பட்டுள்ளது. அவ்வளவு தான். அதற்குமேல் வஞ்சி பேரியாற்றங் கரையில் இருந்தது என்று கொள்ள எவ்விதச் சான்றும் இல்லை.

ஆகவே, சேரன் செங்குட்டுவனிருந்து ஆண்ட வஞ்சி கருவூரேயாகும். அதனால்தான் காவிரியுடன் ஆன்பொருநையும் குடவனாறும் கலக்கும் கடல் போன்றவன் நீ எனக் கருவூருக்கு அருகில் உள்ள கூடல் பதிற்றுப் பத்தில் குறிக்கப்பட்டுள்ளது. ஆதலின் சங்க காலத்தில் வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு சேரர்கள் ஆண்டதாகக் குறிக்கப்பட்டது அனைத்தும் கொங்குக் கருவூரையே குறிக்கும்.

மேலைக் கடற்கரை மயக்கம்

இவ்வாறு கல்வெட்டு, செப்பேடு, தொல்லியல், காசுகள், இலக்கியங்கள், உரைகள் முதலிய அனைத்தும் கொங்குக் கருவூரே வஞ்சி எனக் குறிக்க, மேலைக் கடற்கரையில் கொடுங்கோளூரே வஞ்சி என்ற மயக்கம் எப்படி ஏற்பட்டது என்ற கேள்விக்கு விடையளித்தல் இன்றியமையாதது. சங்க காலத்துக்குப் பின், முடியுடை வேந்தர் வலி இழந்தனர். அவர்களது குடி தளர்வு கண்டிருந்தது. அந்த நிலையில் களப்பிரரும் வந்தனர். இதற்கடுத்துத் தெற்கில் பாண்டியரும், வடக்கே பல்லவரும் பெருவெள்ளம் போல் தோன்றித் தங்கள் முன்பட்ட அரசுகளையே ஆட்படுத்தி, பேரரசை நிலைநிறுத்தினர். பாண்டியப் பேரரசும் பல்லவப் பேர்ரசும் ஒன்றை ஒன்று சந்திக்கும் களமாகத் திருச்சிக் கருர்ப்பகுதி மாறியது, இவ்விரு பெரும் சக்திகளின் இடையே சிக்கிய சோழர் குடியும் சேரர் குடியும் மெலிந்து இடம் பெயர்ந்தன. சேரர்களுக்கு மேலைக் கடற்கரைப் பகுதி பெரிதும் உதவியது. மேற்குத் தொடர்ச்சி மலைகள் அவர்களுக்கு அரணாக அமைந்தன. ஆதலின் அவர்களது தலைநகரைக் கொடுங்கோளூர் என்ற மகோதைக்கு மாற்றிக் கொண்டு விட்டனர். இது சற்றேறக் குறைய 7-ஆம் நூற்றுண்டில் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆயினும் கொங்குக் கரூர் தொடர்ந்து கருவூர் என்றும் வஞ்சி என்றும் பல நூற்றுண்டுகளுக்கு வழங்கப்பட்டது.

முதலில் அஞ்சைக் களம் என்றும் மகோதை என்றும் வழங்கப்பட்ட நகரமே கொடுங்கோளூர் எனப் பெயர் பெற்றிருந்தது. காலப்போக்கில் சேரர்களைப் பற்றிய வரலாறும், இலக்கியங்களும் கொடுங்கோளூரை மையமாகக் கொண்டு புழங்கத் தலைப்பட்டபோது, சில நூற்றுண்டுகளில் பண்டைய வஞ்சி என்னும் பெயரும் கொடுங்கோளூர்ப் பகுதியில் நிலைபெறத் தொடங்கியிருக்க வேண்டும். இது சற்றேறக் குறைய 9, 10-ம் நூற்றுண்டில் ஏற்பட்டிருக்கக் கூடும். ஆகவேதான் பண்டைய உரைகாரர்கள் அனைவரும் திருச்சிக் கருவூரையே வஞ்சி என்று குறிக்கப் பின்னர் வந்தவர்கள் மேலைக் கடற்கரை நகரை வஞ்சி என அழைத்தனர். இந்நிலைமையையே அடியார்க்கு நல்லார் சற்றுத் தடுமாற்றத்துடன் குறிக்கிருர். சேக்கிழார் பெரிய புராணத்தில் மகோதை கொடுங்கோளூர் என்ற பெயர்களையே பெரும்பாலும் குறித்த போதிலும் வஞ்சி என்று மேலைக் கடற்கரை நகரைக் குறிப்பதும் இந்நிலைமையையே குறிக்கிறது. 12-ம் நூற்றுண்டிற்கும் பிற்பட்ட சுக சந்தேசம், கேரளோத்பத்தி என்னும் நூல்கள் வஞ்சியை மேலைக் கடற்கரையில் உள்ள நகர் என்று குறிப்பதும் பிற்கால வழக்கையே சுட்டுகிறது.

### கொங்குக் கருவூரே வஞ்சி

ஆதலின் கல்வெட்டுகள், செப்பேடுகள் வெளிநாட்டார் குறிப்புகள். தொல்லியல் ஆய்வு, காசுகள், இலக்கியங்கள், பண்டைய உரைகள் ஆகிய அனைத்துச் சான்றுகளும் கொங்குக் கருவூரே சங்கச் சேரர்களின் வஞ்சி என்பதை நிரூபிக்கின்றன. தொன்மையான இச்சான்றுகளுள் எதுவும் மேலைக் கடற்கரையைக் குறிக்கவில்லை. கொடுங்கோளூர் வஞ்சி என்னும் கருத்து 12-ம் நூற்றுண்டுக்குள் உருவானது. அதைப் பிற்கால இலக்கியங்களே கூறுகின்றன. தெளிவான இவ்வளவு சான்றுகள் இருப்பினும் சிலர் இன்னும் கொடுங்கோளூரே சங்க காலச் சேரரின் தலைநகராயிருந்த வஞ்சி கருவூர் என்று குறிப்பார்களானுல் அது அவர்களது விருப்பத்தைக் குறிக்குமே ஒழிய சான்றுடன் கூடிய வரலாற்றை அல்ல. ஆதலின் இங்கு மயக்கத்திற்கு ஏதுமில்லை. புகளூர்க் கல்வெட்டும், கரூர் நடுகற்களும், தொல்லியல் ஆய்வும், கொங்குக் கருவூரே வஞ்சி என ஐயம் திரிபற நிரூபித்துவிட்டன.



# கல்வெட்டுகளில் கருவூர்

நடன. காசிநாதன், எம். ஏ.,
கல்வெட்டாய்வாளர், தொ. ஆ. துறை

கருவூர் என்னும் ஊர்பற்றிச் சுமார் எழுபது கல்வெட்டுகளில் காணமுடிகிறது. பெரும்பாலும் சோழ மன்னன் மூன்றும் குலோத்துங்கனின் வெற்றிச் சிறப்பைக் கூறும் மெய்க்கீர்த்தியில் "மதுரையும், ஈழமும், கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்ட கோப்பர கேசரி ஸ்ரீகுலோத்துங்க சோழன்"[1] என்றுதான் அதிகமாகக் கையாளப் பட்டுள்ளது. ஆனாலும் கருவூர் மிகவும் பழமையான கல்வெட்டிலும் குறிக்கப் பட்டுள்ளது.

திருச்சி மாவட்டத்தில் இன்று ஒரு நகரமாகக் காட்சி அளிக்கும் கரூரின் மேற்கே பத்துக்கல் தொலைவில் புகழூர் என்னும் ஊரில் உள்ள "ஆறு நாட்டார் மலையில்" பொறிக்கப்பட்டுள்ள பல தமிழ்க் கல்வெட்டுக்களுள் ஒன்றில் "கருஊர் பொன் வாணிகன் அதிட்டானம்"[2] என்று கருவூர் காணப்படுகிறது. இக்கல்வெட்டு கி. பி. இரண்டாம் நூற்றுண்டைச் சார்ந்தது என்று கூறப்படுகிறது. அவ்வாறெனில் கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் இதனைக் கருஊர் என்றே அழைத்திருக்கின்றனர். கருஊர் என்ற பெயர் எப்படி அமைந்திருக்கும்? கருவூர் சேரர்களின் தலைநகர் என்று இலக்கியங்கள் பேசுகின்றன[3] ஒரு தலைநகரமானது அது சார்ந்துள்ள நாட்டுக்கு மிக முக்கியமானதல்லவா? அந்நாட்டை ஆளும் மன்னன் அங்கு தானே வாழ்ந்திருக்க வேண்டும். அவ்வாறு அமைந்திருந்த காரணத்தால் அந்நாட்டுக்குக் கருவாக அது அமைந்திருக்க வேண்டும். ஆதலால் அவ்வூரைக் 'கருவூர்' என்றே அழைத்திருக்கின்றனர் என்று கருதலாம்.

மேற்கூறிய புகழூர்க் கல்வெட்டிலிருந்து கருவூரில் பொன் விற்பனை செய்யும் வணிகர்கள் வாழ்ந்திருக்கின்றனர் என்பதும், அவர்களுள் ஒருவனை அத்தி என்பான் சமண முனிவர் ஒருவருக்குப் படுக்கை அமைத்துத் தந்தான் என்பதும் தெரியவருகிறது.

கி.பி. 2-ஆம் நூற்றுண்டிலிருந்து கி பி. 8ஆம் நூற்றுண்டுவரை உள்ள இடைப்பட்ட காலத்தில் கருவூர் பற்றிக் குறிப்பிடும் எந்த கல்வெட்டும் இதுவரைக் கண்டுபிடிக்கப் படவில்லை. கி.பி. 8-ஆம் நூற்றுண்டில் பாண்டிய நாட்டில் பெரும் புகழுடன் ஆட்சிபுரிந்த ஜடிலவர்மன் பராந்தக நெடுஞ்சடையன், இடையாறை, வெண்பைக்குடி, ஆகிய இடங்களில் எதிரிகளைப் புறமுதுகிட்டோடச் செய்துவிட்டு வெற்றித் திருவலம் வருகையில் காடவனைக் கருவூரில் வென்றான் என்று தளவாய்புரச் செப்பேடு கூறுகிறது.[4]

1. ஏ. ஆர். இ 135 ஆப் 1905, 141 ஆப் 1905.
2. கல்வெட்டுக் கருத்தரங்கு—ஐ. மஹாதேவன், பக்கம் 75.
3. அகம், 93: 20—23,
4. பாண்டியன் செப்பேடுகள் பத்து, தளவாய்புரச் செப்பேடு வரி 102—103,

இதே செய்தியை வேள்விக்குடிச் செப்பேடும் "கருதாது வந்தெதிர் மலைந்த காடவனைக் காடடைய"[5] என்று கூறுகிறது. இவைகளில் காணப்பெறும் 'காடவர்' என்பதற்குப் 'பல்லவர்' என்று பொருள் கொள்கின்றனர் வரலாற்றாசிரியர்கள்.

சமீப காலத்தில் தமிழ்நாட்டு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை கரூரில் இரண்டு நடுகற்களைக் கண்டு பிடித்துள்ளது. ஒரு கல்வெட்டு "(ர)வி கோ கலயந் மவந் கருவூரிடைய தந்தாநிரை கொளலெறிந்து பட்டான்" என்றும்; மற்றொன்று "ஸ்ரீவஞ்சி வேளுடியாந்...." என்றும் காணப்படுகின்றன. இவை இரண்டு கல்வெட்டுக்களுமே கி.பி. 8-9 நூற்றாண்டைச் சேர்ந்தவைகளாகக் கருதப்படுகின்றன. இரண்டுமே அப்பொழுது அப்பகுதியில் ஆண்ட மன்னன் பெயரைக் குறிப்பிடவில்லை யென்பது ஈண்டு உணரற்பாலது. முதலாம் கல்வெட்டில் 'கருவூர்' குறிக்கப்படுகிறது. இரண்டாம் கல்வெட்டில் 'வஞ்சிவேள்' என்னும் சொற்றொடர் காணப்படுகிறது. கி.பி. 8-9 ஆம் நூற்றாண்டிலும் இவ்வூர் கருவூர் என்றே வழங்கப் பட்டது என்பதும்; இப்பகுதியில் வஞ்சிவேளிர் வாழ்ந்தார்கள் என்பதும் புலனாகிறது.[6] வஞ்சிக்குப் புறத்தே 'வேள் ஆவிக் கோமான்' என்ற வேளிர் குலத் தலைவனின் மாளிகை இருந்தது என்பது ஈண்டு வேளிர் இன மக்கள் வாழ்ந்தார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது. (சிலம்பு நடுகற்காதை : வரி.19[illegible].198). கருவூருக்கு மற்றொரு பெயர் வஞ்சி என்பதால் அங்கு வாழ்ந்த வேளிர் வஞ்சிவேள் என்று அழைக்கப்பட்டனரா அல்லது மைசூர்ப் பகுதியில் உள்ள வஞ்சி நாடு[7] என்னும் ஊரிலிருந்து அவ்வேளிர்கள் வந்ததன் காரணமாக வஞ்சி வேளிர்கள் என்று பெயர் சூட்டிக் கொண்டனரா என்பது தெரியவில்லை.

கி.பி. 8ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 11ஆம் நூற்றாண்டு வரைக் கருவூரைப் பற்றிக் குறிப்பிடும் எந்தவொரு கல்வெட்டும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இடைப்பட்ட காலத்தில் சோழநாட்டில் பெரும் பேரரசர்கள் ஆண்டிருக்கின்றனர். விஜயாலயன் முதல், முதலாம் இராஜேந்திரன் வரை இந்தக் காலக்கட்டத்தில் ஆட்சி புரிந்திருக்கின்றனர். அந்த மன்னர்களில் ஒருவராவது கரூரை வெற்றி கொண்டதாகத் தங்கள் கல்வெட்டுக்களில் குறித்துக் கொள்ளவில்லை. ஆனால், இப்பகுதி சோழர்களின் ஆதிக்கத்தின்கீழ் இருந்து வந்தது என்பது சோமூர்க் கல்வெட்டிலிருந்து புலனாகிறது.[8]

கி.பி. 11ஆம் நூற்றாண்டில் சோழக் கட்டிலில் அமர்ந்து அரசு புரிந்த ஸ்ரீவீரராஜேந்திர சோழனின் (கி.பி. 1064-70) காலத்தில் அதிராஜராஜ மண்டலத்தைச் சேர்ந்த வெங்கால நாட்டில் அடங்கிய ஊராகக் கருவூர் இருந்ததாகக் கருவூர் பசுபதீஸ்வரர் கோயிலில் காணப்படும் கல்வெட்டால்[9] அறிய முடிகிறது.

கி.பி. 1178 இலிருந்து கி.பி. 1218 வரை ஆட்சி புரிந்த மூன்றும் குலோத்துங்கனின் காலத்தில் "அதிராஜ மண்டலம்" என்பது "கொங்கான சோழ கேரள மண்டலம்" என்று அழைக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து கொங்குநாடு என்று

---

5. வேள்விக்குடிச் செப்பேடு—வரி 92
6. நாகசாமி. இரா. வரலாற்றுப் பேரவையின் சார்பில் நடந்த முதல் கூட்டத்தில் படித்த கட்டுரை.
7. A Topographical list of the inscriptions of the Madras Presidency, Salem, 135.
8. ஏ. ஆர். இ. 67, 68, 690/1890.
9. S. I. I. Vol. III, Part I, No. 20.

அழைக்கப்பட்டிருந்து பின்னர்த்தான் சோழ கேரள மண்டலம் என்று மாற்றப் பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. அம்மண்டலத்தில் 'வெங்கால நாட்டில் கருர் என்னும் முடிவழங்குசோழபுரம்'' அடங்கியிருந்திருக்கிறது. மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் கருவூருக்கு முடிவழங்கு சோழபுரம் என்ற பெயர் வழங்கி வந்திருக்கிறது.

இம்மன்னன் காலத்தில் கருவூர் திரும்ப வும் தனது பழம் பெருமையை நிலை நிறுத்தித் திகழ்ந்திருக்கிறது. இம்மன் னன் காலத்தில் இப்பகுதியில் சேரரது கிளையைச் சேர்ந்த ஒரு மன்னன் சீரோடும் சிறப்போடும் ஆட்சிபுரிந் திருக்கக் கூடும். அதிகைமானின் வழி வந்த விடுகாதழகிய பெருமாள் என்னும் மன்னன் இப்பகுதியில் ஆண்டுவந்த தாகத் தெரிகிறது.[10] அம்மன்னனைத் தோற்கடித்துக் கருவூரைக் கைப்பற்றி யிருக்கக்கூடும் மூன்றும் குலோத்துங்கச் சோழன். அதனுற்றான், அவன் தனது பெரும்பாலான கல்வெட்டுக்களில் ''ஈழமும் மதுரையும் கருவூரும் பாண்டி யன் முடித்தலையும் கொண்ட கோப்பர கேசரி''[11] என்று புகழ்ந்து கொள் கிருன் என்று தோன்றுகிறது. கருவூர் ஒரு சாதாரணச் சிற்றூராக இருந்திருந் தால் அதை வெற்றி கொண்டதைக் குலோத்துங்கச் சோழன் அவ்வளவு பெருமையாகக் கூறிக் கொண்டிருக்க மாட்டான் அல்லவா? இந்தப் பெரும் வெற்றியைக் குறித்திடும் சொற்ருெடர் மூன்று விதமாகக் கல்வெட்டுகளில் காணப்படுகிறது. அவையாவன,

1. ஈழமும் மதுரையும் கருவூரும் பாண் டியன் முடித்தலையுங் கொண்ட கோப்பரகேசரி[12] என்றும்,

2. மதுரையும் கருவூரும் ஈழமும் பாண் டியன் முடித்தலையும் கொண்ட கோப்பரகேசரி[13] என்றும்,

3. ஈழமும் மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கருவூரும் கொண்ட கோப்பரகேசரி[14] என்றும் ஆகும்.

கருவூருக்கு அருகில் உள்ள நெரூரில் எழுந்தருளியிருக்கும் பெருமாள் கோயி லில் காணப்படும் கல்வெட்டு ''வஞ்சிமா நகரமான கருவூர்''[15] என்று கூறுவதால் கருவூருக்கு வஞ்சி என்னும் பெயர் தொடர்ந்து இருந்து வந்தமை தெரிய வருகிறது.

மூன்றும் குலோத்துங்க சோழனுக் குப்பிறகு கி.பி. 17-18 ஆம் நூற்ருண்டு வரை இவ்வூர் கல்வெட்டுகளில் காணப் படவில்லை. சொக்கலிங்க நாயகர் காலத் தில் இவ்வூரில் ஒரு சத்திரம் ஏற்படுத்திப் பிராமணர்களுக்கு உணவளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது என்பதைக் கருவூர் பசு பதீஸ்வரர் கோயிலில், முன்னுல் உள்ள கோபுர வாயிலில் எழுதப் பெற்றுள்ள கல்வெட்டால்[26] அறிய முடிகிறது.

10. S. I. I. Vol. I, No. 75.
11, 12. ஏ. ஆர். இ. 61 ஆப் 1890.
13. 405 ஆப் 1908.
14. 135 ஆப் 190்.
15. ஏ. ஆர். இ. 335, 349 ஆப் 1928.
16. ஏ. ஆர். இ. 142 ஆப் 1905.

# கல்வெட்டுகளில் கருவூர்

ச. ஹரிஹரன், எம். ஏ.,
கல்வெட்டாய்வாளர், தொ. ஆ. துறை.

திருச்சி மாவட்டத்திலுள்ள கருவூர் மிகப்பழமை வாய்ந்த வரலாற்றுச் சிறப்பிணைத் தன்னகத்தே கொண்டு பொலிவுடன் விளங்குகிறது. தமிழகத்தை ஆட்சிபுரிந்த மூவேந்தருள் சேரருக்குத் தலைநகரமாக 'வஞ்சி' என்னும் பெயரில் அழைக்கப்பட்டு வந்தது இக்கருவூர். இதனைத் திவாகரமும் பிங்கலந்தையும் 'வஞ்சி கருவூர்' என வழங்குகின்றன. வஞ்சியென வருமிடங்களிலெல்லாம் கருவூர் என்றே பண்டைய உரையாசிரியர்கள் விளக்கிக் கூறுகிறார்கள். இக்கருவூரைச் சங்க இலக்கியங்கள் வஞ்சியென்றே அழைக்கின்றன. சங்க கால இலக்கியங்களின் வாயிலாகத் தமிழ்நாட்டிற்கும், ரோமாபுரிக்கும் வாணிகத் தொடர்பு இருந்ததாக அறிகிறோம். அதற்கு ஆதாரமாகத் தமிழகத்தில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளில் பாண்டிச்சேரிக்கு அன்மையிலுள்ள அரிக்கமேட்டிலும், மகாபலிபுரத்திற்கு அருகாமையிலுள்ள வசவசமுத்திரத்திலும், காஞ்சிபுரத்திலும் ரோமாபுரியிலிருந்து தமிழகத்திற்குக் கொண்டு வரப்பட்ட மதுக்குடங்களும், மட்பாண்டங்களும், ரோமாபுரியின் தங்கக் காசுகளும் கண்டுபிடிக்கப்பட்டன. தமிழகத்தில் மற்ற இடங்களிலும் அகழ்வாராய்ச்சிகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க பழம்பொருள்களேயல்லாமல் ரோமானியத் தங்கக் காசுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவ்விடங்களில் மிகவும் குறிப்பிடத்தக்கது இக்கருவூர். தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ரோமானிய தங்கக் காசுகளில் ஐந்நூறுக்கு மேற்பட்ட காசுகள் இங்குதான் கண்டுபிடிக்கப்பட்டன. இக்காசுகள் ரோமாபுரியில் ஆட்சி செலுத்தி வந்த அகஸ்டஸ். டைபீரியஸ், கிளாடியஸ், மார்க்கஸ், அரிலியஸ் போன்ற மாமன்னர்களின் காலத்தில்வெளியிடப்பெற்றவை. யவன ஆசிரியரான தாலமி தமது நூலில் இதை உள்நாட்டுத் தலைநகர் என குறிப்பிட்டிருக்கிறார். இத்தகைய சிறப்பு வாய்ந்த இப்பண்டையச் சேரரின் தலைநகரமாக விளங்கிய கருவூரைத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையினர் அகழ்ந்தெடுத்தபொழுது தரை மட்டத்திற்குக் கீழே 10 அடி ஆழத்தில் 13" 13" 4" அளவுள்ள சுட்ட செங்கற்களால் கட்டப்பெற்ற பழமையான அழிந்த கட்டடத்தின் பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அக்கட்டடப் பகுதி கண்டுபிடிக்கப்பட்ட ஆழத்திலேயே ரோமானிய மதுக்குடங்களின் பகுதிகளும், ரோமர் மட்பாண்ட ஓடுகளும் 'தமிழ்' எழுத்துக்கள் பொறிக்கப்பெற்ற பானை ஓடுகளும், வண்ணம் பூசிய ஓடுகளும், சங்கு வளையல் துண்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டன. மேற்கூறிய கண்டுபிடிப்பிலிருந்து சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இக்கருவூர் ரோமாபுரியிடம் தொடர்பு கொண்டிருந்ததை அறிய முடிகிறது.

மேற்கூறிய இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க கருவூரில் பசுபதீஸ்வரர் சிவாலயம் ஒன்றுள்ளது. அவ்வாலயத்தில் இருபத்தோரு கல்வெட்டுகள் பொறிக்கப்பட்

டுள்ளன. அவ்விருபத்தோரு கல்வெட்டுகளில் பதினேழு கல்வெட்டுகள் மிகச்சிறந்த வரலாற்றுச் செய்திகளை நமக்கு அறிவிக்கின்றன. இக்கல்வெட்டுகள் முதலாம் இராஜேந்திரன், இரண்டாம் இராஜேந்திரன், வீரராஜேந்திரன், விக்கிரமசோழன், மூன்றும் குலோத்துங்கன், மூன்றும் இராஜேந்திரன், சொக்கநாத நாயக்கர் காலத்தைச் சார்ந்தவை.

முதலாம் இராஜேந்திரனின் (கி.பி. 1012-1044) ஒன்பதாம் ஆட்சி ஆண்டில் பசுபதீஸ்வரர் கோயிலின் செலவிற்காக அதிராஜராஜ மண்டலத்திலுள்ள வெங்கல நாட்டு பிரிவில் நெல்வாய்ப்பள்ளி என்ற கிராமம் இம்மன்னனுல் கொடையாக அளிக்கப்பெற்றது. மேலும் இக்கோயிலின் நலனுக்காக மக்களிடமிருந்து பெறும் எலவை, உகவை மன்றுபாடு, தண்டகுற்றம் போன்ற வரிகளின் மூலம் வரும் தொகையும் இக்கோயிலுக்குக் கொடையாக அளிக்கப்பெற்றன. இக்கல்வெட்டின்மூலம் நம் நாட்டில் பதினென்றும் நூற்றுண்டு அளவில் நிலவி வந்த வரிகளைப் பற்றியும் நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

இரண்டாம் இராஜேந்திரனின் (கி.பி. 1052-64) ஒன்பதாம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு வெங்கல நாட்டுப் பிரிவிலுள்ள கணவதிநல்லூர் என்னும் ஊரை இக்கோயிலுக்குக் கொடையாக அளிக்கப்பெற்ற செய்தியைக் குறிப்பிடுகிறது.

இக்கோயிலில் காணப்படும் மூன்றும் குலோத்துங்க சோழனின் (1178-1217) கல்வெட்டுகள் மிகவும் சிறப்பான செய்திகளை அறிவிக்கின்றன. மேலும் இம்மன்னன் காலத்தில் குறிப்பிட்ட சமுதாயத்தினருக்கு இருந்த உரிமைகளை அறிய ஏதுவாகவும் இருக்கிறது. இம்மன்னனின் இருபத்தைந்தாம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு தேவனும்பள்ளி என்ற கிராமத்தைச் சேர்ந்த மக்கள் பசுபதீஸ்வரர் கோயிலுக்கு மூன்று கழஞ்சுபொன்னுக்குச் சில நிலங்களை விற்றனர். இவ்வாறு விற்றுவந்த தொகையை ஒரு வேடன் இக்கோயிலின் கருவூலத்தில் சேர்த்தான். இக்கல்வெட்டில் காணப்படும் தேவனும்பள்ளி என்ற ஊர் கருவூருக்குக் கிழக்கே ஐந்து மைல் தொலைவில் சோமூர் என்னும் பெயரில் உள்ளது. இவனுடைய மற்றொரு கல்வெட்டு தட்டையூர் நாட்டிலுள்ள இரண்டு கிராமங்களைப் பசுபதீஸ்வரர் ஆலயத்திற்குக் கொடையாக அளித்தமையையும் கூறுகிறது. மேலும் இவனுடைய 37வது ஆட்சி ஆண்டின் கல்வெட்டு அவனுடைய ஆட்சிக்காலத்தில் நிலவிய நிலச்சீர்திருத்தங்களையும் முறைப்படுத்தப்பட்ட அளவு முறைகளையும் நன்கு குறிப்பிடுகிறது. நிலங்கள் அளக்கப்பெற்று வரையறுக்கப்பட்டிருந்தன. இக்கல்வெட்டு 12 அடி கொண்டது ஒரு குழி என்று குறிப்பிடுகிறது. இக் 'குழி' என்ற சொல் இன்றும் தமிழகத்தில் நிலவி வருகிறது. இவ்வூருக்கு ஆறுமைல் தொலைவிலுள்ள புலியூர் என்ற ஊரில் உள்ள கல்வெட்டின் மூலம் ஐந்நூறு குழி கொண்டது தான் ஒரு 'மா' நிலத்திற்கு சமம் என்ற செய்தியை அறிய முடிகிறது. ஏறத்தாழ எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்த புலியூர் என்ற பெயர் இன்றும் வழங்கி வருவது குறிப்பிடத் தக்கதாகும். இம்மன்னனுடைய இருபத்தொன்றுவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு 'ஆதிச்சமங்கலம்' என்ற கிராமத்தை நிலக்கொடையாகப் பசுபதீஸ்வரருக்கு அளித்ததைக் குறிக்கிறது. இவனுடைய மூன்றும் ஆட்சி ஆண்டின் கல்வெட்டும், சமுதாயத்தில் குறிப்பிட்ட பிரிவினர்களுக்கு அளிக்கப்பெற்ற உரிமைகளை அறிவிக்கின்றன. இக்கோயிலில் பணிபுரியும் பணிமக்களுடைய திருமணங்களிலும், சவ ஊர்வலங்களிலும் இரண்டு சங்குகள் ஊதலாமென்றும், மத்தளங்கள் அடிக்கலாமென்றும், அவர்கள் இரண்டு மாடிகள் கொண்ட வீடுகளை அமைத்துக் கொள்ளலாமென்றும்,

அவ்வீடுகளுக்கு வெள்ளை முதலிய அடித்துக் கொள்ளலாமென்றும், அவ் வீடுகளுக்கு இரண்டு கதவுகள் வைத்துக் கொள்ளலாமென்றும், வீட்டின் வெளிப் பகுதியினை அல்லி மாலைகளால் அலங் கரித்துக் கொள்ளலாமென்றும் இம்மன் னனின் மூன்றும் ஆட்சி ஆண்டு கல் வெட்டு கூறுகிறது. மேற்குறிப்பிட்ட உரிமைகளை அளிக்கும் அதிகாரம் அக் காலத்தில் அரசனிடமிருந்து வந்தது. மேலும் சமுதாயத்திலுள்ள மற்றப் பிரி வினர் இவ்வுரிமை பெறவில்லை என்பதை நினைக்கும் பொழுது "சம உரிமை", "சமத்துவம்" என்ற கொள்கைகள் மல ராது இருந்த நிலைமையை உணர முடிகிறது. வீடு கட்டிக் கொள்வதற்குக் கூட சமுதாயத்தில் கட்டுப்பாடுகள் நிலவிவந்தது குறிப்பிடத்தக்கதாகும். இவனுடைய பதினைத்தாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு வெங்கலநாட்டுப் பிரிவிலுள்ள கண்மாளர் (கம்மாளர்) என்ற வகுப்பினருக்குத் திருமணங் களிலும், சவ ஊர்வலங்களிலும் இரண்டு சங்குகள் ஒலிக்கலாமென்றும், மத்தளங் கள் கொட்டலாமென்றும், அவர்கள் மிதியடிகளை (செருப்புகளை)ப் பயன்படுத் தலாமென்றும், வீட்டிற்கு வெள்ளை முதலியன அடிக்கலாமென்ற உரிமை களைக் குறிப்பிடுகிறது. மேற்கூரிய உரி மைகளைப் பெற்ற கோயில் பணிமக் களும் கண்மாளர்களும் சமுதாயத்தில் தலைசிறந்தவர்களாகவும், குறிப்பிடத் தக்கவர்களாகவும் இருந்திருக்க வேண் டும். ஏனெனில்மற்ற பிரிவினர்கள் பெருத உரிமைகளை இவர்கள் பெற்றமைக்குக் காரணம் சமுதாயத்தில் இவர்களுக் களிக்கப்பெற்ற முக்கியத்துவமேயன்றி வேருென்றும் இல்லை. சற்றேறக்குறைய 800 ஆண்டுகளுக்கு முன்பு நிலவிய சமூகக் கட்டுப்பாடுகளை அறிவதற்கு இக் கல்வெட்டுகள் மிகவும் துணைபுரிகின்றன.

இங்குக் காணப்படும் முதலாம் வீர ராஜேந்திரனின் நான்காம் ஆட்சி ஆண் டுக் (கி. பி. 1063—70) கல்வெட்டு அதி ராஜராஜ மண்டலத்தில் வெங்கல நாட்டுப் பிரிவிலுள்ள பாக்கூர் என்ற கிராமத்தைப் பசுபதீஸ்வரர் ஆலயத் திற்குக் கொடையாக அளித்தமையைக் குறிப்பிடுகிறது. தற்பொழுது இப் பாக்கூர் என்ற ஊர் கருவூருக்கு மேற்கே நாற்பத்தைந்துமைல் தொலைவிலுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

விக்கிரம சோழனின் (1118-1135) மூன் றும் ஆட்சி ஆண்டுக்கல்வெட்டு, கருவூர் வீரசோழ மண்டலத்தில் வெங்கல நாட்டுப் பிரிவிலுள்ளது என்ற செய்தி யைக் குறிப்பிடுகிறது. இம்மன்னனுடைய பன்னிரண்டாம் ஆட்சி ஆண்டுக் கல் வெட்டு ஒரு கிராமத்தை இக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனுக்குக் கொடையாக அளிக்கப்பெற்றமையைக் குறிக்கிறது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் 'திருஆனேஸ்வரமுடையார்' எனக் கல்வெட்டில் குறிக்கப்படுகிருர்.

இராஜராஜ தேவனின் இருபத்தினுன் காவது ஆட்சி ஆண்டு கல்வெட்டு ராமைய்ய கவுண்ட நாயகன் என்பவ னும் குப்பண்ண கவுண்ட நாயகன் என் போனும் அறுபது பணத்திற்கு சில தேவஸ்தான நிலங்களை வாங்கி இக் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவ னுக்குக் கொடையாக அளித்தமையைக் குறிக்கிறது.

இக்கோயிலில் காணப்படும் மூன்றும் இராஜேந்திரனின் (கி. பி. 1246—1278) இருபத்துமூன்றும் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு அனந்தலூர் என வழங்கும் வீரசோழ நல்லூர் இக்கோயிலில் பணி புரியும் பணியாட்களின் நிருவாகத்தைக் கவனிப்பதற்காக கொடையாக அளிக் கப்பெற்றது என்ற செய்தியை குறிப்பிடு கிறது. வீரசோழன் என்பது இம்மன்ன னின் பட்டப் பெயர்களுள் ஒன்றுகும். ஆகவே இம்மன்னனுடைய பட்டப் பெயரைக்கொண்டு வழங்கிய ஊர் வீர சோழ நல்லூராகிய அனந்தலூர் ஆகும்.

பதினேழாம் நூற்ருண்டைச் சேர்ந்த சொக்கலிங்க நாயக்கருடைய கல்வெட்டொன்று சில நாயக்கர்கள் ஒரு சத்திரத்தை கருவூரில் நிறுவி அந்தணர்களுக்கு உணவளிப்பதற்காக ஏற்படுத்தினர் என்றும், மேலும் இப்பணிக்காக இரண்டு கிராமங்கள் கொடையாக அளிக்கப்பெற்றன என்றும், குறிப்பிடுகிறது.

சில கல்வெட்டுகள் அதிராசராச மண்டலத்தில் (கொங்குநாட்டில்) இருந்ததென்றும், மற்றும் சில கல்வெட்டுகள் சோழ கேரளாந்தக மண்டலத்திலிருந்ததென்றும் குறிப்பிடுகின்றன. முதலாம் இராஜேந்திரன் காலத்திலும் இராஜராஜன் காலத்திலும் இக்கருவூர் கேரளாந்தக வள நாட்டிலிருந்தது. இக்கருவூருக்கு வீரசோழபுரம் என்றும், பாஸ்கரபுரமென்றும், முடிவழங்கு சோழபுரம் என்றும் பெயர் இருந்ததாக ஆநிலைக் கல்வெட்டுகளின் மூலம் அறிகிறேம்.

அண்மையில் தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறை கருவூரில் இரண்டு தமிழ் நடுகற் கல்வெட்டுகளைப் படியெடுத்துள்ளது. கல்வெட்டுகள் இரண்டும் கி. பி. 8ஆம் நூற்ருண்டின் எழுத்தமைதியைக் கொண்டவை. முதல் கல்வெட்டு கோக்கலையின் ரவி என்பாரின் மகன் தன் ஆநிரைகளைக் காப்பதில் உயிர் துறந்ததைக் குறிக்கிறது. ஊரின் பெயர் கருவூர் என்று குறிக்கப்படுகிறது. மற்ருெரு கல்வெட்டு தமிழும் வட்டெழுத்தும் கலந்துள்ளது. இதில் வஞ்சிவேள் என்பான் குறிக்கப்படுகிருன்.



# கருவூர்ச் சுற்றுக் கோயில்கள்

## மாரியம்மன்

கருவூரின் நடுப்பகுதியில் அமைந்துள்ளது மாரியம்மன் கோவில். இந்த அம்மனுக்கு ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் திருவிழா நடைபெறும். அதில் ஏராளமான மக்கள் கலந்துகொள்வார்கள். இந்த விழா மிகவும் பிரசித்தமானது. மக்கள் தங்கள் குறைகளைப் போக்குமாறு அம்மனைப் பிரார்த்தனைச் செய்து கொள்வார்கள். பலபேர் அக்கினிச்சட்டி எடுத்து விளையாடிக் காணிக்கைச் செலுத்தும் காட்சி காணத் தகுந்ததாக இருக்கும். இந்த விழாவில் புலி வேடம் பூண்டு ஆடுபவர் பலர்; மற்றும் ஏராளமான மக்கள் பலபல வேடம் பூண்டு விழாவினில் ஆடுகின்ற ஆடல் மிகவும் கண்டுகளிக்கத்தக்கது. கடைசி நாளில் வாணவேடிக்கை மிகவும் பிரபலமாக நடக்கும். ஆன்பொருந்தம் ஆற்றில் பெருங்கூட்டம் திரண்டு வந்து வாண வேடிக்கையைக் கண்டுகளிக்கும்.

இந்த விழா மிக நீண்ட காலமாக நடைபெற்று வருகிறது. சங்க நூல்களில் இந்த விழாவைப் பற்றிய செய்தி வந்துள்ளது. அது வருமாறு :— கருவூர் உள்ளி விழாவில் கொங்கர்கள் மணிகளை இடுப்பில் கட்டிக் கொண்டு ஆடுவார்கள் என்பதாம். உள்ளி என்பது பெண் தெய்வம் என்னும் பொருளுடையதாம். சங்க காலத்தில் உள்ளி[1] விழா என்று வழங்கி வந்து இப்பொழுது மாரியம்மன் பண்டிகை என்று மாறி வழங்கப்படுகிறது.

## வஞ்சியம்மன்

வஞ்சியம்மன் என்பது சேரர் குல தெய்வமாகும். இதுவும் பசுபதி ஈஸ்வரர் ஆலயம் போலப் பழைமை உடையது. இதன் திருவடிகளில் முடிமன்னர் ஒருவர் முடித்தலை வைத்து வணங்குவது போலச் செதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தெய்வம் ஆற்றுவெள்ளத்தால் கொண்டு வரப்பட்டு இவ்விடத்தில் தங்கிச் சேர மன்னர் கனவில் தோன்றி இவ்விடத்தில் தான் குடிகொண்டிருப்பதாகவும் தனக்குக் கோவில் எடுத்து வழிபடுமாறும் கூறியதாகப் பழந்தமிழ் மக்கள் கதை பாடி வருகிறுர்கள். இது சேரர் ஆட்சிக் காலத்தில் பெரிய கோவிலாக இருந்து பின்னர்க் கோவில் பழுதுபடப் பொது மக்களால் சிறிய கோவிலாகக் கட்டப்பட்டுள்ளது என்பது அங்குள்ள சில அடையாளங்களால் தெரியவருகின்றது. இங்குள்ள மக்கள் வஞ்சியம்மன் பெயர் கொண்டு விளங்குவதிலிருந்து இத்தெய்வம் அரசருக்கும் குடிமக்களுக்கும் குல தெய்வம் என்பது துணிபாம். அத்துடன் வஞ்சிமா நகரம் என்னும் பெயர் இந்நகருக்குப் பழங்காலத்தில் வழங்கி வந்த செய்தியையும் இத் தெய்வப் பெயர் வலியுறுத்துகின்றது.

---

1. இவ்விழாப் பற்றிய குறிப்பை அடுத்த பக்கத்தில் காணலாம்.

### வழங்கியம்மன்

இந்த அம்மன் கோவில் இப்பொழுதுள்ள புகைவண்டி நிலையச் சரக்கறைக்கு அண்மையில் இருக்கின்றது. இத் தெய்வம் தொல்காப்பியம் குறிக்கும் கொற்றவை ஆகும். படை வழங்கியம்மன் என்ற பெயர் குறுகி வழங்கியம்மன் என வழங்கப்படுகிறது. சேரர் போர் வெற்றி குறித்து வழிபடுவதும் போர் வீரருக்குப் பெருஞ் சோறு வழங்குவதும் போர்ப் பூ வழங்குவதும் படைகள் வழங்குவதும் இவ்விடத்தில் நிகழ்ந்தன போலும். இத் தெய்வங்களுக்கு மானியமாக ஏராளமான தென்னந் தோப்புகள் உண்டு. நாளடைவில் அவைகளில் சில கை மாறிப் போனதும் உண்டு. மாரியம்மன் பண்டிகைக்கு முன்னர் வஞ்சியம்மன், வழங்கியம்மன், மாவடியாள் ஆகிய தெய்வங்களுக்குத் திருவிழா நடைபெற்று வருகிறது. பழந்தமிழ் மக்கள் இத்தெய்வங்களை மிகவும் ஆதரவோடு வழிபடுகின்றனர்.

## உள்ளி விழாப் பற்றிய குறிப்பு

சி. சத்தியமூர்த்தி, தமிழ்த்துறை, கேரளப் பல்கலைக் கழகம்

"பயிலிருள் காடமர்ந்து ஆடிய ஆடலன்" என இறைவன் ஆடிய கூத்தைப் பாடிய பதிற்றுப்பத்துக் கடவுள் வாழ்த்து அவ்விறைவனுக்கு எடுக்கும் விழாவில் நிகழும் ஓர் கூத்தையும் எடுத்துக் கூறுகிறது. (அரையிற் கட்டிய) வெள்ளிய மணிகள் இரு தொடைகளின் பக்கங்களில் இயக்கப் பெற்று ஒலிக்கும்படி ஆடப்படுவது அக் கூத்து என்கிறது கடவுள் வாழ்த்து. உள்ளிவிழாவின் போது மறுகில் ஆடும் கொங்கர் இடையில் மணிகளைக் கட்டிக் கொண்டு ஆரவாரம்படத் தெருவில் ஆடுகின்றனர் என்கிறது அகநானூறு (368:16-19). இவ்விரண்டிற்குமுள்ள வருணனைப் பொருத்தத்தை ஒருங்கு வைத்து நோக்கினல், அகநானூறு கூறும் உள்ளிவிழாக் கூத்தே பதிற்றுப் பத்துக் கடவுள் வாழ்த்திலும் கூறப்பட்டுள்ளது எனலாம். "விழவினன்" என்ற சொல் மூலம் கூத்து நிகழும் விழாவிற்கு உரியவன் சிவபிரான் என்கிறது கடவுள் வாழ்த்து. அதற்குச் சான்றுவதுபோல் கருவூர்ச் சிவபிரான் ஆநிலைக் கோவிலில் இருக்கும் கல்வெட்டொன்று உள்ளிவிழாப் பற்றிக் குறிப்பிடுகின்றது[2]. இறையனர் அகப்பொருள் 16ஆம் நூற்பா உரையும் இதற்குச் சான்று தருகின்றது:—

"ஊர் துஞ்சாமை என்பது — ஊர் கொண்ட பெருவிழா நாளாய்க் கண்படையில்லையாமாக, அதுவும் இடையீடாம் என்பது. அவை, மதுரை ஆவணியவிட்டமே, உறையூர்ப் பங்குனியுத்திரமே, கருவூர் உள்ளிவிழாவே என இவை போல்வன."

விழாக்கள் நடந்த இடங்களாக மதுரை, உறையூர், கருவூர் ஆகிய மூவேந்தரின் உள்நாட்டுத் தலைநகரங்களையே இவ்வுரை கூறுகிறது. சேரநாட்டு வஞ்சி, சேரவேந்தருக்குக் கடற்கரைத் தலைநகராக இருந்தது போன்று கொங்கு நாட்

---

2. "திருவிடைமருதூரில் உள்ள இரண்டு கல்வெட்டுக்களில் தைப்பூச உற்சவம் குறிக்கப்பட்டிருக்கிறது. கரூரில் உள்ள ஒரு கல்வெட்டில் உள்ளிவிழா என்று ஒரு உற்சவம் குறிக்கப்பட்டிருக்கிறது. 1913ஆம் வருடத்திய 482ஆம் கல்வெட்டில் படிவேட்டை (பாடிவேட்டை அல்லது பரிவேட்டை) உற்சவமும், தோப்புத் திருநாள் (வன போஜன உற்சவம்) என்ற உற்சவமும் குறிக்கப்பட்டிருக்கின்றன" (பம்மல்—பக்கம் : 5)

டிலுள்ள "வெங்கால நாட்டு வஞ்சிமா நகரமான கருவூரும்"[3] சங்க காலத் திலேயே[4] அவர்களுக்கு உள்நாட்டுத் தலைநகரமாக[5] இருந்தது.

"....கொங்கர்
மணியரை யாத்து மறுகின் ஆடும்
உள்ளி விழவின் அன்ன
அலரா கின்றது பலர்வாய்ப் பட்டே"
(அகம் 368:16—19)

"உள்ளி விழவின் வஞ்சி"
(இ. அ. உரை : 28)[6]

"கருவூர் உள்ளி விழாவே"
(இ. அ. உரை : 16)

என்று வரும் மூன்று சான்றுகளும் மேற் காட்டிய கல்வெட்டுச் சான்ருேடு சேர்ந்து கொங்குநாட்டு வஞ்சிமாநகர மான கருவூரில் உள்ளிவிழா நிகழ்ந்த

---

3. M. E. R. 335 of 1927—23.

4. பதிற்று 50 : 5—7 ; 86 : 12 ; புறம் : 13 கொளு.

5. கருவூர் சேரரின் உள்நாட்டுத் தலைநகர் என்பவர் தாலமி, பார்க்க Ancient India as described by Ptolemy (C. 130 A. D.)—Mc Crindle, J. W., London 1885. & க. அ. நீ. சாஸ்திரி பக்கம் : 119, A History of South India, Oxford University Press, Second Edition, 1958.

6. இவ்வடி இறையனுரகப் பொருள் 28ஆம் நூற்பா உரையில் மேற்கோளாக வரும் "சான்ருேர் வருந்திய வருத்தமும்..." என்று தொடங்கும் பாடலைச் சேர்ந்த தாகும். இப்பாடலை நச்சினுர்க்கினியரும் தொல் : களவியல் 23, பொருளியல் : 20 ஆகிய இடங்களில் மேற்கோளாகக் காட்டுகிருர். இம் மூன்று இடங்களிலும்,

"...அடைபொருள் கருதுவி ராயிற் குடையொடு
கழுமலம் தந்த நற்றேர்ச் செம்பியன்
பங்குனி விழவின் வஞ்சியோடு
உள்ளி விழவின் உறந்தையுஞ் சிறிதே"

என்ற வடிவத்தோடு பாடல் காணப்படுகிறது. அகம் : 368, இறையனுர் அகப்பொருள் 16ஆம் நூற்பா உரை ஆகியவற்றை வைத்து நோக்கினுல்,

"பங்குனி விழவின் உறந்தையோடு
உள்ளி விழவின் வஞ்சியுஞ் சிறிதே"

என வருவதே சரியான பாடம் என்பது தெளிவாகும்.

மேற்கண்ட பாடல் நற்றிணை 234 வது பாடலாகக் கருதப்படுகிறது. நற்றிணை யை முதலில் உரையெழுதிப் பதிப்பித்த (1914) பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் அவர்கள் "எனக்குக்கிடைத்த எல்லா படிகளுள்ளும் 234-வது பாடலும், 385 வது பாடலிற் பிற்பகுதியும் காணப்படவில்லை" என்று எழுதுகிருர். நற்றிணையை ஐயர் உரையுடன் தன் இரண்டாம் பதிப்பாக 1956 இல் வெளிட்ட சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகமும், அதன் பதிப்புரையில் "இதுகாறும் காணப்பெருத இருநூற்று முப்பத்து நான்காவது பாட்டினைக் கண்டு இணைத்து" இருப்பதாகக் கூறி இ.அ. 28 ஆம் நூற்பா உரையில் மேற்கோளாக வரும் மேற்கண்ட பாடலை நூன்முகப்பில் பின் னிணைப்பு என்ற தலைப்பில் ஐயரவர்கள் முகவுரையை அடுத்து 15-ஆம் பக்கத்தில் வெளியிட்டுள்ளது. அதன்பின் 1952-இல் வெளிவந்த கழகத்தின் நற்றிணை மூன்ரும் பதிப்பில் அப்பாடல் 234 ஆம் பாடலாக நூல் உள்ளேயே சேர்க்கப்பட்டுள்ளது.

த்தைத் தெரிவிக்கின்றன[7]. அணைத்திலும் விழாப்பெயர் உள்ளி என்றே உள்ளது. இறையனார் அகப்பொருளுரையில் சுட்டப்படும் ஆவணி அவிட்டம், பங்குனி உத்தரம் என்பன இன்ன திங்களில் இன்ன நாளில் விழா நிகழ்ந்தது என்பதைக் குறித்தன. அவ்வண்ணம் குறிக்கப்படாத இவ்விழா நேர்த்திக்கடன் போல நேர்த்து — உள்ளத்தால் உள்ளி — எடுக்கப்படுதல்பற்றி உள்ளிவிழா எனப் பெற்றதுபோலும்[8]. திங்கள்தோறும் மதி, நிறைகலை பெற்றுத் தோன்றும் விண்மீனுக்குரிய நாள், புண்ணிய நன்னாளாகக் கருதப்படுகிறது. முழுநிலவொளி வீசும் அவ்விரவு பகல் போலத் தோன்றி விழா நிகழ்ச்சிகளுக்குப் பெரிதும் உதவும். ஆவணி அவிட்டம், பங்குனி உத்தரம் ஆகியவை நிறைமதி நாட்கள் என்பது வெளிப்படை. ஊர்மக்கள் விழித்திருந்து நிறைமதி நாட்களில் நிகழும் அவ்விழாக்களைக் காண்பதால்[9] காதலர்க்கு இரவுக்குறி

---

7. கருவூர் ஆநிலைக் கோவிலில் பங்குனிப் பெருவிழாவின்போது முன்னாளில் நடந்த சமணரைக் கழுவேற்றுவதாக நம்பப்பட்ட விழாவில் நான்கைந்து பேர் வெறுங் கோவணத்துடனும் இடுப்பில் மணியுடனும் மரச் சட்டங்களில் கண்மூடி இருந்து பின்னர் பூசகர் திருநீற்றை இட்டவுடன் விழித்தெழுந்து யானை வாகனத்திலிருக்கும் இறைவனைக் குதித்துக்கொண்டு மும்முறை வலம்வந்து செல்லும் நிகழ்ச்சி நடந்ததாம்.

இன்னும் புரட்டாசி மாதத்தில் நிகழும் எறிபத்த நாயனார் விழாவில் தன் பட்டத்து யானையை வெட்டியவருடன் போருக்குப் போக நினைத்து இடுப்பில் மணி கட்டிய நடனமாடும் ஆட்களும் அமைச்சரும் உடன்வரப் புகழ்ச்சோழர் செல்லும் நிகழ்ச்சியும் 40 ஆண்டுகளுக்கு முன் நடந்ததாம். இவ்விரண்டு செய்திகளையும் அறியத்தந்தவர் பசுபதீசுவரா கோவில் அறங்காவலர் குழுத்தலைவர் திரு. கே. வி. நடராஜ ஐயாவர்கள்.

கருவூர் தமிழ்ப் புலவர் திரு. கணபதி ஐயா அவர்கள் பின்வருமாறு கருதுகிறார்:- "ஆராய்ந்த அளவில் உள்ளி என்பது இறைவனுடைய ஆறுகோடி மாயாசத்திகளில் ஒன்று என்பது தெரிந்தது. ஆகவே அது ஒரு பெண்தெய்வம் என்பதாயிற்று. அந்தத் தெய்வத்தின் பெயர் உள்ளி—உள்ளியம்மன் என்றிருத்தல் வேண்டும். அவ்வாறு உள்ளியம்மன் என்ற தெய்வம் இப்பொழுது கருவூரில் காணப்படவில்லை. என்றாலும் கொங்கர் மணிகளை இடுப்பில் கட்டிக்கொண்டு தெருவில் ஆடும் விழா ஒவ்வொரு ஆண்டிலும் கருவூருள் வைகாசி மாதத்தில் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. அந்த விழாவுக்கு இப்பொழுது உள்ள பெயர் மாரியம்மன் பண்டிகை என்பது. மாரி என்பது மழை. அந்த மழை வளம் வேண்டி எடுக்கும் விழா மாரியம்மன் விழா. இவ்விழாவுக்கு நெடுந்தூரம் உள்ள மக்களும் வந்து வழிபடுவதும் காணிக்கை செலுத்துவதும் கண்கூடு. இந்த விழாவில் வேடம் பூண்டு தெருவில் ஆடுவதே மிக முக்கியமாகக் கருதப்படுகிறது. ஆகவே, உள்ளி விழா மாரியம்மன் பண்டிகையாக இப்பொழுது நிகழுகின்றது."

மேற்கண்ட இருவர் கருத்துக்களையும் அனுப்பி உதவியவர் கருவூர் பசுபதீசுவரர் கோவில் நிர்வாக அதிகாரி திரு எம். சேதுராமலிங்கம் அவர்கள். இம்மூவருக்கும் என் நன்றி. உள்ளி விழாவின் எஞ்சிய கூறுகள் (Relics) மேற்கண்ட விழாக்களில் காணப்படுகின்றன எனலாம். சமகால நாயன்மார்களான புகழ்ச்சோழர், எறிபத்தர் ஆகிய இருவரும் கி.பி. 400 க்கும் 600 க்கும் இடைப்பட்ட கால கட்டத்தினர் (இராசமாணிக்கனார்: பக்கங்கள்: 93-94, 107, 313). இதனால் அவர்கள் வழிபட்ட கருவூர் ஆநிலைக் கோவிற் பழமை புலனாகும்.

8. ஒ. நோ. "ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்" (புறம் 121 : 1-2)
"உள்ளியது முடித்தி" (பதிற்று (54 : 2)

9. விழித்திருந்து காண்பது விழா என்பர் கால்டுவெல் (கால்டுவெல் பக்கம்: 548)
"மூதூர் விழவின்றாயினும் துஞ்சாதாகும்" (அகம் 122 : 1-2).

கைகூடாது என்று இறையனுர் அகப் பொருள் உரை கூறுகிறது. அந்நாட்களுள் ஒன்ருக வரும் உள்ளிவிழாவும் நிறைமதி நாளில் நிகழ்ந்திருக்க வேண்டும். ஆனுல் அவ்விழாக் கொண்டாடப்பட்ட திங்களும் நாளும் புலனுகவில்லை. உள்ளிவிழாவோடு சேர்த்து உரை குறிப்பிடும் ஏனைய விழாக்களும் சிவ சம்பந்தமானவை[10] இறையனுரகப் பொருளுரையும் சிவநெறியோடு சம்பந்தப்பட்ட பல செய்திகளைக் கூறிச் செல்லும் கொள்கை உடையது. இவையும் உள்ளிவிழா சிவசம்பந்தமுடையது என்பதற்குப் பக்கச் சான்றுகளாய் அமைகின்றன. விழாக்கள் கோவிலில் தொடங்கினும், உலாவருதல் ஆகியன நிகழும்போது வீதிக்கும் விழாக் கொண்டாட்டங்கள் வந்து விடுகின்றன. கோவிலைச் சுற்றி வீதியின் இருமருங்கும் குடியிருக்கும் மக்கள் அவ்விழாக்களிற் பங்குகொள்ளும்போது வீதியும் விழாக்

---

10. கடவுளருக்கு விழா எடுப்பதுபற்றிச் சங்கவிலக்கியங்கள் பாடுகின்றன. (பெரும்பாண் : 410-411; சிவன்—பரி. 11 : 78; திருமால் — ம. கஞ்சி 591; பதிற்று. 15 : 38-39; முருகன்—பட்டினப். 145—160; அகம். 149 : 16; திருமுருகு. 220, 283; பரி. 5 : 14-15; 17 : 42; இந்திரன்—ஐங் : 62) மழுவான் நெடியோனுகிய சிவபிரானுக்கும் அவனைத் தலைவனுகக் கொண்டுள்ள மாயோன் முருகன் முதலாகிய தெய்வங்கட்கும் அந்தி விழவு நிகழ்ந்தது பற்றி மதுரைக் காஞ்சி (453—460) பாடுகிறது. அங்குள்ள சிவபிரான் பற்றியும் ஆலவாய்க் கோவில் பற்றியும் சிலப்பதிகாரம் (13 ; 137 அரும்பதவுரை; 14 : 7) கூறுகிறது. இரையனுராகப் பொருள் உரை குறிப்பிடுவது போல், இன்றும் மதுரையிலுள்ள கோவிலில் ஆவணி அவிட்டத்தன்று திருநீராட்டு விழா நிகழ்கின்றது. எனவே, இவ்விழா மதுரை "ஆலவாயில் அவிர்சடைக் கடவுள்" கோவிலில் அக்காலத்தில் நிகழ்ந்தது எனலாம். ஆவணி அவிட்ட நாளில் வையை வெள்ளப்பெருக்கைப் பரிபாடல் (11 : 1—14) பாடுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

காவிரித் தென்கரையில் உள்ள உறையூர் சோலையில் பங்குனியில் உத்தரமும் நிறைமதியும் கூடிய நன்னுளில் (பங்குனி முயக்கம்—அகம் : 137) பங்குனியுத்தர விழா இன்னிசை முழக்கத்துடன் (அகம் 4 : 14) நிகழ்ந்தது. இப்பங்குனி முயக்கம் காமன் விழா என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. 14 : 111—112) பங்குனி உத்தரம் சிவபிரான் உமையைத் திருமணம் செய்த (சிலம்பு 25 : 133—134) திருவிழாவாகச் சிவன் கோவில்களில் கொண்டாடப்படுகின்றது. காமனை எறித்த சிவபிரான் (சிலம்பு 14 : 7 அ. ந. உரை) தன் திருமணத்தன்று அவனை எழுப்பித் தருவதாக இரதிக்குச் சொல்லி அவ்வண்ணமே செய்தான் என்ற புராண வரலாற்றை நோக்கிலை ஒரே நாளில் தொடர்புடைய இவ்விரு விழாக்களும் நிகழ்வது பொருத்தமாகப்படும். உறையூர்க் கோவில் பற்றிப் பட்டினப்பாலை (286) குறிப்பிடுகிறது. மூவேந்தரும் தொழுக சிறப்புப் பெற்ற (தேவாரம் 2 : 120 : 9), சோழர் பழந்தலை நகராகிய உறையூர் இருக்கும் மூக்கீச்சரம் சிவபிரான் கோவிலில் முன்பு இவ்விழா நிகழ்ந்திருக்க வேண்டும். இன்று அக்கோவிலில் ஆடி முழுமதி நாளிலும் வைகாசி விசாகத்திலும் விழாக்கள் நடைபெறுகின்றனவே தவிரப் பங்குனி உத்தர விழா நடைபெறுவதில்லை என்ற செய்தியை அறியத்தந்த அக்கோவில் நிர்வாக அதிகாரி திரு. R. சீனிவாசன் அவர்கட்கு நன்றி. பங்குனி உத்தர விழாவைச் சிவபிரான் விழாவாக அப்பரும் (4 : 102 : 2) சம்பந்தரும் (2 : 47 : 7) பாடுகின்றனர்.

இறையனுரகப் பொருள் 16ஆம் நூற்பாவுரை கூறும் விழாக்களுள் ஆவணி அவிட்டம் தவிர்த்த ஏனை இரண்டும், அதே நூலின் 28ஆம் நூற்பாவுரை மேற்கோள் பாடலிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

கோலம் பூணுதல் இயல்பே[11]. உள்ளி விழாவின்போது மறுகில் கூத்து நடை பெறுவதாகப் பாடல் கூறுவது இவ்வாறமைந்த ஒன்ருகும். இறைவனுக்கு எடுக்கும் விழாக்களிலும் ஏனைய விழாக்களிலும் கூத்தாடும் நம் மரபுக்கேற்பக்[12] கொங்கரும் உள்ளிவிழாவில் கூத்தாடுகின்றனர். இவ்விழாவை அலர்தூற்றலுக்கு உவமிப்பதிலிருந்து பலரும் பேசிக்கொள்ளும் அளவிற்கு விழாவில் கூடினேர் இடும் ஆரவாரமும், கொங்கர் "மணிஆர்க்கும்" ஆரவாரமும் மிக்கிருந்தது என்பது தெளிவு. மேற்கண்டவை வாயிலாகப் பதிற்றுப்பத்தின் கடவுள் வாழ்த்து, உள்ளிவிழாவையும் அவ்விழாவில் நிகழும் கூத்தையும் குறிப்பிடுகிறது என்பது பெறப்படுகிறது.



11. ஒ. நோ. "மறுகு விழவு" (அகம் 141 : 9—11)
"விழவரு வியலாவணம்" (பட்டினப் 158)
"மறுகின் விழவு" (நற், 348—4)
"தெருவினில் வரு பெருவிழவு" (தேவாரம் 1 : 20 : 4)
"தேர்கொள் வீதி விழவு" (1 : 27 : 7)
"விழவார் மறுகு" (7 : 42 : 6)

12. அகம். 98 : 16-19; 138 : 4 13; பதிற்று. 51 : 10-13; நற். 90 : 1; ம. கஞ்சி, 613-615. 628; தேவாரம் 1 : 12 : 7; 3 : 35 : 3; 6 : 31 : 3; திருவாசகம் 27 : 8.



# "புகழிமலை"



"ஆறுபடை வீடதனில்
அருள்வடிவாய் வீற்றிருக்கும்
சீலன் முருகனுடைச்
சீரடிகள் காண்பவர்க்கு
வேறுபடை வேண்டாம்
வினைமுடிக்கக் கந்தவேல்
ஆறுபடை போதும்
அனைத்தும் கை கூடிவரும்''.

குன்றிருக்கும் இடமெல்லாம் குமரனின் திருப்புகழ் பாடிடும் பெரும் புகழ்கொண்டது தமிழ். இளமை மாருத தமிழுக்கும், எழில் வடிவான தமிழ்க் கடவுள் முருகனுக்கும் நீண்ட நெடிய தொடர்புண்டு. மக்களின் நெருங்கிய தொடர்பால் சிறப்புற்றுத் திருத்தலங்களாய் விளங்கும் முருகனின் ஆறுபடை வீடுகளைத் தவிர, பட்டைத் தீட்டப்படாத வைரமாக, பான்மை குறைந்த முத்தாக, குடத்திலிட்ட விளக்காக எழில் குறைந்து, ஒளியிழந்து புகழ் மங்கிக் காட்சியளிக்கும் குமரனின் திருக்குன்றங்களில் ஒன்று ஆறு நாட்டார்மலை என்று கூறப்படும் புகழிமலை!

இவ் ஆறு நாட்டார்மலை கருவூர்-சேலம் நெடுஞ்சாலையில் கருவூரிலிருந்து 12-வது மைலிலும், காவிரி ஆற்றின் அருகிலும் அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து 448 அடி உயரம் கொண்ட இம்மலையில் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயம் உள்ளது. இவ்வாலயம் அருணகிரிநாதரால்,

"மருவு மலர் வாச முறுகுழலி னாலும்
வரிவிழியி னாலு மதியாலும்
மலையினிக ரான இளமுலைக ளாலு
மயல்கல் தரு மாதர் வகையாலும்
கருது பொரு ளாலு மனைவிமக வான
கடலலையில் மூழ்கி அலைவேனோ
கமலபத வாழ்வு தரமயிலின் மீது
கருணையுட னேமுன் வரவேணும்
அருமறைக ளோது பிரமன்முதல் மாலும்
அமரர்முனி ராஜர் தொழுவோனே
அகிலதல மோது நதிமருவு சோலை
அழகுபெறு போக வளநாடா
பொருதவரு சூரர் கிரியுருவ வாரி
புனல் சுவற வேலை யெறிவோனே
புகலரிய தான தமிழ்முனிவ ரோது
புகழிமலை மேவு பெருமாளே.

எனப் புகழ்ந்து பாடப் பெற்றுள்ளது.

இவ்வாலயத்தின் கட்டிட அமைப்புக் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த நந்தி அரசர்கள் காலத்தில் கட்டப்பட்ட ஆலய அமைப்பை ஒத்தது. இது சேர மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்டது என்று கூறுவாறுமுண்டு. இம் மலை கொங்கு நாட்டின் பகுதிகளான 24 நாடு

களில் கிழங்கு நாட்டில் அமைந்துள்ளது என்பதற்குக் கீழ்வரும்,

“திருவேட்ட மங்கலமும் புகழியூருஞ்
செழியதோட்டக்குறிச்சி தேவரெல்லாங்
கருவேட்டுப் பரவுகடம்பன் குறிச்சி
குருதரிய வாங்கனெரு ராமானூரும்
மருவேட்டுமலர்சேர்கரைகாஞ்சியின்கீழ்
மன்னியெழிற்காவிரித்தென் கரையினிடி
ஒருவேட்டிலெழுத வெண்ணு வளப்ப மெல்லாம்
உயர்ந்தொளிரும் பழம்பதியாங் கிழங்கு நாடே”

என்ற பாடலும் சான்ருகும்.

ஆறு நாட்டார் மலே என்று பெயர் வரக் காரணம் இவ்வாலயத்திற்கு 6 கிராமங்களின் (நாடுகளின்) குடிப்பாடு உண்டென்பதாகும். ஆறு நாடுகளாவன, (1) வேட்டமங்கலம், (2) புகழூர், (3) தோட்டக்குறிச்சி, (4) நன்றியூர்—கடம்பன் குறிச்சி, (5) வாங்கல், (6) நெரூர்.

இவ் வாலயத்திற்கு அக்காலத்தில் மைசூர் நந்தி அரசர்களால் இன்றைய நிலவரப்படி சுமார் 36 ஏக்கர் நன்செய் நிலங்களும், 850 ஏக்கர் புன்செய் நிலங் களும் மான்யமாக விடப்பட்டிருந்தன. ஷை மானிய நிலங்கள் 32 வகையான ஸ்ரீகார்ய ஊழியங்களுக்காகப் பிரித்து விடப்பட்டிருந்தன. பண்டைய நாட் களில் ஷை ஊழியங்கள் அனேத்தும் திறம்பட நடந்தேறி வந்துள்ளன என் றும் கூறப்படுகின்றது. காலப்போக்கில் அவை நடைமுறையில் இல்லே. மேலும் அவைகளனேத்தும் பராதீனப்படுத்தப் பட்டு இன்றைய நிலேயில் ஆலயத்தின் நித்தியபடி பூஜைகளுக்கே பொது மக்களின் உதவியை எதிர்பார்க்கும் நிலேயில் உள்ளது. ஆலயக் கட்டிடங் கள் மிகவும் பழுதுற்ற நிலேயில் உள்ளன. விரைவில் அரசினுடைய ஆதரவினுலும், பொது மக்களுடைய உதவியினுலும் இவ் வாலயத் திருப் பணியை மேற்கொள்வது நலம் பயப்ப தாக இருக்கும்.

சற்றும் இவ்வாலயத்திற்குவருமானமே இல்லாதிருந்த போதிலும் தினசரி இயன்ற அளவு பூஜைகள் நடந்தேறி வருகின்றன. இவ்வாலயத்தில் ஐப்பசி மாதச் சூர சம்மாரமும்; தைபூசத் தேர்த் திருவிழாவும் மிகவும் விமரிசையான விழாக்களாகும். மேலும் மாதா மாதக் கிருத்திகைகள் தோறும் அபிஷேக ஆராதனைகள் விமரிசையாய் நடந்தேறி வருகின்றன. இவ்வாலய நிர்வாகத்திற்கு அரசினரால் அறங்காவலர்கள் அவ்வப் போது நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

மேலும் இம்மலேச் சரிவில் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முந்தையதான சங்க காலச் சேர மன்னரின் கல்வெட்டுக் காணக்கிடக்கிறது. அக் கல்வெட்டு மிகவும் பழமையான கல்வெட்டு என்றும் அதில் காணப்படும் விபரங்கள் சேர மன்னர்களைக் குறிப்பிடுவதாயும் அமைந் திருக்கின்றன. இக்கல்வெட்டு மலேயின் இருபுறங்களிலும் அமைந்துள்ளன. இக் கல்வெட்டைப் பற்றிய விரிவான விளக் கங்கள் அடுத்து இருக்கும் ஆங்கிலக் கட்டுரையில் பிரசுரமாகி உள்ளன. இக் கல்வெட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்த தமிழக அரசு சுமார் ரூபாய் 5000/- செலவில் அந்தப் பகுதிகளில் தகுந்த பாதுகாப்பு அமைப்புச் செய் திருக்கிறது. ஆலய தரிசனத்துக்கு வரும் பக்தர்கள், பொது மக்கள் இக்கல்வெட் டுக்களைக் காணத் தவறுவதில்லே. மேலும் இக்கல்வெட்டுகளுக்கு அருகில் சமணமுனிவர்கள் தங்கியதாகப்படுக்கை கள் பாறையில் செதுக்கப்பட்டுள்ளன. சமண முனிவர்களில் பலர் இங்கே தங்கி யிருந்ததாகவும் கூறப்படுகிறது.

இன்றைய நிலேயில் இவ்வாலயத் திருப்பணிகள் சற்றுத் தளர் நடை போட்டாலும், எதிர்காலத்தில் இளைய தலே முறையின் உணர்ச்சிப் பிரவாகத் தால் உந்தப்படும் பொழுது “புகழிமலே” புகழ்மிகுந்து பிரகாசமுற்றுத் திகழும் என்பதில் சற்றும் ஐயமில்லே.

# CHERA INSCRIPTIONS OF SANGAM AGE

By Iravatham Mahadevan.

A GROUP of rock inscriptions of the Chera Kings of the Sangam Age have been discovered recently. The inscriptions are in Tamil and written in Brahmi script and can be dated in the second century A. D. This is probably the most important epigraphical discovery made in the Tamil Country in recent years and will have far-reaching effects on the history of the Tamil people and language and literature of the Sangam Age.

The rock-cut inscriptions are in Arunattarmalai, a small hillock near the village of Pugalur about ten miles from Karur. I had read in the annual report on South Indian Epigraphy (1927-28) that some inscriptions in the Brahmi script were discovered in that year at Pugalur. The report described the inscriptions as 'mostly damaged' and made particular mention of 'a comparatively long record of four lines' which could not be made out 'as the rock was very much weather-beaten'. Last year two more Brahmi inscriptions were again discovered at this place.

There are two large natural caverns formed under over-hanging boulders on the southern side of the hill. The caverns are midway up the hill and have a commanding view of the countryside and the distant Cauvery River.

There are six short labels on the rock-cut beds on the floor of the caverns. Three comparatively longer inscriptions are found on the brow of the over-hanging rock. I had expected to see illegible and 'mostly damanged' inscriptions. I was however pleasantly surprised to find that even though the rock is weather-beaten and some letters are damaged or missing here and there, it was not very difficult to make out the inscriptions which are written in bold and legible characters.

The language of the inscription is Tamil. The script used is Brahmi which can be assigned on palaeographical grounds to the end of the second century A. D. The short labels cut on the floor of the caverns mention the names of the Jain monks who occupied the rock-cut beds or the names of the donors. One of the labels mentioning a Ponvanikan from Karur deserves special notice.

What however arrested my attention was the long inscriptions cut on the brow of the over-hanging rock. As I began to spell out the names like **Atan**; **Irumporai**; **Katunko** and **Ilanko** I realised with utter astonishment the almost incridible fact that I was indeed looking at the records of the ancient Chera Kings celebrated in the **Patirru-Pattu** and other Sangam classics. The Tamil Kings of the Sangam Age have at last come into the limelight of history and archaeology from the twilight of fables and ballads.

It may be of interest to describe the method adopted for copying the inscription; As the rock weather-beaten and three inscriptions had worn thin the conventional method of taking an estampage has not produced satisfactory results. A scaffold was errected and the inscription was traced out carefully on rolls of tracing paper from which the present facsimile was prepared.

The text of the inscription may be translated as follows: 'This is the abode (uraiy) of the Jaina monk (Amanan) Chenkasaphan of Yarrur. The Prince (ilanko) Katunko, the son of Perunkatunkon, the son of the king (Ko) Atan Cheral Irumporai ordered (these beds) to be cut'. The second inscription is also of four lines and is very similar in contents to the first. However it appears to mention two Princes (Ilanko) with the names Katunkon and Ilankatunko.

The third inscription is of two lines. It is damaged and appears to mention Irumporai who is described as the son-in-law (MURAI MAKAN) of one Avi.

All the three inscriptions together yield a firm geneological table of the Chera royal line for three generations. The ruling king was Atan Cheral Irumporai. His son was Perumkatunkon who had two sons with the names Katunkon and Ilankatunkon, both described as Princes (ILANKO). It is interesting to compare these historical facts with data gleaned from the PATHIKAM of the PATIRRUPATTU. These are relatively late compositions which have however preserved a genuine historical tradition at least with respect to the names. The generally accepted view is that there were two contemporary branches of the Chera royal family. As the names Irumporai and Katunko show, our inscriptions belong to the junior line (ILAYA VAZHI).

It is more difficult to reconcile the inscriptional geneology with that recorded in the PADIKAM of the PATIRRU-PATTU. Atan Cheral Irumporai is perhaps the same as Antuvan Cheral Irumporai celebrated in Puram 13. Nothing is heard of Perunkatunkon as a Chera King in the Sangam works. As he is not given the title of Kon Ilanko in the inscription, he might have perhaps predeceased his father. Katunko is probably the same as Selvakkatungo Vali Atan ('who died at Chikkarpalli') sung in the Seventh Decade of the Patirru-pattu and in AHAM 216, PURAM 8 etc. These conclusions are quite tentative and would require further confirmation. The temptation to identify

Ilanko as the author of the SILAPPADIKARAM should of course be resisted as ILANKO was the common appelation for all the Princes and as there are reasonable grounds to beleive that the epic belongs to a later date.

It is indeed difficult to exaggerate the importance of these inscriptions in the study of Tamil history of the Sangam Age. We need no longer rely on the slender and insecure evidence of the Gajabahu synchronism, nor merely on the circumstantial evidence of the Indo-Roman trade to fix the place of the Sangam age in the Christian Era. The inscriptions are a spectacular confirmation of the sober view that the Sangam Age of the three Tamil Monarchies belongs to the first three centuries of the Christian Era. It is no longer possible to doubt the historical truth of the existence of the Tamil Kingdoms of the Sangam Age. The inscriptions also settle the question about the capital of the Cheras as at least one branch of the family ruled from Karur (VANJI). The other important facts emerging from the inscriptions are that the Brahmi was the Tamil script of the age and that Jainism had already reached the Tamil country and received royal patronage.

**—The Hindu 7—3—65**

# வெண்ணெய்மலைத் தலவரலாற்றுச் சுருக்கம்

புலவர் கணபதி ஐயா

காசியம்பதியிலிருந்து தென்னாட்டில் தலயாத்திரை செய்துவந்த பகவன் என்கின்ற சிவயோகி ஒருவர் கருவூரை அடைந்து ஆநிலை அண்ணலை வணங்கிப்பின் வெண்ணெய் மலையை வலம் வந்து வணங்கி அங்கு ஒரு மரத்தடியில் யோகத்தில் அமர்ந்தார். முருகப்பெருமான் அவருக்குக் காட்சி தந்து ஆலயம் எடுக்குமாறு உணர்த்தினார். அவரும் முருகன் அருட்செயலைப் பொது மக்களுக்கும் அரசனுக்கும் உணர்த்திச் சிறு கோவில் கட்டி முருகப் பெருமான், விசுவநாதர், விசாலாட்சி ஆகிய மூர்த்திகளைப் பிரதிட்டை செய்து வழிபாடும் செய்து சிலகாலம் இருந்து காசியம் பதிக்குச் சென்று விட்டார்.

கருவூர்த் தேவர் இந்த வெண்ணெய் மலையை அடைந்து யோகம் புரிந்து வந்ததனால் அவருக்கும் உருவம் சமைத்துச் சிறிய மண்டபங் கட்டி அதில் அவருடைய உருவத்தைப் பிரதிட்டை செய்து வழிபாடு நடைபெற்று வந்தது. அக்கோவில் பழுதாகி விட்டதனால் புகழ்ச்சோழ நாயனார் காலத்தில் எல்லா மூர்த்திகளுக்கும் கோவில் கட்டப்பட்டது. நீண்ட நாட்களில் அக்கோவில் முற்றிலும் பழுதாகி மிகவும் சீர்கேடான நிலைமையை அடைந்ததால் இப்பொழுது உள்ள அரிய பெரிய திருப்பணி செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திருப்பணியின் வரலாறு வருமாறு :- தனவணிகர் வாழும் 96 நகரங்களுள் தேவகோட்டை நகரம் மிகச் சிறந்தது. அந்நகருள் இளையாத்தங்குடிக் கோவில் உடையவரும், சிவ புண்ணிய சீலரும் வள்ளலும் ஆகிய திண்ணப்பச் செட்டியார் மரபில் வந்த முத்துக் கருப்பஞ் செட்டியார் என்பவர் நல்லொழுக்கம், வாய்மை, தூய்மை உடையவராய்க் கடவுள் பத்தியில் சிறந்தவராய் வள்ளலாக வாழ்ந்து வந்தார். வியாபார நிமித்தம் கரூரில் வந்து உறைந்தார். நாள்தோறும் ஆநிலை அண்ணலை வழிபாடு செய்வதும் கிருத்திகை தோறும் வெண்ணெய்மலை சென்று முருகப்பெருமானை வழிபடுவதும் தமது வியாபாரத்தைக் கவனிப்பதுமாக இருந்தார்.

ஒரு நாள் செட்டியார் கனவில் முருகன் தோன்றி ஆலய அமைப்புக் காட்டித் திருப்பணி புரிக என்று உரைத்து மறைந்தனன். அன்பர் பலரின் வேண்டுகோளும் தம் விருப்பமும் வேலவன் காட்டிய கனவும் ஆகிய அனைத்தும் ஒத்திருந்ததனால் திருப்பணி தொடங்க நிச்சயித்து முத்துக் கருப்ப வள்ளல் பெரும் பொருள் செலவிட்டு அருமையான கருங்கல் திருப்பணி நடத்தி வந்தார். சிவ புண்ணிய சீலர் முத்துக்கருப்பஞ் செட்டியார் அவர்கள் திருவருள் நிறைவெய்திய பின்பு அவருடைய திருமகனார் திண்ணப்பச் செட்டியாரவர்கள் திருப்பணிச் செயலை மேற்கொண்டு ஆலயம் கட்டி முடித்து (1—7—1923) ருத்ரோத்காரி

ஆண்டு ஆனித் திங்கள் 17ஆம் நாள் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடத்தினர்.

பின்பு நித்திய பூஜையும், மாதக் கிருத்திகையில் சிறப்புப் பூஜையும் நடந்து வருகின்றன. ஆடிக் கிருத்திகை விழாவும், சூர சம்மார விழாவும், தைப் பூசத்தில் திருத் தேரோட்டத்தோடு கூடிய பத்து நாள் விழாவும் வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. ஆடிக் கிருத்திகை விழாப் பவனியில் சிறந்த நாதசுர வித்துவான்களைக் கொண்டு கச்சேரி நடைபெற்று வரும். அன்பர்கள் பெருந் திரளாக விழாவில் கலந்து கொள்வார்கள். இன்னிசை, சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்வார்கள். இவ்வளவு சிறப்பான விழாக்களைத் தரிசிக்கப் பெருந்திரளாக வரும் அன்பர்கள் தங்குவதற்கு வசதியாகத் திருமடங்களும், கல்யாண மண்டபமும், நந்தவனமும், திருவாளர் திண்ணப்ப செட்டியார் அவர்களால் ஏற்படுத்தப் பெற்று விளங்குகின்றன. மற்றும் இலட்சார்சனை நவராத்திரி விழா, சிவராத்திரி விழாக்களும், சிறப்பான நான்கு கால நித்திய பூஜையும் அன்பர் தரிசித்து மகிழும்படி நடைபெற்று வருகின்றன.

திரு. திண்ணப்ப செட்டியார் அவர்களால் (30—8—1950) விகிருதி ஆண்டு ஆவணித் திங்கள் பதினான்காம் நாள் மீண்டும் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. சிவபுண்ணிய சீலர் திண்ணப்ப செட்டியாரவர்கள் சிவபதவி அடைந்தபின் அவர்களுடைய திருக்குமாரர்களான உயர்திரு சொக்கலிங்கம் செட்டியார், உயர்திரு முத்துக் கருப்பஞ் செட்டியார், உயர்திரு சுப்பிரமணியஞ் செட்டியார் ஆகிய மூவரும் எல்லா விழாக்களையும் தந்தை அணையர் மைந்தர் என்ற இயல்புக்கு ஏற்பச் சிறந்த முறையில் நிறைந்த பொருள் செலவிட்டு பொது மக்களும் அன்பர்களும் மெச்சுமாறு நடத்தி வருகின்றார்கள். கோவில் சிறப்புறத் திகழ்வதைப் பாராட்டி அரசு, பரிசுக் கோப்பையை வழங்கியுள்ளது. சிவகுருநாதனை வெண்ணெய்மலை வேலன் அவர்களுக்கு நிறைந்த ஆயுளும், சிறந்த செல்வமும், அறிவுடைய மக்கட் பேறும், சுக வாழ்வும் தந்து காப்பாற்றுவானாக!



# அருள்மிகு கல்யாண விக்ருதீஸ்வர சுவாமி திருக்கோயில்

வெஞ்சமாக்கூடலூர் — கரூர் வட்டம்.

பாரதநாட்டு பழம்பெரும் திருக்கோயில்களுள், கொங்கு நாட்டுப் பாடல் பெற்ற சிவஸ்தலங்கள் ஏழுள், இரண்டாவது திருக்கோயிலாக விளங்கும் பண்ணேர் மொழியம்மை உடனுய கல்யாண விக்ருதீஸ்சுவர சுவாமி கோவில் சிறந்தது; மிகமிகத் தொன்மை வாய்ந்தது.

கருவூரில் இருந்து தென்மேற்கில் அரவக்குறிச்சிச் சாலையில் 16 கிலோ மீட்டர் தொலைவில் சென்று கிளைச்சாலையில் 10 கிலோ மீட்டர் தூரம் சென்ருல் இந்தத் தலத்தை அடையலாம். இந்த தலத்தில் சிவபெருமான் அன்புவடிவாயுள்ளார் என்று ஆன்ருேர் கூறுவார்.

வெஞ்சன் என்னும் வேட அரசன் இறைவனை வழிபட்டுப் பேறு பெற்ருன். அவனுடைய தலைநகரமாக விளங்கியதாலும், கோவிலுக்கு மேல்புறம் குடகனுறுடன் சிற்ருறு கலப்பதாலும் இரண்டு ஆறும் கூடுமிடத்திலிருப்பதாலும், வெஞ்சன் என்ற அரசனது பெயருடன் சேர்ந்து வெஞ்சமாக் கூடல் எனப்படுவதாயிற்று. தேவேந்திரன் அகல்யாசாப நிவர்த்திக்காகப் பூஜை செய்து நிவர்த்தி கண்ட பெருமை பெற்றது. "இந்தக் கோயிலுக்குவந்து, கலந்து பூஜித்து வழிபட்டாருக்கு அருள் செய்திடும் கற்பகம்" என்று சுந்தரர் அருள்வாக்குப் பாடல் பெற்றது அருணகிரி நாதரும் தம் தெய்வத் திருப்புகழில் போற்றி இருக்கிருர்.

இக்கோயிலின் சிற்பக்கலை தனிச் சிறப்புடையன. இரண்டாம் பிரகாரத்தின் மதிலுக்கு மேல்புறம் குடகனுற்றின் கீழ் கரையில் இவ்வூரை ஆண்ட அரசன்சிலை ஒன்று மார்புற மண்ணில் புதைந்து கிடக்கின்றது. ஆண்டுக்கு ஒருமுறை மக்கள் இங்கு வழிபாடு செய்கின்றனர். கோயிலுக்கு வடக்கில் பொன் பரப்பில் அம்மன் கோயில் இருக்கின்றது. சிவபெருமான் இங்கு சுந்தரருக்காக ஒரு திருவிளையாடல் புரிந்தார். தாம் ஒரு கிழவேடம் பூண்டு உமையம்மையை ஒரு முதியவள் ஆகுமாறு செய்து, சிவகுமாரர்களை இரு சிறுவர்களாக்கி, இரு குமாரர்களையும், முதியவளிடம் ஈடு வைத்துப் பொன் வாங்கி, சுந்தரர் பாடலுக்குப் பரிசு வழங்கினுர் என்ற கருண பரம்பரைக் கதை வழங்குகிறது.

"கிழவேதிய வடிவாகி விருத்தியைக் கிட்டி எந் தன்
அழகாகுமக்கள் அடகுகொண்டு அம்பொன் அருளுதிஎன் றுஏற்று
எழுகாதலால் தமிழ்பாடி சுந்தரற்கு ஈந்தஒரு
மழு ஏந்திய விகிர்தேசுரன் வாழ் கொங்கு மண் டலமே"

(கொங்கு மண்டல சதகம்)

"வஞ்சி நுண்ணிடையார் மயிற்சாயல் நல்லார்வடிவேல்கண்
நல்லார் பலர் வந்திறைஞ்சும்
வெஞ்சமாக்கூடல் விகிர்தா அடியேனையும்
வேண்டுதியே என்றுதான் விரும்பி
வஞ்சியாது அளிக்கும் வயல் நாவலர்கோன்
வனப்பகை அப்பன் வன்தொண்டன் சொன்ன
செஞ்சொல் தமிழ்மாலைகள் பத்தும் வல்லார்
சிவலோகத் திருப்பது திண்ணம் அன்றே."

(சுந்தரமூர்த்தி சுவாமிகள்)

இப்படிப்பட்ட ஸ்தலமானது மிகவும் சீர்குலைந்து பழுதுபட்டு இருக்கிறது. அப் பழுதுகளைச் சீர்செய்து நம் சந்ததியார் வழிபாட்டுக்குரிய நல்ல நிலைமையில் வைப்பது நம் கடமை. மேலும் பல கல்வெட்டுக்களில் இராஜகேசரி—ஜெய கேசரி என்ற சொற்கள் பொறிக்கப் பட்டிருக்கின்றன. கோனேறின்மை கொண்டான், ஜடாவர்மன்சுந்திர பாண்டியன், தேவன் பாண்டியன் மாற வர்மன், குலசேகர தேவன், வீரராஜேந் திரன், வீரபாண்டியன் என்னும் மன்னர்கள் காலத்தில் ஏற்பட்டவை பல மான்யங்கள் அளித்தும் சுந்தரபாண்டியத் தேவன் பண்ணேர் மொழியம்மை கோவிலில் சில திருப்பணிகள் செய்தும் உள்ள செய்திகள் பல கல்வெட்டுக் களால் புலனாகின்றன. அக்கால முதல் இதுவரை ஷை ஆலயம் எந்தவிதமான திருப்பணிகளும் இல்லாமல் ரொம்பவும் சீர்குலைந்து பாழடைந்து விட்டது. உள் மண்டபம், வெளி மண்டபம், உள்பிரகாரம், திருமதில்கள், சுவர்கள், தளங்கள், மண்டபம் இவைகள் திருப்பணி செய்யவேண்டியுள்ளன. ஷை திருப்பணிக்குச் சுமார் 2 லட்சம் ரூபாய் செலவாகலாம் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தச் செலவைக் கோவில் வருமானத்திலிருந்து செய்ய முடியாது.

இவ்வித அருள் நிறைந்த இந்த வெஞ்சமாக்கூடலூர் ஆலயம் மிகவும் பழுதடைந்து வழிபாட்டுக்கு வழியில்லாதிருப்பதையறிந்த கல்யாண விக்ருதீஸ்வரர் நெரூர் சதாசிவப்பிரமேந்திராள் அதிஷ்டானம் சுவாமி சதாசிவானந்தர் அவர்கள் முயற்சியால், கரூரில் அருட்பற்று நிறைந்த விவேகபுருஷர்களைத் தேர்ந்து திருப்பணிக்குழு அமைக்கப் பட்டுள்ளது.

ஆலயத் திருப்பணியையும் நிறைவு செய்தற்பொருட்டு பக்த மகாஜனங்கள் திரள் திரளாக மனமொழி மெய்களாலும், பொருளாலும், உதவிகள் புரிந்து திருப்பணி நிறைவு பெறச் செய்து கல்யாண விக்ருதீஸ்வரரை வழிபட்டு நமது சந்ததிகளும் அருள் வழியில் நின்று மகிழ்வுற்று இருக்க ஒழுக்க வழிபாடுகளைக் கற்பிப் போமாக.



# அருள்மிகு கல்யாண வேங்கடரமணசாமி திருக்கோயில்

## தான்தோன்றிமலை

தான்தோன்றிமலை என்னும் திருக் கோயில் கரூருக்குத் தென்புறத்தில் 3'4 கிலோ மீட்டர் தொலைவில் கரூர் திண்டுக்கல் நெடுஞ்சாலையில் உள்ளது. இத் திருக்கோயிலில் அருள்மிகு வேங்க டேசப் பெருமாள் எழுந்தருளியுள்ளார்.

கோயில் அமைந்திருக்கும் குன்றானது கீழ்மேல் திசையில் நீளமாகவும், கீழ்புறம் உயரத்தைவிட மேல்புறம் உயரம் அதிக மாகவும் அமைந்திருக்கிறது. இக்குன் றின் மேல் புறத்தில் ஒரு குகை குடையப் பட்டிருக்கிறது. இதனுள் ஒரு மேடையும் தூண்களும் இருக்கின்றன. இவைகளைச் சுற்றி மூன்று புறம் பள்ளமாக ஆக்கப்பட் டிருக்கிறது மேடையின் கீழ்புறத்தில் பாறையோடு ஒட்டிய அருள்மிகு வேங்கடேசப் பெருமானின் திருஉருவம் பக்தர்களைப் பரவசப்படுத்தும் வண்ணம் நின்ற வடிவில் தோற்றமளிக்கிறது. இந்தக் குகையின் முன்புறம் பிற்காலத் தில் சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது. குகை யின் முன்பு மண்டபங்கள் இருக்கின்றன. இம்மண்டபங்களை அடைய மூன்று பக்கங்களிலும் படிக்கட்டுகள் கட்டப் பட்டிருக்கின்றன.

ஒரு சமயம் ஆதிசேஷனுக்கும் வாயுத் தேவனுக்கும் பலத்தில் போட்டி ஏற்பட் டது. அப்போது ஆதிசேஷன் வேங்க டாசலம் என்ற மலையைத் தன் உடம் பில் சுற்றி அழுத்திக் கொண்டான். வாயுத்தேவன் அதைப் பெயர்த்தெடுக்க முயன்று முடியவில்லை. பிறகு முழு பலத் தையும் உபயோகிக்கவே அப்பர்வதம் பெயர்க்கப்பட்டு ஆதிசேஷனுடனும் ஆகாயத்தில் வெகுதூரம் சென்று காற் றின் மிகுதியால் கரகரவென்று சுற்றியது அப்படிச் சுற்றும் பொழுது அம்மலையி லுள்ள சிறு சிறு பாகங்கள் சிதறி நான்கு திக்குகளிலும் ஓடிவிழுந்தன. அப்படிச் சிதறி விழுந்தவைகளில் இந்தத் தான் தோன்றி மலைக் குன்றும் ஒன்று என்று புராணம் கூறுகிறது.

சதிபதிகளான தம்பதிகள் தங்களுக்கு புத்திரப் பேறு உண்டாவதற்காகத் திருப் பதி யாத்திரை செய்து கொண்டு வந் துள்ளார்கள். சஷ்ய பர்வதத்தையும் அதிலிருந்து புறப்படும் காவேரி நதியை யும் அடைந்தார்கள். அங்கு ஒரு சன்னி யாசி இவர்கள் முன் தோன்றி நீங்கள் கொஞ்ச தூரம் சென்றீர்களானல் அங்கு உங்களைச் சில கல் தச்சர்கள் எதிர் கொண்டு வந்து உங்களை அழைத்துச் செல்வார்கள். அவர்கள் இருப்பிடமான மலைக்குன்றை அடைந்ததும் அங்கு உங் களுக்கு பகவான் அருள் புரியப்போகிறார் என்று சொல்லி மறைந்தார். அதன் படியே இருவரும் காவேரி நதியை அனு சரித்து நடந்து கொண்டே அமராவதி நதியோடு கூடும் இடத்தை அடைந்தார் கள். சில கல் தச்சர்கள் இவர்களை எதிர் பார்த்து வணங்கித் தங்களுக்குச் சிற்ப நுட்பங்களை உபதேசிக்குமாறு வேண்டித் தங்களிருப்பிடமான மலைக்குன்றுக்கு இவர்களையும் அழைத்துச் சென்றார்கள். அவர்களும் சம்மதித்துக்குன்றின் ஓரிடத் தில் மலையைத் தச்சர்களைக் கொண்டு பிளக்க ஏற்பாடு செய்தார். பிளக்கும் பொழுதே கல்லின் நுட்பங்களை உப தேசித்தும் வந்தார். அப்போது ஒரு சன்னியாசி அவர்கள் முன் தோன்றி இன்று நீர் வைதீகச் சடங்குகள் செய்யா மல் வந்துவிட்டீர்கள் நானே அவைகளை யும் செய்து கொண்டு மலை ஏற வேண்டி யது என்று சொல்லி மறைந்தார்.

அப்படியே அவர்கள் மறுநாள் மங்களச் சடங்குகளுடன் தம்பதிகள் தச்சர்களுடன் மலையை ஏறி பிரதக்ஷிணம் வந்தார்கள். அப்பொழுது மலையின் மேல்புறத்தில் ஓர் ஒளியைக் கண்டுப் பிரமித்து ஆச்சரியத்தோடு தச்சர்களை ஒளி உண்டான மேல் புறத்திலேயே மலையைப் பிளக்கச் செய்தார்கள். முதல் நாள் தோண்டிய பாதியை விட்டு அதற்கு மேல்புறமாக தோண்டச் செய்தார்கள். எல்லோரும் சேர்ந்து இரண்டு ஜாமப் பொழுதில் எட்டுக் கோல்கள் நீண்டு பரப்போடு கூடிய ஒரு குகையை உண்டாக்கினார்கள். பின்னும் வேலை செய்ய ஆரம்பிக்கவே அதில் இரண்டு கோல் நீளமுள்ள கல் தானாகவே சிதறி விழ உடனே உள்பக்கத்திலிருந்து கோடி சூரிய வெளிச்சமும் அதனுள் அருள்மிகு வேங்கடேசப் பெருமாளையும் கண்டார்கள். இவ்வாறு பெருமாள் தானாகத் தோன்றித் தம்பதிகளுக்குக் காட்சி அளித்தமையால் இத் தலம் தான்தோன்றி எனப்பெயர் பெற்றதாகப் புராணம் கூறுகிறது.

இத் திருக்கோயிலில் ஒவ்வோர் ஆண்டும் மாசித் திங்களிலும், புரட்டாசித்திங்களிலுல் தேர்த்திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. புரட்டாசிச் சனிக்கிழமைகளில் ஆயிரக் கணக்கான பக்தர்கள் இத்திருக்கோயிலுக்குவந்து பெருமாளைத் தரிசனம் செய்கிறார்கள். சாதாரணமாக ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் அதிக பக்தர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். இக்கோயிலில் நான்கு கால பூஜைகள் நடந்து வருகின்றன.

கோயில் நிதியிலிருந்து கோயிலுக்குத் தென்புறத்தில் கல்யாண மண்டபம் ஒன்று புதிதாகக் கட்டப்பட்டிருக்கிறது. இங்கு பக்தர்கள் தங்க விடுதி ஒன்றும் கட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பக்தர்கள் இத் திருக்கோயில் வந்து பெருமாளைக் கண்டு தரிசனம் செய்து அருளைப் பெற வேண்டுகிறோம்.

# THE CAVE-TEMPLE AT TANDONI, NEAR KARUR

by

**H. Sarkar**

Superintending Archaeologist, Archaeological Survey of India.


IN the neighbourhood of Karur, at a place called Tandoni, in District Thiruchirapalli, there stands an unfinished cave-temple, on a hillock in Nattam poramboke. At present, it is hidden completely by a latter edifice, known as Kalyana Venkataramanaswami temple, which might have come into existance in the twelfth or the thirteenth century. It is the construction of this very temple that has obscured the view of this cave-shrine; and despite its location near Karur, a place of many a romantic saga and nostalgic association, it has failed to catch the popular imagination even today.

Tandoni (lat.10°57′ N; long.78°04′ E) is only five kilometres to the south-west of Karur; and hence, may easily be taken as once forming part of the suburb of the Chera capital. It is not known as yet who excavated the cave-shrine and reason for its leaving it half-done. But the area is certainly of vital geographical importance, for it is not far off from various fordable points across the Kaveri: the most important of the traditional ferry-points are Pugalur, or Pugaliyur of inscriptions, Sri Ramasundram or Ayilur, and the one leading to Namakkal on the northern bank of the river. Evidently, the region was open to various influences from Kongunadu, situated on the other side of the Kaveri. Many military expeditions to the Kongu country must have taken these routes.

Apart from the cave-shrine and the structural temple, a few relief-sculptures are also to be seen on the bare rock-surface on the road-side. They include four groups of bas-reliefs representing, first, the image of Sri Ranganathaswami; second Pasupati with Ganesa, seated by the side of a Linga, the last-mentioned figure being bathed by the milk of a cow; third, two feet on two square pedestals with a devotee in between, and an oblong bed by their side; and fourth, a group of three standing figures. All these carvings, carved along the lie of the present ground-level, lack quality and instinctive appeal. Perhaps they have no relationship with the cave-temple on the hillock close by.

To come to the cave-shrine proper. It is an unfinished cave, facing the west, and is dedicated to Vishnu. A tall Sthanaka image of Vishnu, in Samabhanga, has been carved out on the hind wall of the shrine. Ornaments and other embellishments

have masked its stylistic features; consequently, one has to go primarily by its architecture to determine its chronological position in the history of south India's rock architecture. Superficial observation may tend to show some commonness of idea between the rock-cut relief of Alagiapandipuram, in District Kanyakumari, and Kilmavilangai,




in District South Arcot, on the one hand and the huge relief of the Tandoni cave on the other. All other three are Sthanka images, in Samabhanga, carved on the back wall of the sanctum, and all the three remain incomplete for reason not known to us But in respect of its architecture, the similarity, as it will be shown presently, is more with the Lakshminarasimhaswami temple at Namakkal, District Salem. Before we attempt to draw any parallelism it is worth-while to have a brief description of the Tandoni cave, which is indeed much bigger in dimensions than the two shrine-cells mentioned above.

So far as dimensions are concerned, the Tandoni cave is certainly comparable to the rock-cut shrines of Namakkal. The former has been excavated at the mid-height of the vertical rock, and the size of the cutting measures 19 ft 6 in x 14 ft. 6 in; its height is about 9 ft., 9 in In dimensions alone, the Tondoni cave is very much nearer to the Ranganathaswami cave of Namakkal. All the three caves are oblong on plan in spite of the fact that the Lakshminarasimha of Namakkal and the cave-temple at Tondoni do not enshrine the **Sayana** or recumbent form of Vishnu. In architectural conception, therefore, the Tandoni cave and Lakshminarasimha of Namakkal are nearer to each other. As a matter of fact, the plan of both the cave-shrines is unique in that both of the caves have raised platform in the centre, serving as the **garbha-griha**, surrounded on the three sides by a sunken passage. In the case of the Tandoni cave the raised central platform measures 10ft × 8ft., while the passage has more or less a uniform width of 4 ft. Two unfinished columns in front of the platform, which has a small central projection, serve as the facade of the **garbha-griha**, open on the three sides. Needless to say, the shrine is without a **pradakshina-patha**. It is at back of this pillared structure that the tall Vishnu image has been carved out.

The Tandoni cave has, therefore, a peculier plan, combining the shrine with the **ardha-mandapa**, like of which can be seen also in the Namakkal caves. But its facade is very impressive ; in fact, it is more finished than the shrine-interior, Apart from two pillars and two pilasters, the facade has a beautiful cornice or **kapota** and a row of **bhutamala** on the **valabhi**, a moulding below the cornice. Equally beautiful are **dvarapalas**, standing elegantly, in **tribhanga** pose. All the **bhutas** are in a frolicking mood, some of them beaming with smile. The **bhuta** figures may well be compared with those of Cave II of Badami. It is generally admitted that the architecture and sculpture of the Namakkal caves are admixture of Pallava and Chalukyan traditions. In the circumstances, it is quite likely that the **bhuta** figures of the Tandoni cave was inspired either by the Atiya tradition of Kongu or directly from a Chalukyan source. That the former is a reasonable hypothesis is evident from the architectural similarities between the Namakkal and Tandoni caves.

It is well-known that the Lakshminarasimhaswami and Ranganathaswami caves of Namakkal are the magnificent creation of the Atiya rulers of Tagadur. Both the Atiya caves are associated with marvellous pieces of sculptural art. Inscriptions from the Ranganathaswami cave mentions the cave-shrine as **Atiyendra Vishnu-griham** or **Atiyanatha Vishnu-griham**. A recently - discovered inscription refers to its excavation by Sri Gunasila. Evidently, Gunasila was an Atiya ruler, a descendant of the Adiyaman or Adiyan line of rulers, of Sangam celebrity. Gunasila must have enjoyed an independent status when the caves at Namakkal were excavated. It is quite likely that he had extended his sway, maybe for a brief spell of time over the Karur region, on the southern bank of the Kaveri. The Pallava supremacy over Kongu country must have disappeared with the involvement of Nandivarman

Pallavamalla (731-796) in the dynastic feud. Further, he had to flee from Kanchi in 741-42 when Chalukya Vikramaditya II (733-744) made a triumphant entry into the Pallava capital. The Pallava rule over Kongunadu appears to have been in complete disarray between 742 and 780; in fact, no Pallava inscription ascribable to these years are as yet available from the region.

Similiarly, the Pandyas during the period were often engaged in war with the Pallavas; as a result, their hold over Kongu country was not very firm. It is significant to note that the Pandya king Kochchadaiyan Ranadhira (700-730) had title **Kongar Koman** (the lord of the Kongar) while his successor Maravarman Rajasimha I (740-765) is said to have crossed the Kaveri to subjugate Malakongam. Again, the successor of the last-mentioned king, Jatila Parantaka Nedunjadaiyan (768-815) seems to have defeated a Atiya king at Ayiraveli-Ayirur, on the north bank and at Pugalur, on the south bank, some time before A. D. 780; the date has been fixed so because the Velvikudi inscription (770-71) makes no mention at all of this historic episode. However the evidence indirectly show that the Atiyas has extended their sway over the Pugalur-Karur area before Jatila Parantaka Nedunjadaiyan scored a decisive victory over the reigning Atiya king, who may be none else than Gunasila of the Namakkal inscriptions. If it were a fact, the Tandoni cave was also excavated by this Gunasila towards the close of the third quarter of the eighth century A. D (circa 775). It explains the reason for the Tandoni cave remaining unfinished, its Vaishnava charactor and also its similarity, in architectural plan, with the Lakshminarasimha cave at Namakkal.

# புகழ்ச் சோழர்

அ. ச. ஞானசம்பந்தன்

தமிழ் நாட்டின் மூவேந்தர்களுள் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொருவர் சிறப்புற்றிருந்தனர் என அறிகிறோம். முதலில் காவிரிப் பூம்பட்டினமும் பின்னர் உறையூரும் சோழர் தலைநகராய் அமைந்தன எனவும் அறிகிறோம். 'கார் ஏறும் கோபுரங்கள் கதிர் ஏறும் மலர்ச் சோலை; தேர் ஏறும் அணி வீதி' (புக. 7) என்று பெரிய புராணத்தில் புகழப் பெறும் உறையூரைத் தலைமை இடமாகக் கொண்டு ஆண்ட சோழ மன்னர்களுள் புகழ்ச் சோழரும் ஒருவராவார். ஏனைய சோழ மன்னர்களுக்கில்லாத தனிச் சிறப்பு ஒன்றுண்டு இப் பெரியாருக்கு. அதுவே திருத்தொண்டத் தொகையில் இடம் பெற்றதாகும்.

சோழ மன்னர்கள் பலர் போர்க் களத்தில் வீரங்காத்து வீர சுவர்க்கம் எய்தினர். ஆனுல் புகழ்ச் சோழர் தாம் கொண்ட கொள்கைக்காகத் தீக்குளித்தார். போர்க் களத்தில் வீரமரணம் எய்துதல் சிறப்புடையதாயினும் கொள்கைக்காக உயிர் விடுதல் எல்லாவற்றினும் மேம்பட்ட ஒரு செயல் அன்றோ?

'சென்னி நீடு அனபாயன் திருக்குலத்து வரி முதல்வராகவும், பொன்னி நதிப் புரவலனுகவும் வாழ்ந்த புகழ்ச் சோழர் ஒரு குடைக்கீழ் முறை தவருது ஆட்சி செய்ததுடன் 'அருமறைச் சைவம் தழைக்க' 'அரசாண்டார் என்கிருர் சேக்கிழார். மேலும் அடியவர்கள் வேண்டுவனவற்றைக் குறிப்பால் அறிந்து அவர்கள் அவற்றைத் தம்மிடம் பெற்றுக் கொள்ள வேண்டிக் கெஞ்சிக் கொடுக்கும் அடியார் பக்தியும், 'திருநீற்று முதல் நெறியே பாலிக்கும்' இயல்பும் பெற்றிருந்தார்.

அரசராதலின் ஆண்டிற்கொருமுறை கருவூரில் வந்து தங்கித் தம் கீழ் வாழும் சிற்றரசர்கள் திறை செலுத்துவதைப் பெற்றுக் கொண்டிருந்தார். "எல்லா மன்னர்களும் திறை செலுத்தி விட்டார்களா? இன்றேல் முரண் அரசர் உறை அரணம் உளவாகில் தெரிந்துரைப்பீர்!" என அமைச்சர்களைக் கேட்டார் மன்னர்பிரான்.

மன்னனின் இந்தக் கேள்விக்கு விடை கூறுமுகமாகத் 'தனக்குரியபகுதிப்பணத்தைக் கொணர்ந்து தாராத மன்னனும் ஒருவன் உண்டு' என்று கூறினுர்களாம். இதுகேட்ட மன்னன் வியப்பினுல் முறுவலித்தான். புகழ்ச்சோழ மன்னனுக்குத் திறை செலுத்தவில்லையாயின் அதன் முடிவு என்ன ஆகும் என்பதை அறிந்திருந்தும் ஒருவன் செலுத்தாமல் இருந்தான் எனில் அரசன் வியப்படைந்ததில் புதுமை ஒன்றும் இல்லை.

"ஆங்கு அவன் யார்' என்று அருள 'அதிகன் அவன் அணித்தாக
ஓங்கு எயில்சூழ் மலை அரணத்து உள் உறைவான்' என உரைப்ப
'ஈங்கு நுமக்கு எதிர்நிற்கும் அரண் உளதா? படை எழுந்துஅப்
பாங்கு அரணம் துகளாகப் பற்றுஅறுப்பீர் எனப்பகர்ந்தார்" (17)

இப்பாடல் மூலம் அரசன் எதிர் நிகழ்ந்த நிகழ்ச்சியை ஒரு நாடக மாகவே நமக்கு ஆக்கித் தருகிறார் சேக்கிழார். அமைச்சர்கள் எடுத்த எடுப்பில் அவன் யார் என்று கூறாமல் "திறை செலுத்தாத அரசன் ஒருவன் உளன்" என்று கூறுவதும், அவன் யார்? என்று மன்னன் கேட்டதும், அமைச்சர்கள் அதிகன் என்ற மன்னன், சமீபத்திலுள்ள மலையில் கோட்டை அமைத்துக் கொண்டு அதன் உள்ளே பாதுகாவ லுடன் உள்ளான் என்று கூறினர். 'உங்கள் வீரத்தின் எதிராகத் தாக்குப் பிடிக்கும் கோட்டையும் ஒன்று இருக் கின்றதா என அரசன் கேட்டான். அரசன் இந்தக் கேள்வியைக் கேட் கின்றவரை இந்த அமைச்சர்கள் ஒவ்வொன்றாகக் கூறவேண்டிய இன்றி யமையாமை யாது?

அரசர்களிடம் பழகும் முறைமை எத் தகையது என்பதைச் சோழப் பேரரசின் அமைச்சராக இருந்த சேக்கிழார் நன்கு அறிவார். கேட்கப்பட்ட பொழுது கேட்கப் பெற்ற வினாவிற்கு மட்டும் விடைகூற வேண்டுமே அன்றி முந்திக் கொண்டு கூறுதல் பண்புடை மையும் அறிவுடைமையும் ஆகாது. எனவே தான் 'திறை கொணராத மன்னர் உண்டோ?' என்ற வினாவிற்கு 'ஒருவன் உளன்' என்று மட்டும் விடை கூறினர். அடுத்து அரசன் யார் அவன் என்று கேட்ட பிறகே அவன் இன்னான் என்று கூறினார்கள். இதனை அடுத்து நியாயமாக அரசன் கேட்கக் கூடிய வினா யாதாக இருக்கும்? ஏன் அவன் மட்டும் திறை செலுத்தவில்லை என்று தானே கேட்பான். அந்த வினாவை அவன் கேட்கு முன்னரே குறிப்பால் அறிந்த அமைச்சர்கள் 'மலையின் மேல் உள்ள கோட்டைக்குள் பாதுகாவலுடன் இருக்கிறான்' என்று கூறுவது அவன் ஏன் பகுதிப் பணம் செலுத்தவில்லை என்பதற்குரிய விடையாகும்.

திறை செலுத்தாத் மன்னர்கள் பலர் இருப்பின் ஒருவனோ கூட்டுச் சேர்ந்து சோழனை எதிர்க்கத் திட்டமிட்டுள்ளனர் யாவரும் என்று நினைக்கலாம். அவ் வாறும் இல்லை என்பதை 'அரசன் உளன் ஒருவன்' என்ற விடையில் அமைச்சர்கள் அறிவித்து விட்டனர். அதனால்தான் தனி ஒருவன் இவ்வாறு செய்ய எப்படித் துணிந்தான் என்ற நினைப்பில் சோழன் வியப்படைந்தான் என்றும், தன்னுடைய வலிமையை அறிந்து உடன் முறுவலித்தான் என்றும் கூறினார். மன்னன் மன நிலையை நன்கு அறிந்து கொண்ட அமைச்சர்களா தலின் இரண்டாவது வினாவிற்கு இடம் இல்லாமல் அவன் வைத்திருக்கும் மலை யின்மேல் உள்ள கோட்டையே அவனுக்கு இந்தத் துணிவைத் தந்தது என்ற செய்தியைக் கூறினர்.

அரசனுடைய ஆணையைச் சிரமேல் தாங்கிய அமைச்சர்கள் படைகொடு சென்று அதியனின் கோட்டையை முற்றுகை இட்டனர். யானைகளுடன் நடைபெற்ற அப்போரைச் சேக்கிழார் மூன்று சீர்ப்பாடல்களிலேயே கூறுகிறார். அதாவது அப்போர் மிகக் கொடுமை யாக நடைபெற்றாலும் விரைவாக முடிந்து விட்ட குறிப்பையும் பாடல் ஓசை மூலம் தந்து விடுகிறார்.

"மலையொடு மலைகள் மலைந்தன
அலைமத அருவி கொழிப்பொடு
சிலையினர் விசையின் மிசைத்தெறு
கொலைமத கரிகொலை உற்றலவே" (21)

இறுதியாகப் போர் ஒருவாறாக முடிந் தது. அதியன் ஓடி ஒளிந்தான். இறந்துபட்ட முக்கியமான வீரர்களின் தலைகளை ஒரு கூடையில் வைத்து ஏந்திக் கொண்டு சோழனுடைய அமைச்சர்கள் கருவூர் வந்து சேர்ந் தனர்.

அத்தலைகளை ஒவ்வொன்றாகக் கண் டார் புகழ்ச்சோழர். தம் படையின்

வீரத்தை வியந்து கொண்டிருக்கும் அதே நேரத்தில் இடி விழுந்ததுபோன்ற ஒரு நிகழ்ச்சியும் நிகழ்ந்து விட்டது. பல்வேறு தலைகளின் நடுவே ஒரு சடை முடியுடைய தலையைக் கண்டுவிட்டார் அரசர். சடைமுடியுடன் கூடிய அத் தலை எவ்வாறு இங்கு இக்கூடைக்குள் வந்தது என்பதை யாரும் கூற முடிய வில்லை. ஆனால் அரசனே யாருடைய சமாதானத்தையும் கேட்க விரும்பவில்லை.

சடை முடியுடைய தலையைப் பார்த்த வுடன் அரசன் கண்களில் கண்ணீர் வழியத் தொடங்கிவிட்டது. 'இத்தகைய ஒரு கொடுமை நடந்துவிட்ட பிறகு யான் திருநீற்று வழி நின்று அரசு செய்வது எவ்வளவு அழகாக உள்ளது? என் முதலமைச்சர் படை கொடு சென்று பெற்ற வெற்றிதான் எத்துணை மோச மானது என்பதையும் அறிகிறேன் என அழுதார். மேலும் 'சடை முடியுடைய இந்த அடியார் சிவபெருமானுடைய நெறியைப்பின்பற்றுபவர் ஆகிறார். அத் தகைய ஓர் அடியாருடைய தலை அறு பட்டு என்னிடம் வந்தது கண்டபிறகு அதனால் ஏற்படும் பழியைத் தாங்கிக் கொண்டு இவ்வுலகை நான் அரசாள் வது எத்துணை அறியாமையுடையது?' எனவும் வருந்தினார்.

'முரசுடைத்திண் படைகொடுபோய் முதலமைச்சர் முனைமுருக்கி
உரைசிறக்கும் புகழ்வென்றி ஒன்றொழிய ஒன்றுமல்
திரைசரித்த கடல்உலகில் திருநீற்றின் நெறிபுரந்து யான்
அரசளித்த படிசால அழகிது என அழிந்து அயர்வார்.

'தார்தாங்கிக் கடன்முடித்த சடைதாங்கும் திருமுடியார்
நீர்தாங்கும் சடைப்பெருமான் நெறிதாம் கண்டவரானார்
சீர்தாங்கும் இவர்வேணிச் சிரந்தாங்கி வரக்கண்டும்,
பார்தாங்க இருந்தேனோ? பழிதாங்குவேன்' என்றார்

(புகழ்—35, 36)

யாரும் வேண்டுமென்று இத்தவற் றைச் செய்யவில்லை. போர் என்று ஒன்று நடைபெற்றால் இத்தகைய அசம் பாவிதங்கள் நடை பெறுவதைத் தடுக் கவும் முடியாதுதான். ஓரளவு கவலைப் பட்டு அத்துடன் இதனை மறந்து விடுப வர்களே உலகிடை உண்டு. ஆனால் ஏனையோர் செய்வதைப் போலச் செய் கின்றவர்கள் அடியார்களாக முடியாதே! புகழ்ச் சோழர் அடியாராயிற்றே! எனவே அவர் தமக்கே உரிய முறையில் இக் கொடுமைக்கு வழிகாணத் துணிந்து விட்டார்.

சிவநெறி காப்பதையே குறிக்கோ ளாகக் கொண்டு வாழ்ந்த தம்முடைய ஆட்சியில் சிவனடியார் ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்றால் இதனைவிடப் பெரிய தவறு வேறு என்ன நிகழ முடியும். இதே புகழ்ச் சோழர்தாம் எறிபத்தரைக் கண்டவுடன் யானை இறந் ததைப்பற்றிக் கவலைப்படாமல் 'சிவனடி யார்க்கு ஒன்றும் தீங்கு நேராமல் இருந் ததே' என்று மகிழ்ச்சியடைந்தவர்.

எனவே இப்பொழுது தம் படைகள் தவறுதலாகச் சிவனடியாரைக் கொலை செய்து விட்டன என்றால் அதற்குக் கழுவாய் யாது? யார் சிவனடியாரைக் கொன்றவன் என்று தேடி அவனைத் தண்டிக்கலாம். ஆனால் அது சாதாரண நம்போன்ற மனிதர்கள் செய்கின்ற செயலாகும். அரசன் உயிர்கட்குத் 'தன்னாலும், பரிசனத்தாலும்' தீங்கு நேராமற் பாதுகாக்க வேண்டும். அவ் வாறு இருக்க ஒரு குற்றமும் செய்யாத

சிவனடியாரைத் தன் பரிசனத்தார் கொன்று விட்டார்கள் எனின் அது எவ்வாறு தீர்க்கப்பட முடியும்?

எனவே மன்னன் தீப்புகுந்து தன் குற்றத்திற்குக் கழுவாய் தேடத் துணிந்து விட்டான். புகழ்ச்சோழர் அமைச்சர்களை அழைத்துத் தம் மைந்தனுக்கு முடி புனையுமாறு கட்டளை இட்டார். உடனே ஒரு தங்கத் தட்டில் சிவனடியாரின் வெட்டுண்ட தலையைத் தாங்கிக் கொண்டு தீவளர்த்து அதனுள் புகுந்து விட்டார்.

அத்தகைய நெறிமுறை காத்த சோழ மன்னர்கள் இருந்து ஆட்சிசெய்த சிறப்புடையது கருவூர். 'அருமந்த அரசாட்சி அரிதோ மற்று எளிதோ?'



# திருவிசைப்பா—கருவூர்த் தேவர்

இத்தல புராண உரைநடைப் பகுதியில் கருவூர்த் தேவரின் வரலாறு கூறப் பெற்றுள்ளது. ஆனல் அது தல புராணங்கள் கூறும் வகைகளில் பல்வேறு செவிவழிச் செய்திகளையும் உடன்கொண்டு கூறுகிறது. கருவூர்த் தேவர் வரலாறு பற்றித் திட்டவட்டமாகக் கூறச் சான்று ஒன்றும் கிடைத்திலது.

ஒன்பதாம் திருமுறை என்று வழங்கப்பெறும் சைவத் திருமுறையுள் 102 திரு இசைப்பாக்களைப் பாடிய பெருமை கருவூர்த் தேவருக்கு உண்டு. ஒவ்வொரு பதிகத்தின் இறுதியிலும் 'கருவூரன்', 'கருவூரான்' 'பித்தனேன்', 'கருவூரனேன்' என்ற சொற்களால் தம்மைக் குறித்துக்கொள்கிருர். மேலும் 'ஆரணம் பிதற்றுபவர்' 'மறை தெரிபவராக'வும் கூறிக் கொள்வதால் அந்தண குலத்தவர் என்று அறிய முடிகிறது. இவருடைய காலம் முதலாம் இராசராச சோழன் காலம் என்று கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை. இவருடைய பாடல்களுள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்துத் தரப் பெற்றுள்ளது.

### கோயில் சிதம்பரம்

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை யென்ருல்
அஞ்சலென் றருள்செய்வான் கோயில்
கைவரும் பழனம் குழைத்தசெஞ் சாலிக்
கடைசியர் களைதரு நீலம்
செய்வரம் பரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

நெஞ்சிட ரகல அகம்புகுந் தொடுங்கு
நிலைமையோ டிருள்கிழித் தெழுந்த
வெஞ்சுடர் சுடர்வ போன்ருெளி துளும்பும்
விரிசடை யடிகள்தங் கோயில்
அஞ்சுடர்ப் புரிசை ஆழிசூழ் வட்டத்
தகம்படி மணிநிரை பரந்த
செஞ்சுடர் அரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

## திருக்களந்தை

பழையராந் தொண்டர்க் கெளியரே; மிண்டர்க்
கரியரே ; பாவியேன் செய்யும்
பிழையெலாம் பொறுத்தென் பிணிபொறுத் தருளாப்
பிச்சரே ; நச்சரா மிளிரும்
குழையராய் வந்தென் குடிமுழுதாளுங்
குழகரே ; ஒழுகுநீர்க் கங்கை
அழகரே ; ஆகில் அவரிடம் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே.

பவளமே மகுடம் ; பவளமே திருவாய் ;
பவளமே திருவுடம் பதனில்
தவளமே களபம் ; தவளமே புரிநூல்
தவளமே முறுவல் ; ஆ டரவந்
துவளுமே ; கலையும் துகிலுமே யொருபால்
துடியிடை இடமருங் கொருத்தி
அவளுமே ; ஆகில், அவரிடங் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே.

நீலமே கண்டம் ; பவளமே திருவாய் ;
நித்திலம் நிரைத்திலங் கினவே
போலுமே முறுவல் ; நிறையஆ னந்தம்
பொழியுமே திருமுகம் ; ஒருவர்
கோலமே அச்சோ! அழகிதே யென்று
குழைவரே கண்டவர் ; உண்ட
தாலமே ; ஆகில் அவரிடம் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச்சரமே.

## மணியம்பலம்

திருநுதல் விழியும் பவளவாய் இதழும்
திலகமும் உடையவன் சடைமேற்
புரிதரு மலரின் தாதுநின் றூதப்
போய்வருந் தும்பிகாள், இங்கே
கிரிதவழ் முகிலின் கீழ்த்தவழ் மாடங்
கெழுவுகம் பலை செய்கீழ்க் கோட்டூர்
வருதிறல் மணியம் பலவனைக் கண்டென்
மனத்தையுங் கொண்டுபோ துமினே,

தெள்ளுநீ றவன்நீ றென்னுடல் விரும்பும் ;
செவிஅவன் அறிவுநூல் கேட்கும் ;
மெள்ளவே அவன்பேர் விளம்பும் வாய் ; கண்கள்
விமானமே நோக்கிவெவ் வுயிர்க்கும் ;
கிள்ளைபூம் பொதும்பிற் கொஞ்சிமாம் பொழிற்கே
கெழுவுகம் பலைசெய்க்கீழ்க் கோட்டூர்
வள்ளலே, மணியம் பலத்துள் நின்றாடும்
மைந்தனே என்னும் என் மனனே.

## திருமுகத்தலை

புவனநா யகனே ! அகவுயிர்க் கமுதே !
பூரணா ! ஆரணம் பொழியும்
பவளவாய் மணியே ! பணிசெய்வார்க் கிரங்கும்
பசுபதீ ! பன்னகா பரணா !
அவனிஞா யிறுபோன் றருள்புரிந் தடியேன்
அகத்திலும் முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலும் அமர்ந்தாய்
தனியனேன் தனிமைநீங் குதற்கே.

மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய்
முகத்தலை யகத்தமர்ந் தினிய
பாலுமாய் அமுதாம் பன்னகா பரணன்
பனிமலர்த் திருவடி யிணைமேல்
ஆலைஅம் பாகின் அனைய சொற் கருவூர்
அமுதுறழ் தீந்தமிழ் மாலை
சீலமாப் பாடும் அடியவ ரெல்லாம்
சிவபதம் குறுகி நின்றாரே.

## திரைலோக்கிய சுந்தரம்

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்று முதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்? கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

மைஞ்ஞின்ற குழலாள்தன் மனம்தரவும் வளைதாரா
திஞ்ஞின்ற கோவணவன் இவன்செய்த தியார் செய்தார்
மெய்ஞ்ஞின்ற தமர்க்கெல்லாம் மெய்ஞ்ஞிற்கும் பண்பினாறு
செய்ஞ்ஞின்ற யிலன் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

### கங்கை கொண்ட சோளேச்சரம்

அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே ?
அன்பொடு தன்னை அஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளம்அள் ளூறும்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்,
பவளவா யவர்பணை முலையும்,
கற்பகப் பொழிலும் முழுதுமாங் கங்கை
கொண்ட சோ ளேச்சரத் தானே.

சுருதிவா னவனும்! திருநெடு மாலாம்!
சுந்தர விசும்பின் இந்திரனும் !
பருதிவா னவனும் ! படர்சடை முக்கட்
பகவனும் ! அகஉயிர்க் கமுதாம் !
எருதுவா கனனும் ! எயில்கள்மூன் றெரித்த
ஏறுசே வகனுமாம் ! பின்னும்
கருதுவார் கருதும் உருவமாம்! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

### இராசராசேச்சரம்

பன்னெடுங் காலம் பணிசெய்து பழையோர்
தாம்பலர் ஏம்பலித் திருக்க
என்னெடுங் கோயில் நெஞ்சுவீற் றிருந்த
எளிமையை யென்றுநான் மறக்கேன்
மின்னெடும் புருவத் திளமயி லணையார்
விலங்கல்செய் நாடக சாலை
இன்னடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.

மங்குல்சூழ் போதின் ஒழிவற நிறைந்து
வஞ்சகர் நெஞ்சகத் தொளிப்பார்;
அங்கழற் சுடராம் அவர்க்கிள வேனல்
அலர்கதி ரணையர்; வா ழியரோ!
பொங்கெழில் திருநீ றழிபொசி வனப்பிற்
புனல்துளும் பவிர்சடை மொழுப்பர்
எங்களுக் கினியர் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.



# வாழ்த்து

னதேசிகர் சீர்மல்க நால்பெரும் கவிதை சூழ்க
தேன்அலர்ப் பொழில் சூழ்வஞ்சித்திருநகர் வளம் சிறக்க
வானவர் நாதன் பூசைவளப்பெரும் திருவின் ஓங்க
தானமும் சமயம் ஆறும் தலத்துளோர் யாரும் வாழ்க !

—கருவூர்ப் புராணம்

நல்லவர்கள் எல்லோரும்
நலம்சிறந்து மிகிழ்பூத்து
நாளும் வாழ்க !

அல்லவர்கள் அவர்களுமே
நல்லவர்கள் ஆகிநலம்
அரும்பி வாழ்க !

சொல்லரிய அருளாளர்
தொகுத்தளித்த நல்லறங்கள்
துலங்கி வாழ்க !

எல்லையிலான் திருவருளால்
எழில்ஓங்கி இந்தியநாடு
என்றும் வாழ்க !

—கம்பன் அடிப்பொடி